வரு.75 இல. 25 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
28பக்கங்கள் 100/-




தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2023 ஜுன் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை June 25 Sunday, 2023




/ Thinakaran.lk / ThinakaranLK


02
TITANIC பக்கத்திலேயே மற்றொரு ஜலசமாதி!


04
விதிமுறைகளை பின்பற்றினால் டெங்கு அச்சுறுத்தலே அல்ல!


05
ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் பொருளாதார மீட்புக்கு உறுதுணை


24
வெளிநாட்டில் காணாமல்போகும் இலங்கை விளையாட்டு

# பொருளாதார மீட்சிக்கு ஐ.நா. சபை முழு ஒத்துழைப்பு

## ஜனாதிபதி ரணிலிடம் ஐ.நா. செயலாளர் நாயகம் உறுதியளிப்பு

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடன் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஒத்துழைப்பு வழங்குமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அண்டோனியோ குட்டரெஸ் (Antonio Guterres) உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸின் பெரிஸ் நகரில் நடைபெறுகின்ற 'புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தம்' தொடர்பான உச்சி மாநாட்டுக்கு இணையாக நடைபெற்ற 06



**இலங்கையின் நிலையான கடன் முயற்சிகளுக்கும் புதிய பொருளாதார மறுசீரமைப்புக்கும் நிச்சயம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவிப்பு**

## ஜனாதிபதி ரணில் பிரான்ஸ் ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவெல் மெக்ரோனுக்குமிடையில் நேற்றுமுன்தினம் (23) பிற்பகல் சந்திப்பொன்று நடைபெற்றது. பிரான்ஸில் நடைபெறும் புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டின் இரண்டாம் நாள் அரச தலைவர் அமர்வின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவெல் மெக்ரோனும் சந்தித்து உரையாடினர். பிரான்ஸ் ஜனாதிபதியின் அழைப்பில் இந்த மாநாட்டில் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

## ஜாமிஆ நளீமிய்யாவின் பொன் விழாவும் பட்டமளிப்பு விழாவும்



ஜாமிஆ நளீமிய்யாவின் பொன் விழாவும் பட்டமளிப்பு விழாவும் கொழும்பு BMICH மண்டபத்தில் நேற்று (24) கலாபீடத்தின் தலைவர் அல்ஹாஜ் யாக்கூத் நளீம் தலைமையிலும் முதல்வர் அஸ்ஸெய்க் ஏ.எசி.அஹார் முஹம்மத் மற்றும் இஸ்லாமிய கற்கைநெறியின் தலைவர் அஸ்ஸெய்க் பளீல் ஆகியோரின் வழிநடத்தலிலும் நடைபெற்றது. இவ்விழாவின் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாயிஸ் முஸ்தபா கலந்து சிறப்பித்தார். *(படம்: சுதத் மலவீர, அஷ்ரப் ஏ.சமட், ஏ.எஸ்.எம்.ஜாவித்)*

# டெங்கு நோய் பரவலால் இதுவரை 47,000 பேர் பாதிப்பு

## ஜுலையில் மேலும் அதிகரிக்கலாமென எச்சரிக்கை

இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடிவதாகவும் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 47,000க்கும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், உடலியல் நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்தார்.

எதிர்வரும் பருவகால மழை வீழ்ச்சியின் போது, டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக் கூடுமென்பதால், சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் மருத்துவ 06





எண்ணெய்க்காக தேயிலையை கொடுத்தல்;

## ஈரானுடன் இலங்கை மீண்டும் பண்டமாற்று வர்த்தக முறை

06

# 41 நாடுகளிலிருந்து இலங்கைக்கு 12 இலட்சம் வேலைவாய்ப்புகள்

## 2023 இல் 03 இலட்சம் பேரை அனுப்புவதே இலக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மூன்று இலட்சம் இலங்கையர்களை இந்த வருடத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதே இலக்காகுமென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (23) வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே, அமைச்சர் 06



## எங்கள் கருத்து...

### பல்கலைக்கழக மாணவர்களின் நலனில் அரசின் விசேட அக்கறை

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியில்லாத கடன்வசதி வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அரசாங்க பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமன்றி, தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இவ்விதமான சலுகையை வழங்குவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். உயர் கல்வியைத் தொடர்வதற்கு பணக்கஷ்டத்தை எதிர்கொண்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரை இவ்வாறான கடனுதவியானது மிகுந்த வரப்பிரசாதமென்றே கூற வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் கற்கின்ற மாணவர்களில் வறிய குடும்பங்களைச் சேர்ந்தோரும் ஏராளமானோர் உள்ளனர். எவ்வாறாயினும் பல்கலைக்கழகக் கல்வியை 06

# சிறுவரிடையே வேகமாக பரவும் மர்ம வைரஸ் நோய்

## காய்ச்சல் பீடித்தால் வைத்தியரை நாடவும்



டெங்கு நோய் மற்றும் இன்புளுவன்சா ஏ மற்றும் பி வைரஸ்கள் சிறுவர்களிடையே வேகமாக பரவி வருவதாக, சிறுவர் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார். ஆகையால், சிறுவர்களின் ஆரோக்கியத்தில் பெற்றோர் தனிக் கவனம் 06

# சிங்கள மக்களின் உணர்வை தூண்டும் உதய கம்மன்பில

## அவரது குருந்தூர் விஜயம் குறித்து ஸ்ரீதரன் MP குற்றச்சாட்டு



சிங்கள மக்களின் உணர்வுகளை தூண்டும் நோக்கிலேயே பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் குருந்தூர்மலை பயணம் அமைந்ததாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 06

ஜப்பானின்

# பாரிய போர்க்கப்பல் இலங்கை வருகை



ஜப்பான் கடல்சார் தன்னியக்கப்படைக்குச் சொந்தமான 'இகாசுச்சி' எனும் போர்க்கப்பல் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை 06

பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஒருவர்

# STF நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்



மினுவாங்கொடை பிரதேசத்தில் சைக்கிளில் பயணித்த இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர், எம்பிலிப்பிட்டிய 06

# கனடாவில் இலங்கையருக்கு கிடைத்த பெரிய அதிர்ஷ்டம்

## லொட்டரியில் 35 மில். டொலர் கிடைத்தது




கனடாவின் ஒன்டாரியோ அதிர்ஷ்ட இலாபச்சீட்டு மற்றும் கேமிங் கோர்ப்பரேஷன் மூலம் கடந்த 6ஆம் திகதி நடத்தப்பட்ட சீட்டிழுப்பின் போது, இலங்கை 06

2017இல் 20 ஆண்டுகள் சிறை விதித்திருந்த

# தேவதாசன் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை



நீண்டகாலமாக புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உறுப்பினருமான கனகசபை தேவதாசன் ஜனாதிபதி 06





# TITANIC பக்கத்திலேயே மற்றொரு ஜலசமாதி!

## ● மூழ்கி முற்றிலும் பாதுகாப்பானது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என குற்றச்சாட்டு

அருள் சத்தியநாதன்...

ஒரு ஹொலிவுட் ஆங்கிலத் திரைப்படம் 1972ஆம் ஆண்டு வெளியானது. Fear Is The Key என்பது அதன் பெயர். புகழ்பெற்ற நாவலாசிரியர் அலிஸ்டர் மெக்லீன் எழுதிய நாவல் அதே பெயரில் படமாக்கப்பட்டது. ஒரு பயணிகள் விமானம் கடலில் விழுந்து மூழ்கி விடுகிறது. அது ஒரு சதி. அதைச் செய்தது யார் என்பதைக் கண்டு பிடிக்க முனையும் கதாநாயகன் சந்தேக நபரைப் பிடித்து உண்மையை வரவழைப்பதற்காக அவரை கடல் ஆழத்துக்கு அழைத்துச் சென்று, கடல் ஆழத் தனிமை தரக்கூடிய உச்ச பய உணர்வை அவரில் ஏற்படுத்தி உண்மையை வரவழைக்கிறான். உண்மையை அறிய அதி பயத்தை ஊட்டுவதே சரி என்றது திரைப்படம்.

கடலின் சில கிலோமீட்டர் ஆழத்துக்குச் சென்றதும் அது முற்றிலும் வேறுபட்ட பயங்கர உலகமாக உணர்வோம். அங்கே ஏதேனும் நிகழ்ந்தால் திரும்ப உலக வாழ்க்கைக்கு வருவதென்பது சாத்தியமே இல்லை. சிலருக்கு பேய்ப்படம் பார்க்கும் 'த்ரில்' அனுபவத்தைக் கொடுக்கலாம். பலருக்கு நினைத்தும் பார்க்க முடியாத பயங்கர அனுபவமே கடல் ஆழம்.

பாகிஸ்தானிய கோடீஸ்வரர் தாவூத், தன் 19 வயது மகனை டைட்டானிக் பயணத்துக்கு அழைத்தபோது இளைய தாவூத் அதை விரும்பவில்லை. பயம்தான் காரணம். தன் சகோதரி அஸ்மாவிடம் பேசிய சுலைமான் தாவூத், எனக்கு இப்பயணத்தில் விருப்பம் இல்லை. இன்றைய தினம் (ஞாயிறு) தந்தையர் தினம் என்பதால் அப்பாவின் பேச்சை மறுக்க முடியவில்லை. சரி வருகிறேன் என்றேன் என்று கூறியிருக்கிறார்.

இதே சமயம் டைட்டான் மூழ்கியின் பைலட்டும் ஓஷன் கேட் நிறுவனத்தின் பிரதம நிர்வாகியுமான ஸ்டொக்டொன் ருஷ்ஷின் மனைவி இம் மூழ்கியில் மூன்று தடவைகள் பயணித்து, மூழ்கிக் கிடக்கும் டைட்டானிக் கப்பலை பார்த்தவர். ஏனெனில் அவரது பாட்டனாரும் அவர் மனைவியும் டைட்டானிக்கில் பயணம் செய்து 1912 ஏப்ரல் 15ஆம் திகதி ஜலசமாதியானவர்கள். தற்போது தன் கணவரையும் டைட்டானிக்குக்கு காவு கொடுத்துள்ளார்.

விண்வெளிக்கும் பயணிகளை அழைத்துச் செல்வது தற்போது வர்த்தகமாகிவிட்டது. அதேபோலத்தான் கடல் ஆழத்துக்கு மினி நீர்மூழ்கிகள் மூலம் அழைத்து சென்று திகிலும் ஆச்சரியமும் கலந்த உணர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்தித் தருகின்றன சில நிறுவனங்கள். கடல் ஆழம் போக வேண்டுமானால் ஆழ் நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். அவர்களாலும் ஒரு ஆழத்துக்கு மேல் போக முடியாது. கடல் அழுத்தம் அதிகமாக இருக்கும். சிறிய நீர்மூழ்கியில் ஓரளவு ஆழத்துக்கு பயணிக்கலாம். அது திகிலையும் தரும், கரணம் தப்பினால் மீள முடியாத புதைகுழியாகவும் மாறும்.

ஓஷன்கேட் நிறுவனம் மினி நீர்மூழ்கிகள் மூலம் பெரிய கட்டணத்தை வாங்கிக் கொண்டு வாடிக்கையாளர்களை ஆழ் கடலுக்கு அழைத்துச் செல்லும் சாகசத்தை வர்த்தகமாக 2020 முதல் நடத்தி வருகிறது. இந்தப் பயணங்களில் ஒன்றுதான் வட அத்திலாந்து சமுத்திரத்தில், சரியாகச் சொன்னால் கனடாவின் நியூபவுண்ட்லாண்டில் இருந்து 740 கி.மீ. தொலைவில், நாலாயிரம் மீற்றர் ஆழத்தில் 111 வருடங்களுக்கு முன்னர் 2,240 பயணிகளுடன் டைட்டானிக் மூழ்கிய அந்த இடத்துக்கு பயணிகளை அழைத்துச் சென்று காட்டுவதாகும். இந் நிறுவனம் வருடத்துக்கு ஒரு தடவைதான் டைட்டானிக் நோக்கிய பயணத்தை நடத்துகிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)


ஷஷாதா தாவூத் | சுலைமான் | போல் ஹென்றி | ஸ்டொக் ரவ் | ஹமிஷ் ஹார்டிங்

## ● தந்தை பேச்சை தட்ட விரும்பாத 19 வயது சுலைமான் தாவூத்






## நீர்மூழ்கிகளின் வரலாறு

நீர்மூழ்கிக் கப்பல்களின் தாயகம் ஜெர்மனி. 1851 முதல் ஜெர்மனியில் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டி சோதனை நடத்துவது ஆரம்பமாகிவிட்டது. 1775ஆம் ஆண்டு 'டர்டள்' என்ற பெயர் கொண்ட ஒரு நீர்மூழ்கி உருவாக்கப்பட்டது. உலகின் முதல் நீர்மூழ்கி இதுவாகத்தான் இருக்க வேண்டும். மீனைப்போல கடல்பரப்புக்குக் கீழே பயணிக்க முடியுமானால் யாரும் அறியாமல் கடல்வழியாக இடத்துக்கு இடம் மாற முடியும்; யுத்த நேரத்தில் பயனுள்ள வாகனம் என்ற சிந்தனையின் வெளிப்பாடுதான் நீர்மூழ்கி. எனினும் ஒழுங்காக இயங்கக் கூடிய முதல் நீர்மூழ்கியை 1903ஆம் ஆண்டில்தான் ஜெர்மனி உருவாக்கியது. அதன் பெயர் ஃபொரெல்லா.

1915ஆம் ஆண்டு பிரிட்டன் மீது ஜெர்மனி யுத்தப் பிரகடனம் செய்தது. பிரிட்டனைச் சுற்றியுள்ள கடலில் பயணம் செய்யும் எந்தக் கப்பலானாலும் தாக்கப்படும் என ஜெர்மனி எச்சரித்தது. முதலாம் உலகப்போரில் மத்தியஸ்தம் வகிக்கும் நாடுகளின் சரக்குக் கப்பல்களும் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன. ஒரு பயணிகள் கப்பல் மூழ்கடிக்கப்பட்டபோது 128 அமெரிக்கர்கள் இறந்தனர்.

அன்றைய அமெரிக்க அதிபர் வூட்ரோ வில்சன் ஜெர்மனிக்கு கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்த பின்னர் சரக்கு கப்பல்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல்களை நடத்தியது ஜெர்மனி 'யூ' படகுகள். இவை கடல் பரப்புக்கு சற்று கீழே பயணிப்பவை. டோர்பிடோ தாக்குதலை நடத்திவிட்டு தண்ணீரில் மறைந்துவிடுபவை. எனவே தனது கடற்படைக்கு மிக சாதகமான 'யூ' படகுகளை மீளவும் பாவனைக்கு கொண்டுவர வேண்டும் என்ற ஜெர்மனிய இராணுவத்தின் அழுத்தத்துக்கு ஜெர்மனிய அதிபர் கெய்சர் வில்லியம் பணிந்தார். 1917 பெப்ரவரி முதலாம் திகதி மீண்டும் 'யூ' படகுகளின் தாக்குதல் ஆரம்பமானது.

அமெரிக்காவின் முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் 1900ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது. அதன் பெயர் யூ.எஸ்.எஸ். ஹொலன்ட். இரண்டாம் உலகப்போரில் நீர்மூழ்கிக் கப்பல்கள் கடல் யுத்தத்தில் பெரும் பங்கு வகித்தன. 1941இல் ஜப்பான் பேர்ள் துறைமுகத்தின் மீது நடத்திய கோரத் தாக்குதலில் அமெரிக்கா பெருமளவு தன் யுத்தக் கப்பல்களை இழந்தது.

(19ஆம் பக்கம் பார்க்க)



## 118 வீரர்களுடன் ஜலசமாதியான ரஷ்ய நீர்மூழ்கி; கண்டுகொள்ளாத புட்டின்



ரஷ்யாவுக்கும் நோர்வேக்கும் இடைப்பட்ட 'பேரன்ட்ஸ்' கடலில் இரண்டாயிரமாம் ஆண்டு ஒகஸ்ட் 12ஆம் திகதி ரஷ்ய கடற்படை 'சம்மர் எக்ஸ்' என்ற பெயரில் ஒரு கடல் ஒத்திகையை நடத்தியது. சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட முதல் பாரிய கடற்படை ஒத்திகை அது. முப்பது ரஷ்ய போர்க் கப்பல்களும் மூன்று நீர்மூழ்கிக் கப்பல்களும் இதில் கலந்து கொண்டன. ரஷ்ய கடற்படையின் அணுசக்தியால் இயங்கும் பெரிய நீர்மூழ்கியான குர்ஸ்க்கும் அவற்றில் ஒன்று. அது புதிதாகக் கட்டப்பட்ட கே – 141 வகை கப்பலாகும். 108 மீட்டர் நீளம் கொண்டது.

பயிற்சியில் ஈடுபட்டிருந்த குர்ஸ்க் நீர்மூழ்கி, தான் டோர்பிடோவை பரீட்சிக்க அனுமதி கேட்டது. டோர்பிடோ என்பது மிதக்கும் கப்பல்களின் அடிப்பாகத்தைத் தகர்த்து மூழ்கச் செய்யும் நீர் ஏவுகணையாகும். பயிற்சியின் போது வெடிப்பொருள் அகற்றப்பட்ட டோர்பிடோ உபயோகப்படுத்தப்படும். டோர்பிடோவின் உந்து சக்திக்காக ஹைட்ரஜன் பெரொக்சைட் பயன்படுத்தப்படுகிறது. இது அபாயகரமானது என்பதால் வேறு நாடுகள் இந்த இரசாயன மூலகத்தை டோர்பிடோவில் பயன்படுத்துவதில்லை.

டோர்பிடோவை சுடு கலத்தில் ஏற்றி குறி பார்த்த போது இந்த பெரொக்சைட் அமிலம் கசிந்து வெளியேறியதில் பெரு வெடிப்பு ஏற்பட்டது. இவ்வெடிப்பை நோர்வேயும் அப்பால் பயணித்த வேறு கப்பல்களும் உணர்ந்த போதிலும் ரஷ்ய கடற்படை வெடிப்பை அறிந்திருக்கவில்லை.

வெடிப்புடன் தீ பரவியது. முதல் அடுக்குக்கும் இரண்டாம் அடுக்குக்கும் இடையிலான தடுப்புக் கதவு சிதைந்தது. கட்டுப்பாட்டு அறை சேதமடைந்தது. பின்னர் நான்கைந்து டோர்பிடோ வெடிபொருட்கள் வெடித்ததில் ஏனைய அடுக்குகளும் சேதமாக, அங்கிருந்தோர் மரணமடைந்தனர்.

மொத்தக் கட்டுப்பாடும் இழந்த குர்ஸ்க், 354 அடி ஆழத்தில் மூழ்கி தரை தட்டியது. நீர்மூழ்கிக்கு ஏதேனும் விபத்து நேர்ந்தால் அதை கடல் பரப்புக்கு கொண்டு வருவதற்கு சுயமாகவே செயல்படக் கூடிய பலூன்கள் உள்ளன. அவை ஏதோ காரணத்துக்காக செயல்படாதிருக்க செய்யப்பட்டிருந்தன. இத்தனைக்கும் மத்தியில் 23 பேர் ஒன்பதாம் மாடியில் அமைந்திருந்த சிறு அறைக்குள் புகுந்த தம்மைக் காப்பாற்றிக் கொண்டிருந்தனர், உதவி வரும் என்ற நம்பிக்கையுடன். ஆறு மணித்தியாலம் உயிருடனிரு ந்த அவர்கள், பிராணவாயு தீர்ந்ததும் மூச்சுத் திணறி மரணித்தனர்.

குர்ஸ்கில் விபத்து நடந்துள்ள செய்தியை ரஷ்ய கடற்படை அறிந்துகொண்டபோது ஆறு மணித்தியாலங்கள் கடந்திருந்தன. இவ்விபத்தில் கப்பலில் இருந்த 118 பேரும் மரணமடைந்திருந்தனர். நீர்மூழ்கி வரலாற்றில் இடம் பெற்ற பெரு விபத்தாக இது கருதப்படுகிறது.

கப்பல் எங்கே மூழ்கிக் கிடக்கிறது என்பதை ரஷ்யா கண்டறிவதற்கு 16 மணித்தியாலங்கள் சென்றன. அதன் பின்னர் அதிபர் புட்டினுக்கு தகவல் தரப்பட்டது. அவர் அச்சமயம் கருங்கடல் பகுதியில் அமைந்துள்ள சொச்சி என்ற உல்லாச நகரில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். இச் செய்தி கேட்டு அலட்டிக் கொள்ளாத புட்டின், பிரிட்டிஷ், நோர்வே உதவிகளை பெறும்படி சொல்லிவிட்டு தன் விடுமுறையைத் தொடர்ந்தார். விபத்து நடந்த ஐந்து நாட்கள் கழித்த பின் வந்து சேர்ந்த நோர்வே, பிரிட்டிஷ் மீட்புக் குழுவினர் தேடுதலை ஆரம்பித்தனர்.

நீர்மூழ்கியைக் கண்டுபிடித்த அவர்கள் உள்ளே நுழைவதற்கான பாதுகாப்பான ஒரு வழியை அமைத்து நுழைந்தபோது அனைவரும் இறந்திருப்பது உறுதியானது. 15 மாதங்களின் பின்னர் நீர்மூழ்கி மேலே தூக்கி எடுக்கப்பட்டது.

கடல் ஆழ விபத்தில் உயிர் தப்புவது நிச்சயம் தம்பிரான் புண்ணியம்தான்!

## 'புதைகுழியை தொந்தரவு செய்ய வேண்டாம்!'



டைட்டானிக் திரைப்பட இயக்குநர் ஜேம்ஸ் கெமரூன் தன் திரைப்படத்துக்காக முப்பது தடவைகளுக்கும் மேல் மூழ்கிக் கிடக்கும் கப்பலைப் பார்த்தவர். அதற்காக தான் விசேட நீர்மூழ்கியை வடிவமைத்ததாகவும் நாலாயிரம் மீட்டர் ஆழ அழுத்தத்தை விடவும் அதிக அழுத்தத்தைத் தாங்கக் கூடிய வகையில் மிகக் கனமான தகடுகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டதாகவும் கூறும் அவர், டைடனுடனான தொடர்புகள் அறுந்து போய்விட்டது என்பதைத் தான் கேள்விப் பட்டதுமே அம் மூழ்கியின் கதை முடிந்து விட்டது என்று தீர்மானித்துக் விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.




இரண்டாயிரமாம் ஆண்டில் டைட்டானிக்கை பார்த்துத் திரும்பிய மற்றுமொருவர் அதை ஒரு பயங்கர அனுபவமாக வர்ணித்தார். டைட்டானிக் கப்பலில் இருந்து வெளியேறும் கறல் துகள்கள், சிறு துண்டுகள் தான் பயணித்த ஓடத்தில் மோதுவதாகவும் அது உல்லாசப் பயணத்துக்கான இடம் அல்ல என்றும் கூறினார். "அது ஒரு புதைகுழி. அங்கே பலர் மரணித்தார்கள். அவர்களை தொந்தரவு செய்யாமல் விட்டு விடுவது தான் நல்லது. எங்கள் ஓடம் டைட்டானிக்கின் முன்பக்கமாக வந்த போது ஓடத்தின் வேகத்தை குறைக்கச் சொல்லிவிட்டு மரணித்தவர்களுக்காக பிரார்த்தித்தேன்" என்றார் இவர்.

# ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் போது...





ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாரிஸிலுள்ள யுனெஸ்கோ தலைமையகத்துக்குச் சென்று யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் Audrey Azoulay யை சந்தித்து கலந்துரையாடினார்.



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் திருமதி பெட்ரிசியா ஸ்கொட்லண்ட் மற்றும் பிராங்கோபோன் (Francophone) அமைப்பின் செயலாளர் நாயகம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு.



தமிழன் தேசிய நாளிதழ் தனது மூன்றாவது வருட நிறைவு விழாவை நேற்று முன்தினம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் விமரிசையாக கொண்டாடியது. படத்தில் லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் தலைவர் திலித் ஜயவீரவுக்கு புரவலர் ஹாசிம் உமர் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்வதையும், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜா அருகில் நிற்பதையும் காணலாம். படம்: அஷ்ரப் ஏ ஸமத்







கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு நேற்று எண்ணெய்க் காப்பு வைபவம் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டபோது... (படப்பிடிப்பு கொழும்பு வடக்கு நிருபர்)









# சுகாதார விதிமுறைகளை ஒழுங்காக பின்பற்றினால் டெங்கு ஓர் அச்சுறுத்தலே அல்ல!

**டெங்கின் சவாலை முறியடிக்க மக்களது ஒத்துழைப்பு அவசியம்**
**மேல் மாகாணத்தில் பாடசாலை சீருடைக்கு மேலதிகமாக கை, கால்களை மறைக்கும் வகையில் இளம் நிற ஆடை அணிய சிபாரிசு**



டொக்டர் நளின் ஆரியரட்ன



சமூக மருத்துவ அதிகாரி லஹிரு கொடித்துவக்கு



சீதா அரேம்பேபொல

இன்றைய காலகட்டத்தில் நாட்டில் அதிகம் கவனம் செலுத்தப்படும் விடயங்களில் ஒன்றாக டெங்கு வைரஸ் இடம்பிடித்திருக்கிறது.

அந்தளவுக்கு இவ்வைரஸின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. முற்றிலும் தவிர்த்துக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் குணப்படுத்திடவும் கூடிய இந்நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புத் தான் இவ்வாறு அவதானம் செலுத்தப்படும் நிலைமையை உருவாக்கியுள்ளது.

ஆனால் டெங்கு வைரஸ் ஆளுக்காள் தொற்றிப் பரவக் கூடியதல்ல. மாறாக அதனைக் காவிப்பரப்புவதற்கு காரணியொன்று மிக அவசியம். அதற்கு நுளம்பு தான் காவியாகத் தொழிற்படுகிறது. நுளம்பு இன்றி இவ்வைரஸ் பரவவோ அச்சுறுத்தலாக அமையவோ முடியாது.

அதேநேரம் இவ்வைரஸ் தாக்கத்தை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் கண்டு சிகிச்சை பெற்றுக்கொள்ளும் போது இந்நோயை முழுமையாகக் குணப்படுத்திடலாம். அவ்வாறான ஒரு நோய் தான் இன்று அதிக அச்சுறுத்தல் மிக்கதாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் தரவுகள் படி, இவ்வருடத்தில் ஜனவரி முதல் ஜூன் மாதம் 23ஆம் திகதி வரையும் 47 ஆயிரத்து 66 பேரைப் பாதித்துள்ள இவ்வைரஸ் 27 பேரின் உயிர்களையும் காவு கொண்டுள்ளது. அதிலும் இம்மாதத்தின் முதல் 23 நாட்களிலும் 7 ஆயிரத்து 666 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்தோடு 68 மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவுகள் டெங்கு வைரஸ் அச்சுறுத்தல் அதிகமுள்ள பிரிவுகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை மேல் மாகாணத்தில் உள்ளன.

என்றாலும் மேல் மாகாணத்துக்கு வெளியே நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் இவ்வைரஸ் காய்ச்சல் பதிவாகவே செய்கின்றது. அவற்றில் கண்டி, குருநாகல், புத்தளம், காலி, கேகாலை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மிக அதிகம் என்பதையும் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவுத் தரவுகள் தெரிவிக்கின்றன.

சுயமாகப் பரவக்கூடிய பண்பைக் கொண்டிராத இவ்வைரஸ் மற்றொரு காரணியின் ஊடாகப் பரவி தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தக் கூடியதாகவே இருந்து கொண்டிருக்கிறது. அதனால் இவ்வைரஸை காவிப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திவிட்டால் டெங்கு ஒரு போதும் அச்சுறுத்தலாக இராது.

நுளம்பினத்தில் காணப்படும் ஈடிஸ் அல்போபிக்டஸ் மற்றும் ஈடிஸ் எஜிப்டைய் ஆகிய இரு வகை நுளம்பினங்கள் தான் இவ்வைரஸைக் காவிப்பரப்பும் காரியத்தைச் செய்கின்றன. மற்றபடி வேறு எந்த வகை நுளம்பும் இச்செயலில் ஈடுபடுவதில்லை.

ஆனால் இவ்வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்திற்கு துரதிஷ்டவசமாக மனித செயற்பாடுகள் மூலகாரணமாக அமைகின்றன. மனிதன் விரும்பியோ விரும்பாமலோ அதற்கு துணைபுரியக்கூடியவனாக இருக்கின்றான். அதன் விளைவாகவே டெங்கு வைரஸ் மனிதனுக்கு தொடர்ந்தும் சவால் மிக்கதாக இருக்கின்றது.

இவ்வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகள் சில தனித்துவ பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவற்றில் மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகுதல், காலை, மாலை வேளையிலும் குறிப்பாக பகல் வேளைகளிலும் அதிகளவில் மனிதனை தாக்கக் கூடியனவாக இருத்தல், இந்நோய்க்கு உள்ளாகியுள்ளவரைத் தாக்கி இவ்வைரஸைப் பெற்றுக் கொண்டு சுகதேகிகளுக்கும் பரப்புதல் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு தான் டெங்கு கட்டுப்பாட்டுக்காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர்களின் குழுவின் தலைவியும் இராஜாங்க அமைச்சருமான டொக்டர் சீதா அரேம்பேபொல, தற்போதைய சூழலில் காய்ச்சல் அறிகுறிகளைக் கொண்டுள்ள நோயாளர்கள் நுளம்பின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுவது அவசியம்' என்று வலியுறுத்தியுள்ளார்.

பார்வைக்கு மிகவும் சிறிய பூச்சியாக விளங்கும் இந்நுளம்புகள் மனிதனுக்கே பெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் அமைந்திருக்கிறது. ஆனால் இது முழுமையாக முறியடித்துக்கொள்ளக் கூடிய சவாலும் அச்சுறுத்தலும் ஆகும். அதாவது தெளிந்த நீர் தேங்க முடியாத படி வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருக்கும் போது இவ்வின நுளம்புகள் பெருக முடியாது. அதனால் தெளிந்த நீர் தேங்கக்கூடிய உடைந்த மட்பாண்டங்கள், யோகட் கோப்பை, சிரட்டைகள், டயர்கள், பொலித்தீன், பிளாஸ்ரிக் உள்ளிட்ட கைவிடப்பட்ட அனைத்து திண்மக்கழிவுப் பொருட்களையும் முறையாகவும் தொடராகவும் அப்புறப்படுத்த வேண்டும். அதனைத் தம் பொறுப்பாகவும் கடமையாகவும் ஒவ்வொருவரும் கருத வேண்டும். டெங்கு கட்டுப்பாட்டுக்கு இது மிகவும் இன்றியமையாததாகும்.

இருந்தும் இதன் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் பெரும்பாலானவர்கள் உணராதுள்ளனர். அதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றன டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகள். இந்தப் பின்புலத்தில் இவ்வைரஸ் அச்சுறுத்தல் மிக்கதாக இருந்து வருகின்றது.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு தான் டெங்கு வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் சுற்றாடலை வைத்திருக்க வேண்டாமென மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. இக்கோரிக்கையை உதாசீனம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட ரீதியில் அபராதம் விதிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு டெங்கு அச்சுறுத்தலை முறியடிக்கும் வகையில் பல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பகுதியினர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களாக விளங்குகின்றனர். அத்தோடு இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டிருப்பவர்களில் 25 வீதத்தினர் 19 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களாவர். அதனால் பாடசாலை மற்றும் மேலதிக வகுப்பு வேளையில் நுளம்பு தாக்கத்துக்கு உள்ளாவதைத் தவிர்க்கவென கை, கால்களை மறைக்கக்கூடிய வகையிலான இளம் நிற ஆடையை பாடசாலை சீருடைக்கு மேலதிகமாக மாணவர்களுக்கு அணிவிப்பது நல்லது என நாம் முன்மொழிவு செய்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ள தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் டொக்டர் நளின் ஆரியரட்ன, இது கட்டாயப்படுத்தப்பட்ட முன்மொழிவு அல்ல. பெற்றோர் விரும்பினால் அவ் ஆடைகளை பாடசாலை சீருடைக்கு மேலதிகமாக அணிவிக்கலாம் என்று சுகாதார அமைச்சின் ஊடாக மேல் மாகாண சபைக்கு சிபாரிசு செய்துள்ளோம். இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள மேல் மாகாண கல்வி அமைச்சும் ஆளுனர் அலுவலகமும் பாடசாலை சீருடைக்கு மேலதிகமாக இளம் நிறத்திலான ஆடையை அணியும் யோசனைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது' என்றும் கூறியுள்ளார்.

இது முன்னோடி திட்ட முன்மொழிவாகவே மேல் மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதன் பிரதிபலன்களின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக மருத்துவ அதிகாரி லஹிரு கொடித்துவக்கு, டெங்கு வைரஸ் எல்லா வயது மட்டத்தினருக்கும் அச்சுறுத்தல் மிக்கது தான். ஆனாலும் கர்ப்பிணி பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், சிறு குழந்தைகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்கள் போன்றோர் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். டெங்கு வைரஸில் நான்கு வகைகள் உள்ளன. அதனால் ஒருவர் வாழ்நாளில் டெங்கு வைரஸ் தாக்கத்திற்கு நான்கு தடவைகள் உள்ளாகலாம். அதற்கு இவ்வைரஸில் காணப்படும் நான்கு வகைகளும் காரணமாக அமையும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களில் பெரும்பகுதியினருக்கு மூன்றாம் வகை டெங்கு தாக்கம் காணப்படுகின்ற போதிலும் இரண்டாம் வகை டெங்கு நோயும் பதிவாவதாகச் சுட்டிக்காட்டியுள்ள டொக்டர் நளின் ஆரியரட்ன, கடந்த சில வருடங்களாக இரண்டாம் வகை டெங்கு வைரஸ் தாக்கம் தான் நாட்டில் பரவலாகக் காணப்பட்டது. அதனால் இக்காய்ச்சலுக்கு உள்ளானவர்களின் உடலில் இவ்வைரஸுக்கு எதிரான நோயெதிர்ப்புச்சக்தி அதிகரித்துள்ளது. தற்போது தான் டெங்கின் மூன்றாம் வகை பதிவாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வைரஸின் தாக்கத்திற்கு எதிரான நோயெதிர்ப்புச்சக்தியை பெரும்பாலானவர்கள் பெறவில்லை என்றும் தெரிவித்தார் அவர்.

பொதுவாக எல்லா வைரஸ் நோய்களையும் போன்று டெங்கு வைரஸ் தாக்கத்திற்கான அறிகுறிகள் சாதாரணமானவையாகவே இருக்கும். அதனால் தற்போதைய சூழலில் காய்ச்சல் அறிகுறிகள் குறித்து கவனயீனமாக நடந்து கொள்ளக்கூடாது என்று மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதனால் 2 முதல் 7 நாட்களுக்கு காய்ச்சல், மூட்டுக்களில் வலி, தசை வலி, கண்களின் கீழ்ப்பகுதியில் அதிக வலி போன்றவாறான அறிகுறிகள் வெளிப்படுமாயின் அது டெங்கு காய்ச்சலின் அறிகுறியாக இருக்கலாம். அதேநேரம் தொடரான வாந்தி, வயிற்றில் அதிக வலி, இருமல் மற்றும் வாந்தியுடனும் சிறுநீர் மற்றும் மலத்துடனும் இரத்தம் வெளிப்படல், சிலருக்கு 4 முதல் 6 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை குறைந்தளவில் சிறுநீர் வெளிப்படல் போன்றவாறான அறிகுறிகள் காணப்படுமாயின் அவை டெங்கு குருதிப்பெருக்கின் அறிகுறிகளாக அமையலாம்.

அதன் காரணத்தினால் இவ்வாறான அறிகுறிகளைக் கொண்டிருப்பவர்கள் தாமதியாது அரச வைத்தியசாலைகளுக்கு சென்று அல்லது தகுதியான வைத்தியர்களிடம் சிகிச்சை பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்.

டெங்கு வைரஸ் தொடர்பில் இரண்டு விதமான பொறுப்புக்களை ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. அவற்றில் ஒன்று டெங்கைக் காவிப்பரப்பும் நுளம்பு பெருக முடியாதபடி வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருப்பது மற்றையது காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளை கொண்டிருந்தால் தாமதமின்றி தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சையை பெற்றுக்கொள்வதோடு நுளம்பு தாக்குவதையும் தவிர்த்துக்கொள்ளவும் வேண்டும். மருத்துவரின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பேணி நடக்கவும் தவறக்கூடாது. அப்போது டெங்கு அச்சுறுத்தலாகவே இராது.



**மர்லின் மரிக்கார்**











கொழும்பு சேர்க்கல் லயன்ஸ் கழக (District 306B2) புதிய செயற்குழுவின் சத்தியப் பிரமாண நிகழ்வு அண்மையில் லயன்ஸ் அக்டிவிடி சென்டரில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக லயன் விராஜ் விக்ரமசிங்க கலந்து கொண்டார்.



யாழ். மாவிட்டபுரம், கீரிமலைக்குச் செல்லும் பகுதியில் மக்கள் குடிநீர் வசதியின்றி சில மைல் தூரம் நடந்து சென்று தண்ணீர் பெற்று வந்தனர். இவர்களது நிலைமையை கருத்தில் கொண்டு கனடா மெற்றோலான் மீடியா ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் தேசமான்ய லயன் கலாநிதி நா.தனேந்திரன் நேரடியாக சென்று குழாய்க் கிணறொன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.

(படம்: வேலணை குறூப் நிருபர்)

# பாண்டிருப்பு மாரியம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி வைபவம்





கல்முனை பாண்டிருப்பு மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (27/06/2023) திருக்கதவு திறத்தலுடன் இனிதே ஆரம்பமாகிறது.

செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் உற்சவம் மூன்றாம் (03/07/2023) திகதி திருக்குளிர்த்தி பாடுவதுடன் நிறைவு பெறும்.

27ஆம் திகதி மாலை 5 மணிக்கு சமுத்திரத்துக்கு சென்று கும்பத்தில் அம்மனை ஆவாகனம் செய்து மாலை ஆறு முப்பது அளவில் திருக்கதவு திறத்தல் இடம் பெறும். இதனைத் தொடர்ந்து இரவு 11 மணிக்கு பூஜை நடைபெறும்.

29ஆம் திகதி மூன்றாம் நாள் திருவிழாவில் மதிய பூஜை உடன் 5 மணி அளவில் அம்மனின் ஊர்வலம் இடம்பெற இருக்கிறது.

முப்பதாம் திகதி நாலாம் நாள் திருவிழாவின் போது அம்மனின் ஊர்வலம் இடம்பெற்று இரவு பூஜையும் இடம்பெறும்.

ஐந்தாம் நாள் பூஜைகளைத் தொடர்ந்து, பிற்பகல் ஐந்து மணியளவில் பக்தி பரவசமூட்டும் துலாக் காவடி இடம்பெறும்.

ஆறாம் நாள் பூஜை வழிபாட்டில் அம்மனின் திருக்கல்யாணக் கால் வெட்டுதலும் அதனைத் தொடர்ந்து நள்ளிரவில் தவநிலையும் நடைபெறும்.

ஏழாம் நாள் அம்மனின் விநாயகப் பானை எழுந்தருளலை தொடர்ந்து வட்டுக்குத்துதலும் இடம்பெற்று, இரவு 7 மணி அளவில், உடுக்கை சிலம்பொலி முழங்க திருக்குளிர்த்தி நடைபெறும். இதனைத் தொடர்ந்து, சமுத்திரத்தில் கும்பம் சொரிதல் நடைபெறும்.

முதலாம் திகதி நடைபெறும் ஐந்தாம் நாள் திருவிழாவின்போது இந்து இளைஞர் மன்றத்தின் அன்னதானம் நடைபெறும். எதிர்வரும் இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று கல்முனை பிரதேசத்துக்குட்பட்ட அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இந்த திருவிழா பூஜை வழிபாடுகள் அனைத்தும் பூசகர் சிவத்திரு கி. வை அருணன் தலைமையில் சிறப்பாக நடைபெறும்.



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் பொருளாதார மீட்புக்கு உறுதுணை

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் சந்திப்பு

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு உறுதுணையாக அமைந்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து எம்முடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை மீட்டெடுத்த விதம் குறித்து பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். இந்த சூத்திரத்தை அடுத்த சில வருடங்களுக்கு பின்பற்றுவதன் மூலம் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

*பதில்: இதை நான் உறுதியாக நம்புகின்றேன். அரசாங்கத்தின் பங்காளி என்பதற்காக அல்ல, வித்தியாசமாக சிந்திக்கும் ஒருவரிடம் கேட்க வேண்டிய கேள்விகள் உள்ளன. அப்படியாயின் மாற்றுவழி என்ன? தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தை விட வேறு ஏதேனும் மாற்றுவழி உள்ளதா? என்ற கேள்விகளைக் கேட்க விரும்புகின்றேன். எனவே, இது கடினமான பணி என்பதுடன் மட்டுமன்றி, சில நேரங்களில் நாம் எதிர்பார்க்கும் இலக்குகள் தாமதம் அடையலாம். சில சந்தர்ப்பங்களில் எதிர்பார்ப்பதை விட முன்னரே இலக்கை அடைந்து விடலாம். நாம் எதிர்பார்த்ததை விட முன்னரே பணவீக்கத்தைக் குறைக்க முடிந்துள்ளது.*

**கே: சுமார் 286 பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் மீண்டும் தளர்த்தப்பட்டுள்ளன, மேலும் அனைத்துக் கட்டுப்பாடுகளும் படிப்படியாக முடிவுக்கு வர உள்ளன. இது நமது அந்நியச் செலாவணி கையிருப்பை கடுமையாகப் பாதித்து மேலும் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுக்குமா?**

*பதில்: இல்லை, இதை நாங்கள் மிகவும் கவனமாகச் செய்து வருகின்றோம். இலங்கை சுங்கத் திணைக்களத்தின் வருவாயை அதிகரிக்க வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமெனத் துறைசார் மேற்பார்வைக் குழுவொன்றில் கூறப்பட்டிருப்பதை ஊடகங்களில் காணக்கூடியதாகவிருந்தது. இருப்பினும், இதுபோன்ற கோரிக்கைகளுக்கு நாங்கள் பயப்பட மாட்டோம். அந்த 286 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் நாட்டின் தேவைகள் உட்பட ஒவ்வொரு துறையையும் கலந்தாலோசித்து, கடந்த ஐந்தாண்டுகளின் பதிவேடுகளைப் பார்த்து ஆண்டுக்கு செலவழிக்க வேண்டிய டொலர்களின் அளவையும் மதிப்பீடு செய்தோம். அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, 286 பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இதனால் எந்தப் பிரச்சினையும் வராது என நம்புகிறோம்.*

**கே: அண்மையில் அரசாங்கம் சீனாவின் சினோபெக் மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஆர்.எம் பார்க் நிறுவனத்துடன் எரிபொருள் விநியோகம் மற்றும் விற்பனைக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது. சில அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு நாடு அந்நியச் செலாவணியைச் செலவழிக்க வேண்டியதில்லை என்பதற்காக இது போன்ற தெரிவுகளை அரசாங்கம் ஆராய்கின்றதா?**

*பதில்: தேவையற்ற சுமையை சுமக்காமல், பற்றாக்குறையை உருவாக்காமல் மக்களுக்கு அதிக நன்மைகளை வழங்கப் போட்டித்தன்மையை உருவாக்குவதே எங்கள் நோக்கமாகும். உதாரணமாக, கடந்த ஆண்டு எரிபொருள் தட்டுப்பாட்டின் போது, இலங்கையில் ஐ.ஓ.சியின் செயற்பாடு எமக்கு மிகவும் சாதகமாக இருந்தது. எவ்வாறாயினும், நாங்கள் எப்போதும் ஒரு நல்ல ஒழுங்குமுறை பொறிமுறையைப் பற்றி சிந்தித்து, மக்களுக்கு நல்ல சேவையை வழங்குவதன் மூலம் நஷ்டத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக தெளிவான வரி வருமானத்தைப் பெறுகிறோம்.*

**கே: சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட சில நிபந்தனைகளை இலங்கை இன்னும் நிறைவேற்றாததால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை கடனை இலங்கை பெறாமல் போகலாம் என எதிர்க்கட்சிகளும் சில பொருளாதார நிபுணர்களும் கூறியுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் கடனின் அடுத்த தவணையைப் பெறுவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளதா?**

*பதில்: எங்களின் அடுத்த மதிப்பீடு செப்டெம்பரில் மேற்கொள்ளப்படும். எனவே எங்களுக்கு மூன்று மாதங்கள் உள்ளன. மத்திய வங்கியில் முன்னேற்ற மீளாய்வுக் குழு நடந்து வருகிறது. அவர்கள் அளித்த தகவலைப் பின்பற்றி சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகள் எங்கள் காலஅட்டவணையுடன் மிகவும் நெருக்கமாக உள்ளன. மத்திய வங்கி சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதே எமது தரப்பில் தாமதமாகும். அது மட்டுமின்றி நமது வருவாயை குறிப்பிட்ட அளவு அதிகரிக்க வேண்டும். சில இறக்குமதிப் பொருட்களுக்கான கட்டுப்பாடுகளையும் தளர்த்தியுள்ளோம். எனவே, எங்களின் இலக்குகளை எங்களால் அடைய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.*

**கே: உள்நாட்டு கடன் மறுசீரமைப்பையும் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ளது. ஆனால் எதிர்க்கட்சி மற்றும் சில விமர்சகர்கள் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு உள்ளூர் வங்கி அமைப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

*பதில்: அவ்வாறானதொரு நிலையை உருவாக்குவதற்கு இடமளிக்கப்படாது என்பதை அரசாங்கமும் மத்திய வங்கியும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன. நாம் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்ற போது, எமது எதிர்கட்சியினர் இந்த அச்சமனநோயை மக்களிடையே உருவாக்க முயற்சித்தனர். உண்மையைச் சொல்வதானால், அவர்கள் நம் நாட்டில் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. எனவே, பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவர்கள் பொய்யான தகவல்களை உருவாக்க வேண்டும் என நினைக்கின்றனர். இல்லையெனில், இந்த நேரத்தில் அவர்கள் என்ன சொல்ல வேண்டும்? சர்வதேச நாணயம் நிதியத்தின் கடன் கொடுக்கப்பட்டது, சில மாற்றம் ஏற்படுவதை மக்கள் உணர்ந்துள்ளனர். பொருட்களின் விலையும், பணவீக்கமும் குறைந்து வருகின்றன.*

*சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையை நாங்கள் பெறாமல் போகலாம் என்று எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன. நமது பாரம்பரிய சிந்தனை முறை மற்றும் மனநிலையின் காரணமாக இந்த சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் போது நாம் சில சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நாட்டை உண்மையாக நேசிப்பவர்கள், சர்வதேச நாணய நிதியத்துடன் ஒருமித்த கருத்து எட்டப்பட்டமை நமது முன்னோக்கிப் பயணத்திற்காகவே தவிர, சர்வதேச நாணய நிதியம் நம் நாட்டை ஆள்வதற்காக அல்ல என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த சவால்களை நாம் எதிர்கொள்ளும் போது, சில அரசியல் கட்சிகள் பாரம்பரியமாக எதிர்மறையான அம்சங்களை சுட்டிக்காட்ட முயல்கின்றன. சில அரச நிறுவனங்களில் உள்ள தொழிற்சங்கங்கள் நாடு எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியை கவனத்தில் கொள்ளாமல் தங்களின் குறுகிய நோக்கங்களை உணர்ந்து கொள்வதற்காக மக்கள் மத்தியில் அச்சமனநோயை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.*

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் மற்றொரு நிபந்தனையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை தனியார்மயமாக்குவது தொடர்பாக பல சர்ச்சைகள் உள்ளன. இலாபகரமான அரசாங்க முயற்சிகளை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு உள்ளது மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் போன்ற சொத்துக்களை விற்பனை செய்வதற்கு எதிராகப் பாராளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்துள்ளது. இது பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?**

*பதில்: தனியார்மயமாக்கும் திட்டத்தை நாங்கள் மேற்கொள்ள வேண்டும். கடந்த 75 ஆண்டுகளாக அரசு நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கான திட்டத்தை நாங்கள் தொடர்ந்தோம். நஷ்டத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான சுமார் 400நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 500 பில்லியன் செலவிடப்படுகிறது. அந்த நிறுவனங்கள் மக்கள் சார்பாக என்ன சேமித்துள்ளன? கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையை இந்த நிறுவனங்களை பராமரிக்க செலவிட வேண்டும்.*

*இறுதியாக, மக்களுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு இல்லை. அரசாங்கத்தின் கொள்கையானது, நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தன்னால் இயன்ற வரை பராமரிக்கும் தேவையற்ற சுமையிலிருந்து விடுபட்டு, நல்ல ஒழுங்குமுறை பொறிமுறையின் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்வதாகும். இது அதிக போட்டித்தன்மையை உருவாக்கி, நுகர்வோருக்கு அதிக நன்மைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா டெலிகொம் இதற்குச் சிறந்த உதாரணம். டெலிகொம்மின் 51 சதவீத பங்குகள் மறுசீரமைக்கப்பட்ட போது இந்த பிரச்சினை எழுந்தது. இன்று அது சிறந்த உதாரணம் ஆகிவிட்டது. அந்த நாட்களில் மக்கள் தொலைத்தொடர்பு இணைப்பைப் பெற குறைந்தது ஒரு வருடமாவது காத்திருக்க வேண்டியிருந்தது. அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் இன்று தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஊழியர்களும் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளவில்லை.*

*உண்மையில், 2009 இற்கு முன்னர் நாங்கள் பாதுகாப்புப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்த நாட்களில் நாங்கள் எல்லாவற்றையும் சந்தேகத்துடன் பார்க்க வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் கூட, டெலிகொம் நிறுவனத்தின் 56 சதவீத பங்குகள் தனியார் மயமாக்கப்பட்டிருந்தன. அப்படியானால் டெலிகொம் ஊழியர்கள் எதிர்கொண்ட பிரச்சினை என்ன? இது தவிர, எத்தனை தனியார் துறை வெளிநாட்டு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் இலங்கையில் இயங்குகின்றன? அவர்கள் டெலிகொம் நிறுவனத்துடன் அதிக போட்டியாக உள்ளனர். அவை மக்களுக்கு சேவைகளையும் வழங்குகின்றன. எனவே, இந்தப் பாரம்பரிய சிந்தனைக்கு அப்பால் செல்ல வேண்டும்.*

**எமது இலக்குகளை எங்களால் அடைய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது**



**எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் அச்சமான மனநோயை உருவாக்க முயற்சிக்கின்றனர். உண்மையைச் சொல்வதானால், அவர்கள் நம் நாட்டில் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. எனவே, பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவர்கள் பொய்யான தகவல்களை உருவாக்குகின்றனர்**



## மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொறகொட

# இந்தியாவுடன் கைகோர்த்துக் கொள்வதில் அமெரிக்கா வெளிப்படுத்தும் அதிக ஆர்வம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை அமெரிக்கா சென்றார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் அழைப்பின் பேரில் இந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டார்.

பிரதமர் மோடி 2014 முதல், ஆறு முறை அமெரிக்காவுக்கு இராஜதந்திர பயணங்களில் ஈடுபட்டுள்ளார், ஆனால் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் முதன்முறையாக அவர் பங்கேற்பது அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரதமர் மோடி தனது ட்விட்டர் செய்தியில், 'இந்த பயணம் ஜனநாயகத்தின் வலு மற்றும் உயிர்ச் சக்தியை அடையாளப்படுத்துகிறது' எனத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் பிரான்ஸ் மற்றும் தென் கொரியாவின் ஜனாதிபதிகள் மட்டுமே இதுவரை அந்நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயங்களில் பங்கேற்றுள்ளனர்.

2002 குஜராத் கலவரத்தின் காரணமாக அமெரிக்காவினால் மதத்தீவிரவாதம் என்று குற்றம் சாட்டப்பட்டு மோடியின் விசா விண்ணப்பம் 2004 இல் நிராகரிக்கப்பட்டதோடு, மோடிக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இடைவெளியும் அதிகரித்தது. அன்றைய குஜராத்தின் முதலமைச்சர் மோடி ஆவார். அந்த விசா தடை மோடி பிரதமரானதும் நீக்கப்பட்டது.

இத்தகைய பின்னணி காணப்பட்ட வேளையில், கௌரவமான அழைப்பைப் பெறுவது இந்தியாவின் சக்திக்கும், பிரதமர் மோடியின் கொள்கைகளுக்கும் கிடைத்த மாபெரும் அங்கீகாரம் என விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மோடியின் வருகையையொட்டி அமெரிக்காவில் வாழும் புலம்பெயர்ந்த இந்தியர்கள் முக்கிய நகரங்களில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததைக் காணமுடிந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் மலர்கள் மற்றும் இந்தியக் கொடிகளுடன் தங்கள் தலைவருக்காக காத்திருந்தார்கள்.

அமெரிக்க செனட் மற்றும் காங்கிரஸின் கூட்டு அமர்வில் உரையாற்றிய பிரதமர் மோடி, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற யோகா உடற்பயிற்சியிலும் பங்கேற்றார்.

2018ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின்படி, 4.2 மில்லியன் இந்தியர்கள் அமெரிக்காவில் வாழ்கின்றனர் எனத் தெரிகின்றது. இவர்கள் அந்நாட்டு மக்கள் தொகையில் சுமார் 1.2 சதவீதம் ஆவர், மேலும் அவர்களில் கணிசமான பகுதியினர் அரசியல், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் சிறந்த நிபுணர்களாக உள்ளனர். அமெரிக்க சமூகத் திட்டத்தில் இந்தியர்கள் வலுவான செல்வாக்கை செலுத்த முடிந்துள்ளது. மற்றைய நாடுகளின் மக்கள் தொகையை விட இந்திய மக்கள் தொகை அமெரிக்க சமூகத்தில் அதிக வருமானம் கொண்ட குழுவாகக் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் திறமையான பிரிவாக இருப்பதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்திய அமெரிக்கா பேச்சுவார்த்தையின் போது விசா பிரச்சினையும் ஆராயப்பட்டது. வழக்கமாக இந்தியர்களுக்கு விசா வழங்க அறுநூறு நாட்கள் எடுப்பது குறித்த விடயமும் ஆலோசிக்கப்படவிருந்தது. அமெரிக்காவிற்குத் தேவையான அறிவையும் நிபுணத்துவத்தையும் வழங்கும் நிபுணர்களாக இந்தியர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அனைத்துத் துறைகளிலும் உயர்பதவிகளில் இந்தியர்கள் உள்ளனர். இந்தக் குழு மலிவான உழைப்பு அல்லாததாலும், பயணத்தின் மூலம் நாடுகளை முன்னேற்றுவதற்கு கடினமாக உழைக்கும் அறிவார்ந்த குழு என்பதாலும், விசா அனுமதி நேரத்தைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகளில் வெளியான உண்மைகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஒரு மில்லியன் இந்தியர்கள் அமெரிக்க வீசாவுக்கு விண்ணப்பம் செய்கின்றனர். உலகின் பிறநாடுகளுடன் மனிதவளங்களை சுதந்திரமாகப் பரிமாற்றம் செய்வது தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொள்ள இந்தியா தயாராகவுள்ளது.

இந்தியஅமெரிக்க உறவுகள் இருபத்தோராம் நூற்றாண்டின் மிகவும் மூலோபாயமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகமும் வரலாறு காணாத அதிகரிப்பை எட்டியுள்ளது. ஜீ20 நாடுகளின் தலைவராக நரேந்திர மோடியின் வெளியுறவுக் கொள்கைகள் அமெரிக்காவின் கவனத்தை ஈர்த்துள்ளன.

ரஷ்யாவுடன் இந்தியா கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதோடு பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பானுடன் திட்டமிட்டு செயல்களை கையாள்கிறது. ஜி20 நாடுகளில் சீனா அங்கம் வகித்தாலும், இந்துபசிபிக் பிராந்தியத்தில் இந்தியா முன்னிலை வகிக்கிறது என்பது சிறப்பு அம்சமாகும்.

அபாரமான பொருளாதார வளர்ச்சியால் பெரும் கவனத்தைப் பெற்றுள்ள இந்தியா, குறிப்பாக நாட்டில் தனியார் நிறுவனங்கள் அடைந்துள்ள வரம்பற்ற முன்னேற்றம், அமெரிக்காவின் கவனத்தை ஈர்த்த விடயமாகும். தனியாருக்குச் சொந்தமான எயார் இந்தியாவும், குறைந்த கட்டண விமான நிறுவனமான இண்டிகோவும் ஆயிரம் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு முயற்சிக்கின்றன. இண்டிகோ கேள்விப்பத்திரத்தின் மதிப்பு 50 பில்லியன் அமெரிக்க டொலர்கள். எயார் இந்தியாவின் கேள்விப்பத்திரத்துக்கு ஜனாதிபதி பைடன் தனிப்பட்ட முறையில் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் பலம் வாய்ந்த நாடாக உருவாகி வரும் இந்தியாவுடன் பாதுகாப்பு உறவுகளை வளர்த்துக் கொள்ள அமெரிக்கா தயாராக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. மேலும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஒரு நாடாக நுழைவதற்கான இந்தியாவின் முயற்சிகளுக்கு இந்தப் புதிய கட்டமைப்பு எவ்வளவு தூரம் உதவும் என்பதை அவதானிப்பது பொருத்தமானது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவை அமெரிக்காவிற்கு வருமாறு அன்றைய ஜனாதிபதி றீகன் விடுத்த அழைப்பு, இலங்கையின் அரச தலைவர் ஒருவருக்கு அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்வதற்கான ஒரேயொரு வாய்ப்பு என்பதை குறிக்கிறது. அவ்வேளையில் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் உயர்மட்டத்தில் இருந்தன. ஆனால் பொருளாதார ரீதியாக இலங்கை உயர்மட்டத்தில் இல்லாவிட்டாலும், இலங்கை பின்பற்றும் நேரடிக் கொள்கைகளும் மற்றும் அமெரிக்காவுக்கு அவ்வேளையில் பிராந்தியத்தில் வலுவாக இல்லாத தொடர்புகளும் இந்தச் சந்தர்ப்பத்தை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க சாதகமான காரணிகளாக அமைந்தன.

இந்தப் பின்னணியில் நாட்டிற்குச் சாதகமான சூழ்நிலை உருவாக்கப்பட்டதோடு, பயங்கரவாதம், ஸ்திரமற்ற அரசியல் கொள்கைகள், வளர்ந்து வரும் இலங்கையின் சமூகக் கட்டமைப்பு ஆகியன இந்த இடத்தை இழக்கச் செய்தன என்பது மனதில் கொள்ள வேண்டிய விடயமாகும். அவ்வேளையில், உலக கட்டமைப்புக்கு ஏற்ப முடிவுகளை மேற்கொள்ள இலங்கை தவறிவிட்டது. இன்று இந்திய மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதன் பின்னணியைப் புரிந்துகொள்வது உலக நிகழ்ச்சி நிரலில் முக்கியமானதாக அமையும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

எண்ணெய்க்காக தேயிலையை கொடுத்தல்;

# ஈரானுடன் இலங்கை மீண்டும் பண்டமாற்று வர்த்தக முறை

ஈரானுடன் இலங்கை 250 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெய்க்காக தேயிலையை வழங்கும் பண்டமாற்று நடைமுறையை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்காக கடந்த 2021ஆம் ஆண்டில் இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. எனினும், கடந்தாண்டு இலங்கையில் ஏற்பட்ட டொலர் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இதன் நடைமுறை தாமதமானது.

தற்போது ஈரான் மற்றும் இலங்கை இரு நாடுகளும் டொலர்களை நம்பாமல், வர்த்தகம் செய்யலாமென்று இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல், வெளிநாட்டு செய்திச் சேவையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஒவ்வொரு மாதமும் 5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான தேயிலையை 48 மாதங்களுக்கு அனுப்புவது உடன்படிக்கையாகும்.

எனினும், மாதத்துக்கு சுமார் 2 மில்லியன் டொலர்களிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக, நிராஜ் டி மெல் தெரிவித்துள்ளார்.

உலகளவில் பிரபலமான சிலோன் தேயிலை இலங்கையின் அதிக அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் பயிராகும்.

இது கடந்தாண்டு 1.25 பில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டுக்கு கொண்டு வந்ததாக, அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் முக்கிய தேயிலை கொள்வனவாளர்களில் ஈரான் உள்ளடங்குகிறது. எனினும், ஈரான் மீதான அமெரிக்கத் தடைகள் வர்த்தகத்தை பாதித்தால், கடந்த 2018ஆம் ஆண்டில் 128 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து கடந்தாண்டு 70 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இந்த ஏற்றுமதி சீராக குறைந்தது.

இதற்கிடையில், அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள பண்டமாற்றுத் திட்டத்தின் கீழ், எண்ணெய்யை கொள்வனவு செய்யும் அரச நிறுவனமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு தேயிலை சபையினூடாக ரூபாவை வழங்கவுள்ளது.

## தேவதாசன் ஜனாதிபதியின்...

யினுடைய பொதுமன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டு புறக்கோட்டைரயில்நிலையத்தில்இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினருக்கு ஆதரவு வழங்கியதாக கூறப்படும் கனகசபை தேவதாசனுக்கு கடந்த 2017ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் பியசேன ரணசிங்க, 20 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்திருந்தார்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த கனகசபை தேவதாசன், தன்னை விடுவிக்குமாறு கோரியும் தனது வழக்குக்கான ஆதாரங்களை திரட்ட தன்னை பிணையில் விடுவிக்குமாறு கோரியும் பல உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தியிருந்தார்.

அத்துடன், தனக்காக தானே சில வழக்குத் தவணைகளில் அவர் வாதாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவரிடையே வேகமாக...

செலுத்த வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார். சிறுவர்களுக்கு காய்ச்சல் இருந்தால், பாடசாலைகள் அல்லது பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கு அனுப்ப வேண்டாமெனவும், அவர் அறிவுறுத்துகிறார்.

## STF நடத்திய...

பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். கடந்த 18ஆம் திகதி மினுவாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்ய விசேட அதிரடிப்படையினர் நேற்று (24) அதிகாலை எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போது, விசேட அதிரடிப்படை அதிகாரிகளை நோக்கி சந்தேகநபர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, விசேட அதிரடிப்படையினர் நடத்திய பதில் துப்பாக்கிச் சூட்டில் 22 வயதுடைய இந்த சந்தேகநபர் உயிரிழந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## பாரிய போர்க்கப்பல்...

வந்துள்ளது. இலங்கைக்கு கடந்த ஒருவார காலத்துக்குள் மட்டும் மேற்குலக மற்றும் அண்டை நாடுகளிலிருந்து தொடர்ந்து கடற்படை கப்பல்கள் வருகை தந்த வண்ணமுள்ளன.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் கடற்படை கப்பலை கொழும்புத் துறைமுகத்தில் கடற்படை மரபுப்படி கடற்படையினர் வரவேற்றனர். கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்த போர்க்கப்பல் 150.5 மீற்றர் நீளமுடையதென்பதுடன், 207 தங்குமிடங்களை கொண்டதாகும்.

கப்பல் இலங்கையில் தரித்து நிற்கும் காலத்தில் அதன் கடற்படை அணியினர், நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று இலங்கையின் முக்கிய இடங்களை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சிங்கள மக்களின்...

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் நியாயமான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக விட்டுக்கொடுப்புடன் தயாராகவுள்ளனர். ஆனால், சிங்கள இனவாதமும் பௌத்தவாதமும் பேரினவாத சிந்தனையோடு தொடர்ச்சியாக செயல்படுவதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

## கனடாவில் இலங்கையருக்கு...

வம்சாவளியைச் சேர்ந்த ஜெய் ஜெயசிங்க என்பவர் 35 மில்லியன் டொலர் பரிசை வென்றுள்ளார். தமக்கு வாய்ப்பு வருமென்று தாம் எப்போதும் நம்பியதாக பரிசு கிடைத்த பின்னர் டொரோண்டோவில் நடைபெற்ற நிகழ்வின் போது, ஜெயசிங்க தெரிவித்தார். சில்லறை வணிகத் தொழில் புரிந்து வரும் ஜெயசிங்க, இப்பணத்தை தமது குடும்பத்துக்காக ஒரு புதிய வீட்டை கொள்வனவு செய்யவும் தனது மகளின் கல்விக்கு செலவிடவும் திட்டமிட்டுள்ளதாகவும், தெரிவித்தார்.

## பொருளாதார மீட்சிக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அண்டோனியா குட்டரெஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் போதே, அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் முன்னேற்றம், பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகத்திடம் தெளிவுபடுத்தினார்.

நிலையான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போதும், நீண்டகால பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னெடுகின்ற போதும், வலுவான நிதிக் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புடனான முயற்சிகள் தொடர்பாகவும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை மேம்படுத்தும் அதேநேரம், காலநிலையால் ஏற்படக்கூடிய மோசமான பாதிப்புகளை மட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நீடிக்கப்பட்ட உபாய மார்க்க திட்டங்களை எடுத்துக்காட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைக்கமைய முன்னெடுக்கப்படும் 'காலநிலை சுபீட்சத்துக்கான திட்டமிடல்' தொடர்பாகவும் செயலாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார். பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள், கடன் மறுசீரமைப்பு மற்றும் காலநிலை அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களின் போது, இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இடையிலான ஒத்துழைப்புகளை பலப்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது. அதேநேரம், 'புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தம்' தொடர்பான இரண்டாம் நாள் அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (23) கலந்துகொண்டார்.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவெல் மெக்ரோன் தலைமையில் இரண்டாம் நாள் அமர்வுகள் ஆரம்பமாகியிருந்ததுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீன பிரதமர் லீ கியாங் (Li Qiang), பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா (Luiz Inocio Lula da Silva), ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா வொன்டர் லெயன் (Ursula von der Leyen), ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அண்டோனியா குட்டாரெஸ் (Antonio Guterres), உலக வங்கியின் பிரதானி அஜய் பெங்கா (Ajay Banga), சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவா (kristlina Georgieva) ஆகியோரும் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் வெளிநாடுகளின் அமைச்சர்கள் உள்ளடங்கலான பிரதிநிதிகள், நிதிசார் பிரதானிகள் மற்றும் காலநிலை அலுவல்கள் தொடர்பான செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## டெங்கு நோய் பரவலால்...

நிபுணர் சுட்டிக்காட்டினார். தற்போதுவரை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவில் டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர். அங்குள்ள சுகாதார மற்றும் பாதுகாப்புத்துறையினருடன் இணைந்து கழிவுகளை அகற்றும் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும், மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவால் தயாரிக்கப்படும் '101 கலந்துரையாடல்' நிகழ்வில் நேற்று முன்தினம் (23) கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இந்நாட்களில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் தலையீட்டின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், டெங்கு ஒழிப்பு திட்டத்தை அரச மற்றும் தனியார் துறைகள், பொதுமக்களையும் இணைத்துக் கொண்டு முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

தொடர்ச்சியாக இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் இயலுமை காணப்படுகின்றது.

மேலும், எதிர்வரும் பருவகாலத்தை தொடர்ந்து டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும். பொதுவாக ஜுலை மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடியும். அந்த வகையில், எதிர்வரும் நாட்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரிக்கக் கூடுமென்பதால், அனைத்துத் துறையினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகுமெனவும், அவர் தெரிவித்தார்.

டெங்கு நோய் எந்த வயதினரையும் பாதிக்குமென்பதுடன், பதிவாகும் நோயாளர்களில் 75 சதவீதமானவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதற்கு முன்பாக சிறுபிள்ளைகள் அதிகமாக பாதிக்கப்பட்டாலும், தற்போது இளைஞர்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

டெங்கென்பது ஒருவகை வைரஸ். டெங்கு நோயாளர்களை டெங்கு நுளம்புகள் கடிக்கும் பட்சத்தில் அந்த நுளம்பால், ஏனையவர்களுக்கு டெங்கு நோய் பரவக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகும். டெங்கு நோய் பரவுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும். அதனால், டெங்கு கட்டுபாட்டுக்கு இந்தக் காரணங்கள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டியது அவசியமெனவும், அவர் வலியுறுத்தினார்.

முதலில் நுளம்புகள் பரவக்கூடிய பகுதிகளை தூய்மைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். தூய்மையான நீர் சேரும் பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் தங்கியிருக்கும். பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக், டயர், பூச்சாடிகள் உள்ளிட்ட பொருட்கள் இருக்கும் இடங்களில் டெங்கு நோய் அதிகரிக்கும். முடிந்தளவுக்கு மேற்படி பகுதிகள் தொடர்பாக அவதானம் செலுத்தி, அவற்றை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதேபோல், நுளம்புக் கடியிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

டெங்கு நோய்க்கு இலக்கானவர்கள் மற்றையவர்களுக்கு பரவாமலிருக்கும் வகையில், நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெற வேண்டியது அவசியமாகும். அதற்காக உடலை முழுமையாக மறைக்கும் உடைகளை பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். நுளம்பு கடியிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான பூச்சி விரட்டித் திரவியங்களூடாகவும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெற முடியும்.

எவ்வாறாயினும், இந்த முறைமைகள் 100 சதவீதம் பலன் தருபவை அல்லவெனவும், அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதேச சபைகள், நகர சபைகள், பொது சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட சுகாதார பிரிவுகள், பாதுகாப்பு பிரிவுகளின் பங்களிப்புடன் நுளம்பு பெருகும் இடங்களை தூய்மைப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. டெங்கு நோய் அதிகளவில் பரவும் மாகாணங்களை மையப்படுத்திய விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக நோயாளர்கள் பதிவாகும் கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் எதிர்வரும் வாரங்களில் விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்பகுதிகளில் காணப்படும் கழிவுகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும். அதற்காக இராணுவத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

நீர் நிரம்பிய பாத்திரங்களில் நீரை அகற்றினாலும் குடம்பிகள் தங்கியிருக்கக்கூடும். எனவே நீர் நிரம்பாத வகையில் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். பொதுவாக ஐந்து அல்லது ஆறு நாட்கள் மாத்திரமே நுளம்புகள் உயிர்வாழும். அதனால் வாராந்தம் சுற்றுச்சூழலை தூற்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். நீங்கள் வசிக்கும் பகுதிக்கு அண்மித்த பகுதிகளை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். அதனால் நோய் கட்டுப்பாட்டினை ஒருவரால் மாத்திரம் செய்துவிட முடியாது. இந்நாட்டில் அனைவரிதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என்றும் வலியுறுத்தினார்.

டெங்கு நோய்க்கு இலக்கானவர் எனின் கடினமான வேலைகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஓய்வெடுக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் நோயின் பாதிப்பு அதிகரிக்கும். காய்ச்சல் ஏற்படும் போது பெரசிடமோல் தவிர்ந்த ஏனைய மருந்துகளை எடுத்துக்கொள்வதை தவிர்க்க வேண்டும். எந்த ஒரு காய்ச்சல் நோயாளிக்கும் வேறு மருந்துகளை வழங்குமாறு வைத்தியர்கள் பரிந்துரைக்கவில்லை. சில நேரங்களில் பெரசிடமோல் மருந்தினால் நோய் முழுமையாக குணமடையாமல் இருக்கலாம். அந்த சந்தர்பங்களில் நோயாளர்கள் அச்சப்படவேண்டிய அவசியம் இல்லை. நோய் இருப்பதால் பாரிய பிரச்சினைகள் ஏற்படாது. ஓய்வெடுப்பதால் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ள முடியும். இளநீர்,தேசிக்காய், தோடம்பழம், ஜீவனி உள்ளிட்ட திரவ வகைகளை உட்கொள்வது மிகவும் உகந்தது என்றும் தெரிவித்தார்.

## 41 நாடுகளிலிருந்து...

இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர், "இதுவரை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 41 நாடுகளிலிருந்து அழைப்புக் கிடைத்துள்ளதுடன், இந்த நாடுகளிலிருந்து 12 இலட்சத்து 73 ஆயிரத்து 428 பேருக்கு அழைப்புக் கிடைத்துள்ளன. அந்த வகையில், 3 இலட்சம் பேரை இந்த வருடத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதற்கான இலக்கை நாம் கொண்டுள்ளோம்.

அனைத்து நாடுகளுக்கும் வேலைவாய்ப்புக்காக செல்லும் போது, அந்தந்த நாடுகளில் புழக்கத்திலுள்ள மொழிகளை தெரிந்திருப்பது சிறந்ததாகும். ஜப்பானுக்கு செல்வோருக்கு ஜப்பான் மொழியும் கொரியாவுக்கு செல்வோருக்கு கொரிய மொழியும் தெரிந்திருப்பது அவசியமாகும். மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடுகளில் அரபுமொழி தெரிந்திருத்தல் அல்லது பொதுவாக ஆங்கிலமொழி தெரிந்திருத்தல் அவசியமாகும்" என்றார்.

## எங்கள் கருத்து

# பல்கலைக்கழக மாணவர்களின் நலனில் அரசின் விசேட அக்கறை

பூர்த்தி செய்துவிட வேண்டுமென்ற இலட்சியத்துடன் வறுமையையும் பொருட்படுத்தாமல் பெற்றோர் பலர் தமது பிள்ளைகளைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கின்றனர்.

அரசாங்கம் இலவசக் கல்விக்கென்று பெருந்தொகை நிதியை வருடாந்தம் செலவிடுவது உண்மையெனினும், பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்தி செய்யும்வரை அம்மாணவர்களுக்கு ஏற்படுகின்ற தனிப்பட்ட செலவுகள் மிகவும் அதிகம். உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து என்றெல்லாம் அம்மாணவர்கள் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. அந்தச் சுமையைத் தாங்க வேண்டிய நிலையில் பெற்றோர் உள்ளனர்.

வறிய குடும்பங்களைப் பொறுத்தவரை இச்சுமையானது தாங்க முடியாததாகும். காணியை விற்றுப் பணம் பெற்று அப்பணத்தை தமது பிள்ளைகளின் கல்விக்கு செலவிடும் பெற்றோரும் பலர் உள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை இந்த வட்டியில்லாக் கடன் என்பது பெரிதும் நிவாரணமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

மேற்கு நாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களுக்கென்று விசேடமான கடன் திட்டங்கள் உள்ளன. கற்கும் காலத்தில் பெற்றுக் கொண்ட கடன்தொகையை, தொழிலுக்குச் சென்ற பின்னர் சிறிதுசிறிதாக மீளச்செலுத்தக் கூடிய ஏற்பாடுகள் அந்நாடுகளில் உள்ளன. அதன் காரணமாக அந்நாடுகளில் மாணவர்களால் பணக்கஷ்டமின்றி கல்வியைத் தொடர முடிகின்றது.

இலங்கையிலும் அவ்விதமான இலகுகடன் ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்படுமானால், மாணவர்கள் பெரிதும் நன்மையடைவரென்பதில் ஐயமில்லை. அதேசமயம் மாணவர்களின் கல்விக்காக இலவசக் கல்வி உட்பட இவ்விதமான கடன் வசதிகளை ஏற்பாடு செய்வதில் அரசாங்கம் காண்பிக்கும் அக்கறையை மாணவர் சமூகம் நன்றியுடன் நோக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

**விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)**

**இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைக்கு 80 தொன் Bollard Pull Twin Azimuth Stern Drive Harbour Tug ஒன்றைக் கொள்வனவு செய்தல்**

**CES/FP/04/PT/6421 (HM)**

01. இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைக்கு (SLPA) 80 தொன் **Bollard Pull Twin Azimuth Stern Drive Harbour Tug** ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் (CAPC) தலைவர் அழைக்கின்றார்.
02. விலைக்கோரல்கள் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் இடம்பெறும்.
03. இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை பெறுகைக்கு பதிலாக விலைமனுதாரரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி அல்லது தமது சொந்த நிதியை பயன்படுத்தும்.
04. ஆர்வமுள்ள தரப்பினர் மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு 01, இல. 19, சைத்திய வீதி, இலங்கைத் துறைமுக அதிகாரசபை, வழிசெலுத்தல் பிரிவு, மே/பா தலைவர் - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு, ஹார்பர் மாஸ்டர் அவர்களிடமிருந்து 0094112385401 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது nirmalsilva@slpa.lk. எனும் மின்னஞ்சல் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். ஆர்வமுள்ள தரப்பினர் கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை, வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவ பிரதான முகாமையாளர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களின் மாதிரிப் பிரதியொன்றைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. விலைக்கோரல் நிகழ்வுகள் பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளன.

**நிகழ்வு** / **திகதி**

அ. விலைமனு ஆவணங்கள் வழங்குதல் : 2023 ஜூன் 26ஆம் திகதி
ஆ. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் : 2023 ஜுலை 26ஆம் திகதி
இ. விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களின் தெளிவுபடுத்தலுக்காக விண்ணப்பிக்கும் இறுதி நாள்: 2023 ஆகஸ்ட் 3ஆம் திகதி
ஈ. SLPA தெளிவுபடுத்தல்களை வழங்கும் அல்லது/மற்றும் விலைக்கோரல் ஆவணங்களில் சேர்க்கைக்கான இறுதி நாள்: 2023 ஆகஸ்ட் 10ஆம் திகதி
உ. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் 2023 ஆகஸ்ட் 24ஆம் திகதி பி.ப. 2.00 மணி
ஊ. விலைமனுக்கள் திறக்கப்படுதல் : 2023 ஆகஸ்ட் 24ஆம் திகதி விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனடுத்து

06. ஆர்வமுள்ள தரப்பினர் விலைமனு ஆவணங்கள் வாங்கப்பட்ட திகதியில் நடுத்தர நாணயமாற்று விகிதத்திலிருந்து கணக்கிடப்பட்ட இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட ஆயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களை (USD 1,000.00) சகல வரிகளும் அடங்களாக செலுத்திய பின் கொழும்பு 01, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை, வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவ பிரதான முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

விலைமனு ஆவணங்கள் 2023 ஜூன் 26ஆம் திகதி 1200 மணித்தியாலயம் முதல் 2023 ஆகஸ்ட் 24ஆம் திகதி 1200 மணித்தியாலம் வரையில் வேலை நேரங்களில் வழங்கப்படும்.

07. இந்த விலைக்கோரலில் ஏதேனும் சிக்கல் இருந்தால் அதை தெளிவுபடுத்தவும், அதற்கு பதிலளிக்கவும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023 ஜுலை 26ஆம் திகதி 0930 மணித்தியாலயத்தில் கொழும்பு 01, இல. 19, சைத்திய வீதி, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, முதலாம் தளத்திலுள்ள மாநாட்டு அறையில் இடம்பெறும். ஆர்வமுள்ள தரப்பினர் மற்றும் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்திற்கு நேரடியாக நிகழ்நிலை (online) ஊடாக கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட வேண்டிய உருப்படிகளை கூட்டத் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன் கிடைக்கச்செய்தல் விரும்பத்தக்கது.
08. விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் விதிகள் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்குதல் வேண்டும். இந்தச் சட்டத்தின் கீழ் விலைமனுதாரர் சார்பாக முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது பெயரிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் தாங்கள் பங்கேற்க விரும்பும் எந்தவொரு கேள்வியின் மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவிற்கு (இல. ரூபா) அதிகமாகவிருந்தால் அவர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தங்களைப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மற்றும் உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட PCA பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. ஒவ்வொரு விலைமனுவுடனும் ஐம்பதாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பிணை முறியானது தலைவர், CAPC, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 என முகவரியிட்டு 2023 ஆகஸ்ட் 24ஆம் திகதி 1400 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் அனுப்பப்படல் வேண்டும். ஏதாவதொரு விலைமனு தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டால் அது மதிப்பீட்டிற்கு கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அது நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் இதே நாளில் பகிரங்கமாகத் திறக்கப்படும்.
10. CAP அல்லது இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவு மற்றும் கிரயத்திற்கு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு - 01,**
**இலங்கை.**

லங்கா சதொச LANKA SATHOSA

**விலைமனுக்கோரல்**

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

லங்கா சதொச பல்பொருள் அங்காடிகளினால் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட இயந்திரப் பொருட்கள்.

**2023 - ஆண்டுக்கான பயன்படுத்த முடியாத பொருட்கள் விற்பனை**

மாளிகாவத்தை மொத்த களஞ்சியம், 163/3, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10 என்ற இடத்தில்.

ஜூன் 27 முதல் 30 வரை | மு.ப. 09.00 முதல் பி.ப 05.00 வரை
ஜுலை 01 சனிக்கிழமை | மு.ப. 09.00 முதல் பி.ப 02.00 வரை
பரீட்சித்தல் செய்ய முடியும்

| # | Non Usable Item | Quantity |
|---|---|---|
| 1 | சிறிய ஜெனரேட்டர்கள் (2.0kw-2.6kw) | 23 |
| 2 | கையேடு பண இயந்திரம் (Manual Cash Machine) | 46 |
| 3 | சூப்பர் மார்க்கெட் கூடைகள் (Super Market Baskets) | 47 |
| 4 | ரேக் மற்றும் உதிரிப்பாகங்கள் (Rack Accessories) | (Lot) |
| 5 | கணினி துணைக்கருவிகள் (Computer Accessories) | (Lot) |
| 6 | மின்விசிறிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் (சுவர்/ உச்சவரம்பு மின்விசிறிகள்) (Wall/Ceiling Fans) | (Lot) |
| 7 | கையேடு எடை அளவு இயந்திரம் 500 கிலோ (Manual Scales 500Kg) | (Lot) |
| 8 | உறைவிப்பான் (Deep Freezer) | 95 |
| 9 | A/C பொருட்கள், எலக்ட்ரிக் பொருட்கள் துணைக்கருவிகள் | (Lot) |
| 10 | தளபாட உபகரணங்கள் (Furniture Equipment) | (Lot) |
| 11 | மற்ற பயன்படுத்த முடியாத பொருட்கள் உலோக ஸ்கிராப் பொருட்கள் (Other Non usable Item (GI Sheet) /Metal Scrap Items) | (Lot) |
| 12 | பாட்டில் குளிர்விப்பான் (Bottle Cooler) | 46 |
| 13 | CCTV கேமரா மற்றும் உபகரணங்கள் (CCTV Camera & Equipment) | (Lot) |

ஏல விற்பனை திகதிக்கு பொருட்களை பரீட்சிக்க நுழைவுக் கட்டணம் ஒருவருக்கு ரூபா 2,500/=

**ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

2023.07.04 திகதி மு.ப. 09.00 முதல் பி.ப. 04.00 வரை தலைவர் காரியாலயம், லங்கா சதொச லிமிட்ட் என்ற முகவரியில் முத்திரையுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2023 - ஆண்டுக்கான பயன்படுத்த முடியாத பொருட்கள் விற்பனை என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும்
தொலைபேசி எண் 078-2754585/ 077-1963478 (நிஷாந்த பீரிஸ்)

தலைவர்,
லங்கா சதொச லிமிட்ட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
## (கைத்தொழில் அமைச்சு)

### இலங்கையில் ஒப்பனை அழகுக்கலை தொழிற்றுறையினை விருத்தி செய்வதற்காக தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளை வழங்கும் செயற்றிட்டம் 2023

கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (IDB) மூலம் சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பனை அழகுக்கலை உற்பத்தி கைத்தொழில் பிரிவுகள் 30 இனை தெரிவு செய்து, அவற்றின் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளை வழங்கும் செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தெரிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்கள் அல்லது தற்போது காணப்படுகின்ற உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தி, அதன் திறனை அதிகரித்து, பரந்த சந்தை வரை விரிவுபடுத்துவதற்கு தேவையான அறிவு, பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் வழங்கப்பட உள்ளது.

**செயற்றிட்டத்தின் நன்மைகள் :**

- தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களில் தெரிவு செய்யப்பட்ட உற்பத்தி / உற்பத்திகளை ஆய்வு செய்ததன் பின்னர் ஆய்வுக் கட்டணமாகச் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.200,000 அல்லது அதற்கும் அதிகமாக இருந்தால், செலவழித்த தொகையில் அதிகபட்சம் ரூ.100,000க்கு உட்பட்டதான செலவு அல்லது அதற்கும் குறைவான ஆய்வுக் கட்டணம் செலவழிக்கப்பட்டிருப்பின், அதாவது, ரூ.200,000க்கும் குறைவான தொகை செலவழிக்கப்பட்டால், அந்தத் தொகையில் அதிகபட்சமாக 50% திருப்பிச் செலுத்தப்படும்.
- தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களுக்காக அவர்களின் உற்பத்திகளின் தரம், உற்பத்தி செயன்முறை மற்றும் விற்பனை ஆகியவற்றை விருத்தி செய்வதற்காக 04 பயிற்சிகளை இலவசமாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**தகைமை பெறுவதற்கான நிபந்தனைகள் :**

- கைத்தொழில் உள்நாட்டில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- கைத்தொழிலானது, ஒப்பனை அழகுக்கலை கைத்தொழில் பிரிவின் கீழ் காணப்படல் வேண்டும்.
- கைத்தொழிலானது குறைந்தபட்சம் ஒரு வருட காலம் ஒப்பனை அழகுக்கலை உற்பத்திகளில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கின்ற சந்தரப்பத்தில் குறித்த கைத்தொழிலானது வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்க வேண்டும்.
- வருடாந்த வருமானம் 750 மில்லியன்களுக்கு குறைவான அல்லது 300க்கும் குறைவான நிரந்தர வேலைவாய்ப்புகளை கொண்டுள்ள கைத்தொழில்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும். (கைத்தொழில் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கை கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு)
- தெரிவு செய்யப்பட்ட உற்பத்தி அல்லது உற்பத்திகளுக்காக செலவிடப்பட்ட ஆய்வு கட்டணமானது நிதி நன்கொடையாக வழங்கப்படும். (செயற்றிட்டத்தின் நன்மைகளின் கீழ்)
- 2023ம் ஆண்டுக்காக இதற்கு ஒப்பான வேறு நிதியுதவிகளை பெற்றுக் கொள்வதற்காக வேண்டி குறித்த கைத்தொழிலானது வேறு ஏதும் அரச நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கூடாது.

**விண்ணப்பிக்கும் முறை :**

- விண்ணபத்தினை IDB இன் உத்தியோகபூர்வ இணையத்தில் பெற்றுக் கொள்ள முடியும். www.idb.gov.lk
- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவம் மற்றும் அதற்குறிய ஆவணங்களை (வன் பிரதிகளை) IDB இன் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதுடன் மென் பிரதிகளை tsdidb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு ஜுலை மாதம் 21ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் ஒழுங்கு :**

- இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவரினால் நியமிக்கப்படுகின்ற குழுவின் மூலம் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தற்போது ஒப்பனை அழகுக்கலை உற்பத்தி, உற்பத்திகளை மேற்கொள்கின்ற 30 சிறு மற்றும் நடுத்தர ஒப்பனை அழகுக்கலை தொழிற்றுறைகள் தெரிவு செய்யப்படும் என்பதுடன் இறுதித்தீர்மானத்தினை IDB நிறுவனமே மேற்கொள்ளும்.
- உரிய உற்பத்தி / உற்பத்திகளின் விபரங்கள், ஆய்வின் தேவைப்பாடு மற்றும் தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மற்றும் பயிற்சி தேவைகளை அறிந்துக் கொள்வதற்காக ஐனுடீ நிறுவனத்திற்கு குறித்த ஆவணங்களை முன்வைப்பதற்கு கைத்தொழிலாளர்கள் இணக்கம் தெரிவிக்க வேண்டும்.
- தெரிவு செய்யப்படுகின்ற அனைத்து கைத்தொழில்களும் 2023ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதிக்கு முன்பதாக குறித்த செயன் முறையினை பூர்த்தி செய்து அவற்றை உறுதிசெய்வதாக IDB உடன் ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.

**தொடர்புகளுக்கு :**

பணிப்பாளர்,
தொழில்நுட்ப சேவை பிரிவு,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை,
இல.: 615, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை.

| | |
|---|---|
| தொலைபேசி | : 011 2605278 / 011 2605326-27 |
| Ext | : 150 / 197 / 167 |
| தொ. நகல் | : 011 2623846 / 011 2607002 |
| மின்னஞ்சல் | : tsdidb@gmail.com |
| இணையத்தளம் | : www.idb.gov.lk |

**தலைவர்**
கைத்தொழில் அபிவிருத்தி சபை

---

# பெறுகை அறிவித்தல்

லங்கா சதொச

## லங்கா சதொச லிமிட்டடுக்கு பொது காப்புறுதித் திட்டம் ஒன்றை வழங்கல்

விலைமனு இலக்கம் LSL/PRO/05/27/General Insurance/2023
**தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல்**

லங்கா சதொச லிமிட்டடுக்கு **2023.08.01 ஆம் திகதி தொடக்கம் 2024.07.31ஆம் திகதி வரையான** ஓர் ஆண்டு காலத்திற்காக பொது காப்புறுதி திட்டத்தை பெற்றுத் தருவதற்கு, **லங்கா சதொச லிமிட் பெறுகைக் குழுவின் தலைவரினால்** அதற்காக ஆர்வம் காட்டுகின்ற காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு.
காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்:

1. கையிருப்புப் பொருட்கள்
2. பணம் (வெளியே கொண்டு செல்வது மற்றும் விற்பனையகங்களில் இருக்கும்போது)
3. வாடிக்கையாளர் மற்றும் உற்பத்தி பொறுப்பு காப்புறுதி (Public & Product Liability)
4. நிலையான சொத்துகள்
5. வாகனங்கள்

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களிடம் இருந்து அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த ஆங்கில மொழியிலான குறித்த முழுமையான விலைமனு ஆவணங்களை **5,000.00 ரூபா மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2023 ஜூன் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 2023 ஜூலை மாதம் 17 ஆம் திகதி வரையான காலத்தில்** பின்வரும் முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம்,
பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி)
இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுக்களுடன் தொடர்புபட்ட ஆவணங்களை வழங்குவது **காப்புறுதி நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களின் பணிக் குழு பிரதிநிதிகளுக்கு மாத்திரமாகும். (காப்புறுதி நிறுவன பிரதிநிதிகள் மற்றும் காப்புறுதி முகவர்கள் இதற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.)** எனவே விலைமனு ஆவணங்களை பெறுவது தொடர்பில் காப்புறுதி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட அதிகாரம் வழங்கும் கடிதம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 ஜூன் மாதம் 07 ஆம் திகதி** மு.ப. **11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும். (பங்கேற்பது கட்டாயமாகும்)

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் **2023 ஜூலை மாதம் 17 ஆம் திகதி** மு.ப. **11.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டிக்கு இட வேண்டும். விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/27/General Insurance/2023"** என்று குறிப்பிட வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற **ரூபா 75,000.00 பெறுமதி கொண்ட விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2023 ஜூலை மாதம் 17 ஆம் திகதி** மு.ப. **11.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் இடம்பெறும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
சிரேஷ்ட நிர்வாக அதிகாரி, பெறுகை (திலினி) 074 1560428

ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிட் பெறுகைக் குழு தலைவர்** வசமானது.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிட்டட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மக்கள் வங்கி தலைமையகம்

**கொழும்பு 02 இல் மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடத்திற்கு Brackets மற்றும் தட்டுகளைப் பயன்படுத்தி beams களை வலுப்படுத்தல் (கட்டம் II - மிகுதி வேலைகள்)
(Strengthening of Beams Using Brackets And Plates)
(விலைமனு இல. 023/2023)**

கீழே விபரிக்கப்பட்டவாறு கொழும்பு 02 இல் மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடத்திற்கு Brackets மற்றும் தட்டுகளைப் பயன்படுத்தி Beams களை வலுப்படுத்தல் (கட்டம் II- மிகுதி வேலைகள்) இற்காக தகுதியும் தகைமையும் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை மக்கள் வங்கியின் சார்பாக கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவர் அழைக்கின்றார்.
துருப்பிடிக்காத உருக்கு மற்றும் Hot-dip கல்வனையிஸ் 'L' Brackets மற்றும் தட்டுகளைப் பயன்படுத்தி Beams களை வலுப்படுத்தல் இந்த வேலைகளில் உள்ளடக்கப்படுகிறது.

**திட்டத்தின் அமைவிடம்:**
கொழும்பு-02, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையக கட்டிடம், மக்கள் வங்கியின் வளாகம்.
நிர்மாண காலம் 270 நாட்களாகும் மொத்த மதிப்பிடப்பட்ட தொகை ரூபா. 130 மி. ஆகும் (VAT நீங்கலாக)

1. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக் கோரல் முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
2. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   தேவைப்படும் CIDA பதிவு
   விசேடம்: கட்டிடம்
   தரம்: C3 அல்லது அதற்கு மேல்
3. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கீழ்க்காணும் தகைமைகளும் உள்ளடக்கப்படுகிறது.
   - கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் சராசரி வருடாந்த பெறுமதி குறைந்தபட்சம் ரூ. 200,000,000/- ஆக இருத்தல் வேண்டும்.
   - கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் ஒரு ஒப்பந்தத்தில் பெறுமதியாக ரூபா 100,000,000/- அல்லது அதற்கு மேல். சமமான தன்மையுடைய மற்றும் கட்டிடத் தொகுதி நிர்மாணத்தில் அனுபவம். (இந்த தேவைப்பாடுகளுடன் ஒப்பிடும்போது வேலைகள் மேற்கோள்காட்டப்பட்டது குறைந்தபட்சம் 70 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்) மற்றும் துருப்பிடிக்காத உருக்கு நிர்மாண கூறுகளில் நிபுணத்துவ ஒப்பந்தக்காரர்கள்.
   - குறைந்தபட்ச தொகை திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது ஏனைய நிர்மாண தேவைப்பாடுகளின் கடன் வசதிகள் மற்றும். ரூபா 45,000,000/- குறையாத ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளும் போது எந்த முற்பணங்களும் நீங்கலாக இருத்தல்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையக கட்டிடம், 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களம். கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே. 011-2473206) (பெக்ஸ் 2341591) அத்துடன் 2023.06.27 முதல் 2023.07.17 வரை அலுவலக நேரங்களில் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையக கட்டிடம் 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களம். கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம். (தெ.பே. இலக்கம் 011-2473206) (பெக்ஸ் 2341591)
5. ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 25,000/- செலுத்துவதன் பேரில் 2023.06.27 முதல் 2023.07.17 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தில் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமை அலுவலகக் கட்டிடம் 6ம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களம் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு ஓர் எழுத்துமூல விண்ணபத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியை, ஆர்வமுள்ள விலைமனுதார்களால் கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.
6. நகல்களுடனான பொறியிடப்பட்ட விலைமனுக்களை தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'மக்கள் வங்கி தலைமையக கட்டிடத்திற்கு Brackets மற்றும் தட்டுகளைப் பயன்படுத்தி beams களை வலுப்படுத்தல் (கட்டம் II- மிகுதி வேலைகள்)' என்று குறிப்பிட்டு கொழும்பு 02, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையக கட்டிடம் 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களம். பொறியியல் சேவைகள் கட்டிட தலைவரின் அலுவலகத்தில்வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடலாம். அல்லது 2023.07.18 பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் அடையுமாறு மேற்படி முகவரியிலுள்ள பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளிக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2023.10.17 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. எல்லா விலைமனுக்களுடனும் 2023.11.14 வரை செல்லுபடியாகும் மக்கள் வங்கி தவிர்த்து ஏனைய வர்த்த வங்கியிலிருந்து ரூபா. 1,300,000/- கொண்ட ஓர் விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2023.07.06 மு.ப. 10.00 மணிக்கு, கொழும்பு-02, மக்கள் வங்கி தலைமையகம், 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் நடைபெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்
பொறியியல் சேவைகள் திணைக்களம்,
மக்கள் வங்கி தலைமையகம்
6ஆம் மாடி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.**

PEOPLE'S BANK
Pride of the Nation

---

# டெண்டர் ஊடாக வாகன விற்பனை

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance

*Company No. PB 917 PQ*

| வாகன இல. | வகை மற்றும் மாதிரி | விபரம் | வரிட் |
|---|---|---|---|
| **மோட்டார் கார்** | | | |
| SG-HE-9xxx | NISSAN SUNNY 1.5 M | 1999, 1498, PETROL, JAPAN, WHITE | B |
| 301-7xxx | NISSAN PULSAR | 1997, 1490, PETROL, JAPAN, WHITE SILVER | A |
| WP KR-5xxx | NISSAN SUNNY SUPER SALOON | 2011, 1597, PETROL, JAPAN | A |
| CP-KB-0xxx | BMW 520 1A | 2002, 2171, PETROL, GERMANY, BLUE | D |
| WP-HG-2xxx | MITSUBISHI CSIASRJER | 2002, 1298, PETROL, JAPAN, SILVER | A |
| 14-6xxx | TOYOTA KE72V | 1983, 1300, PETROL, JAPAN, WHITE | A |
| WP-CAU-1xxx | FORD FIESTA SPORT | 2015, 1500, PETROL, THAILAND, MID NIGHT | A |
| WP-JD-3xxx | NISSAN AD WAGON | 2001, 1290, PETROL, JAPAN, SILVER | A |
| NC-CAH-0xxx | SUZUKI ALTO 800 LXI | 2015, 796, PETROL, INDIA, BLAZING RED | D |
| WP HD-5xxx | MAZDA 323 | 2000, 1598, PETROL, SINGAPORE, GREEN | A |
| WP-CAD-7xxx | PEUGEOT 207 GT CC AUTO | 2010, 1598, PETROL, FRANCE, BLACK | A |
| WP CAT-6xxx | MICRO PANDA LC 1.0 | 2017, 998, PETROL, SRI LANKA, SAPPHIRE BLUE | A |
| CP-KD-1xxx | SUZUKI WAGON R | 2003, 660, PETROL, JAPAN, BLACK | A |
| WP-HS-8xxx | HYUNDAI SANTAFE | 2003, 2400, PETROL, KOREA, BLACK | B |
| SG-KC-5xxx | HONDA CITY | 2003, 1497, PETROL, JAPAN, SILVER | D |
| WP-GM-5xxx | AUDI A4 1.9 TDI | 2001, 1896, DIESEL, GERMANY, METALIC GREEN | A |
| CP-KC-4xxx | MARUTI WAGON R | 2006, 1061, PETROL, INDIA, BLACK | A |
| WP-CAL-8xxx | MICRO TIVOLI | 2015, 1597, PETROL, SRI LANKA, RED | A |
| CP-GF-2xxx | NISSAN SUNNY | 1998, 1490, PETROL, JAPAN, SILVER | A |
| WP-CAP-0xxx | PERODUA G1GZ-AXIA | 2016, 990, PETROL, MALAYSIA, LEMON GREEN | A |
| EP-GA-7xxx | NISSAN BLUE BIRD | 1997, 1970, DIESEL, JAPAN, SILVER | C |
| NC-GY-9xxx | VOLKSWAGEN Passat | 2002, 1781, PETROL, GERMANY, SILVER BLUE | C |
| NW-GO-0xxx | VOLVO E-4B4104 | 1998, 1850, PETROL, JAPAN, WHITE | A |
| UP-CBF-1xxx | SUZUKI DAA-MH55S-WAGON R | 2018, 650, PETROL-ELECTRIC, JAPAN, BLACK | D |
| CP-KT-1xxx | MARUTI SWIFT VXI | 2010, 1197, PETROL, INDIA, SUNLIGHT COPPER | D |
| **டுவல் பேப்பர்ஸ்** | | | |
| 251-0xxx | NISSAN CARAVAN | 2018, 2660, PETROL, JAPAN, WHITE BLACK | B |
| 57-0xxx | TOYOTA HIACE | 1989, 2440, DIESEL, JAPAN, WHITE | B |
| 251-6xxx | TOYOTA LH102 | 1993, 2770, DIESEL, JAPAN, WHITE GOLD | B |
| WP DAH-4xxx | TATA SUPER ACE MINI TRUCK WITH FSLB-BSIV SE | 2019, 1396, DIESEL, INDIA, WHITE | B |
| 53-2xxx | NISSAN VANETTE | 1986, 1950, DIESEL, JAPAN, WHITE | B |
| 58-4xxx | MAZDA BONGO | 1992, 1998, DIESEL, JAPAN, WHITE BROWN | D |
| SG-PW-0xxx | LANKA ASHOK LEYLAND Dost LX | 2013, 1478, DIESEL, INDIA, CREAM | B |
| NW-DAE-6xxx | FOTON BJ1029V3JA2 | 2013, 2156, DIESEL, CHINA, BLUE BLACK | B |
| EP-DAF-3xxx | SUZUKI SUPER CARRY | 2016, 793, DIESEL, INDIA, WHITE | B |
| NP-DAB-8xxx | MAHINDRA MAXXIMO PLUS VX | 2015, 909, DIESEL, INDIA, WHITE | B |
| CP-PQ-1xxx | TATA ACE | 2011, 702, DIESEL, INDIA, IRISH CREAM | D |
| **முச்சக்கர வண்டி / மோட்டார் சைக்கிள்** | | | |
| WP-BDG-6xxx | BAJAJ DISCOVER 125 | 2015, 125, PETROL, INDIA, EBONY BLACK BLUE DECAL | D |
| EP-BFC-2xxx | HONDA SHINE | 2017, 125, PETROL, INDIA, BLACK | C |
| WP-AAW-8xxx | BAJAJ RE | 2014, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| WP-AAZ-6xxx | BAJAJ RE | 2015, 200, PETROL, INDIA, BRIGHT RED | A |
| NC-QU-8xxx | BAJAJ BAJAJ 4 S | 2009, 173, PETROL, INDIA, BLACK | A |
| CP-YO-9xxx | BAJAJ RE 205 | 2011, 198, PETROL, INDIA, BRIGHT RED | D |
| CP-ABJ-6xxx | BAJAJ RE | 2015, 198, PETROL, INDIA, NEPTUNE BLUE | D |
| WP-QQ-2xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173, PETROL, INDIA, ECO GREEN | A |
| NW QV 1xxx | BAJAJ 4S | 2009, 0, PETROL, INDIA, GREEN | D |
| CP-QE-4xxx | BAJAJ AUTO RE 2 STROKE | 2006, 145, PETROL, INDIA, BRIGHT RED | D |
| SP-YQ-3xxx | BAJAJ RE 205 | 2011, 200, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| CP-QS-4xxx | BAJAJ BAJAJ 4 S | 2009, 173, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| SP-QV-9xxx | BAJAJ BAJAJ 4 S | 2009, 173, PETROL, INDIA, ECO GREEN | A |
| WP-QL-4xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, RED | A |
| CP-AAX-3xxx | BAJAJ RE | 2015, 198, PETROL, INDIA, RED | D |
| CP-QO-1xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173, PETROL, INDIA, BRIGHT RED | D |
| WP-YA-0xxx | BAJAJ AR4S-UG | 2010, 173, PETROL, INDIA, GREEN | D |
| SG-AAJ-5xxx | BAJAJ RE 205 | 2013, 198, PETROL, INDIA, NEPTUNE BLUE | D |
| WP-QZ-0xxx | BAJAJ AR4S-UG | 2010, 173, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| WP-AAC-0xxx | TVS KING | 2012, 200, PETROL, INDIA, BLACK | A |
| CP-QI-1xxx | BAJAJ AUTO RE 2 STROKE | 2006, 145, PETROL, INDIA, CHAMPAGNE | D |
| CP-QP-7xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173, PETROL, INDIA, RED | D |
| CP-QM-6xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, RED | D |
| SP-AAV-2xxx | BAJAJ RE | 2014, 198, PETROL, INDIA, RED | D |
| NC-HI-7xxx | BAJAJ AUTO RE 2 STROKE | 2003, 150, PETROL, INDIA, BRIGHT RED | D |
| CP-YK-7xxx | BAJAJ RE 205 | 2011, 198, PETROL, INDIA, JET BLACK | D |
| WP AAE-3xxx | BAJAJ RE 205 | 2012, 198.75, PETROL, INDIA | A |
| NW AAF-8xxx | BAJAJ RE 205 | 2012, 0, PETROL, INDIA | D |
| CP-AAP-6xxx | BAJAJ RE | 2014, 198, PETROL, INDIA, BRIGHT RED | D |
| CP-YA-8xxx | BAJAJ AR4S UG | 2010, 173, PETROL, INDIA, GREEN | D |
| CP-JL-5xxx | BAJAJ AUTO AR4S | 2004, 173, PETROL, INDIA, RED | D |
| WP-YC-6xxx | BAJAJ AR4S-UG | 2010, 173, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| WP-HO-9xxx | BAJAJ AUTO RE 2 STROKE | 2003, 150, PETROL, INDIA, BRIGHT RED | A |
| SP-JA-2xxx | BAJAJ AUTO RE 2 STROKE | 2004, 145, PETROL, INDIA, BRIGHT RED | A |

| வாகன இல. | வகை மற்றும் மாதிரி | விபரம் | வரிட் |
|---|---|---|---|
| **முச்சக்கர வண்டி / மோட்டார் சைக்கிள்** | | | |
| CP-ABK-7xxx | BAJAJ RE | 2016, 198, PETROL, INDIA, RED | D |
| NW-QK-7xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, BRIGHT RED | A |
| CP-QR-5xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173, PETROL, INDIA, RED | D |
| CP-QS-2xxx | BAJAJ BAJAJ 4 S | 2009, 173, PETROL, INDIA, GREEN | D |
| WP-YK-0xxx | BAJAJ RE 205 | 2011, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| WP-YW-2xxx | BAJAJ RE 205 | 2012, 200, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| SG-YG-2xxx | BAJAJ RE 205 | 2010, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| WP-ABT-8xxx | BAJAJ RE | 2019, 198, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| CP-AAA-0xxx | BAJAJ RE 205 | 2012, 198, PETROL, INDIA, ECO GREEN | D |
| NW-QK-5xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, BRIGHT RED | D |
| WP-AAD-6xxx | BAJAJ RE 205 | 2012, 198, PETROL, INDIA, JET BLACK | A |
| WP-AAJ-6xxx | BAJAJ RE 205 | 2013, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| CP-YU-8xxx | BAJAJ RE 205 | 2018, 198, PETROL, INDIA, ECO GREEN | A |
| CP-AAL-4xxx | BAJAJ RE 205 | 2013, 198, PETROL, INDIA, GREEN | D |
| WP-ABB-0xxx | BAJAJ RE | 2015, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| WP-AAJ-4xxx | BAJAJ RE205 | 2013, 198, PETROL, INDIA, ECO GREEN | A |
| CP-ABA-4xxx | BAJAJ RE | 2015, 198, PETROL, INDIA, NEPTUNE BLUE | D |
| WP-YF-5xxx | TVS KING | 2010, 200, PETROL, INDIA, RED | A |
| WP-QL-2xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, ECO GREEN | A |
| SP-ABP-3xxx | BAJAJ RE | 2017, 198, PETROL, INDIA, GREEN | A |
| NC-QX-8xxx | BAJAJ AR4S UG | 2010, 173, PETROL, INDIA, BRIGHT RED | D |
| WP-QV-7xxx | BAJAJ AR4S UG | 2009, 173, PETROL, INDIA, ECO GREEN | D |
| CP-QJ-2xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, BRIGHT RED | D |
| WP-AAC-6xxx | BAJAJ RE 205 | 2012, 200, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| WP-QP-5xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173, PETROL, INDIA, BLUE | A |
| CP-QR-4xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173, PETROL, INDIA, BRIGHT RED | D |
| WP-AAK-4xxx | BAJAJ RE 205 | 2013, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| WP-AAZ-4xxx | BAJAJ RE | 2015, 198, PETROL, INDIA, ECO GREEN | A |
| CP-YM-1xxx | BAJAJ RE 205 | 2011, 200, PETROL, INDIA, ECO GREEN | A |
| WP-AAP-4xxx | BAJAJ RE | 2014, 199, PETROL, INDIA, BRIGHT RED | A |
| NC-ABC-8xxx | BAJAJ RE | 2015, 198, PETROL, INDIA, JET BLACK | D |
| WP-YL-0xxx | BAJAJ RE 205 | 2011, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| EP-ABI-6xxx | BAJAJ RE | 2015, 198, PETROL, INDIA, NEPTUNE BLUE | C |
| WP-ABE-6xxx | TVS TVS KING | 2015, 200, PETROL, INDIA, BLUE | A |
| WP-QM-0xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, ECO GREEN | A |
| WP-ABQ-9xxx | BAJAJ RE | 2017, 199, PETROL, INDIA, BRIGHT RED | A |
| WP-QO-1xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173, PETROL, INDIA, ECO GREEN | D |
| WP-YD-0xxx | BAJAJ AR4S UG | 2010, 173, PETROL, INDIA, NEPTUNE BLUE | A |
| CP-AAK-4xxx | BAJAJ RE 205 | 2013, 200, PETROL, INDIA, ECO GREEN | A |
| NP-QK-3xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173, PETROL, INDIA, BRIGHT RED | A |
| SG-YA-6xxx | BAJAJ AR4S UG | 2010, 173, PETROL, INDIA, BRIGHT RED | A |
| EP-AAS-6xxx | BAJAJ RE | 2014, 198, PETROL, INDIA, JET BLACK | C |
| WP-AAS-0xxx | BAJAJ RE | 2014, 198, PETROL, INDIA, BRIGHT RED | A |
| EP-QZ-6xxx | BAJAJ AR4S UG | 2010, 173, PETROL, INDIA, GREEN | C |
| WP BEX-6xxx | YAMAHA RAY ZR | 2017, 113, PETROL, INDIA | B |
| NW BGX-2xxx | DEMAK DZM 200 | 2018, 199.5, PETROL, MALAYSIA | A |
| **மோட்டார் லொறி, பஸ்** | | | |
| CP-LI-1xxx | TATA LPK1615 | 2011, 5883, DIESEL, INDIA, WHITE | D |
| WP NF 7xxx | MITSUBISHI-FOSA/FDG-B064DG | 2008, 4896, DIESEL, JAPAN, WHITE | B |
| WP-NC-4xxx | SUNLONG SLK6750 | 2015, 3800, DIESEL, JAPAN, WHITE | B |
| SG-GO-1xxx | HINO RANGER | 1997, 4100, DIESEL, JAPAN, BLUE | D |
| WP-LA-7xxx | LANKA ASHOK LEYLAND COMET TIPPER | 2005, 6540, DIESEL, INDIA, YELLOW | D |
| WP-LO-5xxx | ISUZU NJR85AUE6W | 2016, 2999, DIESEL, JAPAN, WHITE | B |
| EP-LC-4xxx | LANKA ASHOK LEYLAND COMET TIPPER | 2006, 6540, DIESEL, INDIA, YELLOW | C |
| WP-LB-7xxx | LANKA ASHOK LEYLAND COMET TIPPER | 2006, 6540, DIESEL, INDIA, YELLOW | B |
| WP-LB-6xxx | DAIHATSU TE S200P | 2003, 650, PETROL, JAPAN, WHITE | A |
| **தரை மற்றும் விசேட நோக்க வாகனம்** | | | |
| KMTPC 197C02355504 | KOMATSU PC 200-8N1 | 2013, JAPAN, YELLOW | D |
| ZH20161114775 | DN-XIAGRAND V (Combine Harvester) | 2016, 0, DIESEL, CHINA, RED | C |
| EP-RF-2xxx | TAFE 45DI | 2017, 2500, DIESEL, INDIA, ORANGE | C |
| EP-RC-2xxx | TAFE 45DI | 2011, 2500, DIESEL, INDIA, ORANGE | C |
| NC RG-4xxx | MAHINDRA YUVO 575DI 4WD | 2019, 2979, DIESEL, INDIA, RED | D |
| EP RH-0xxx | MAHINDRA YUVO 575DI 2WD | 2021, 2500, DIESEL, INDIA, ORANGE | C |
| WP LF-2xxx | ISUZU CXZ71J (CONCRETE PUMP) | 1991, 16680, DIESEL, JAPAN, BLUE SILVER | B |
| NW-ZA-8xxx | FURUKAWA FL60A WHEEL LOADER | 2008, 2369, DIESEL, JAPAN, YELLOW | C |
| CP-ZA-9xxx | JCB 2CX | 1996, 2500, DIESEL, UNITED KINGDOM, YELLOW | D |
| UP-ZA-1xxx | JCB 3CX SITE MASTER | 1996, 3990, DIESEL, UNITED KINGDOM, YELLOW | C |

மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரிசீலிக்கும் இடம்:

**முற்றம் "A"**
இல. 01, ஸ்ரீ மஹா விஹார வீதி,
பாமன்கட, தெஹிவளை.
(ஸ்ரீ மஹா விஹாரயின் உள்ளே)
விசாரணை: **0117 209 358,**
சரன்ஜித் - **076 324 1184**

**முற்றம் "C"**
12வது மைல்கல்,
கல்முனை வீதி,
வலதபிடிய, அம்பாறை.
அநுர **076 277 5942**

**முற்றம் "B"**
இல. 344, ஸ்ரீ மங்கலவத்த,
மம்பே, பிலியந்தல.
அஜித் - **076 890 5692**

**முற்றம் "D"**
இல. 427, வெந்தேசிவத்த,
பொரலுகந்த, அதபெந்திவெவ,
தம்புள்ள
லக்ஷ்மன் **076 924 8729**

விசாரணைகள்: தலைமையகம் - மீள்பெறுகை,
**சியபத பினான்ஸ் பீஎல்சீ,**
இல. 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
தொலைபேசி: **011 7 605 605** நீட்சி. **1804**

**2023 ஜூன் 25 (ஞாயிறு) முதல் மார்ச் 29ம் திகதி (வியாழன்) வரை
மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை (இரு தினங்களும் உட்பட)**

**2023 ஜூன் 29ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு டெண்டர் மூடப்படும்**

# மக்களின் வலியுறுத்தலுக்கு இணங்க ஊழலை ஒழிப்பதில் அரசு தீவிர உறுதி!

## இலங்கை நாணயத்தின் பெறுமதி ஸ்திரமடைந்து வருகின்ற போதிலும், பாவனைப் பொருட்களின் விலைகள் இன்னுமே குறைக்கப்படாமலிருப்பதன் பின்னணி ஆராயப்பட வேண்டும்

**பொருளாதார ரீதியில் இலங்கை பின்னடைவைச் சந்தித்திருக்கும் இன்றைய நிலையில் நாட்டில் படிப்படியாக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக ஏற்படக்கூடிய நன்மைகள் பொதுமக்களைச் சென்றடைகின்றனவா என்பது பாரியதொரு கேள்விக்குறியாகவே காணப்படுகிறது.**



விசேடமாக முன்னர் நாணய மாற்றுவீதத்தை காரணமாகக் கொண்டு அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது இலங்கை நாணயத்தின் பெறுமதி ஓரளவுக்கு ஸ்திரமான நிலைக்குச் சென்றாலும், அதிகரிக்கப்பட்ட பொருட்களின் விலைகளில் எவ்விதமான குறைப்பையும் காணமுடியாமல் உள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி ஸ்திரமடையும்போது அதன் நன்மைகள் மக்களுக்குச் சென்றடையும் பட்சத்திலேயே பொருளாதார மீட்சி குறித்த நம்பிக்கை அவர்கள் மத்தியில் ஏற்படும். எனினும் நடைமுறையில் அவ்வாறானதொரு முன்னேற்றத்தைக் காணடியாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும்.

குறிப்பாக வர்த்தகர்கள் மற்றும் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பாரிய நிறுவனங்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துவது கட்டாயமானதாகும். மறுபக்கத்தில் பொருட்கள் உரிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதை நுகர்வோர் அதிகார சபை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் உணரப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற ரீதியில் அனைத்துப் பொருட்களுக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க விரும்பவில்லை என்றும், சந்தையில் காணப்படும் போட்டித் தன்மைக்கு ஏற்ப பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படும் போதே அது சகலருக்கும் நன்மை பயக்கும் விடயமாக அமையும் எனவும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

அனைத்துப் பொருட்களுக்கும் கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிப்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் என்பதை அவர் சுட்டிக் காட்டியிருந்தார். இருந்தபோதும் விலைகள் தொடர்பில் மக்களைத் தெளிவூட்டும் வேலைத்திட்டமொன்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட வேண்டியதன் கட்டாயத்தை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதித்திருக்கும் நிலையில் கட்டுமானப் பொருட்கள், குளியலறை சாதனங்கள், தரையோடுகள் போன்றவற்றின் உள்ளூர் உற்பத்தியாளர்கள் அதிக நன்மைகளைப் பெற்றுள்ளனர்.

குறித்த பொருட்களுக்கு இறக்குமதி இல்லையென்பதால் அவர்களே விலைகளை நிர்ணயிக்கின்றனர். அதிக விலை நிர்ணயிக்கப்படுவதால் நுகர்வோர் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதால் அப்பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது பற்றி ஓரிரு வாரங்களில் தீர்மானம் எடுக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



**நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் புரையோடிப்–போயுள்ள ஊழல் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். கடந்த வரும் வீதிக்கு இறங்கிப் போராடிய மக்கள் முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்று ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்ற விடயமாகும். இதனை அரசாங்கம் தற்பொழுது கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளது**

உணவுப் பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படாமல் இருப்பது நுகர்வோருக்கு அநீதி இழைப்பதற்கு ஒப்பானதாகும். குறிப்பாக கோதுமை மாவை அடிப்படையாகக் கொண்ட பாண் உள்ளிட்ட பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகள் கடந்த காலத்தில் கடுமையாக அதிகரிக்கப்பட்டன.

இருந்தபோதும் கோதுமைமாவை அத்தியாவசிய பொருளாக வர்த்தமானி மூலம் அறிவித்திருப்பதால் கோதுமைமா உற்பத்தியாளர்களால் அதன் விலையை அதிகரிக்க முடியாமல் உள்ளது. இருந்தபோதும் டொலருக்கு எதிரான இலங்கை நாணயகத்தின் பெறுமதி பலமடைந்திருப்பதால் கோதுமைமாவின் விலையைக் குறைத்து அதன் மூலம் பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இருந்தபோதும் பேக்கரி உணவுப் பொருட்கள் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இது தொடர்பில் பொதுமக்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுவதற்காக பாண் தொடர்பான ஒழுங்குவிதியில் மாற்றத்தைக் கொண்டுவர வர்த்தக வாணிப அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.



மூலப்பொருட்களின் விலைகளின் அதிகரிப்பைக் காரணம் காண்பித்து உற்பத்திகளின் விலைகளை அதிகரிக்கும் உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் மூலப்பொருட்களின் விலைகள் குறைந்த பின்னர் அவற்றை மீண்டும் குறைப்பதில் தயக்கம் காண்பிக்கும் பாரம்பரியம் இலங்கையில் பல காலமாக நீடித்து வருகிறது.

இதன் காரணமாக நுகர்வோராகிய பொதுமக்களே கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். நாடு பொருளாதார ரீதியில் சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பதால் மக்களும் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர். அரசாங்கம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தாலும், இது போன்ற தரப்பினரின் செயற்பாடுகளால் முழுமையான நன்மைகள் மக்களைச் சென்றடைவதில்லை.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து அனைத்துத் தரப்பினரும் கவனம் செலுத்தி அதற்கு அமைய செயற்பட வேண்டியதே காலத்தின் தேவையாகும்.

இதேவேளை, பாரிய பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கியிருப்பதால் பணவீக்கம் குறைந்த மாத்திரத்திலேயே பொருட்களின் விலைகள் குறைந்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. படிப்படியாக விலைகளில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க, இலங்கை இவ்வாறானதொரு நெருக்கடி நிலைக்குச் செல்லக் காரணமாகவிருந்த ஊழல் மோசடியைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் அக்கறை செலுத்தியுள்ளது. இதன் ஓர் அங்கமாக ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டுள்ளது.

இச்சட்டமூலத்தில் திருத்தங்கள் பல முன்மொழியப்பட்டிருப்பதால் இவ்விடயம் அடுத்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் மீண்டும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் புரையோடிப்போயுள்ள ஊழல் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும்.

கடந்த வருடம் வீதிக்கு இறங்கிப் போராடிய மக்கள் முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்று ஊழல்வாதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற விடயமாகும். இதனை அரசாங்கம் தற்பொழுது கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளது. அதேநேரம், உத்தேச ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் கடந்த காலத்தில் ஊழலில் ஈடுபட்டவர்களால் இழக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி வலுவான ஊழல் எதிர்ப்புச் சட்டமொன்றைக் கொண்டுவர வேண்டும். உத்தேச ஊழல் எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் ஆசியாவிலேயே பலமான ஊழல் எதிர்ப்புச் சட்டமாக அது அமையும் என அரசாங்கம் சுட்டிக்காட்டுகிறது.

**பி.ஹர்ஷன்...**

---






# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அமெரிக்காவில் சிறப்பான கௌரவம்!

**அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வோஷிங்டன் வெள்ளைமாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சிறப்பான விருந்துபசாரம் அளித்து கௌரவம் வழங்கினார்.**

இந்து விருந்துபசாரம் கடந்த 22 ஆம் திகதி வழங்கப்பட்டது. வெள்ளைமாளிகையில் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவத்துக்காக அமெரிக்க ஜனாதிபதி தம்பதியருக்கு பிரதமர் மோடி நன்றி கூறினார்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணமானது இரு நாடுகளுக்கு இடைப்பட்ட உறவை வரலாறு காணாத அளவுக்கு நெருக்கமாக்கி இருக்கிறது. அதேவேளையில், இருநாட்டு உறவு இதுவரை வரலாறு காணாத அளவுக்கு வலுவானதாக ஆற்றல்மிக்கதாக ஆகியிருக்கிறது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இருநாடுகளின் தலைவர்களும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள். அந்தச் சந்திப்பு, முன்னதாக திட்டமிடப்பட்டதைவிட அதிக நேரம் நடந்தது. அதற்குப் பிறகு இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களிடம் உரையாடினர்.

பிரதமர் நரேந்திர மோடி இம்மாதம் 21 ஆம் திகதி முதல் நேற்று 24 ஆம் திகதிவரை அமெரிக்கப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையில் மிக முக்கிய உடன்பாட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. தற்காப்பு, புதிய தொழில்நுட்பங்கள், சுகாதாரம், எரிசக்தி, போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகளிலும் இருநாட்டு ஒத்துழைப்பு வலுவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனமும் இந்தியாவின் இந்துஸ்தான் ஏரோனோட்டிக்ஸ் நிறுவனமும் சேர்ந்து இந்தியாவில் ஜெட் விமான இயந்திரங்களை உருவாக்க ஏதுவாக ஓர் உடன்பாடு கையெழுத்தானது. எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் நிலவுக்கும் பிறகு செவ்வாய்க்கிரகத்திற்கும் அதற்கு அப்பாலும் மனிதர்களை அனுப்பும் அமெரிக்காவின் முயற்சியில் இந்தியா சேர்ந்து கொண்டுள்ளது. இந்த உடன்பாட்டின்படி இந்தியாவைச் சேர்ந்த விண்வெளிவீரர் அடுத்த ஆண்டில் அனைத்துலக விண்வெளி நிலையத்திற்குச் செல்வார் என்று அமெரிக்க ஜனாதிபதி அறிவித்தார்.

இந்தியப் பிரதமர் அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயம் வெற்றிகரமான ஒன்று என்று வர்ணிக்கப்படுகிறது. அவரின் உரையைச் செவிமடுத்த அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், எழுந்து நின்று கரகோஷம் செய்து அதை வரவேற்றனர்.

இரு தலைவர்களும் சந்திப்பதற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மோடி, "ஜனநாயகம் என்பது இந்தியாஅமெரிக்கா நாடுகளின் இரத்தத்தில் காணப்படும் ஒன்று" என்று வர்ணித்தார்.

ரஷ்யா உக்ரேன் போர் பற்றி விவாதித்த தலைவர்கள், அமைதியை மீட்க எந்த வழியிலும் பாடுபட தாங்கள் தயார் என்று தெரிவித்தனர். இதேவேளை இந்தியப் பிரதமரை வரவேற்று உபசரித்த அமெரிக்க ஜனாதிபதி, வெள்ளை மாளிகையில் நரேந்திர மோடிக்கு விருந்து அளித்துச் சிறப்பித்தார்.

இதற்கு முன்னதாக அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா தினத்தில் பிரதமர் மோடி பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம்தான் அவர் அமெரிக்க தலைநகர் வோஷிங்டனுக்குச் சென்றார். அன்றிரவு பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி ஜோ பைடனும் அவரது மனைவி ஜில் பைடனும் தனிப்பட்ட முறையில் விருந்துபசாரம் அளித்தனர்.

அமெரிக்காவின் மிகநெருக்கமான நட்பு நாடுகளின் தலைவர்களுக்கு மட்டுமே அரசுசார்பில் வெள்ளை மாளிகையில் விருந்து அளிக்கப்படுவது வழக்கம். அந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பிறகு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் ஆகியோருக்கு மட்டுமே வெள்ளை மாளிகையில் அமெரிக்க அரசு தரப்பில் இரவு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.



## வெள்ளை மாளிகையில் சுவை நிறைந்த உலகப்புகழ் சைவ உணவுகளுடன் விருந்துபசாரம் வழங்கிய ஜனாதிபதி ஜோ பைடன் தம்பதியர்!

இந்த விருந்து ஏற்பாடுகளை ஜனாதிபதி பைடனின் மனைவி ஜில் பைடன் நேரடியாக மேற்பார்வை செய்தார். பிரதமர் நரேந்திர மோடிக்காக அவருக்குப் பிடித்தமான சைவஉணவு வகைகள் தயார் செய்யப்பட்டிருந்தன. கலிபோர்னியாவை சேர்ந்த பிரபல சமையல் கலைஞர் நினா குர்டிஸ் உணவு வகைகளை தயார் செய்தார். இது குறித்து நினா குர்டிஸ் குறிப்பிடுகையில், "இந்தியாவின் முயற்சியால் இந்த ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது. பிரதமர் நரேந்திர மோடிக்காக சிறுதானியங்களில் பல்வேறு உணவு வகைகள் தயார் செய்யப்பட்டு விருந்தில் பரிமாறப்பட்டன. அவருக்கு பிடித்தமான இந்திய உணவு வகைகளையும் தயார் செய்தோம். குறிப்பாக காளான் வகைகளில் பல்வேறு உணவுகளை தயார் செய்தோம். காய்கனிகள், பழங்கள், கீரை வகைகளில் பல்வேறு உணவுகளை தயார் செய்தோம்.

இந்தியாவின் தேசியக்கொடியின் மூவர்ணம், இந்தியாவின் தேசியப் பறவையான மயில் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விருந்து அரங்கு, உணவு வகைகளின் வடிவங்களை உருவாக்கினோம்" என்று தெரிவித்தார்.

இந்திய நேரப்படி அன்றிரவு 7.30 மணிக்கு (அமெரிக்க நேரப்படி காலை 10 மணி) வெள்ளை மாளிகைக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றார். முதலில் இரு தலைவர்களும் தனியாகப் பேசினர். இதன்பிறகு அதிகாரிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் பிறகு இந்திய நேரப்படி நள்ளிரவில் இரு தலைவர்களும் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டியளித்தனர். அதன்பின் பிரதமர் மோடிக்கு இரவு விருந்து அளிக்கப்பட்டது.

இந்த விருந்தில், அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது, மில்லட் கேக் ஆகும். பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு வெள்ளை மாளிகையில் உற்சாகமான வரவேற்புடன், வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளந்தன. வெள்ளை மாளிகைக்கு வந்த மோடிக்கு, அந்நாட்டு ஜோ பைடன் தம்பதினர் சிறப்புப் பரிசை அளித்தனர். விருந்தினராக பிரதமர் மோடி சென்றுள்ளதால் அமெரிக்க ஜனாதிபதி சந்தனப்பெட்டி, வைரக்கல்லை பரிசாக அளித்தார். இந்த அமெரிக்கப் பயணத்தில், பெரிதும் கவனிக்கக்கூடிய விஷயம், வெள்ளை மாளிகையில் பிரதமர் மோடிக்கு அமெரிக்க ஜனாதிபதி தந்த இரவு விருந்துதான்.

வழக்கமாக, வெள்ளை மாளிகை வரலாற்றில் விருந்து என்றாலே, அது உச்சபட்ச கௌரவமாக கருதப்படுகிறது. அதாவது, அரசு முறை பயணமாக வருகை தரும் தலைவர் அல்லது ஆட்சி செய்யும் மன்னரை கௌரவிப்பது.

மிக பிரமாண்டமான, அதிக கவர்ச்சிகரமான ஒன்றாக இந்த விருந்துகள் தயாராகும். இது அதிகாரபூர்வ அரச முறைப்பயணத்தின் ஒரு பகுதியாகவும் மதிப்பிடப்படுகிறது. நல்ல விருப்பத்தின் வெளிப்பாட்டை இவ்விருந்து குறிக்கின்றது.

ஏற்கனவே ஒருமுறை பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோது, இதே வெள்ளை மாளிகைக்கு பிரதமர் மோடி சென்றார். ஆனால் அவ்வேளையில் நவராத்தி விரதம் இருந்திருக்கிறார் மோடி. அதனால், விருந்தில் பங்கேற்கவில்லை.

இந்த முறை அப்படியில்லை. வெள்ளை மாளிகை விருந்தை மகிழ்வுடன் ஏற்றார். இரவு விருந்தில் சுவைமிக்க வடமாநில மற்றும் ஐரோப்பிய புகழ்பெற்ற உணவுகள் இடம்பெற்றிருந்தன. சில உணவுவகைகளில் அமெரிக்க, இந்திய தேசியக்கொடி வண்ணமும் அலங்கரித்தன. அனைத்து உணவு வகைகளும் சைவமாகவே இருந்திருக்கின்றன. தர்பூசணி மற்றும் பச்சைக் காய்கறிகளுடன் சாலட், வெண்ணெய் சோஸ், டாங்கி அவகொடா சாஸ் மற்றும் ஹைதராபாத் புகழ்பெற்ற உணவுகளும் இடம்பெற்றிருந்தன.

தினையிலான பல்வேறு உணவு வகைகள் சமைக்கப்பட்டுள்ளன. இதில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது மில்லட் கேக்ஸ்.

பிரதமர் மோடிக்கு தரப்பட்ட இந்த கேக் முழுக்க முழுக்க தினையை கொண்டு தயாரானது. தினை மாவை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆரோக்கியமான மற்றும் சத்தான கேக் இதுவாகும்.

இவ்வாறான சிறப்பான விருந்துபசாரம் பிரதமர் நரேந்திர மோடிக்கு அளிக்கப்பட்டுள்ளமையானது இந்தியாவுடன் நெருக்கமான உறவைப் பேணுவதற்கு அமெரிக்கா விரும்புகின்றது என்பதற்கான அடையாளம் ஆகும் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

**எஸ்.சாரங்கன்...**

**பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள நாட்டை சரியான பாதையில் கொண்டு சென்று எதிர்கால சந்ததியினருக்குப் பலமான நாட்டைக் கையளிக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.**

உள்நாட்டில் மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க, தனது தனித்துமான ஆளுமையில் உலகத் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் இன்றைய நிலைமைகளை விளக்கி வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரான்ஸ் சென்றிருந்த அவர், உலகநாடுகளின் தலைவர்கள் பலரைச் சந்திப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார்.

இதற்கு முன்னதாக அவர் பிரித்தானியா சென்றிருந்தார். அங்கு நடைபெற்ற சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40 ஆவது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டிருந்த அவர், பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் பட்ரீசியா ஸ்கொட்லன்ட் உள்ளிட்ட உலகத் தலைவர்களையும் தனது விஜயத்தின் போது சந்தித்திருந்தார்.

இலங்கையின் கடன் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கும், நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் உறுதியான உந்துதலில் எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை இறுதி செய்வதற்கான திட்டங்களை ஜனாதிபதி இந்தச் சந்திப்புக்களில் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

பாராளுமன்றத்துடன் நெருக்கமாக ஒத்துழைத்து, நாட்டின் நிதிச்சு

பாக ஆசிய வலய நாடுகளான இந்தியா, ஜப்பான், மத்திய கிழக்கு, சீனாவுடன் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்ள முயற்சிகளை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அது மாத்திரமன்றி பொதுநலவாய நாடுகளுடன், ஐரோப்பாவுடன் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதாகவும் கூறினார்.

பொருளாதார நெருக்கடித் தீர்வுகளுக்கு அப்பால் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி குறிப்பிடுகையில், "நான் பிரதமராக இருந்தபோது, அதற்கான

ளன. மூன்றாவதாக, பயங்கரவாதத்தின் வரையறை என்ன என நீதிமன்றத்தால் தீர்க்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களிடம் காணிகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதுடன், பிரச்சினைக்குத் தீர்வு காண காணாமல் போனோர் அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது" என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, பரிஸ் நகரில் நடைபெற்ற புதிய நிதி ஒப்பந்தத்திற்கான அமர்வுக்கு இணையாக நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையா




# சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை நெருக்கடிக்கு தீர்வு காண ஜனாதிபதி பெருமுயற்சி

## இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஆதரவு வழங்குவதில் உலகநாடுகளின் தலைவர்கள் ஆர்வம்



### வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

மைகளைத் தீர்ப்பதற்கான விரிவான மூலோபாயத்தை உருவாக்குவது அவருடைய நோக்கமாக உள்ளது என்பது இந்தக் கலந்துரையாடல்களிலிருந்து புலப்பட்டது.

லண்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40 ஆவது ஆண்டு நிகழ்வில் பங்கேற்றிருந்த ஜனாதிபதி, கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பருடன் கலந்துரையாடல் மன்றமொன்றில் இணைந்து கொண்டு, இலங்கையில் முன்னெடுத்திருக்கும் பொருளாதார மீட்சிக்கான பயணம் குறித்த தெளிவினை சர்வதேச சமூகத்துக்கு வழங்கியிருந்தார்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் அர்ப்பணிப்புடன் திட்டங்களை வகுத்துச் செயற்படும் ஜனாதிபதி, அவ்வப்போது நாட்டு மக்களை தெளிவுபடுத்தி வருவதுடன், கிடைக்கும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சர்வதேச சமூகத்தையும் தெளிவூட்டி வருகின்றார்.

இதன் ஒரு அங்கமாக ஸ்டீபன் ஹாப்பருடனான கலந்துரையாடலும் அமைந்தது. கடன் மறுசீரமைப்பு ஒரு முக்கிய முன்னுரிமையாக இருக்கும் அதேவேளையில், முக்கியமான கட்டமைப்பு சீர்திருத்தங்களை நிறைவு செய்வதில் தனது முதன்மை கவனம் உள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பொருளாதார தாராளமயமாக்கலை விரைவுபடுத்துவது மற்றும் அதிகரித்த முதலீடுகளை ஈர்ப்பது, இலங்கையின் நிதிவாய்ப்புகளை மேம்படுத்துவது மற்றும் நீண்டகால வர்த்தகத்தில் மிகவும் சாதகமான சமநிலையை ஏற்படுத்துவது பற்றிய விபரங்களையும் ஜனாதிபதி வழங்கியிருந்தார்.

'வர்த்தகச் சந்தைகளை இலக்கு வைத்த உபாயங்கள் மட்டுமே தற்போது காணப்படும் மாற்றுவழியாகும். உண்மையாகச் சொல்வதாயின், இதனை விட மாற்றுவழிகள் எவையும் கிடையாது. நீண்ட காலமாக வர்த்தகச் சந்தையின் ஊடகவே பிரச்சினைகள் நிவர்த்திக்கப்படுகின்றன' என ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

சர்வதேச நாடுகளுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருவதை வெளிப்படுத்தியிருந்த அவர், தெற்காசியாவை முதன்மையாகக் கொண்டதாகவே இலங்கையின் உபாயமார்க்க செயற்பாடுகள் காணப்படுகின்றன என்றும், குறிப்

## பிரான்ஸில் புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்த வேளையில், உலகநாடுகளின் தலைவர்கள் பலருடன் சந்திப்பு



செயல்முறையைத் தொடங்கினேன், அதனால் நான் முடிந்த இடத்திலிருந்து தொடர்கிறேன். தமிழ்ப் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்து பல விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் மூன்று முக்கிய பிரச்சினைகள் இருந்தன, அவற்றில் இரண்டு தீர்க்கப்பட்டுள்

டலில் ஸ்பானியப் பிரதமர் நாதியா கெல்வினோ தலைமையிலான கலந்துரையாடல் அரங்கிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார்.

இதில் கருத்துத் தெரிவித்த அவர், நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற வகையில் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்தாக அறிவித்திருக்கும் நிலையில் பொதுவான கடன் மறுசீரமைப்பு கொள்கைகள் எமக்குப் பொருத்தமற்றதாகும்.

சலுகை அடிப்படையிலான நிதி வசதிகளை வழங்குவதற்கான இயலுமை எம்மிடத்தில் குறைவாகவே காணப்படுகின்றது.

அதேபோல் உள்ளக நிதி வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளும் பெருமளவில் முடங்கிப் போயுள்ளன. இதனால் நாம் கடன் தொடர்பான திட்டங்கள், கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதன் பின்னரே சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததாகக் கூறினார்.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் வீழ்ச்சிப் பாதையிலிருந்து மீட்சிப் பாதைக்குக் கொண்டு வருவதற்கு இதுவரை எடுத்த நடவடிக்கைகள் என்பவற்றை இந்தக் கலந்துரையாடல் நிகழ்வுகளில் பட்டியலிட்டிருந்த ஜனாதிபதி, சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பை இலங்கை எதிர்பார்க்கின்றது என்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்






## 'வர்த்தகச் சந்தைகளை இலக்கு வைத்த உபாயங்கள் மட்டுமே தற்போது காணப்படும் மாற்றுவழி. இதனை விட மாற்றுவழிகள் எவையும் கிடையாது'

டரெஸ் அவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஒரு சந்திப்பும் நடைபெற்றிருந்தது. இதில் இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடன் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஒத்துழைப்பு வழங்கும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டது.

பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் முன்னேற்றம், பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் நாயகத்திடம் தெளிவுபடுத்தினார். நிலையான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போதும், நீண்ட கால பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னெடுகின்ற போதும் வலுவான நிதிக்கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புப் பற்றிய தெளிவுபடுத்தல் ஐ.நா பொதுச்செயலாளருக்கு வழங்கப்பட்டது.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை மேம்படுத்தும் அதேநேரம் காலநிலையினால் ஏற்படக் கூடிய மோசமான பாதிப்புக்களை மட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நீடிக்கப்பட்ட உபாய மார்க்க திட்டங்கள் பற்றியும் இங்கு கூறப்பட்டது.

இதுஇவ்விதமிருக்க, இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்காவும் உறுதி வழங்கியுள்ளது. பரிஸ் நகரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளர் ஜெனட் யெலன் அவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றங்கள் தொடர்பில் ஜனாதிபதி விளக்கம் அளித்திருந்ததுடன், கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் சவாலானதாக அமைந்திருந்தாலும் புரிந்துணர்வுடன் முன்னோக்கிச் செல்வதற்கு முயற்சிக்கப்படுகிறது என்பதையும் எடுத்துக் கூறினார். இலங்கையின் நீண்டகால நட்பு நாடு என்ற ரீதியில் இக்கட்டான சந்தர்ப்பங்களில் அமெரிக்கா வழங்கிய உதவிகள் மற்றும் தொடர்ந்து வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு ஜனாதிபதி இலங்கை மக்கள் சார்பில் நன்றிகளையும் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடத்துக்கும் குறைவான காலப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாடுகள் பலவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதுடன், பல்வேறு உலகத் தலைவர்களையும் சந்தித்து நாட்டின் நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் சுமுகமான உறவு இருக்கவில்லை. இருந்தபோதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று சிறிது காலத்திலேயே ஜப்பானுடனான உறவைப் புதுப்பித்தார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் ஜப்பான் சென்றிருந்த அவர், அங்கு உயர்மட்டச் சந்திப்புக்களில் கலந்து கொண்டார். இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படுவதற்கு ஜப்பான் முன்வருமளவுக்கு இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகள் மீளக்கட்டியெழுப்பப்பட்டன.

ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் மற்றும் அவர் பல்வேறு உலகத் தலைவர்களுடன் கொண்டிருக்கும் தொடர்புகள் இக்கட்டான சூழ்நிலையில் உள்ள நாட்டுக்குப் பெரும் உறுதுணையாக அமைந்து வருகின்றன.

## இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடன் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஒத்துழைப்பு; மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்காவும் உறுதிமொழி

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777438169 கண்டியில் ஹோட்டல் தோட்டம் வீடு, வெற்றுக் காணி வியாபாரஸ்தலம் கொள்வனவு செய்யவும் + விற்பதற்கும் 0777282147 034906

## வேலைவாய்ப்பு

### 301 வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்புகள்/சேவைகள்

இலவச வைத்திய ஆலோசனை பெரியவர்களுக்கு சகலவித நோய்கள் வாதம், நரம்பு நோய், குடும்ப நலன், குடும்ப பிரச்சினை சரும், வியாதிகள். 0701434429. 037896

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

பத்தரமுல்ல தங்க நகை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள விற்பனை ஊழியர்கள்/ பயிற்சியற்ற ஊழியர்கள் (18 25 வயதிற்கு இடையில்) தேவை. கணனி, கணக்கியல் பற்றிய அனுபவம் உள்ள ஆண்/பெண் ஊழியர்கள் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிட வசதிகள். அழையுங்கள் 0777605 5340, 011 2889 2 28. 038500

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

சாரதிகள் தேவை 35 வருட பாவனையாளர் நம்பிக்கையை வென்ற Fresh co நிறுவனத்திற்கு கனரக வாகன சாரதிகள் தேவை. களுத்துறை, பாணந்துறை, மொறட்டுவை, இரத்மலானை, தெஹிவளை, கொழும்பு, நீர்கொழும்பு, வென்னப்புவவிற்கு அருகில் தேவை. வயது 22 இற்கும் 50 இற்கும் இடையில் பொருத்தமானது. அழையுங்கள். 0767639155, 0777263954 முகவரி 29/ 5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 033087

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பத்தரமுல்லவில் 2 நபர் கொண்ட ஓர் வீட்டிற்கு 52 மற்றும் 60 வயதிற்கிடைப்பட்ட தங்கி வேலை செய்யும் பெண் பணிப்பெண் சமையல், சலவை, அயன் செய்தல், வீட்டு சுத்திகரிப்பு மற்றும் நாட்பட்ட வேலைகள். உணவு மற்றும் விடுதி அனுபவமுள்ள நபருக்கு கவர்ச்சியான சம்பளம். அழையுங்கள் 0777562555. 038564

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

மாத்தறை விறகு அடுப்பு பேக்கரிக்கு எல்லா வேலைகளும் தெரிந்த (இனிப்பு பலகாரம்) பணியாட்கள் தேவை. உணவு தங்குமிட வசதிகள் இலவசம். தொடர்பு 0713311501. 038566

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

சிலாபம் புத்தளம் பிரதான வீதியில் மதுரங்குளி நகரத்தில் உள்ள தென்னந்தோட்டம் ஒன்றை பராமரிப்பு செய்து கண்காணித்து கொள்ள குடும்பஸ்தர் தேவை. சம்பளம் + 40,000/= மற்றும் தங்குமிட வசதி பெற்றுத் தரப்படும். ★மேலதிக விபரங்களுக்கு★ Viknes - 0716845903, Selvam - 0718232618. 038790

விலங்குப் பண்ணையில் தங்கி வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஊழியர் தம்பதி அல்லது தனி நபர் தேவை. (சிங்களத்தில் அழைக்கவும்) 0706044043, 0703353973. 038684

### 325 தொழில்துறை பொது

பாதுகாவலர்கள் (Watchers) - வத்தளை அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பாதுகாவலர்கள் (Watcher) தேவை. நேரில் வரவும். குறைந்த விலையில் உணவு மற்றும் இலவச தங்குமிட வசதி. தொ.பே. இல. 0766200300. இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. 038770

வேலையாட்கள் தேவை. ஆயுர்வேத வைத்திய நிலையம் ஒன்று புதிதாக ஆரம்பிக்க சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்களும் கணனி அனுபவம் உள்ளவர்களும் தேவை. வேலையாட்கள் தேவை. தகைமை அவசியம் இல்லை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். இடம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனையில். தங்குமிட வசதி தேவைப்படுவோருக்கு வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசுவோம். தொடர்புகளுக்கு 074 2660343. 038210

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தெஹிவளை, காலி வீதிக்கு 100m Holy Family Convent முன்னால் 4ஆம் மாடி வீடு 120/= லட்சம். கூடிய விலைக் கோரிக்கைக்கு. 0773301501/ 0771688122/ 07053 01501. 038552

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கம்பஹா உடுகம்பல 26.5 பேர்ச் 03 அறைகளுடன் முழுமையான வீடு (முழு வீடும் டைல், சிவிலிங் செய்யப்பட்டுள்ளது) உடுகம்பல சந்திக்கு 800M கம்பஹா நகரத்திற்கு 4.5 KM 0713009580, 0704527492 038677

வத்தளை நகரத்தில் காணி விற்பனைக்குண்டு. கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் செல்லும் வழியில் உள்ள வத்தளைச் சந்திக்கு அருகாமையில் 45 பேர்ச்சர்ஸ் காணி விற்பனைக்குண்டு. முழுதாகவோ, பகுதியாகவோ வாங்கலாம். விலையைப் பேசித்தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு 0718011434. 038024

ஹெந்தளை மருதானை பாதையில் 100 மீற்றர் தூரத்தில் புதிதாக கட்டப்பட்ட வீடு மற்றும் கடை விற்பனைக்கு உண்டு. 0771238002, 0776421122. 038129

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி கட்டுகஸ்தொட்டை KFC இற்கு அண்மையில் 19 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு. வங்கி வசதிகள் உண்டு. 0773260893 034613

### 622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு

தம்புள்ள கப்புவத்தை 1 ½ ஏக்கர் காணி விற்பனைக்கு. 0773260893 034609

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு கண்மையில் 27 பேர்ச் களஞ்சியசாலை உடன் விற்பனைக்கு. வங்கி வசதி கள் உண்டு. 0773260893 034586

தம்புள்ள லியா ஹோட்டலுக்கு அண்மையில் குளத்தின் முன்னால் 1½ ஏக்கர் காணி விற்பனைக்கு. 0773260893 034581

தம்புள்ள A9 ஹோட்டல உடன் விற்பனைக்கு வங்கி வசதிகள் உண்டு. 0773260893 034590

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

### 626 வீடு சொத்து பதுளை மாவட்டம் விற்பனைக்கு

தெஹிவளையில் அறை வாடகைக்கு உண்டு. உணவுடன் அல்லது உணவின்றி. ஏனைய விபரங்களுக்கு தொடர்பு 0777686282. 038571

### 631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

புவக்வத்த மாத்தறை 1.33 ஏக்கர் காணி பகுதிகளாக அல்லது முழுமையாக விற்பனைக்கு. வங்கி வசதிகள் உண்டு. 0773260893 034605

## திருமண சேவைகள்

### மணமகள்

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த படித்த கௌரவமான முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த கணவனை இழந்த மணமகளுக்கு படித்த 60 65 இடைப்பட்ட சொந்த தொழில் புரியும் அல்லது அரசாங்க தொழில் ஓய்வூதியம் பெறும், நல்ல மார்க்கப்பற்றுள்ள மணமகன் தேவை. குடும்ப பொறுப்புகள் அற்றவர் விரும்பத்தக்கது. மணமகள் வயது 55 பிள்ளைகள் பொறுப்பு இல்லாதவராக இருக்க வேண்டும். தொடர்பு கீழ் உள்ள B201861

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
பியுமி - 077 7 278 948 - 011 2 429 383
கயனி - 011 2 429 347 - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to. classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

# FOR IMMEDIATE SALE

## PRIME COMMERCIAL LAND WITH FACTORY AND HOUSE

* **RAGAMA** Mechanically operated 40'x 60' factory
* With 60 Amp Three Phase Electricity (without interruptions as connected to the power line to Colombo North Teaching Hospital and rehabilitation hospital) and asbastos Roof
* Possessing recycling Licence and Environment Licence, Ongoing production
* 44'x50' Four Roomed tiled house with all amenities and asbastos Roof
* 55 Perches square land facing roads in front and right side
* 500 metres from Ragama Junction
* 12 minutes to Airport and kadawatha expressway
* Ideal for industry or housing complex

NO BROKERS PLEASE

**CONTACT - 0777 156 177**

# GARMENT FACTORY FOR SALE IN KEBITHIGOLLEWA



**BOI APPROVED** facility with 125 (Juki) Machines, 250 KVA Caterpillar Genetator (Used only for 1400Hrs). Ample workers

PRE FABRICATED IMPORTED, ALL STEEL STRUCTURES, INCLUDING STEEL TRUSSES. ALL ROUND ALUMINIUM DOORS AND WINDOWS.

MAIN PRODUCTION BUILDING. 53 x 30 metres, eave height (side) 4 meters Centre 7 metres

FACILITY BUILDING, Including wash rooms, locker rooms, sick room and huge Canteen 30 x 15 metres

**0777-306 323, 070-3 318 970**

Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## Dickwella Land for Sale
15.44 Acres
Over 300 metres of coastal frontage located between Matara and Tangalle. Two hours drive from colombo.45 minutes drive to Hambantota international airports
Contact - 076 8232 151

## 20 Acres Land for Sale at Ekala -Ja-ela
Suitable for a factory or Any Commercial Project.
TP: 0777 258 280

## Wadduwa Land for Sale
4.15 Acres
80 metres of beach frontage 45 mintes to Colombo and 5 km north of kalutara. Suitable for residential homes for Sri Lankan and foreigners and Hotels international Hotels and Villas are under construction in 5 km stretch between wadduwa and Kalutara as it in Close to Colombo the area is very much suitable for tourism
Contact - 076 8232 151




## BORELLA
COMMERCIAL BUILDING FOR SALE
NEAR COLOMBO 07
Castle Street Borella 14.67 perches Commercial Land with Building Facing Dudly Senanayake Mw
RS. 10.5 MIL PER PERCH
(PRICE NEGOTIABLE)
0776 074 233



## Galle Land for Sale
3.77 Acres
About 140 metres of Beach frontage property within Galle Muncipality developing area in Galle. Two hours drive from Colombo to Galle.
Contact - 076 8232 151

## හිරු විදුලි (SEV) ත්‍රිවීල් කාරයක්
1kmක රු.4/= ට අඩුවෙන් දුවමු
රු.1,850,000/-
VAMD (PVT) LTD. - Tel : 011 419 46 16, 077 470 23 17



## අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
(Zinc Aluminium Sheet) රු. 185 සිට
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

## SAHARA ALUMINIUM (PVT) LTD
Fine Finish & Superior Look.
High Quality Branded Accessories & Iron Mongeries.
Experienced & Proffessional Technical Supports & Guidence.
25 YEARS EXPERTS
- Aluminium Doors & Windows
- Aluminium Interior Works
- Aluminium Partitons & Shop Fronts
- Tempered Glass Partitions & Facades
- Curtain Walls & Cladding Works
- Shower Cubicles & Vanities
- Glass Hand Rails
- Office Partitions & Office Furnitures
- Gypsum Patitions & Ceillings
- Pantry Cupboards

FOR NEW JOBS 10% OFF
Office - No. 515, Old Kottawa Road, Pannipitiya.
Factory - No. 144, Kiriganpamunuwa, Maharagama.
0112 172 620
0777 955 556 / 0777 828 720
Website:- saharaconstruction.lk Email:- saharaaluminum@gmail.com



## FOR SALE
ADAMS HOMES Jaffna
Where life begins...



YALLPANAM ADAMS HOMES
சொகுசு வீடுகள் யாழ் சுண்டுக்குளி
60 Perches Total Extent of land. 3 Homes Built on 21 Perches. Brand New Homes at Old Prices
Further details Contact - 0771 092 498

## Weligama Land for Sale
5.65 Acres
Situated between Galle and Matara emerging coastal location in southern Sri Lanka. Two hours drive from colombo to Galle.Tourist attraction Area
Contact - 076 8232 151

## Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

## FAKE JOHKASOU



WATER TANKS CONVERTED TO WASTEWATER STORAGE TANKS TO MATCH THE REQUIRED CAPACITY
FOR ORIGINAL JOHKASOU NO NEED TO FIX THIS TYPE OF FILTERS
CORRECT INSTALLATION OF DAIKI JOHKASOU WITH JAPANESE TECHNOLOGY. TRUSTED JOHKASOU PROVIDER IN SRI LANKA. 100% OWN BY DAIKI JAPAN



REAL JOHKASOU
Daiki AXIS
HOTLINE: +94 112 49 99 49 | 0765 380 380

Be aware from fake johkasou providers
Advise from Japanese Johkasou System Association
JSA

## ARIYARATHNE CONSTRUCTIONS
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
Warehouse Construction
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Polycarbonate



0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

## The Towel Factory
100% COTTON COLOURFUL TOWELS
AVAILABLE ON WHOLESALE



1kg from Rs.3500/= up to Rs.5000/=
(Minimum 15kg)
TEL : 0722 887 755, 0766 684 334, 0769 909 553/4
Showroom - 765, Galle road, Nalluruwa, Panadura.

## வாரமஞ்சரி திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பிரபு - 011 2 429 383 / ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

## வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

வாரமஞ்சரி BUDGET adz



## KADUWELA TOWN
- 224.96 PERCHES
- 600M AWAY FROM KADUWELA TOWN
- 12' FEET HIGH PARAPET WALL RIGHT ROUND THE LAND
- CCTV CAMERAS INSTALLED COVERING THE LAND
- SECURITY HUT
- 02 BUILDING WITH HOSTELS
- CLEAR DEEDS
- EIGHT FEET ABOVE THE EXISTING GROUND
- BANK LOAN FACILITIES

Rs. 2,000,000 PER PERCH



NO FLOOD HOVOC SINCE BUILT ABOVE THE EXISTING GROUND LEVEL
SITUATED FACING KADUWELA - HANWELLA ROAD VERY CLOSE TO KADUWELA TOWN
0714 762 249, 0716 851 555



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்






# மோடியின் அமெரிக்க விஜயமும் இந்திய அமெரிக்க நலன்களுக்கான போட்டியும்

உலகளாவிய அரசியல் பரப்பில் மேற்குலகம் எதிர் கீழைத்தேசம் என்ற பிரிவினை வலுவடைந்தாலும், இந்தியாவின் அணுகுமுறை அதிக குழப்பத்தை ஏற்படுத்துவதாக தெரிகிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம் மேலைத்தேய, கீழைத்தேய மோதலை பலவீனப்படுத்துவதாகவே நோக்கப்படுகிறது. அமெரிக்கர்களோ உலகத்தை ஆளும் பலத்தை இழந்துவிடக் கூடாது என்ற நோக்கில் நகர்வதையும் இந்தியாவை அரவணைப்பதன் மூலம் அதனை பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் செயல்படுகின்றனர். ரஷ்யாவின் நெருக்கமான நட்பு நாடு இந்தியா என்ற வகையிலும் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்துவரும் நாடு என்ற வகையிலும் அமெரிக்காவின் இந்தியா பொறுத்த கொள்கை அமைந்துள்ளது. இக் கட்டுரையும் இந்தியப் பிரதமரது அமெரிக்க விஜயம் ஏற்படுத்தியுள்ள விளைவுகளைத் தேடுவதாக அமையவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க விஜயம் அமெரிக்காவினால் அதிகம் விரும்பப்பட்டதாகவே அமைந்துள்ளது. உலக அரசியல் பொருளாதார இராணுவ ஒழுங்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அமெரிக்கா நலனுக்குட்பட்டவிதத்தில் மேற்குலகத்திற்கு அதிக நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. அதிலிருந்து மீளமுடியாது மேற்கு திணறுகிறது. ஒருபக்கம் பொருளாதார நெருக்கடி, மறுபக்கத்தில் உலகளாவிய அரசியல் இராணுவ ஆதிக்கம் இழந்து போகிறதென்ற நெருக்கடி. இந்தச் சூழலிலேயே இந்தியாவின் ஒத்துழைப்பும் அரவணைப்பும் அமெரிக்காவுக்கு மட்டுமல்ல ஐரோப்பாவுக்கும் தேவையாக உள்ளது. இந்தியாவின் சந்தையும், மிதமான ஜனநாயகப் போக்கும் அமெரிக்காவுக்கு அவசியமாகிறது. அதற்கான சூழலை ஏற்படுத்துவதிலேயே மோடி மீதான கரிசனையை அமெரிக்கா அதிகரித்துள்ளது. இந்தியப் பிரதமர் ஒருவருக்கு செங்கம்பள வரவேற்பு, 21 பீரங்கி வேட்டுக்கள், மற்றும் பிரமண்டமான சைவ உணவு விருந்து மட்டுமல்லாது காங்கிரஸில் உரையாற்றும் சிறப்பு (மோடிக்கு இரண்டாவது உரை) என தடல்புடலான வரவேற்பை அமெரிக்கா செய்துள்ளது. இத்தகைய வரவேற்புக்குப் பின்னால் அமெரிக்கா மறைவாகத் திட்டமிடும் அரசியலை தேடுவது அவசியமானது. அவ்வாறே இந்தியாவின் நோக்கங்களையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

முதலாவது, இந்தியப் பிரதமரின் அமெரிக்க விஜயத்திற்கு முன்னரே இந்தியாவை அமெரிக்க இராணுவ கூட்டணியான நேட்டோவில் இணைப்பது பற்றிய உரையாடலைத் தொடக்கியிருந்தது. அதாவது நேட்டோ பிளஸில் இந்தியாவை இணைத்துக் கொள்வது பற்றியும் அதற்கான சமிச்ஞையை இந்தியப் பிரதமரிடமிருந்து பெற்றுவிட வேண்டும் என்ற திட்டமிடலும் காணப்பட்டது. காரணம் உலகிலேயே 42 சதவீதமான இராணுவ ஆயுத தளபாடங்களைகளின் ஏற்றுமதி மூலம் வருமானத்தை ஈட்டும் நாடாக அமெரிக்கா காணப்படுவதும் உக்ரைன் ரஷ்யப் போருக்குப் பின்னர் அதில் வீழ்ச்சி காண ஆரம்பித்துள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். உலகிலேயே அதிக ஆயுத தளபாடத்தை ஏற்றுமதி செய்யும் நாடான அமெரிக்காவும் அதிகளவான ஆயுத தளபாடத்தை இறக்குமதி செய்யும் நாடாக இந்தியாவும் விங்குகின்றன. இந்தியாவை நேட்டோவில் இணைப்பதனால் இதற்கான வாய்ப்பு அதிகரிக்க இடமுண்டு. அது மட்டுமல்லாது நேட்டோ பிளஸ் இந்தோ, பசுபிக் பிராந்தியத்தை மையப்படுத்திய அணியாகவும் ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட குவாட்டின் விஸ்தரிப்பாகவும் அதனை ஓர் இராணுவ விஸ்தரிப்பாகவும் உருவாக்கும் திட்டமிடலுடனேயே அமெரிக்கா நகர்கிறது. அத்துடன் இந்தியா தற்போது தனது ஆயுத தளபாட இறக்குமதிக்கு அதிகம் ரஷ்யாவிலேயே தங்கியுள்ளது. 1971இல் இந்தியா, ரஷ்யாவுடன் (சோவியத் யூனியன்) மேற்கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையின் பிரகாரம் தற்போதுவரை ரஷ்யாவிடம் ஆயுதங்களை இறக்குமதி செய்யும் பாரம்பரியமான நாடாக விளங்குகிறது. இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நேட்டோவில் இந்தியா இணைவது பற்றிய செய்தியை அடிப்படையாகக் கொண்ட பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது வெளிப்படையாக மறுத்ததோடு இந்தியாவுக்கு மேற்குலக நாடுகளின் ஆயுத தளபாடங்களது பிரயோகம் பயன்பாடாக அமையாது என விவாதித்திருந்தார். ஆனால் தற்போது இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கைச்சாத்தான உடன்பாட்டில் போர் விமானங்களின் தயாரிப்பு, ட்ரோன்கள் இறக்குமதி மற்றும் விண்வெளி தொடர்பிலான இஸ்ரோ, நாஸா உடன்பாடு அதிக இராணுவ விடயங்களை உள்ளடக்கியுள்ளதாக விமர்சனங்கள் உண்டு. ஆனால் அமெரிக்கா இராணுவ விடயத்தில் எந்த நெருக்கமான நட்பு நாட்டுடனும் மேற்கொள்ளும் உடன்படிக்கையின் பிரகாரம் செயல்படுவதில்லை என்ற விமர்சனம் உறுதியானதாகவே உள்ளது. இதனால் ரஷ்ய, இந்திய உறவு பாதிக்குமா என்ற கேள்வி எழுகிறது. அதற்கான வாய்ப்பு மிகக் குறைவானதாகவே உள்ளது. காரணம் இந்தியப் பிரதமரது விஜயத்தில் இந்தியாவின் நோக்கம் அமெரிக்காவுடனான வர்த்தக உறவையும் விஞ்ஞானதொழிநுட்ப பரிமாற்றத்தையும் அதிகரிப்பதாகவே தெரிகிறது. மோடி, எலான் மாஸ் சந்திப்பு மற்றும் அமெரிக்க வாழ் இந்திய வர்த்தகர்களுடனான சந்திப்பு என்பன முதன்மையானவை. அவ்வாறே காங்கிரஸில் மோடியின் உரையின் போது உலகிலேயே பொருளாதாரத்தில் ஐந்தாவது இடத்திலுள்ள இந்தியா விரைவில் மூன்றாவது இடத்தை அடையும் என்றார். மோடியின் விஜயத்தில் அமெரிக்காவின் நோக்கம் இராணுவ ரீதியானது என்றால் இந்தியாவினது பொருளாதார ரீதியானதாகவே அமைந்துள்ளது.

இரண்டு, அமெரிக்காவின் நலன்சார்ந்து மோடி அமெரிக்காவில் மகிழ்விக்கப்படுகிறார். இந்தியாவில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் மிக மோசமாக உள்ளதாகவே விமர்சனங்கள் உண்டு. கீழைத்தேசத்தில் எழுச்சி பெறும் சீனா இந்தியா மற்றும் ரஷ்யாவிடம் ஜனநாயகமோ மனித உரிமையோ இல்லை என்ற விவாதம் மேற்குலகில் உண்டு. அத்தகைய சக்திகளிடமே உலகப் பொருளாதாரத்தின் இயங்குதிறன் நகரப் போவதாக றிச்சட் வோல்ப் குறிப்பிடுகின்றார். அதனை எப்படி தகர்ப்பதென்பதே அமெரிக்காவினதும் மேற்குலகத்தினதும் உத்தியாகும். இந்தியா அத்தகைய பொருளாதார இடமாற்றத்தின் பிரதான நாடு என்ற வகையில் அமெரிக்காவால் நோக்கப்படுகிறது. ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய்யை குறைந்த விலையில் பெற்றுக் கொண்ட இந்தியா, அதனை சந்தைவிலையில் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்த நாடு என்ற வர்த்தக உத்தியை மேற்கு உலகமும் இலகுவில் மறந்துவிடாது. அதுவே அமெரிக்காவின் இராணுவ ஆயுத தளபாடங்களுக்கும் நேரலாம் என்பது இலகுவான சமன்பாடாகும். அதனால் அமெரிக்கா தனது நலனுக்குட்பட்ட விதத்தில் ஜனநாயம் மற்றும் மனித உரிமை பற்றி எந்த உரையாடலையும் அரச மட்டத்தில் முன்வைக்க முயலாது. வேண்டுமாயின் ஊடகங்கள் கேள்வி எழுப்பிவிட்டு போக முடியுமே அன்றி அதன் விளைவுகளாக எதுவும் சாத்தியமற்றது.

மூன்று, இந்திய ரஷ்ய உறவைத் தகர்ப்பதே அமெரிக்காவின் பிரதான நோக்கம். காரணம் ரஷ்யாவின் நகர்வு உக்ரைனின் போரால் மட்டுமல்ல அதன் பொருளாதார நடவடிக்கையாலும் மேற்குக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேற்கு தனக்குள் குழப்பமடைந்துள்ளது. ஐரோப்பாவின் பொருளாதார நெருக்கடி அத்தகைய குழப்பத்திற்கு முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது. பிரான்ஸ் பிரித்தானியா போன்று ஐரோப்பா அமெரிக்க உறவை தகர்க்க முயலுகிறதாகவே மேற்குலக ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. பிறிக்ஸில் பிரான்ஸ் இணைவதற்கான அழைப்பு அதிக சர்ச்சையை மேற்கிடம் ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் வெளியுறவு செயலாளர் பிளிங்டனது சீன விஜயம் அத்தகைய குழப்பத்தின் எதிரொலி என்பதை தெளிவுபடுத்துகிறது. இதனால் இந்தியாவை சீன ரஷ்ய அணியிலிருந்து பிரித்துவிட்டால் கீழைத்தேசத்தின் பொருளாதார எழுச்சியை தகர்த்துவிடலாம் என்ற எண்ணத்துடன் அமெரிக்கா இந்தியாவை அணுகுகிறது. ரஷ்ய, இந்திய உறவு இராணுவ ரீதியானது மட்டுமல்ல பொருளாதார ரீதியிலும் பலமானது. எவ்வாறு சவூதி அரேபியா, ஈராக் உறவு சரிசெய்யப்பட்டதோ அவ்வாறே இந்திய பாகிஸ்தானிய உறவும் நகர்வதாக தெரிகிறது. குறிப்பாக அண்மையில் ரஷ்யாவின் மசகு எண்ணெய் பாகிஸ்தானுக்கு இந்தியாவால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறே பாகிஸ்தானின் போர்க் கப்பலும் இந்தியாவின் நீர்மூழ்கியும் கொழும்புத் துறைமுகத்தில் சமகாலத்தில் நகர்ந்துள்ளன. இது பற்றி இந்தியா அதிக நெருக்கடியை இலங்கைக்கு கொடுக்கவில்லை.

நான்கு, இந்தியாவை சீனாவுடன் மோதவிடுவது அமெரிக்காவின் இன்னோர் உத்தியாக உள்ளது. அதன் மூலம் சீனாவின் பொருளாதாரப் பாய்ச்சலை மட்டுமல்ல இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியையும் கட்டுப்படுத்தி விடலாம் என்ற எண்ணத்தை அமெரிக்கா கொண்டுள்ளது. 1962இல் இந்திய சீனப் போரைத் தூண்டியதில் அமெரிக்காவே பிரதான காரணமாக அமைந்தது என்ற மதிப்பீடு இந்திய ஆய்வாளர்களிடமுண்டு. அந்த போரில் இந்தியா அதிக பாடங்களைக் கற்றதோடு அதுவே இந்திய ரஷ்ய நெருக்கத்துக்கும் அப்போது சீன, அமெரிக்க உறவுக்கும் அடிப்படையானது. காரணம் இந்தியாவும் சீனாவும் நட்பு சக்திகளாக இருத்தல் என்பது உலக ஆதிக்க சக்திகளுக்கு ஆபத்தானதாகவே அமையும். அதனால் அத்தகைய உறவை மீளவும் பலப்படுத்த வேண்டும் என்ற உத்தியை அமெரிக்கா கொண்டுள்ளது. ஆனால் இந்தியாவோ அதற்கான வாய்ப்பினை முற்றாகவே தவிர்க்க முனைகிறது.

எனவே மோடியின் அமெரிக்க விஜயத்திற்கு பின்னால் பாரிய முரண்பாட்டையும் பகைமையையும் தோற்றுவிக்கும் நகர்வு உள்ளது. முதலாளித்துவம் அல்லது தாரண்மைவாதத்தை அதிகம் நேசிக்கும் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியின் கீழ் இந்தியாவின் மனித உரிமை, ஜனநாயகம், ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கான அனுசரணை, மற்று உலக சமாதானம் என்பன முடிவுக்கு வந்துள்ளதாகவே தெரிகிறது. இவை அனைத்தையும் கடந்து பிரதமரது அமெரிக்க விஜயம் இந்திய நலன்களுடன் நகர முயலுகிறதாகவே தென்படுகிறது.

இதற்கு பின்னால் மோடி, அம்பானி கூட்டைவிட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரது நகர்வுகளே அதிகம் முதன்மையானதாக உள்ளது. நரோந்திர மோடிக்கு எதிரான அணியொன்றைப் பலப்படுத்தல் உள்நாட்டில் நிகழ, மோடி அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பது அதிக செய்திகளை வெளிப்படுத்துகிறது. அடுத்த பிரதமராக மோடியோ, ராகுல்காந்தியோ அல்லது வேறு எவராவரோ ஆட்சிக்கு வந்தாலும் அவர் அமெரிக்காவினதும் மேற்கினதும் பொம்மையாக வேண்டும் என்பதே மேற்குலகத்தின் தேவையாகும். இந்தியாவை இந்தியர்கள் ஆட்சி செய்து மிக நீண்டகாலமாகி விட்டது.



# லேக்ஹவுஸ் நிறுவனத்தைப் பாதுகாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

**அரச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்காக ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய சுய ஓய்வு இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குரிய இழப்பீடுகளுக்காக தேசிய தொலைக்காட்சி நிறுவனத்திற்கு 300 மில்லியன் ரூபாவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 300 மில்லியன் ரூபாவும் திறைசேரியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாத மற்றும் திறைசேரி திணைக்களத்தின் பிரதான பங்குதாரரான யுனைடெட் நியூஸ் பேப்பர் கம்பனி லிமிடெட் நிறுவனத்துக்கு 2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஊடகத்துறை அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் விசேட மானியமாக 300 மில்லியன் ரூபாவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அரச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்காக ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய சுய ஓய்வு இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குரிய இழப்பீடுகளுக்காக தேசிய தொலைக்காட்சி நிறுவனத்திற்கு 300 மில்லியன் ரூபாவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 300 மில்லியன் ரூபாவும் திறைசேரியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாத மற்றும் திறைசேரி திணைக்களத்தின் பிரதான பங்குதாரரான யுனைடெட் நியூஸ் பேப்பர் கம்பனி லிமிடெட் நிறுவனத்துக்கு 2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஊடகத்துறை அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் விசேட மானியமாக 300 மில்லியன் ரூபாவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன விடுத்த விசேட வேண்டுகோளை அடுத்தே ஜனாதிபதி இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு நேரடியாக பணத்தை வழங்குவதற்கு திறைசேரியிடம் நிதி ஒதுக்கீடு இல்லை என்பதால், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஊடகத்துறை அமைச்சின் ஊடாக அதற்கு நிதியினை வழங்குவதற்கு பிரதி திறைசேரி செயலாளர் ஏ. கே. செனவிரத்ன, வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம் ஜூட் நிலக்ஷன் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் திலித் சில்வா ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஊடகத்துறை அமைச்சும் லேக்ஹவுஸ் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும் என்றும், அதன் முன்னேற்றம் தொடர்பில் அவ்வப்போது ஊடகத்துறை அமைச்சு நிதி அமைச்சுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகள் உரியவாறு நிறைவேற்றப் படுகின்றதா என ஊடகத்துறை அமைச்சு நிதி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. 2022ம் ஆண்டின் இறுதியில் 1200 ஆக இருந்த ஊழியர்களின் எண்ணிக்கையை 972 ஆக குறைக்க லேக்ஹவுஸ் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன், இந்த வருட இறுதிக்குள் அந்த எண்ணிக்கை 900 ஆக குறைக்கப்படும். அத்துடன், 2024ம் ஆண்டு இறுதிக்குள் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையை 850 ஆகக் குறைக்கவும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, முறையான செயல்திறன் நடைமுறைகளை செயல்படுத்தவும், பயிற்சி மற்றும் மேம்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, வருடாந்த செயல்திறன் மதிப்பாய்வின் போது பணியாளரின் தற்போதைய செயல்திறன் அளவை மதிப்பீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த செப்டெம்பர் மாதம் முதல் இது வரைக்கும் இலாபம் ஈட்டும் அரச ஊடக நிறுவனமாக மாறியுள்ள லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு வரும் காலங்களில் ஒப்பந்தத்தின் பிரகாரமான ஊழியர்களின் எண்ணிக்கையை விட ஊழியர்களை வேலைக்கு அமர்த்தினால் அதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று எல்லா சந்தர்ப்பங்களிலும் நிலையான நிதி நிலையினை முன்னெடுத்துச் செல்வதற்கு முடியுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், யுனைடெட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் பெருநிறுவன ஆவணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன உருவாக்கத்திற்கான 61 நோக்கங்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கும், திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்குத் தேவையான உரிய அனுமதிகளைப் பெற்று தகுதியானவாறு புதுப்பிக்கவும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட மற்றும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் சட்டம் மற்றும் நிர்வாக பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர் ஒப்பந்த ஆவணங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

ஊடகத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் லோஷனீ பீரிஸ், பிரதி செயலாளர் ஈ.எம். எஸ்.பீ.ஜயசுந்தர, சட்ட அதிகாரி சட்டத்தரணி யுரேகா வேலாரத்ன, திட்டமிடல் பணிப்பாளர் டபிள்யூ. பி. செவ்வந்தி, லேக் ஹவுஸ் ஆசிரியர் பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, மேலதிக பொது முகாமையாளர் விராஜித் பொய்ஸ், நிறுவன செயலாளர் சுதர்ஷி ஹேவாவசம் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததைப் படத்தில் காணலாம்.

எம். எஸ். முஸப்பிர்

# தியாகத்தின் மகத்துவத்தை உணர்த்தும் ஹஜ்ஜுப் பெருநாள்



அல்லாஹுவின் அருளினால் முஸ்லிம்கள் தியாகப் பெருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளை உவகையுடன் கொண்டாடுகின்றனர். 'ஈதுல் அழ்ஹா' எனப்படும் தியாகப் பெருநாள், இறைவனுக்காக மனிதன் செய்த மிகப்பெரும் தியாகத்தை நினைவுபடுத்திக் கொண்டாடுவதாகும். இஸ்லாத்தின் 5வது கடமை 'ஹஜ்' கடமையாகும். தகுதியுள்ள அனைத்து முஸ்லிம்களும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவது அவசியமாகும். வல்ல நாயன், அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்.

''மனித இனத்துக்கு ஹஜ் (புனிதபயணம்) குறித்து பிரகடனப்படுத்துவீராக. அவர்கள் நடந்தும், தொலைதூரப் பாதைகளிலிருந்து வரும் ஒவ்வொரு (நெடும் பயணத்தால்) மெலிந்த ஒட்டகங்களிலும் உம்மிடம் வருவார்கள். அதன் நற்பலனை அவர்களுக்காகக் காணவும், அவர்களுக்கு அவன் அளித்துள்ள கால்நடைகள் மீது ஒரு குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வின் பெயரை நினைவுகூரவும் (அவர்கள் வருவார்கள்) பின்னர், அவற்றிலிருந்து உண்ணுங்கள். மேலும் கஷ்டத்திலிருப்பவர்களுக்கும் வறியவர்களுக்கும் (அதிலிருந்து) உணவளியுங்கள்.'' (ஸுரத்துல் ஹஜ்: 28,29)

ஹஜ் கடமை ஓர் ஆன்மிகப் பயணமாகும். இதன்மூலம் பெறப்படும் ஆன்மிக அனுபவம், கிடைக்கும் பயிற்சிகள், மனிதனுக்கு இறைநெருக்கத்தை அதிகரிக்கச் செய்கிறது. இறையச்சம், உளப்பக்குவம், தியாக சிந்தனை, ஒற்றுமை, பொறுமை போன்றனவற்றை ஏற்படுத்துகிறது.

ஹஜ் கடமையில் ஈடுபடுவோர் 'லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்'என்ற தல்பியாவை முழங்கியவர்களாக ஹஜ்ஜின் சகல கிரியைகளிலும் ஒன்றாகவும் ஒற்றுமையாகவும் ஈடுபடுவது அருளும் பக்தியும் நிறைந்த இனிய காட்சியாகும். உலக முஸ்லிம்களான நாங்கள் அனைவரும் ஒரே கொடியின் கீழ்ஒற்றுமையாக வாழ வேண்டும் என ஹஜ் கிரியைகள் உணர்த்துகின்றன.

இறைவன் கட்டளைக்கு கீழ்படிதல்

இந்த தியாகத் திருநாள், தந்தை தனது மகனை 'குர்பான்' செய்வதற்காகவும், மகன் தன்னைத் தானே தியாகம் செய்வதற்காகவும் முன்வந்த தியாகத்தை நினைவுபடுத்திக் கொண்டாடுவதாகும். இப்ராஹீம் (அலை) அவர்களும், அவர்களின் மனைவி ஹாஜரா நாயகி அவர்களும், அவர்களின் அருமை மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களும் செய்த மகத்தான தியாகத்தை இந்தப் பெருநாள் நினைவுபடுத்துகிறது. இப்ராஹீம் (அலை) அவர்கள், தனது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட கனவொன்று கண்டார்கள். இறைவனின் கட்டளைக்கு கீழ்படியும் வகையில் தனது அன்பு மகனை பலியிட இப்ராஹீம் (அலை) அவர்கள் துணிந்தார்கள். இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது அருமை மகனை அறுத்துப் பலியிடத் துணிந்தபோது, ஒரு ஆட்டை அறுத்துப் பலியிடுமாறு அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான். அவ்வாறே அவர்கள் செய்தார்கள்.

இந்த தியாகத்தின் உச்ச நிலையை முழு உலகிலும் உள்ளஇறையடியார்களுக்கு உணர்த்துவதே குர்பானின் நோக்கமாகும். ஹஜ் பெருநாளின் தாற்பரியமும் தியாகத்திலேயே தங்கியுள்ளது. அதனால்தான் இந்த பெருநாள் தியாகப் பெருநாள் எனப் போற்றப்படுகிறது. ஆடுகளையும் மாடுகளையும் 'குர்பான்' கொடுப்பதனால் இந்தப் பெருநாளை கொண்டாடுகின்ற கடமை முடிந்துவிடாது. அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது,

''அவற்றின் இறைச்சியும் அவற்றின் ரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களில் உள்ள இறையச்சம்தான் அவரைச் சென்றடைகிறது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியை காட்டியதற்காக நீங்கள் அவனது பெருமையை எடுத்துரைக்க இவ்வாறு அவன் அவற்றை உங்களுக்கு தொண்டு செய்ய வைத்தான்.

நற்செயல் செய்பவர்களுக்கு நீர் நற்கூலி வழங்குவீராக!''



# கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்



வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல்விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் வேல்கள் தாங்கிய அடியார்களுடனான மாபெரும் வேல் யாத்திரை வெற்றிகரமாக நிறைவடைந்தது.

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை வரலாற்றில் முதல் தடவையாக கடந்த (14) புதன்கிழமை பி.ப. இரண்டு மணியளவில் உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் ஆரம்பமாகியது.

இந்த மாபெரும் வேல் யாத்திரையை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகஸ்ரீ தியாகராஜா ஆசிரியர் வேல் சாமியாக இருந்து இவ்வருடம் முதல் யாத்திரையை தலைமையேற்று நடத்தினார்.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்தில் இருந்து 1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரையாக, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடு மலையில் இருந்து அரோஹரா கோசம் விண்ணைப் பிளக்க "பாத யாத்திரை" அமிர்த கழி மாமாங்க பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்து அங்கிருந்து, உகந்தை முருகன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து தொடங்கியது.

பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்ட ஆறு நாட்களிலும் யாத்திரிகர்கள் அனைவருக்கும் மூன்று வேளை உணவும், இரண்டு வேளை தேனீரும் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சர்வமத தலைவர்கள், கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்ட அதிகளவிலான பக்தர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

கதிர்காம கந்தனின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவில் இந்த ஆண்டுக்கான முதலாவது திருவீதி உலா (பெரஹரா) கடந்த 19 திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜுலை மாதம் 4ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ள நீர்வெட்டும் நிகழ்வுடன் நிறைவு பெறவுள்ளது.

மொத்தத்தில் இம்முறை முதல் தடவையாக இடம் பெற்ற வேல் யாத்திரை ஓர் ஆன்மிக புரட்சியை ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல.

**விபுலமாமணி**
**வி.ரி. சகாதேவராஜா**

# 'வரிக் கோப்பு' திறப்பது கட்டாயமாகின்றது!



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்





இலங்கையில், 01 ஜூன் 2023 முதல் பல துறையினருக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவுசெய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிதி மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தமானி அறிவித்தலொன்றை 31 மே 2023 வெளியிட்டுள்ளார்.

அதன்படி வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், வங்கி அதிகாரிகள், கட்டடக்கலை வல்லுநர்கள் எனப் பல துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு இந்த நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

2017 இன் இலக்கம் 24 (31 மே 2023) உள்நாட்டு வருவாய்ச் சட்டத்தின் 102வது பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவிப்பின்படி, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டிய நபர்கள் பின்வருமாறு:

w.e.f. 01 ஜூன் 2023 பின்வரும் நபர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் IRA இன் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

தொழில்முறையில் ஈடுபடுபவர்கள்

இலங்கை மருத்துவச் சபையில் (SLMC) பதிவு செய்த வைத்தியர்கள்.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICASL) உறுப்பினர்கள்.

இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CMA) உறுப்பினர்கள்.

இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் (IESL) உறுப்பினர்கள்.

இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் (APBSL) உறுப்பினர்கள்.

இலங்கை கட்டடக் கலைஞர்கள் சங்கத்தின் (SLIA) உறுப்பினர்கள்.

இலங்கையின் அளவு ஆய்வாளர்கள் நிறுவனத்தின் (IQSSL) உறுப்பினர்கள்.

இலங்கை உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் / உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள்.

வணிக நபர் தமது தொழில்களை/வணிகங்களைப் பிரதேச செயலகங்களில் பதிவு செய்தவர்கள்.

வாகன உரிமையாளர்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை வைத்திருக்கும் நபர்கள் (முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கை உழவு இயந்திரங்கள் என்பனவற்றிக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது).

சொத்து உரிமையாளர்கள் 01 ஏப்ரல் 2018க்குப் பின் பத்திரப் பரிமாற்றத்தின் மூலம் இலங்கையில் அசையாச் சொத்தை வாங்கிய / உரிமையாளராகிய நபர். அல்லது உள்ளூர் அதிகாரசபையிடமிருந்து கட்டடத் திட்டத்திற்கான அனுமதியைப் பெறும் தனிநபர்.

சேமநல நிதி / வருங்கால வைப்பு நிதி (PF) பங்களிப்பாளர் ஊழியர் மற்றும் முதலாளி இருவரிடமிருந்தும் எந்தவொரு ஊழியர் சேமநல நிதி அல்லது ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கு (PF) மாதாந்த பங்களிப்பு LKR 20,000ஐ விட அதிகமாக இருக்கும் பணியாளர்.

வரி நிவாரணத் தொகைக்கு மேலதிகமாக வருமானம் பெறுபவர்கள் இலங்கையில் ஏதேனும் சேவைகளை வழங்குவதற்காக மாதாந்தம் LKR 100,000 அல்லது 12 மாதக் காலத்திற்கு LKR 1,200,000 கட்டணமாகப் பெற்றுக்கொள்ளும் தனிநபர்.

w.e.f. 01 ஜனவரி 2024 18 ஆண்டுகள் THRESHOLD

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இறைவரித் திணைக்களத்தில் கோப்பு ஒன்றைத் திறப்பது கட்டாயம் ஆகும்.

2023 டிசம்பர் 31ஆம் திகதி 18 வயதை நிறைவு செய்தவர்கள்

அல்லது

2024 ஜனவரி 1ஆம் திகதி அல்லது அதற்குப் பிறகு 18 வயதை அடையும் அனைத்து நபர்களும்

இவர்கள் இந்தப் புதிய விதிக்கு உட்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வருமான வரிக் கோப்பினைத் திறக்கும்போது மேலே குறிப்பிட்டுள்ள நபரின் கடமை என்னவாக இருக்கும்?

வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN): இலங்கையில் உள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் (IRD) TINஐப் பெறுவதே முதல் படியாகும். தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து IRDக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது நேரடியாக online மூலம் அந்த நபர் TINக்கு விண்ணப்பிக்கலாம். TIN என்பது வரி நோக்கங்களுக்காகத் தேவைப்படும் தனித்துவமான அடையாள எண்.

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்: நபர் ஒருவர் TINஐப் பெற்றவுடன் வரி வகைப் பதிவிற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெறலாம், அவர்களின் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். அல்லது நேரடியாக online மூலம் படிவத்தைத் துல்லியமாகப் பூர்த்தி செய்து தேவையான ஆதார ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

துணை ஆவணங்கள்: புதிய வருமான வரிக்கோப்பைத் திறக்கப் பொதுவாக தேவைப்படும் துணை ஆவணங்கள்;

அடையாள ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள். (தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு போன்றவை)

குடியிருப்பு முகவரிக்கானச் சான்று. (பயன்பாட்டுப் பற்றுச்சீட்டுகள் / வாடகை ஒப்பந்தம் போன்றவை)

வேலைவாய்ப்பு விவரங்கள். (வேலைவாய்ப்பு ஒப்பந்தம் / தொழில்தருநரின் கடிதம் போன்றவை)

வருமானத்தை உறுதிப்படுத்த வங்கி அறிக்கைகள் / பிற நிதி ஆவணங்கள்.

சரிபார்ப்பு மற்றும் செயலாக்கம்: விண்ணப்பம் மற்றும் ஆதார ஆவணங்களைச் சமர்ப்பித்தப் பிறகு வழங்கப்பட்ட தகவல்களைச் சரி பார்க்கும் தேவை ஏற்படின், IRD கூடுதல் ஆவணங்கள் / விளக்கங்களைக் கோரலாம். சரிபார்ப்புச் செயல்முறை முடிந்ததும் உங்களுக்கான புதிய வருமான வரிக் கோப்பு திறக்கப்படும்.

வரி விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் காலப்போக்கில் மாறக்கூடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இலங்கையில் உள்ள தனிநபர்களுக்கான புதிய வருமான வரிக் கோப்பினைத் திறப்பது தொடர்பான மிகவும் புதுப்பித்த மற்றும் துல்லியமான தகவல்களுக்கு, இலங்கையின் உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது வரி நிபுணரிடம் ஆலோசனை பெறவும் பரிந்துரைக்கிறேன்.

# புத்தெழுச்சி பெற்ற இலங்கை மனவளக்கலை மன்றம்

## மனவளக் கலை எனும் வாழ்க்கை வளக்கல்வி 03

உலகில் உள்ள எல்லா மனவளக்கலை மன்றங்களும் இந்தியாவை தலைமையகமாகக் கொண்ட உலக சமுதாய சேவா சங்கத்தின் நெறிமுறைகளுக்கு அமையவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இலங்கையிலுள்ள மன்றங்களும் அவ்வாறே தனது பணிகளை மேற்கொண்ட நிலையில், உலக சமுதாய சேவா சங்கம் தனது இரு கிளைகளை கொழும்பு மற்றும் யாழ்ப்பாண கிளை என்ற பெயரில் இலங்கையில் 2015ம் ஆண்டு நிறுவி, நிர்வாகத்தை இலகு படுத்தியது. கொழும்பு கிளையின் தலைவராக மதுரவீரனும் யாழ்ப்பாண கிளை தலைவராக முருகானந்தவேலும் நியமிக்கப்பட்டனர். பின்பு யாழ்ப்பாண கிளை தலைவராக குழந்தைவேல் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இக்காலப் பகுதியில் கொழும்பு கிளையின் ஊடாக அட்டன், நாவலப்பிட்டி, மாத்தளை, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற நகரங்களில் மனவளக் கலை மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பாலசுந்தரம், யோகானந்தன். சந்திரசேகர், ஐங்கரன் முறையே அதன் தலைவர்களாக இருந்து சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். கனகராஜ் தலைமையில் புதுச்செட்டி தெருவிலும், ஸ்டெல்லா தலைமையில் விவேகானந்த சபையிலும் ஸ்ரீமதி தலைமையில் மட்டக்குளியாவிலும் மனவளக் கலை மன்றங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அண்மையில் பண்டாரவளையில் ஆசிரியர் கருணாகரனின் முயற்சியால் மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு இலங்கையில் மனவளக்கலை மன்றங்கள் மெது மெதுவாக ஆனால் உறுதியாக காலூன்ற தொடங்கிவிட்டன. உடலுக்கும் மனதிற்குமான பயிற்சிகள், தன் குற்றம் குறைகளை ஆராய்வதற்கான அகத்தாய்வு பயிற்சிகளோடு ஆன்மிகத்தின் அடிப்படை உண்மைகளையும் கற்றுத் தருவதால் இந்து, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற எல்லா மத மக்களும் இப்பயிற்சிகளை கற்று வருகிறார்கள். இதனால், மனவளக்கலை பயிற்சிகள் மக்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி சிந்தனையை தூண்டசெய்கிறது. இச்சிந்தனை மாற்றம், காலப்போக்கில், சமுதாயத்தில் அமைதி நிலவ வழிகோலும்.

தமிழகத்திலிருந்து வேலை நிமித்தம் இலங்கை வந்த திரு யாகவர்ணன் அவர்கள் இளம் சிறார்களுக்கான மனவளக்கலை பயிற்சிகளை தொடர்ச்சியாக கற்றுத் தந்து உதவினார்.

மனவளக்கலையின் பாடத்திட்டங்களை தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் ஏற்றுக்கொண்ட நிலையில், மனவளக் கலை பயிற்சியாளர்கள், பல்கலைக்கழகங்களில் யோகா பட்டய கல்வியை தொடர வழி ஏற்பட்டது. 2015ம் ஆண்டு தமிழகத்திலிருந்து வந்த மனவளக்கலை பேராசிரியர் ராதாகிருஷ்ணன் இப்பட்டய கல்வியை இலங்கை மக்களுக்கு கற்றுத் தர ஆரம்பித்தார்.

இலங்கையில் மனவளக்கலை மன்ற ஆசிரியர்கள் இல்லாத நிலையில் தமிழ் நாட்டில் இருந்து வந்த மனவளக்கலை பேராசிரியர்கள் வேத சுப்பையா, உழவன் தங்கவேலா, திருமதி மாலா ஜெயப்பிர



காஷ், விவேகானந்தன் பரமசிவம்,காலம் சென்ற அறிவானந்தம் விஞ்ஞானி லட்சுமணன், கலாநிதி கே பெருமாள், தாமோதரன் போன்றவர்கள் இலங்கையில் மனவளக்கலை பயிற்சிகளை தொடர்ச்சியாக கற்றுத் தந்து இங்கும் ஆசிரியர்கள் உருவாக காரணமாகினர்.

தங்கராஜ் தம்பதியினர், மதுரை வீரன், விக்னேஸ்வரன், மீனா, ஸ்டெல்லா, ஸ்ரீமதி, பாலசுந்தரம், சித்திரவேல், பால சுப்பிரமணியம், முருகானந்த வேல், செல்வரத்தினம், பரிமளேஸ்வரி, தர்மினி சேகர், தர்மினி, ஜெகதீஸ்வரி, ஜெயகாந்தா போன்றவர்கள் மனவளக்கலை பேராசிரியர்களாக உருவாகினர்.

கொவிட் காலப்பகுதியில் மன்றங்கள் இயங்க முடியாத ஒரு நிலை இருந்தது அப்போது zoom வழியாக நிகழ்ச்சிகள் நடத்தன.

இதே வேளை, 2012ஆம் ஆண்டு அறங்காவலர்களின் மற்றும் மனவளக்கலை அன்பர்களின் நிதி உதவியுடன் இலங்கை மனவளக்கலை மன்றத்துக்காக பழைய கட்டடத்துடன் கூடிய ஒரு காணி சொந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த இடம் வெள்ளவத்தை ராமகிருஷ்ண வீதியிலுள்ள ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திற்கு முன்பக்கத்தில் அமைந்தது ஒரு சிறப்பம்சமாகும்.

இவ்விடத்திலேயே மன்றத்தின் எல்லா பயிற்சிகளும் 2019ஆம் ஆண்டு வரை நடைபெற்றன. பின்பு இலங்கை மனவளக்கலை மன்றத்துக்கான புது கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் கொவிட் மற்றும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினை போன்ற பல இன்னல்களால் கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டது. சற்றும் தளராத, மன்றத்தின் தலைவர் மதுரை வீரன் தனது சொந்த பணத்துடன் மற்றவர்களிடமும் நிதியை திரட்டுவதில் முன்னின்று கடுமையாக உழைத்தார். இக்கட்டட நிர்மாண பணிகளை வசந்தகுமாரின் கட்டட நிறுவனத்தால் நிறுவனத்தின் நிர்வாக செலவுகளுடன் கூடிய இலாபம் இல்லாத விலைக்கே கட்டுவது என அறங்காவலர் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு செவ்வனே கட்டி முடிக்கப்பட்ட "கொழும்பு அறிவுத்திருக்கோயில்" 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி வைபவ ரீதியாக உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ SKM மயிலானந்தனால் திறந்து வைக்கப்பட உள்ளது. நீண்ட கால கனவு நனவாகின்றது, அனைவரதும் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவுள்ளது. புதிதாக கிடைக்கப் பெற்ற கட்டடத்தினால் புத்தெழுச்சி பெற்ற இலங்கை மனவளக்கலை மன்றமானது மனவளக்கலை என்ற வாழ்க்கை கல்வியை இலங்கை மக்களுக்கு எடுத்துச் செல்ல ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றது.

**ஆர். வசந்தகுமார்**

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## என் உயிர்த் தமிழே

ச. அருணன்




உலக மொழிகள்
தங்களது மொழிக்கு
இலக்கணம் தேடித்
திரிந்த வேளையிலே
தோன்றி உருவாக்கி
இலக்கணம் கண்டு பிடித்து
இலக்கியமும் கண்டறிந்தது –
என் உயிர்த் தமிழே
குறிப்பிட்ட மொழி குறிப்பிட்ட நாடு என
மொழிகளுக்கெல்லாம் தலைவனாக உள்ளது –
என் உயிர்த் தமிழே
பல வீர புருஷர்கள்
தோன்றி மறைந்தாலும்
அவர்களை வாழவைப்பது
என் உயிர்த் தமிழே
வேற்று மொழியினரையும்
கவர்ந்தது என் உயிர்த் தமிழே
பண்டிதர்கள் மட்டுமல்ல
கல்வியறிவில்லாத பாமர ஜனங்களும்
படித்தறியும் வண்ணம்
இலக்கியம் அமைத்தது –
என் உயிர்த் தமிழே
ஐம்பெரும் காப்பியங்கள்
ஐஞ்சிறு காப்பியங்கள் என
இருவகை காவியங்களை
உலகிற்கு அளித்தது
என் உயிர்த் தமிழே
வீர சரித்திரங்களை
மணி மணியாய்
நல்ல அணிகளை
கையாண்டு படைத்தது
என் உயிர்த் தமிழே
ஆயிரம் சங்குகள் முழங்கி
கம்பீரமாக ஒலிரும் இத்தமிழை
எனக்கு கடைசிச்சங்கு ஊதும் வரை
ஒரு நொடியும் மறவேன்!

## முழ்கி நிர்மூலமாகிய நீர்மூழ்கி

காத்தான்குடி எம்.ஐ.அப்துல் நஸார்



காணாமல்போன கப்பலை பார்த்து வருவதற்காய்
காத்திருந்தோர் பயணம் தொடங்கியதே விரைவாய்
வீணாகிப் போகாது கனவுகளெல்லாம் மெய்ப்பட
வீரமாய் தொடங்கிய பயணம் உலகின் கண்பட

கோடிகளைக் கொட்டிக் கொடுத்த மனத்திடம்
கோர்வையார் சென்று சிக்கினர் மரணத்திடம்
அடித்துப்பிடித்து கரையே கணுக்கால் உயரமல்லவே
அனைத்தும் ஆடியொடுங்கின ஆழத்தில் மெல்லவே

பாதாளம் பாய்ந்தது பணத்தின் வலிமை
பாலமாய் வெடித்துச் சிதறிய கொடுமை
போதாது என்ற ஆசையின் அடிமை
போயின உயிர்களைந்து அறிவின் வறுமை

அட்டைப் பெட்டிபோல் சின்னஞ்சிறு நீர்மூழ்கி
அழுத்தம் கூடிய நெருக்கடிக்குள் இறுகி
அட்லாண்டிக் சமுத்திரத்தில் டைட்டானின் விதி
அனைத்தும் முடிந்தது கவலைதோய்ந்த செய்தி

இனியுமொரு பணக்காரக் கூட்டம் கிளம்பும்
இவையிரண்டையும் பார்க்க பரபரப்பாய் புறப்படும்
தனியாய் தெரிவதற்கு கோடிகளைக் கொட்டும்
தணியாத ஆவல்களால் கவலைகளே எஞ்சும்



## தியாகத் திருநாள்..!

ஏரூர்.கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்
ஏறாவூர்.

இப்றாஹீம் நபியின்
தியாகம் என்றும்
இப்பூமியில் வாழும்
காலத்தை வென்று
களிப்பில் செழிக்கும்
மலரைப் போன்று
துளிர்த்தே மலரும்
தியாகத்திருநாள் சான்று

இஹ்ராம் ஆடையில்
லெப்பைக் உயரும்
குர்பானும் கொடுத்தே
நன்மைகள் சேரும்
இறைவனிடம் கையேந்தி
உள்ளமும் அழும்
நிறைவான வாழ்வுக்காய்
பிரார்த்தனை எழும்

ஐக்கியம் ஓங்கியே
மனிதம் பிறக்கும்
பாக்கியம் பெற்றே
அன்பு சிறக்கும்
நீக்கிய பாவத்தை
ஹஜ்ஜூ உரைக்கும்
தேக்கிய கண்ணீரும்
கண்களை நிறைக்கும்

துல்ஹஜ் மாதம்
நன்மைகளால் பூக்கும்
ஹாஜிகளை உருவாக்கி
பாவத்தை நீக்கும்
பச்சிளங் குழந்தையாய்
புனிதத்தைக் காக்கும்
ஹஜ்ஜூப் பெருநாள்
பூமியை அலங்கரிக்கும்..!

## நல்வழி

வரக்காமுறையூர் ராசிக்

மக்கமா நகர் செல்லும்
மக்கள் கூட்டமே கேளும்
மக்க மெனும் சோலை
அக்காலம் வெறும் பாலை
மக்களும் அங் கில்லை
மாண்புறு வழிகளு மில்லை

இறை கட்டளை ஏற்ற
ஏந்தல் நபி இப்றாஹீம்
ஈரக் கொழுந்து மகனுடன்
இளை யவன் தாயையும்
யாரு மற்ற அப்பாலையிலே
அப்படியே விட்ட கன்றனரே!

வாழும் வகை யில்லாத
வரண்ட பாலைப் புழுதியில்
பாலகப் புத்திரர் இஸ்மாயில்
பைங்கிளி யவர் தாயுடன்
நிலை மாறி நின்றாரே
நிர்க்கதியில் மனம் துவண்டாரே!

இறை நேசச் செல்வர்
இப்றாஹீம் நபியின் புதல்வர்
யாரு மற்ற பாலையில்
அன்னையுட னிருந்த வேளையில்
பிறிதொரு வேதனை வந்தது
பிஞ்சு மனமதும் வெந்தது

தனல் தெறிக்கும் பாலையில்
தாகம் வந்த வேளையில்
தண்ணீர் கேட் டழும்
தங்க மகன் நிலைக் கண்டு
அன்னை யுள்ளம் பதறி
அங்கு மிங்கும் ஓடியது

தொங் கோட்டம் தானோடி
தண்ணீர் தேடிய வேளையில்
தங்க மகன் பாதம் பட்டு
தண்ணீ ரூற்று பொங்கி வர
சங்கை பொருந்திய கரத்தாலே
ஸம்ஸம் என்று நிறுத்தினரே!

இறை வாக்கை ஏந்தி
இதயத் துண்டுகளை ஈந்து
இறை சோதனைகள் வென்று
இமய சாதனைகள் கண்ட
அற்புதங்கள் பல சொல்லும்
அதுவே ஸம்ஸம் காணீர்

பாலை நிலப் பரப்பினிலே
பாலகர் பாதச் சுவட்டினிலே
வற்றாத ஜீவ ஊற்றென
வெகுண் டெழுந்த ஸம்ஸமதால்
தொற்று நோய்கள் கூட
தூர விலகிப் போகுமே

பாலை நில மண்ணிலே
பசும் சோலையொன்னு தோணுதே
விலை மதிக்க வொண்ணா
வீர வரலாறு வந்து மின்னுதே
வாழ்வி லிதுவோர் பாடமே
வையகமே நன்றாய் பாருமே!

ஈதுல் அல்ஹா என்றால்
இப்றாஹீம் வருவார் முன்னால்
இதயத்தை உருக்கும் பெருநாள்
இனிய நபியின் திருநாள்
இதுவே யிங்கு நல்வழி
இணைவோம் வாரும் அவ்வழி



## ஹஜ்ஜின் தரிசனம் அகத்தினில் ஒளிமயம்!

கவிஞர் கல்முனை
எஸ்.எம்.யூசுப்

ஹஜ்ஜின் தரிசனம் அகத்தினில் ஒளிமயம்
எத்திரை வந்தாலும் எண்ணத்தில் குறையேதுமில்லை
கோடான கோடியாய் மாந்தர்கள்
திக்கெட்டும் திரண்டே வருவார்

புனித கஃபாவைக் கண்டு மனம் மகிழ்ந்தீர்
கல்பெல்லாம் ஒளி பூத்து நின்றீர்
மறை கேட்டே உள்ளங்கள் தெளிந்தீர்
மனம் நிறைவாகவே அமலாலே புனைந்தீர்

இஹ்ராமில் என்றுமே இல்லையே பேதம்
இறையோனைக் காண்கின்ற நேசம்
கறையெல்லாம் கழைந்தோடி மறைய
கல்புகள் இறைநாதம் லெப்பைக் முழங்க
அணையாத தியாகத்தில் திளைத்தே
ஹஜ்ஜின் கடமைகளை நிறைவேற்றி மகிழ்வீர்

பயகம்பர் நபிநாதர் வாழ்ந்த மண்ணை
பாசத்துடனே தொட்டு முத்தங்கள் இட்டே
பாதங்கள் பட்டு பண்புகள் மேவி
குறையேதும் இல்லா பெருங்கடல்
இந்த குவலயம் முழுவதும் ஆட்சி செய்யும்
அதிபதியாம் இறையோனின் ஆசி பெற்று நீர் வாரீர்

இன்பமே வாழ்வின் இறைஞான மேதை
இப்றாஹீம் நபி ஏற்றிய தியாகம்
எண்ணத்தில் சூடி இறைவனைப்
பணிந்தே புது வண்ணத்தில் வாழ்வு மலர்ந்திட
நிறைவான ஹஜ்ஜின் மணம் சூடி வாரீர்
நேர்வழி பெற்று நீர் வாரீர்

இருள் கலைந்ததே மனம் வெலுத்ததே
இறை வணக்கத்தின் உயர்வுதன்னை
அடைந்தீரே
இறை அருள் சுமந்தே நாளும்
இதயத்தில் ஒளியேற்றிய செம்மல்களே வாரீர்
அடியேன் உன் எண்ணங்கள் இம் மண்ணில்
அமலாகிப் பூப் பூக்க வழி செய்யுங்கள்

காலங்கள் ஆயிரம் கடந்தாலும்
அழியாது இந்த தியாகத்தின் வரலாறு
தாரணி போற்றும் ஒரு குடும்பத்தின் கதையே நீர் கேளீர்
பாலையில் மொட்டு பாலகன் பாதம் பட்ட நீரூற்று
வானமே நீ மழையாக பொழிந்தாலும்
எங்கே இதற்கீடு
பொங்கும் பூவனம் தங்குமே ஸம் ஸம்
நீர் வளம்
எத்தனை கோடியாய் மாந்தர்கள் வந்தாலும்
எண்ணத்தில் குறைவேதுமில்லை
ஹஜ்ஜின் தரிசனம் அகத்தினில் ஒளிமயம்!

## உருவாகா காதல் கவிதை



மெய்யன் நடராஜ்

குறள் வெண்பாவின் முதலடியாய்
நீண்ட புருவத்தின் கீழ்
முக்கால் அடியாய் முடியும்
உன் நயனங்கள்

சிந்தியல் வெண்பாவின்
சீரான வரிகளாய் உன் நுதல்கள்
ஹைக்கூ கவிதைகளாய்
சற்றென்று கவர்ந்து
மனதில் நிலைக்கும்
அதரங்களின் குறுநகை

நேரிசை வெண்பாவாய்
நிறைய அர்த்தங்கள்
பொதிந்திருக்கும்
உன் மௌனங்கள்

நிலைமண்டிலமாய்
நீண்ட கூந்தல் மேகங்கள்
காணும் நாட்களெல்லாம்
மழை வருமென்று
குடையோடு சென்று
ஏமாந்து போகிறேன்

எதுகைக்கேற்ற மோனையாய்
எழில் பொங்கும்
முன்னழகுகளின் முன்னால்
இதயம் வீழ்ந்து
எழுதிப் பார்க்கிறது
காதல் கவிதை

ஒரு வரி கவிதையாய்
உன் இடை,

எழுத்தசை சீர்தளை கொண்ட
இலக்கணக் கவிதையாய்
என் இலக்கியத்தில் நீ
இருக்க வேண்டித்தான்
நிதமும் கனவுகளில்
தழுவுகின்றேன் உன்னை
என் தமிழாய்

எவனுக்கும்
அர்த்தம் புரிந்துவிடக்
கூடாதென்பதில்
மிகத் தெளிவாய் இருக்கும்
சில புதுக்கவிதைகளைபோல
என்னை புரிந்து கொள்ளக் கூடாது
அல்லது நான் உன்னை
புரிந்து கொள்ளக் கூடாதென்பதில்
மட்டும் மிகத்தெளிவாய்
இருக்கிறது உன் மனசு

கட்டளைக் கலிப்பாவாய்
கண்ணியமாய் இருக்கும்
புண்ணியவதி உன்
புரியாமைகளை
புரிந்து கொள்வதிலான
வாழ்வின் சவால்கள்
சிலந்தி வலையில் சிக்கிய
வண்ணத்துப் பூச்சியாய்

நினைவுகளைத் தழுவும்போது
பொய்களை எழுதிப்போகும்
கவிஞனை படைத்துவிடும்
பிரம்மாவாய் இருந்தும்
காதலை பிரசவிக்கத்தெரியாமல்
கிடக்கிறது உன்
இதயக் கருவறை

ஒன்றிய வஞ்சித்தளையும்
ஒன்றாத வஞ்சித்தளையும்
ஒன்றாகி வரும்போதும்
உருவாகும் கவிதைகளிருக்க
இன்னும் ஒன்றா நீ உன்
வஞ்சித்தலை ஒதுக்கி சற்று
ஒன்றி வந்தால்
உருவாகாதோ
ஒரு காதல் கவிதை

## துல்- ஹஜ் மாதத்தின் முதல் பத்து

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

சங்கை மிக்கதொன்றாய்
சிறப்பிக்கப்பட்ட
இஸ்லாத்தின் இறுதி மாதம்
இணையற்ற துல் ஹிஜ்ஜா

ஒன்றை விட மற்றொன்றை
உயர்வாக்கி வைத்திட்ட
எம் இறைவன்
இறுதி மாதத்தின்
முத்தான முதல் பத்தை
மேன்மையுறச் செய்திட்டான்

சத்தியமிட்டுச் சொன்ன
பத்து இரவுகள்
இந்த நாட்களில் தானுண்டு
ஏனைய தினங்களில் செய்யும்
இபாதத்களை விட
ii) பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Charted Institute of Management Accounts CIMA Intermediate Level)

iii) பட்டய சான்றுபடுத்தப்பட்ட கணக்காளர் நிறுவனத்தின் (Association of Certificate and Corporate Accounts - ACCA) IIஆம் கட்டம்.

iv) அரச தொழில்நுட்பவியல் கல்லூரியினால் வழங்கப்படும் உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா / உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா (HNDA/HNDC)

மற்றும்

மேற்கூறப்பட்ட 2ஆம் இலக்கத்தின் கீழ் ஏதாவதொரு தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் நிதித்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள குறியீட்டு இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**MM-1-1** சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.

1. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள்
2. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

### 04. இயந்திரவியல் பொறியியலாளர் - (Mechanical Engineer) (ஓட்டோமொபைல் (Auto mobile) துறைக்கு இயைபாக)

**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**கல்வி / தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (இயந்திர வியல்) பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

(2) இயந்திரவியல் வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழித்திறனில் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**MM-1-1** சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.

1. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள்
2. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**கொடுப்பனவுகள்**

01. பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 7800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (புல்மோட்டை பொறித்தொகுதியில் சேவையாற்றுபவர்களுக்கு மட்டும்)
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு
07. 15,000.00 ரூபா பொறியியலாளர்களை தடுத்துவைத்துக்கொள்ளும் கொடுப்பனவு (இயந்திரப் பொறியியலாளர் பதவிக்கு மட்டும்)

**ஏனைய சலுகைகள்**

01. வருடாந்த உற்பத்தியை ஊக்கப்படுத்தும் கொடுப்பனவு
02. வருடாந்த போனஸ்
03. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி பாதுகாப்பு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி பாதுகாப்பு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii. ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
04. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு (மருத்துவ நிபுணர் கட்டணம், மருத்துவ பரிசோதனைக் கட்டணம், மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புல உபகரண செலவுகளுக்காக)
    ii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா கொடுப்பனவு.
05. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.
06. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் ரீதியான மற்றும் மன ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Payee Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை (உரிய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/21ல் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளருக்கு கிடைக்கும் வகையில் 2023 ஜூலை 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

## TITANIC... (02ஆம் பக்கத் தொடர்)

ஏற்கனவே இப்பயணத்தில் கலந்து கொண்டவர்கள் அனுபவம் பயங்கரமாக இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். கன்னங்கரிய சமுத்திர புதைக்குழிக்குள் சென்று வரும் அனுபவம் வேறு எப்படி இருக்கும்! பயணம் தொடங்கியதும் மூழுகியின் உள் விளக்குகளை மின்சார சிக்கனம் காரணமாக அணைத்து விடுவார்கள். ஒரு மின்குச்சி மட்டுமே ஒளிதரும். வெளியே கரி இருட்டு. இமாலயத்தில் இருப்பது போல வெட வெடக்கும் குளிர்.

நாம் நாலாயிரம் மீற்றர் கடல் ஆழத்தில் இருக்கிறோம்; தப்பு தவறு நடந்தால் கூண்டோடு கைலாசம் என்பதை மனம் திரும்பத் திரும்ப சொல்லும்போது உடல் விறைப்பெடுக்கும். ஒரு பயங்கரமான பேய்ப் படத்தை தனியாகப் பார்த்தால் ஏற்படக் கூடிய உணர்வுகளை இதனுடன் பொருத்திப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இதுவரை முப்பதுபேர் மூழ்கியில் சென்று டைட்டானிக் தரிசனம் செய்திருக்கிறார்களாம். எது முடியாததோ, எது கைவராததோ அதை சவாலாகக் கருதி செய்து பார்ப்பது தானே மனித குணம். நாம் வளர்ச்சி பெற்றதற்கு அந்தக் குணம் தானே காரணம்!

இந்த டைடான் நீர் மூழ்கி வாகனத்தை ஓஷன் கேட் நிறுவனம் அமைக்கத் தொடங்கியபோதே சந்தேகங்களும் எழுந்தன. நாலாயிரம் மீற்றர் ஆழத்தில் சமுத்திரம் உருவாக்கும் கடல் அழுத்தத்தை இந்த கடல் ஓடத்தினால் தாங்கக் கூடுமா? 22 அடி நீளம் கொண்ட ஓடத்தில் வசதியாக ஐவரால் அமர்ந்து பயணிக்கக் கூடுமா? 96 மணித்தியாலங்களுக்கான பிராணவாயுவே உள்ள நிலையில் மேலதிகமாகத் தேவைப்பட்டால் என்ன செய்வது?

கோளாறு ஏற்பட்டு மீட்க வேண்டியிருந்தால் அதற்கான வெகு சாத்தியமான வழிகள் என்ன? இப்படி பல கேள்விகள். இந்த மூழ்கி பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு முன்னர் போதிய பரீட்சார்த்த ஓட்டங்களை மேற்கொள்ளவில்லை என்றும் பயணிகளுடனான இப் பயணங்களே பரீட்சார்த்த பயணங்களாக அந் நிறுவனம் கருதுவதாகவும் சிலர் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

டைட்டானிக் நோக்கிய டைடான் மூழ்கியின் பயணம் கடந்த ஞாயிறு மாலை ஆரம்பமானது. ஐவரில் ஒருவர், நிறுவன பிரதான அதிகாரியான ஸ்டொக்டொன் ருஷ். இவர்தான் ஓட்டுநர். மற்றவர் பாகிஸ்தான் கோடீஸ்வரரும் பிரிட்டிஷ் பிரஜையுமான ஷஷாதா தாவூத், மூன்றாவது அவர் மகன் 19 வயதான சுலைமான் தாவூத். தந்தையர் தினம் என்பதால் போகிறேன் என மனதை திடப்படுத்திக் கொண்டவர். நான்காமவர் துபாயில் வசிக்கும் பிரிட்டிஷ் வர்த்தகரும் சவால் விரும்பியுமான ஹமிஷ் ஹார்டிங், ஐந்தாமவர் பிரெஞ்சு கண்டுபிடிப்பாளரான ஹென்றி நார்கியோலெ.

கீழே ஆழம் என்று டைட்டானிக் தரிசனம் செய்து மீண்டும் கடல் பரப்புக்குத் திரும்ப ஒரு மூன்று மணித்தியாலம் பிடிக்கும். ஆனால் கடலில் மூழ்கி ஒரு மணித்தியாலத்தில் தொடர்பு அறுந்து போனது. தொடர்புகளை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளும் வியர்த்தமாயின. இதையடுத்து அந்த இடத்துக்கு அமெரிக்க கரையோர காவல் படையினர் வந்தனர். ரோந்து விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன. கடல் ஆழ ஓசைகளை செவிமடுக்கும் சோலார் மிதவைகள் மிதக்கவிடப்பட்டன. அமெரிக்காவும் கனடாவும் மீட்புக் கப்பல்களை அனுப்பின.

இதற்கிடையே அமெரிக்க கடற்படையினர் கடல் ஆழ ஓசைகளை உணர்ந்து பரிசீலிக்கும் குழுவினர் எல்லா ஓசைகளையும் திரட்டிச் சென்றனர். மூழ்கியின் அடிப்பாகத்தை பலமாகத் தட்டுவது போன்ற ஓசை கேட்டதாகவும் கிரகிக்கப்பட்டது. ஒரு வர்ணனையாளர் இச்சிறிய மூழ்கியை இப்பரந்த அட்லாண்டிக்கில் தேடிப் பிடிப்பது கடலில் ஊசியைத் தேடுவது மாதிரி என பயங்காட்டினார்.

தேடுவோரின் முதல் பிரச்சினை மூழ்கி எங்கே இருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பது. இரண்டாவது, பிராண வாயு தீர்ந்து போகும் வியாழன் பிற்பகலுக்குள் சிக்கியவர்களை மீட்பது.

இதுவும், ஆழ்துளைக்குள் சிக்கிக் கொண்ட குழந்தையை மீட்பது மாதிரியான பிரச்சினை தான். தகவல் தொடர்பு சாதனத்தில் கோளாறா அல்லது மின்சாரம் இயங்காமல் போய்விட்டதா என அனைவரும் மண்டையை குழப்பிக் கொண்டார்கள்.

இந்த ஐவருக்கும் என்ன நடக்கும்? நவீன தொழில்நுட்பங்கள் கைதூக்கி, கூட்டிவருமா? என உலகமே அவதானித்துக் கொண்டிருந்தபோது வியாழன் மாலையானது. பிராணவாயு தீர்ந்து போயிருக்கும். இதே சமயம் கடல் ஓசைகளை பிரித்தரியும் அமெரிக்க கடற்படை சிறப்புக் குழுவினர், கடல் ஆழத்தில் ஒரு வெடிப்பு நிகழ்ந்திருக்கிறது என்பதையும் அது உள்ளார்ந்த வெடிப்பாக இருக்க வேண்டும் என்ற ஒரு அனுமானத்துக்கு வந்தார்கள்.

இத்தகவலை தேடலில் ஈடுபட்டிருந்த அமெரிக்க கடலோரக்காவல் படையினரிடம் தெரிவித்தார்கள். இச்சமயத்தில் கடல் ஆழத்துக்கு அனுப்புவதற்காக ஒரு மனித இயந்திரம் வரவழைக்கப்பட்டிருந்தது. வெடிப்பு அநேகமாக மூழ்கிக் கிடக்கும் டைட்டானிக் கப்பலை ஒட்டியதாகவே இருக்கும் என்பதால் அப்பகுதியில் நான்கு கி.மீ. ஆழத்தில் தேடுவது என முடிவு செய்யப்பட்டது.

இந்த ரோபோவே டைடான் மூழ்கியின் சிதறிய பாகங்களை கண்டு பிடித்திருக்கிறது. ஒரு பொருள் வேகமாக விரையும் போது அழுத்தம் அதன் மூக்கிலேயே தொங்கி நிற்கும். ஒலியை விட வேகமாக பறக்கக் கூடிய சுப்பர்சோனிக் விமானங்கள் தரையில் நிற்கும்போது அதன் மூக்கு தொங்கியபடியே இருக்கும். பறக்கும்போது நீண்டுமிருக்கும். பறக்கும் போது வேகத்தின் அழுத்தம் அதன் மூக்கிலேயே நிற்கும். இறங்க முற்படுகையில் மெல்ல மெல்ல அதன் மூக்கு சாயும். அப்போது அழுத்தம் படிப்படியாக விலகிச் செல்லும். அழுத்தமானது திடீரென விலகிச் சென்றால் அது வீடுகளை உடைத்து நொருக்கிவிடும்.

டைடான் ஓடத்தின் முன்பகுதி நான்காயிரம் மீட்டர் கடல் ஆழம் ஏற்படுத்தும் அதிக அழுத்தத்தைத் தாங்க முடியாமல் வெடித்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. முதலில் வந்த செய்தி, ஓடத்தின் சிதைந்த பாகங்கள் கிடக்கின்றன என்பது மட்டுமே. ஓடம் எங்கே கிடக்கிறது; பயணிகள் உடல்கள் ஓடத்துக்கு உள்ளேயா, வெளியேயா என்பது போன்ற தகவல்கள் இனிமேல்தான் தெரியவரும். ஓடம் மீட்கப்பட்டு தரைக்கு கொண்டு வரப்பட்டால்தான் என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை தெரிந்து கொள்ள முடியும். அதுவரை யூகங்களே ஆட்டம் போடும்!

மினி நீர்மூழ்கிகளில் உல்லாச சவாரி செல்வதை தடுக்க முடியாது. ஆபத்தை விரும்புபவனே மனிதன். தினசரி வாகனங்கள் விரையும் பாதைகளை குறுக்காகக் கடக்கிறோமே, அது 'ரிஸ்க்'தானே! 1969இல் முதல் தடவையாக சந்திரனுக்கு சென்ற ஆர்ம்ஸ்ட்ரோங் திரும்பி பூமிக்கு வருவார் என்பதில் எந்த நிச்சயமும் இருக்கவில்லை.

அந்த இரண்டுபேரும் சந்திர சமாதியாகக் கூடிய வாய்ப்புகள் பிரகாசமாகவே இருந்தன. செவ்வாய்க்கு மனிதனை அனுப்பி திரும்ப அழைத்து வருவதும் கரணம் தப்பினால் மரணம்தான்!

எனவே, கடல் ஆழம் பயணிக்கும் நீர் மூழ்கிகளின் தரம், பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன மேற்குலக நாடுகளின் அரசுகளினால் மீள் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படலாம். எனினும் மனிதன் தன் சவால் மிக்க பயணங்களைத் தொடரத்தான் போகிறான்.

2018ஆம் ஆண்டு 'தாம் லுவாங் நாங் நொன்' என்ற தாய்லாந்து குகைக்கு 12 பேர் கொண்ட உதைப்பந்தாட்டக் குழுவினர் சென்றிருந்த போது பெருமழையால் குகையில் வெள்ளம் நிரம்பிவிட்ட நிலையில் 18 நாள் போராட்டத்தில் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டதையும் ஆனால் மீட்ட இரண்டு சுழியோடிகள் மரணமடைந்ததையும் இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

## நீர்மூழ்கிகளின் வரலாறு... (02ஆம் பக்கத் தொடர்)

அதன் பின்னர் தன் கடல் பாதுகாப்புக்கு நீர்மூழ்கிகளையே அமெரிக்கா நம்ப வேண்டியிருந்தது.

இரண்டாம் உலக யுத்த முடிவில் முப்பது சதவீதமான ஜெர்மனிய மற்றும் ஜப்பானிய கடற்படையை அமெரிக்கா அழித்திருந்தது. இதற்கு அமெரிக்க நீர்மூழ்கிகளின் பங்கு கணிசமானது. யுத்த காலத்தில் அமெரிக்க நீர்மூழ்கிகளின் 16 ஆயிரம் வீரர்கள் பணியாற்றியதாகவும் 3,500 நீர் மூழ்கி படை வீரர்கள் உயிரிழந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த யுத்தத்தில் 128 நீர்மூழ்கிகளை ஜப்பான் இழந்திருந்தது. 52 அமெரிக்க நீர்மூழ்கிகள் மூழ்கிப் போயின. 785 யூ படகுகளை ஜெர்மனி இழந்தது. 377 யூ படகுகள் கைப்பற்றப்பட்டன. ஆனால் இப்படகுகள் மூவாயிரம் நேச நாட்டு யுத்த மற்றும் சரக்கு கப்பல்களை மூழ்கடித்திருந்தன.

தற்போது ஒன்பது அணுசக்தி நீர்மூழ்கிகள் கடல் ஆழத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. சோவியத் ரஷ்யாவுக்கு சொந்தமான 5 நீர் மூழ்கிகள், ரஷ்யாவுக்கு சொந்தமான 2 நீர் மூழ்கிகள், அமெரிக்காவுக்கு சொந்தமான 2 நீர்மூழ்கிகள் இவையாகும். கே 129 ரஷ்ய நீர் மூழ்கி அணுகுண்டு பொருத்தப்பட்ட நெடுந் தூர வீச்சு ஏவுகணைகளுடன் காணாமல் போனது.


காமி நவீகரண வ்யாபாதிய
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
Funded by The European Union

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு

**IDA கடன் இல.** CR 5873 LK /TF- B538 **செயற்றிட்ட அடையாள இலக்கம்: P156019**

# பெறுகை அறிவித்தல்

### ASMP - EU கொத்தணிகளின் விவசாயிகள் நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கு செயலக சேவைகளை வழங்குவதற்காக சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்

### பெறுகை இலக்கம்: : LK-MOA-PMU-351600-NC-RFB

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து (IDA) பல்வேறு நாணயங்களில் 125.00 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான கடனையும், விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக (ASMP) 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான ஐரோப்பிய ஒன்றியத்தின் மானியத்தையும் பெற்றுள்ளது. இதில் 58.63 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கமத்தொழில் அமைச்சிற்கு (MOA) ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் சுமார் 5.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விவசாயிகளின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான முதலீடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் நிறுவனங்களை நிலைநிறுத்துவதற்கும், ஒவ்வொரு விவசாயி நிறுவனங்களுக்கும் ஒரு வருடத்திற்கு செயலக சேவைகளை வழங்குவதற்கும் ஒரு குறுகிய கால சேவை வழங்குநரை பணியமர்த்த கமத்தொழில் அமைச்சு அந்தத் தொகையின் சில பகுதியைப் பயன்படுத்த விரும்புகிறது. www.asmp.lk/advertiseme இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகளை (TOR) பார்க்கவும்.

1. ஒரு வருட காலத்திற்கு விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் 21 EU திட்டங்களுக்காக ஒவ்வொரு விவசாய நிறுவனத்திற்கும் செயலக சேவைகளை வழங்குதல் மற்றும் செயலக சேவையை ஸ்தாபிப்பதற்காக குறுகிய கால சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்ட பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| விபரம் | ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் வைப்பு / விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| LK-MOA-PMU-351600-NC-RF / EU மாவட்டங்களின் கீழ் 21 EU திட்டங்களுக்காக செயலக சேவை வழங்குநர் ஒருவரை பணிக்கமர்த்துதல் | 3500.00 | 150,000.00<br>(விலைக் கோரல் பிணை முறி செயற்றிட்டப் பணிப்பாளர், விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், கமத்தொழில் அமைச்சிற்கு முகவரியிடப் பட்டிருத்தல் வேண்டும்) |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கோரல் இடம்பெறும்.
4. ஆர்வமுள்ள தகுதியுடைய விலைமனுதாரர்கள் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், பெறுகை நிபுணரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு 2023.06.26ஆம் திகதி தொடக்கம் 2023.07.18ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் கொள்வனவு செய்யலாம். (தொடர்பிலக்கம்: 0714961603/0777804550)
5. விலைக்கோரலுக்கு முந்திய சந்திப்பு விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் செயற்றிட்ட அலுவலகம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் 2023 ஜூலை 11ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

**சேவை வழங்குநரின் தகைமை மற்றும் அனுபவம்:**

- நிறுவனங்களுக்கு செயலக சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 5 வருட கால அனுபவம்
- சேவை வழங்குநர் நிபுணத்துவம் வாய்ந்த துறைகளில் நன்கு அனுபவம் வாய்ந்த நிபுணர்களைக் கொண்ட குழுவை நியமிக்கும் நிலையில் இருக்க வேண்டும்.
- விலைமனுதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வர்த்தகப் பதிவுச் சான்றிதழைச் கொண்டிருக்க வேண்டும்.
- செயலக சேவை வழங்குநராக கம்பனிப் பதிவாளரிடமிருந்து பெற்ற பதிவுச் சான்றிதழ்

B. தேர்வுசெய்யும் மூலப் பிரமாணங்கள்:

i) விசேடமாக பொதுவாக பட்டியலிடப்பட்ட / பட்டியலிடப்படாத நிறுவனங்களுக்கு செயலாளர் சேவையை வழங்கிய அனுபவம்

ii) வேலையைச் செயல்படுத்துவதற்கான வேலைத் திட்டம் மற்றும் முறை.

iii) முக்கிய ஊழியர்களின் அனுபவம், திறன்கள் மற்றும் திறன்கள்: நிபுணர்களின் இருப்பு மற்றும் அவர்களின் தகுதி.

iv) வாடிக்கையாளர் குறிப்பு- வாடிக்கையாளரின் தொடர்பு விவரங்களுடன் மேற்கொள்ளப்படும் பணி.

(அனுபவங்கள் துணை ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்)

C. செயற்றிட்டத்தின் சிறாப்பருக்கு ரொக்கப்பணமாக 3500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பின்வரும் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம்.

D. முறையாக பூர்த்தி செய்த விலைமனுக்களை 2023 ஜூலை 18ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 2023-07-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு தொகுதிகளுடன் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அவை இரண்டும் இரு கடித உறைகளில் வெவ்வேறாக உள்ளிடுதல் வேண்டும் என்பதோடு முறையே மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்விரு கடித உறைகளையும் ஒற்றை கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் LK-MOA-PMU- 351600-NC-RFB என்ற ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்**
**செயற்றிட்ட பெறுகைக் குழு**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**கமத்தொழில் அமைச்சு,**
**இல.: 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்லை.**
**www.asmp.lk**



### இலங்கை உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு பொறிமுறையை நிலைப்படுத்தல் மற்றும் வரைபடமிடல் (விளக்கத்திற்கு) ஆகியவற்றிற்கு உதவுவதற்கு தேசிய ஆலோசகர் ஒருவரின் ஆர்வத்தை வெளிப்படுத்துதல்

இலங்கை உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறிமுறையின் நிலைப்படுத்தல் மற்றும் வரைபடமிடல் (விளக்கத்திற்கு) ஆகியவற்றில் உதவுவதற்கு ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட உள்ளதால், ஆர்வமுள்ள இலங்கையர்கள் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு இலங்கை உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கேட்டுக்கொள்கிறார். காசநோய், HIV / எய்ட்ஸ் கட்டுப்பாட்டிற்கும் நாட்டின் சுகாதார முறைமையை வலுப்படுத்தவும் இலங்கை உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு உலகளாவிய நிதியத்திலிருந்து மானியங்கள் கிடைத்துள்ளன.

ஒரு நாட்டில் பல கூட்டாண்மை மற்றும் பல துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு மிக உயர்ந்த மட்டத்தில் பொறுப்பேற்க வேண்டும் என்று அதன் கொள்கை கூறுகிறது. உலகளாவிய நிதியம் தேசிய கட்டமைப்புகள் உருவாக்குவதை ஊக்குவிக்கிறது மற்றும் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும்/அல்லது உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாடுகளை தற்போதுள்ள சுகாதார தளங்களில் நிறுவுகிறது. உலகளாவிய நிதிய நிதியுதவியிலிருந்து விலகுவதற்கு இலங்கையும் தயாராக வேண்டும் என்பதால், ஒரு நிலைப்படுத்தல் திட்டம் மற்றும் நடைமுறைப்படுத்தல் அவசியமானது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகளை நிறுவன மயமாக்குவதற்கான முதல் கட்டமாக, தற்போதுள்ள சுகாதாரக் கட்டுப்பாட்டு நிறுவனங்களை வரைபடமாக்குவதாகும். இந்த இரண்டு காரணிகளும் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவின் பங்கை மாற்றியமைத்து ஒரு பயனுள்ள மாறுதல் செயல்முறையை ஆதரிக்கவும் மேலும் அதிக நிலைத்தன்மையை மேம்படுத்தவும் பயன்படுத்துதல் வேண்டும்.

**ஆலோசனை சேவையின் நோக்கங்கள்**

உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு தொடர்பாக தேசிய அமைப்புகளில் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு தளத்தின் இருப்பிடத்தையும் ஆலோசகர் வரைபடமாக்குவார். ஆலோசகர் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவை நிலைப்படுத்துவதற்கான திட்டத்தையும் தயாரிப்பார்.

**செய்ய வேண்டிய பணிகள்**

பின்வரும் வேலைகள் தேசிய ஆலோசகரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது:

1. நிலைப்படுத்தல் கொள்கையைப் புரிந்து கொண்டு அதை பழக்கப்படுத்திக்கொள்ளல்.
2. **Transition lens** மற்றும் அது எவ்வாறு நிலைப்படுத்தப்படுதலுடன் பொருந்துகிறது என்பதைப் புரிந்து கொள்ளல்.
3. தொடர்புடைய ஆவணங்களைப் படித்து மதிப்பாய்வு செய்தல்
4. தேசிய அளவில் முக்கிய பங்குதாரர்களுடன் நேர்காணல்களை நடத்துதல்
5. தற்போதுள்ள தேசிய சுகாதார கட்டமைப்புகளின் வரைபடம்.
6. சுருக்கமான அறிக்கையைத் தயாரித்தல்.
7. நாட்டினுள் ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தல்.
8. உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவை நிலைப்படுத்துவதற்கான திட்டத்தைத் தயாரித்தல்.

**ஒப்படைக்க வேண்டியவை**

1. தற்போதுள்ள தேசிய சுகாதார தளங்களை வரைபடமிடல்.
2. சுருக்கமான சாராம்ச அறிக்கை
3. பவர் பொயிண்ட் விளக்கக்காட்சி
4. நிலைப்படுத்தல் திட்டம்

**அறிக்கையிடும் வரிசை**

1. ஆலோசகர் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவின் நிர்வாகக் குழுவிற்கும் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவின் மேற்பார்வைக் குழுத் தலைவருக்கும் அறிக்கை அளிப்பார்.
2. ஆலோசகர் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுவின் கண்காணிப்புக் குழு ஆகியவற்றுடன் நெருக்கமாக ஒத்துழைப்புடன் பணியாற்றுவார்.
3. உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு செயலகம் ஆலோசகரினால் ஒப்படைக்கப்படுபவைகளை உலகளாவிய நிதியத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

**செயல்திறன் நேரம்**

ஆலோசகரால் இரண்டு (02) மாத காலத்திற்குள் ஆலோசனை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

**தகுதிகள்**

பொது சுகாதாரம், நிதி, பொது நிர்வாகம் அல்லது வியாபார நிர்வாகம் தொடர்பான உயர்நிலை பட்டம்

**அனுபவம்**

- அரசியல் சூழல்களில் கூட்டாண்மைகளை வளர்ப்பதில் வலுவான அனுபவம் மற்றும் சிக்கலான பிரச்சினைகள் மற்றும் நாடு, பிராந்தியம் மற்றும் சர்வதேச மட்டங்களில் வழங்கக்கூடியவைகளில் மத்தியஸ்தம் செய்தல்
- மூலோபாயம் மற்றும் கொள்கை பகுப்பாய்வு, நிகழ்ச்சிநிரல் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் மற்றும்/அல்லது ஒத்த அனுபவம் உள்ளிட்ட மேம்பட்ட தொழில்முறை அனுபவம்
- மூலோபாய, நிறுவன, நிதி மற்றும் முகாமைத்துவ சிக்கல்களில் நிரூபிக்கப்பட்ட புரிந்துணர்வு மற்றும் அனுபவம்
- உலகளாவிய நிதியத்தின் செயல்முறைகள் மற்றும் அதன் நிதியளிப்பு மாதிரி பற்றிய நன்கு உறுதிப்படுத்தப்பட்ட புரிந்துணர்வு
- மனிதாபிமானத் துறை திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் (சர்வதேச அல்லது தேசிய) தொழில்முறை அனுபவம்.
- HIV மற்றும் எய்ட்ஸ், காசநோய் வியாதி மற்றும் மலேரியா நோக்கி கவனம் குறிப்புகள் செய்து பொது ஆரோக்கியம் மற்றும் நோய் திட்டங்கள் முகாமைத்துவம் பற்றிய அனுபவம்
- பல பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பின் ஆவணப்படுத்தப்பட்ட அனுபவம்.
- சமமான ஆலோசனை சேவை தொடர்பான ஆவணப்படுத்தப்பட்ட அனுபவம்.

**வலுவான திறன்கள்**

- சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் மொழியில் சரளமாக கதைத்தல் மற்றும் ஆங்கிலத்தில் உயர் புலமை
- சிறந்த எழுத்து மற்றும் வாய்வழி தொடர்புகள் திறமைகள்
- Visio, Word, Excel, Access, Email, Internet மற்றும் மென்பொருள் இணையதளங்கள் பற்றிய மிக நல்ல அறிவு அத்தியாவசியமாகிறது.
- கட்டுப்பாடுகள் விவகாரங்கள் பற்றிய மிக நல்ல புரிந்துணர்வு.
- ஏற்பாடுகள், விளக்கக்காட்சி மற்றும் அரசியல் விழிப்புணர்வு உயர்ந்த மட்டத்தில் இருத்தல்.
- பொது ஆரோக்கியம் பிரச்சினைகள் பற்றிய அறிவு
- வலுவான தனிப்பட்ட திறன்கள் மற்றும் அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், UN ஏஜென்சிகள் மற்றும் தனியார் துறையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளல் மற்றும் உள்ளக செயற்பாடுகளில் நிரூபிக்கப்பட்ட திறன்.
- அறிக்கைகள் எழுதுதல் மற்றும் சமர்ப்பித்தலில் உயர் திறன்கள்
- முன்னைய வளர்ச்சி அனுபவம் மற்றும் / அல்லது அரசு அல்லது தனியார்துறையின் பின்னணி விரும்பத்தக்கது.
- பல்வேறு செயற்பாடுகளை ஒரே நேரத்தில் கையாளும்போது ஒரு குழுவை வழிநடத்தும் மற்றும் முன்னுரிமைகளை அளிக்கும் திறன்

**வயதெல்லை மற்றும் ஆசோசனைத் தன்மையின் பெறுமதி**

- வயதெல்லை - திறந்தநிலை.
- ஆலோசனை தன்மையின் மதிப்பு - பேசித் தீர்த்துக்கொள்ளலாம். விருப்பத்தை தெரிவிக்கும் ஆவணங்களுடன் நிதி முன்மொழிவும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:**

- பொதுத்துறை அல்லது அரசு நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் தங்கள் ஒப்புதல் உறுதிமொழிகளை சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த நிலை வீட்டு அடிப்படையில் கருதப்படுகிறது.
- குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.
- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் 2 - 4 வாரங்களுக்குள் ஆலோசகர் பதவியை ஏற்கலாம்.

விண்ணப்பதாரர்கள் தங்களின் தொடர்புடைய அனுபவங்கள் மற்றும் கல்வித் தகுதிகள் பற்றிய சுருக்கமான விவரக்குறிப்புடன், ஆலோசனைக்கு ஏற்றதாக இருப்பதற்கான காரணங்களை நிதி முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு பின்வரும் இணைப்பைப் பார்வையிடவும்.
http://aidscontrol.gov.lk/index.php?option=com_content &view =article&id =55&Itemid = 160&lang=en

ஆர்வத்தின் வெளிப்பாடுகளை உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு செயலகம், பொது சுகாதார கட்டிடத்தொகுதி, **555/5** எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுக்கள் பொறிமுறையை நிலைப்படுத்துதல் மற்றும் வரைபடமாக்குதல் ஆகியவற்றில் உதவுவதற்கு தேசிய ஆலோசகர் ஒருவரின் ஆர்வத்தை வெளிப்படுத்துதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஆர்வ வெளிப்பாடுகளை 2023 ஜூலை 8ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

**எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த,**
**தலைவர்/ உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழுச் செயலாளர்/ சுகாதார அமைச்சு,**
**385, வண. பத்தேகம விமலவன்ச மாவத்தை, கொழும்பு 10**

## சுகாதார அமைச்சு

### விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவை

# பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

### தாதி

***தகைமைகள்*** :- தாதியாக அரச வைத்தியசாலையொன்றில் 03 வருட அனுபவம்

***சம்பள முறை*** :- IIIம் தரம் : ரூ. 40,656.25 - 18 x 556.25 - 50,668.75 (மாதாந்தம்)
IIம் தரம் : ரூ. 47,043.75 - 21 x 825 - 64,368.75 (மாதாந்தம்)

### மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப நிபுணர்

***தகைமைகள்*** :- மருத்துவ ஆய்வுகூட தொழில்நுடப நிபுணர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப நிபுணராக பதிவு செய்திருப்பதுடன் மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

***சம்பள முறை*** :- ரூ. 40,100 - 10 x 556.25 - 11 x 825 - 10 x 912.50 - 10 x 937.50 - 73,237.50 (மாதாந்தம்)

- வயது 60 இற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- அரச துறையின் விண்ணப்பதாரிகள் குறித்த நிறுவன தலைமையூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- அரச சேவையின் தற்போதைய சம்பள நிலைக்குள் 25% சம்பள அதிகரிப்பு மேற்படி சம்பள முறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்வி/ தொழில்சார்/ சேவை சான்றிதழ்களின் உறுதி செய்த பிரதிகளுடன் 2023.07.17ம் திகதிக்கு முன் கிடைக்குமாறு பிதிவுத் தபாலில் தலைவர், விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சீதுவவிற்கு அனுப்பி வையுங்கள்.

**தலைவர்,**
**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவை.**

---

### (இலங்கை கடற்பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு)

**"இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு ஒன்றை"** நியமித்தல் தொடர்பிலான பிரேரணை பாராளுமன்றத்தினால் 2023 மே மாதம் 12 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டதுடன் அக்குழுவின் தவிசாளராக பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் அமைச்சரும் கைத்தொழில் அலுவல்கள் அமைச்சருமான கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண அவர்களும் ஏனைய பத்தொன்பது (19) பாராளுமன்ற உறுப்பினர்களும் கௌரவ சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே, மேற்படி குழுவிற்கு தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு ஆர்வமுள்ள பொதுமக்கள், ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏனைய தரப்பினர் இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பான முன்மொழிவுகள்/கருத்துக்கள் என்ற தலைப்பின் கீழ் தமது முன்மொழிவுகளை 2023 யூலை 07 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு அல்லது **legis com@parliament.Ik** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலமாக அனுப்பி வைக்கலாம்.

**செயலாளர்**
**பாராளுமன்ற விசேட குழு**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**

தமது கருத்துக்களை எழுத்துமூலம் சமர்ப்பிக்கும் நபர்களிடமிருந்து அவ் விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு குழு அவசியமென தீர்மானிக்கும் பட்சத்தில் ஆவணங்களுடன் அதன் முன் தோன்றுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைக்கலாம்.

**ஹன்ஸ அபேவர்தன**
**குழுவின் செயலாளர்**
**பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**
2023 யூன் 25 ஆம் திகதி

---

Sunday Observer ADZ it's what you want
Daily News
The Dinamina
தினகரன் வாரமஞ்சரி
தினகரன்
Save your precious time,
Walk in to our nearest
Branch Office
and hand over the
Classified/ Matrimonial/ Obituaries
Advertisements
Anuradhapura - Harischandra Mawatha, Anuradhapura.
TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411
Kandy - No. 99, D. S. Senanayake Veediya, Kandy.
TEL : 081 22 34 200 FAX : 081 22 34 200
Kataragama - Pussadewa Mawatha, Kataragama.
TEL : 047 22 35 291
Maradana - D. R. Wijewardena Mawatha, Colombo 10.
TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - No. 29, Bus Stand Shopping Complex, Matara.
TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728
Nugegoda - No. 802, 4th Floor, Sausiri Building, Highlevel Road, Nugegoda.
TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114
Jaffna - No. 6, Srimbiyadi Lane, Off-Stanley Road, Jaffna.
TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361
LAKE HOUSE No. 35, D.R.Wijewardene Mawatha, Colombo 10.

---

# இலங்கைப் பாராளுமன்றம்

# வெற்றிடம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் காணப்படும் **"பாராளுமன்ற பணியாட்டொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம்"** பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு சிறந்த உடலாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பங்களை 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாராளுமன்ற பணியாட்டொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச்செயலாளர் நாயகம் பதவி" என குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை **www.parliament.lk** என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.)

**1. பாராளுமன்ற பணியாட்டொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் சம்பள அளவுத்திட்டம்:**

2016.11.07ஆம் திகதிய 06/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை Iஇன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 98,650 - 12 x 2,925 - 133,750/- ஆகும் (ஏனைய பிற மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 290,000.00)

**2. ஏனைய கொடுப்பனவுகளும் வசதிகளும்**

i. சாரதியுடன் ஒரு உத்தியோகபூர்வ வாகனம்    ii. வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான வாய்ப்புகள்

**3. வயதெல்லை:**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 40 வயதுக்கு குறையாமலும் 50 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**4. கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட சட்டமாணிப் பட்டம்.(LLB)

**5. தொழில்சார் தமைகமைகள்**

ஆகக்குறைந்தது 10 வருடகால சேவை மூப்புடன் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல்.

**6. அனுபவம்:**

அரச துறையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையில் மனிதவள முகாமைத்துவம்/பொது நிர்வாகத்துறை/ வணிக முகாமைத்துவம் தொடர்பான உயர் முகாமைத்துவப் பதவியில் பத்து (10) வருட அனுபவம்.

**கீழே காணப்படும். தகைமைகளில் ஒன்றை அல்லது அதற்கு அதிகமானவற்றை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்:-**

அ) அரசியலமைப்பு சட்டம், பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக சிறந்த அறிவு

ஆ) பொது நிருவாகம் மற்றும் நிதிப் பிரமாணக்குறிப்புகள் தொடர்பாக சிறந்த அறிவு

இ) சர்வதேச தொடர்பு தொடர்பான அனுபவம்

ஈ) தகவல் தொழில்நுட்பத் திறன்கள்

உ) நீதிமன்றச் சேவையில்/சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய அனுபவம்

ஊ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திறன்

எ) ஆறாம் பந்தியில் **அனுபவம்** தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு துறையில் முதுகலைப் பட்டப்படிப்பு தகுதி.

**7. ஆட்சேர்ப்பு முறை:**

விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**8. சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் ஓய்வூதியம் தொடர்பாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு ஏற்ப இந்தப் பதவிக்கான ஓய்வூதிய முறைமை தீர்மாணிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள்/ தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

**9.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்

(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள்

(ஈ) அனுபவச் சான்றிதழ்கள்

10. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

11. இப்பதவியை பெற்றுக் கொள்வதற்காக ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இப்பதவிக்கான தகைமையீனமாக கருதப்படும்.

12. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கபெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்களப்/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**
2023ஆம் ஆண்டு யூன் மாதம் 25ஆம் திகதி

---

### இலங்கைப் பாராளுமன்றம்

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**பாராளுமன்ற பணியாட்டொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் பதவி**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்) (தமிழில்):. ..........
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்):-. ..........
(இ) ((முழுப் பெயர்) ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்(:-திரு/திருமதி/செல்வி). ..........
..........

02. தேசிய அடையாள அட்டை இலக்கம்:- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

03. (அ) தனிப்பட்ட முகவரி:-..........
தொலைபேசி இலக்கம்:- ☐☐☐☐☐☐☐☐☐☐
(ஆ) அலுவலக முகவரி:- ..........
தொலைபேசி இலக்கம்:- ☐☐☐☐☐☐☐☐☐☐
(இ) இப்பதவி தொடர்பான விபரங்கள் அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி
தனிப்பட்ட ☐    அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி:- ஆண்டு: .......... மாதம்:.......... திகதி:..........
(பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது:-
வருடங்கள்:.......... மாதங்கள்:.......... நாட்கள்:..........

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா -(விவாகமானவர் விவாகமாகாதவர்)

06. பால்நிலை-(ஆண் பெண்)

07. இலங்கைப் பிரஜையா:- ஆம்/இல்லை

08. உயர் கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பல்கலைக்கழகப் பட்டம் | பல்கலைக்கழகம் | பட்டம் பெற்ற திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

09. தொழில் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்):-..........
..........

10. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| நிறுவனம் | பதவி | காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:
(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:-..........
(ஆ) முதல் நியமனத் திகதி:-..........
(இ) தற்போது வகிக்கும் பதவி:-..........
(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்:..........
(உ) கொடுப்பனவுகள் :-..........
(ஊ) மொத்த சம்பளம்:-.. ..........

12. நீங்கள் ஏதாவது ஒரு குற்றத்திற்காக குற்றவாளியாக கணிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை)
ஆம் எனில், அது பற்றிய விபரங்களை தருக:- ..........

13. நீங்கள் இதற்கு முன்னர் அரச சேவையில் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம்/இல்லை)
ஆம் எனில், அது பற்றிய விபரங்களை தருக ..........

என்னால் இந்த விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

திகதி..........    ..........
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இராணுவத்தில்/விமானப் படையில்/கடல் படையில்/ பொலிஸ் திணைக்களத்தில்.......... பதவியை வகிக்கும் திரு/திருமதி/செல்வி..........அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றேன். இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்வதற்கான அபிப்பிராயம் ஏதுமில்லை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இந்தப் பதவிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்படமாட்டார்.

திகதி..........    ..........
**திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம் (பதவி முத்திரை)**

# பெருந்தோட்ட மக்களின் இடம்பெயர்வும் அதன் தாற்பரியங்களும்

பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் பஸீஹா அஸ்மி

**இன ஆய்வுக்கான சர்வதேச மையத்தினால் பெருந்தோட்ட மக்கள் வளமான வாய்ப்புக்களைத் தேடி என்ற ஆய்வினை மேற்கொண்ட பஸீஹா அஸ்மி, இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைப் பேராசிரியர். பால்நிலை, புலம்பெயர்வு, போருக்குப் பிந்திய அபிவிருத்திகள், சுற்றுலா, வறுமையும் நல்வாழ்வும் ஆகியவையே அவரது ஆய்வுப் பகுதிகளாகும். அவர் நோர்வே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் புவியியலில் தத்துவ கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவர் மலையகம் 200 குறித்து தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வி.**



### ? மலையகத் தொழிலாளர்களின் இடம்பெயர் தொடர்பில் இன்றைய நிலை?

1990 களில், வியத்தகு முறையில் மலையகத் தமிழர்கள் இலங்கையின் நகர்ப்புற மையங்களுக்கு மட்டுமல்லாது, மத்திய கிழக்கு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். இந்தப் போக்குகளால் புதிய சவால்களும் உருவாகின.

தோட்டத் தொழிலாளர்கள் தமது தோட்டத்தை விட்டு வெளியேறும்போது மனித கடத்தல், சுரண்டல், பாலின அடிப்படையிலான வன்முறை, உளவியல் அதிர்ச்சி, சமூக இழிவு உள்ளிட்ட குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொண்டனர். பெரும்பாலான மலையகத் தமிழர்கள் வீட்டு வேலையாட்களாகவும் தினக்கூலி வேலை செய்வதற்கு புலம்பெயர்கின்றனர். பெரும்பாலும், அவர்கள் 18 வயதுக்கு குறைவானவர்கள் மற்றும் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு கடத்தப்படுகிறார்கள் அல்லது அவர்களின் பெற்றோரால் நகரங்களில் வேலை செய்ய சட்டவிரோதமாக அனுப்பப்படுகிறார்கள்.

### ? இவ்வாறு புலம்பெயர்வோர் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி?

பிள்ளைகள் கொழும்பில் உள்ள வீடுகளில் வேலை செய்வது புதிய விடயம் அல்ல, அவர்களது சம்பளம் தோட்டத்தில் உள்ள பெற்றோர் அல்லது உறவினர்களுக்கு அனுப்பப்படுகிறது. புலம்பெயர்தலின் போது, சில தொழிலாளர்கள், அவர்களது முகவர்கள் தங்கள் வருவாயில் ஒரு பகுதியை கைப்பற்றி விடுகின்றனர். அல்லது முதலாளிகள் ஒப்புக்கொண்டதை விட குறைவான சம்பளத்தை வழங்குவர். முதலாளிகள் அவர்களுடைய கடவுச்சீட்டுகளை வழங்க மறுப்பவர்களும் உளர். அவர்கள் தொழிலாளர்களை பிணைக் கைதிகளாக வைத்திருப்பார்கள். இதனால் போதுமான ஊதியம் இல்லாமல் அவர்கள் தமது பணியை தொடர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தபோது, தொழிலாளர்கள் மேலும் பிரச்சினைகளுக்கு ஆளாகினர். சில சமயங்களில் தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்வதை முதலாளிமார்கள் தடுப்பார்கள். அவர்கள் பணயக் கைதிகளாக இருந்து அதிக வேலை செய்ய வேண்டும்.

### ? பாதுகாப்பற்ற புலம்பெயர்வு மற்றும் ஆட்கடத்தல் பற்றி?

தோட்டத் தொழிலாளர்கள் வேறு எங்காவது வேலை செய்வதற்கு நிர்வாகத்திடம் அனுமதி பெறவேண்டும் எனுமளவுக்கு தோட்ட நிர்வாகத்தின் ஆதிக்கம் இருந்தது. பல தசாப்தங்களாக, தொழிலாளர்கள் தங்கள் மற்றும் தங்களின் குடும்ப நலனுக்காக குறிப்பிட்ட தோட்டங்களை சார்ந்திருக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்நிலைமை இப்போது இல்லை என்றாலும், இன்றும் பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி, கல்வி மற்றும் சுகாதார சேவைகளுக்காக தோட்டத்தையே சார்ந்துள்ளனர் மற்றும் தோட்டத்தை விட்டு வெளியேறுவது மற்றத் துறைகளில் ஈடுபட்டுள்ள மற்றத் தொழிலாளர்களைவிட கடினமாக உள்ளது. தோட்டத்தை விட்டு வெளியேறுவதில் சிரமங்கள் இருந்தபோதிலும், சுதந்திரம் பறிக்கப்பட்ட போதிலும், வரலாறு நெடுகிலும் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களில் இருந்து புலம்பெயர்வது தொடர்ந்து வருகின்றது. சுரண்டல் மற்றும் உரிமை மறுப்பு என்பவை காரணமான இன்றுவரை தோட்டத் தொழிலாளர்கள், சுகாதாரம், இறப்பு வீதம் மற்றும் கல்வி ஆகியவற்றில் ஒப்பீட்டளவில் குறைந்த தரங்களைக் கொண்ட இலங்கையில் மிகவும் போராடும் சமூகங்களில் ஒன்றாக உள்ளனர்.

இருந்த போதிலும், தோட்டத் தொழிலாளர்கள் தமது கரிசனைகளை தொழிற்சங்கங்கள் ஊடாக ஓரளவுக்கு வெளிப்படுத்த முடிந்தது. குறிப்பாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உருவாக்கம் மற்றும் வேலைநிறுத்த நடவடிக்கைகள் மூலம், தோட்டத் தொழிலாளர்கள் சம்பளத்தை மேம்படுத்துவதிலும், வேலைவாய்ப்பைப் பெறுவதிலும், இறுதியாக குடியுரிமையைப் பெறுவதிலும் ஓரளவு வெற்றி பெற்றனர். இருந்த போதிலும், பெருந்தோட்டத்திற்கு வெளியில் வேலை வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருப்பதோடு உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப வாழ்க்கை நிலைமைகள் உயர்த்தப்படவில்லை.

### ? புலம்பெயர்வும் பெருந்தோட்டமும் பற்றி

புலம்பெயர்தல் என்பது பெருந்தோட்டத் துறையில் அண்மைக்காலமாக ஏற்பட்ட ஒரு வளர்ச்சி என்று ஒரு தவறான கருத்து உள்ளது, ஆனால் இது உண்மையில் சர்வதேச புலம்பெயர்வு விடயத்தில் உண்மையல்ல. பெருந்தோட்டங்களின் உருவாக்கம் முதல் பெருந்தோட்டங்களுக்கு இடையில் புலம்பெயர்வு பொதுவாக இருந்ததுடன் தோட்டத்துரைகளினால் ஊக்குவிக்கப்பட்டது. குடும்பத்தைப் பார்க்க அல்லது வேலைக்காக, பலர் தென்னிந்தியாவில் உள்ள தங்கள் மூதாதையர் கிராமங்களுக்கு தற்காலிகமாக பயணம் செய்தனர். மேலும், குறைந்தபட்சம் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து, தோட்டத் தொழிலாளர்கள் நெல் அறுவடைக்காலத்தில் மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு விவசாயக் கைக்கூலிகளாக வேலை செய்ய புலம்பெயர்ந்தனர். இந்த புலம்பெயர்வுகள் பருவகாலங்களிலாக இருந்தபோதிலும், சில வாரங்களுக்கு மேல் அரிதாகவே நீடித்தாலும், 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய நிரந்தர புலம்பெயர்வுக்கான முக்கியமான முற்போக்காகும்.

புலம்பெயர்வு என்பது சமூகத்திற்கு புதிய விடயமோ அல்லது வளமான வாழ்க்கை வாய்ப்புக்களைத் தேடி நகர்தல் இலங்கையின் தேயிலைப் பெருந்தோட்டத் துறையில் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன.

### ? பாதுகாப்பற்ற புலம்பெயர்வு பற்றி?

இலங்கையில் தோட்டத் துறையானது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கணிசமான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது.

1970களில் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன 1990 களில் நிர்வாகம் மீண்டும் தனியார்மயமாக்கப்பட்டது. தேசியமயமாக்கல் கொள்கை தோட்ட சமூகத்தை கடுமையாக பாதித்தது. 'இலங்கை மயமாக்கலின்' ஒரு பகுதியாக மலையக தமிழர்களுக்கு பதிலாக சிங்களத் தொழிலாளர்களை நியமிக்க வேண்டும் எனக் கோரி பல மலையகத் தமிழர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட வேலையின்மை மற்றும் 1970 களின் முற்பகுதியில் ஏற்பட்ட கடுமையான பஞ்சம் காரணமாக பலர் தோட்டங்களை விட்டு வெளியேறினர். பெரும்பாலான மக்கள் கண்டி மற்றும் கொழும்பு போன்ற நகரங்களுக்குச் சென்றனர். அன்றைய காலப்பகுதியில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள், பல தோட்டத் தொழிலாளர்கள் மலையகத்திலிருந்து வெளியேறி, முதன்மையாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் பெரும்பான்மையான பகுதிகளுக்கு புலம்பெயர வேண்டும் என்ற தீர்மானத்தை மேலும் வலுப்படுத்தியது.

1990 களில் ஆடைத் தொழிலில் ஏற்பட்ட அபரிமித வளர்ச்சி பல நபர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற உதவியது. எவ்வாறாயினும், தோட்டப் பகுதிகளில் உள்ள 'சிறைப்பட்ட' தொழிலாளர் சந்தையை தாங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை ஆடைத் துறையினர் விரைவில் உணர்ந்தனர். இதனால் அவர்கள் மேல் மாகாணத்தை விட பெருந்தோட்டங்களுக்கு அருகில் மிகக் குறைந்த சம்பளத்தை வழங்கத் தொடங்கினர்.

இதனால் தோட்டங்களிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வேலை வாய்ப்புகள் சிறிதளவு அதிகரித்தாலும், தனிநபர்கள் நகர்ப்புறங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தேர்ந்தெடுத்தனர். பொருளாதார காரணிகளுக்கு மேலதிகமாக, சமூக காரணிகளும் புலம்பெயர்வதற்கான மக்களின் தீர்மானத்தில் செல்வாக்கு செலுத்தின.

### ? பெருந்தோட்டத் துறைப் பெண்கள் குறித்த நிலைமை?

தோட்டத் துறையின் சூழல் பால்நிலை சமத்துவம் பேணப்படுவதில்லை. பெருந்தோட்டத் துறையின் அடையாளத்தின் மிக முக்கியமான குறிப்பான்களில் ஒன்றாக பெருந்தோட்டத் துறைப் பெண்களின் (மலையகப் பெண்கள்) பங்கை பல கண்ணோட்டங்களில் பார்க்கலாம்.

இலங்கையின் தோட்டத் துறையில் பல சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், குடும்ப வருமானம், தேயிலை தோட்டங்களின் வருமானம் மற்றும் நாட்டின் அந்நிய செலாவணி வருமானம் ஆகியவற்றில் பெண்களின் பங்களிப்பு நீடித்து வருவதுடன், ஆதிக்கம் செலுத்துகின்றன.

அவர்கள் செய்யும் வேலை, வாழ்க்கை ஏற்பாடுகள் மற்றும் பால்நிலை பாத்திரங்களின் தன்மை காரணமாக பல கஷ்டங்களை அனுபவித்தனர். பால்நிலை உறவுகள் மற்றும் பால்நிலை அடையாளம் காரணமாக அவர்கள் முக்கியமாக தேயிலை கொழுந்து பறிப்பவர்களாகவும், தேயிலை தொழிற்சாலை தொழிலாளர்களாகவும் பணிபுரிவதோடு பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட ஒரே மாதிரியான வேலைகளை தொடர்ச்சியாக மற்றும் நீண்ட நேரம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். இதைவிட வேலை செய்யும் போது, பெண்கள் கங்காணிகளால் பாலியல் மற்றும் வாய்மொழி துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர். அவர்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு வகையான குடும்ப வன்முறைகளை அனுபவிக்கின்றனர்.

பெருந்தோட்டத்துறை தொடர்பான மானுடவியல் பணியானது பதுளை மாவட்டத்தில் தோட்டத் துறை பெண்கள் அனுபவிக்கும் குடும்ப வன்முறைகள் பற்றிய விரிவான விளக்கத்தை வழங்குகிறது. பெருந்தோட்டத் துறையின் புவியியல் இடைவெளிகளுக்கு உள்ளேயும் வெளியேயும் பெருந்தோட்டப் பெண்களின் உற்பத்தி மற்றும் மறு உற்பத்திப் பாத்திரங்களையும், வாழ்ந்த அனுபவங்களையும் வெளிப்படுத்துகிறார். பெருந்தோட்டத் துறை தமிழ்ப் பெண்கள், அவர்கள் பருவமடைதல் கொண்டாட்டங்கள், திருமணம் மற்றும் தாயாக மாறுவதன் மூலம் அவர்களின் மதிப்பை அதிகரிக்க முடியும் என்றும் அதனால் அவர்கள் சமூகத்தின் அன்றாட வாழ்வின் மையப் புள்ளியாக மாறியுள்ளனர்.

பொருளாதார மற்றும் சமூக ஆதரவை வழங்குவதன் மூலம், இந்த பெண்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பல்வேறு எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்புகளை வழங்கியுள்ளார்கள். வீடுகளை கட்டியெழுப்புவதில் புலம்பெயர்ந்தோர் ஆற்றும் பங்களிப்பும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆயினும் பெருந்தோட்டத் துறை தமிழ் பெண்கள் செய்து வரும் பங்களிப்பு ஆவணங்களில் முன்னிலைப்படுத்தப்படாத நிலையிலேயே உள்ளது.

தோட்டத்திலுள்ள ஆண்களுடன் ஒப்பிடுகையில், பெண்களுக்கு அதிக வேலை நாட்கள் கிடைப்பதால், மொத்த குடும்ப வருமானத்தில் பங்களிக்கவும், தொழிற்சங்கங்கள், கோவில் கமிட்டிகள், சமூக பாதுகாப்பு நிதிகள் மற்றும் பிற விடயங்களுக்குச் செலவிடவும் முடிகிறது.

சுருக்கமாக, அவர்கள் தங்கள் உற்பத்தி, மறுஉற்பத்தி மற்றும் சமூக முகாமைத்துவ வகிபாத்திரங்களைச் செய்கிறார்கள் மற்றும் நிர்வகிக்கிறார்கள். இன்னும், அவர்கள் தனிப்பட்ட, குடும்பம் மற்றும் சமூக வாழ்வில் பெறும் அங்கீகாரம் அல்லது மதிப்பு அவர்கள் செய்யும் பங்களிப்புக்கு ஏற்றதாக இல்லை.

பெண்களின் இரட்டைச் சுமைகளைச் சுமக்கும் வகிபாகம் (தொழிலாளர்கள் மற்றும் வீட்டு வேலைகளுக்குப் பொறுப்பானவர்கள்) எவ்வாறு குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுகிறது என்பதையும், தோட்டத் துறை நிர்வாகத்தால் அவர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி விமர்சிக்கின்றனர். பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு காரணமாக பெண்களின் திறன்கள் மற்றும் உரிமைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

பெருந்தோட்டங்களில் உள்ள பெண்கள் குடும்பம், தொழில் மற்றும் சமூக வாழ்வில் மும்மடங்கு அடக்குமுறைக்கு ஆளாகின்றனர். ஆண் ஆதிக்கம் செலுத்தும் படிநிலை நிர்வாக அமைப்புகள் பெண்களின் நிலையை மேலும் சீரழிவுக்குள்ளாக்குகின்றன. குடும்ப வாழ்க்கை பெரும்பான்மையான குடும்பங்களில், பெண்களின் தேவைகளை கவனிக்காமல், குடும்பம் மற்றும் நிதி நிர்வாகத்தில் இருந்து அவர்களை ஒதுக்கி வைத்து, ஆண்களால் செலவு தீர்மானிக்கப்படுகிறது.

அனைத்து தரம் மற்றும் வயதுடைய பெண்கள் உடல் மற்றும் வாய்மொழி துஷ்பிரயோகம் ஆகிய இரண்டிலும் குடும்ப வன்முறைக்கு ஆளாக நேரிடுகிறது. நெரிசலான வீடுகள் பெண்களின் தனியுரிமையைப் பறிக்கிறது. இளம் பெண்களும் சிறுமிகளும் பெரும்பாலும் உறவினர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிறார்கள். வெளிப்புற இயக்கத்திற்கான கட்டுப்பாடுகள் அவர்களின் கல்வி மற்றும் வாழ்வாதார அபிலாஷைகளை பாதிக்கிறது. பெண்களால் வெளிபடுத்தப்படாத வேலை நேரம் கணக்கிடப்படுவது இல்லை அல்லது மதிக்கப்படுவதில்லை.

தொழில் வாழ்க்கை ஆண்களை விட பெண்கள் அதிக நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களின் உடல் மற்றும் தனிப்பட்ட தேவைகள் மற்றும் வசதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. அவர்கள் ஆண் கண்காணிப்பாளர்களால் உடல் மற்றும் வாய்மொழி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். வேலைசெய்யும் பெண்களின் இனப்பெருக்க ஆரோக்கியம் கவனிக்கப்படுவதில்லை.

### ? மலையகப் பெண்களது சமூக வாழ்க்கை முறை பற்றி விளக்க முடியுமா?

தொழிற்சங்கம் மற்றும் கோவில் கமிட்டி நிதிகளுக்கு பெண்களே முதன்மையான பங்காளிகள். ஆனால், அவர்களுக்கு இந்தக் குழுக்களில் உறுப்பினர் பதவி மறுக்கப்படுகிறது. தொழிற் சங்கங்களிலும் இதே நிலைதான். ஆண் குடும்ப உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப வாக்களிக்க நிர்ப்பந்திக்கப்படுவதால் அவர்களின் வாக்குரிமை மீறப்படுகிறது. USF மற்றும் ISD ஆகிய பங்காளி நிறுவனங்களுடனான கலந்துரையாடலில், தற்போது இளம் பெண்களிடையே வேலையின்மை அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

மேலும், அதிகரித்து வரும் வறுமை காரணமாக பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தும் பெண்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. தோட்டங்களில் வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் மெல்ல மெல்ல வறண்டு வருவதாலும், தோட்டங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் வேகமாக சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்படுவதாலும், இளம் பெண்கள் தோட்டத்திற்கு வெளியே வாய்ப்புகளைத் தேடுகின்றனர். எனவே, அவர்கள் தோட்டங்களுக்கு வெளியே புலம் பெயர்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

கொரோனா மற்றும் தற்போதைய சமூகபொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி, ஏற்கனவே புலம்பெயர்ந்த பெண்களை (உள் மற்றும் சர்வதேச) தோட்டங்களுக்குத் திரும்பும் நிலைக்கு கட்டாயப்படுத்தியுள்ளது. இத்தகைய சூழலில், இந்த பெண்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே மீள் புலம் பெயர்வுக்கான குடியேற்றத்திற்கான வழிகளை ஆராயத் தொடங்கியுள்ளனர்.

### ? இலங்கையில் பெருந்தோட்டத் துறை மக்கள் வளமான வாழ்க்கையினைத் தேடி என்ற தொனிப் பொருளில் ஆய்வினை மேற்கொண்டு ஒரு நூலை வெளிக் கொணர்ந்துள்ளீர்கள்? அது பற்றி?

என்னுடைய நெறிப்படுத்தலுடன் புவனேஸ்வரி பொன்னையா, மிரியம் அல்போன்சஸ் ன் ஆகியோர்களின் ஒத்துழைப்புடன் குறித்த நூலை நாங்கள் வெளிக் கொணர்ந்துள்ளோம். அந் நூலில் சில சாரம்சங்களே இந்த செவ்வியில் அடங்கியுள்ளது.

நேர்காணல்
இக்பால் அலி




# படித்ததும் பகர்வதும் 148



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### இரகசிய தருமம்

மனிதர்கள் செய்யும் நற்செயல்களில் அதி உன்னதமான நற்செயலாக தருமம் செய்தலை குறிப்பிடலாம். சின்னஞ் சிறிய அளவிலாயினும் சரி, மிகப் பெரிய அளவிலாயினும் சரியே! தருமம் மிகச் சிறந்த நற்பயனையே விளைவிக்கும் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

தருமம் உயிர் வாழச் செய்யும். நோய்களை குணமாக்கும்; கல்வியை வழங்கும்; துன்பம் துயரங்களை போக்கும்; சந்தோசத்தை அதிகரிக்கும்; உறவை வளர்க்கும்; மகிழ்ச்சியைப் பெருக்கும், இவ்வாறு தருமம், அது செய்யப்படுவதன் நோக்கம், செய்யப்படுகின்ற சந்தர்ப்பம், நேரம், காலம் போன்றவற்றுக்கு ஏற்ப நற்பயன்களை வாரி வழங்கும். இதனால் தான் 'தருமம் தலை காக்கும்' என்று சான்றோர்கள் சான்று பகர்ந்தார்கள்.

இத்தகைய சிறப்பான 'தருமம் செய்தல்' என்ற நற்பணியை பேருக்கும், புகழுக்கும், பிரபல்யத்துக்கும், பிரசாரத்துக்கும் செய்தல் கூடாது என்பதே நல்லோரின் கருத்தாகும். ஒருவர் தான் செய்யும் தருமத்தை பலரிடம் சொல்லி தம்பட்டம் அடிக்கும் போது, அதன் மறுதலையாக தருமத்தைப் பெற்றுக்கொண்டவர்கள், இழிவாக்கப்படுகிறார்கள் என்பதே நிதர்சனமாகும். இது தருமத்தின் நற்பலனை கெடுப்பதோடு, அதன் உண்மையான நோக்கம் நிறைவேறாது போவதற்கும் காரணமாகிவிடும்.

இன்று சிலர் ஏதேனுமோர் உதவியை எவருக்கேனும் செய்தால், அதனை பலரிடமும் சொல்லிக்காட்டுகின்றனர். சிலர் முகநூலிலும் பதிவிடுகின்றனர். மற்றும் சிலர் பத்திரிகைகளில் பிரசாரம் செய்கின்றனர். இவை கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும். அத்துடன் இத்தகைய செயல்கள் தருமத்தின் மூலம் கிடைக்கக்கூடிய நற்பலன்களையும் இல்லாமலாக்கிவிடும்.

முந்தைய காலத்தில் பெரும்பாலான தனவந்தர்கள் இரகசியமாக கொடை கொடுப்பதையே பெரிதும் விரும்பியதுடன், அவ்வாறே செய்தும் வந்தனர். தேவையுடையவர்களை தேடிப்பிடித்து தம்மை அறிமுகப்படுத்தாமலேயே அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைத்தனர். ஏழைகளின் வீட்டு வாசல்களில் அவர்களுக்கு தேவையான பொருட்களை வைத்து, அவ்வீட்டின் கதவை தட்டிவிட்டு, தம்மை இனங்காட்டமலேயே சென்றனர். ஏழைகளும் வசதி குறைந்தோரும் செல்லும் பாதைகளில் அவர்கள் எடுத்துச் செல்லும் வகையில் பொருட்களையும் பணப் பொதிகளையும் விட்டுச் சென்றனர். இத்தகைய நடைமுறைகள் எமக்கு சிறந்த முன்மாதிரியாக இருத்தல் வேண்டும்.

கொழும்பில் சில பள்ளிவாசல்களில் சிறந்த ஒரு முன்மாதிரியைக் காண முடிந்தது. அங்கு கண்ணாடி அலுமாரிகளில் பருப்பு, சீனி, வெங்காயம், பால் மா, டின் மீன் போன்ற உலர் உணவுப் பொதிகளை வைத்துள்ளார்கள். "தேவையுள்ளோர்கள் எடுத்துக் கொள்ளலாம்" என்ற அறிவித்தலும் கூடவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தர்மமாக வழங்குபவர்கள் அவற்றில் இத்தகைய பொருட்களை விரும்பிய நேரத்தில் விரும்பிய அளவில் வைத்துவிட முடியும். தேவையுள்ளோர்கள் அவற்றில் தமக்கு அவசியமானவற்றை எவரிடமும் கேட்காமல் எடுத்துக் கொள்ளவும் முடிகிறது. இத்தகைய திட்டங்களை முறையாக விரிவு படுத்தல் சிறந்தது.

இவ்விடயங்களை கருத்தில் கொண்டு 'தருமம் வழங்குதல்' எனும் நற்பணியை இரகசியமாகச் செய்வோம். அவற்றை பேருக்கும் புகழுக்கும் விளம்பரத்துக்கும் செய்யாமல் நன்மைகளை மட்டுமே நாடி செய்திட முன்வருவோம்.

"மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப் போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் தருமங்களைப் பாழாக்கி விடாதீர்கள்." என்பது அல் குர்ஆனின் அறிவுரையாகும்.

## நெஞ்சுக்கு நீதி

***இரகசிய தருமமங்களே கொடைகளில் சிறந்தது***
***இதயத்தில் இருத்தினாலே இழிவுகள் மறையுமே***
***இரப்போர்க்கு இரகசியமாய் ஈதல்தான் உயர்ந்தது***
***இதனைப் புரிந்தால் ஏழைகள் வாழ்வது உயருமே***

## பிரிந்தார் பெருமை

### தொழிற்சங்கவாதி அஷ்ரப் அஸீஸ்

இலங்கையின் பிரபல தொழிற்சங்கவாதியும், அரசியல் கட்சித் தலைவரும், சமூக சேவையாளரும், புரவலருமான அஷ்ரப் அஸீஸ் கடந்த 16ஆம் திகதி (2023.06.16) தனது 78 வது வயதில் காலமானார். 1945 பெப்ரவரி 27ஆம் திகதி பிறந்த அஷ்ரப் அஸீஸ் கொழும்பு இசிபத்தான கல்லூரியின் பழைய மாணவரும், பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியும் ஆவார்.

இலங்கையின் புகழ் பூத்த முன்னணி அரசியல் பிரமுகரும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவருமாக இருந்த ஏ. அஸீஸின் மகனான அஷ்ரப் அஸீஸ், தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் அவரது கட்சியை அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என அமைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கான தனது தந்தையின் சேவைகளை சிறப்பாகத் தொடர்ந்தவராவார்.

'அஸீஸ் மன்றம்' என்ற பெயரில் சமூக சேவை அமைப்பொன்றை தோற்றுவித்து நாட்டில் எல்லா பகுதிகளையும்



சேர்ந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையிலான சமூக சேவைகளை இறக்கும் வரை தொடர்ந்து செய்து வந்தார்.

புத்தக வெளியீடுகளில் பெருந்தொகை நன்கொடைகளை கொடுத்து சிறப்பு பிரதிகளைப் பெறுதல், இசை, நாடக, கலை, கலாசார நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்குதல், மாணவர்களுக்கான புத்தகப்பைகள், அப்பியாச கொப்பிகளை இலவசமாக வழங்குதல், இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல், அத்தியவசிய தேவைகளின் போது உலருணவுப் பொதிகளை வழங்குதல், தேவையென வருவோரின் தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற பல நற்சேவைகளை தொடந்து முன்னின்று செய்து வந்தமை விசேடமாக குறிப்பிடத்தக்கவை.

எனது சட்ட வாடிக்கையாளராக (Client) இருந்தமையால் அடிக்கடி நாம் சந்திப்பது வழக்கம். அப்போதெல்லாம் சமூகத்தினதும், நாட்டினதும் நன்மைக்கான விடயங்களை என்னோடு கலந்துரையாடத் தவறுவதில்லை. அவர் சுகயீனமாக இருந்த சந்தர்ப்பங்களில் அவரது சார்பில் மாணவர்களுக்கான நூல் விநியோகம், போன்ற சமூக சேவை பணிகளை அவரது சார்பில் செய்யும் வாய்ப்பை எனக்கு வழங்கியமை அவர் எனக்கு அளித்த சிறப்பு கௌரவமாக கருதுகிறேன்.

தனது அந்திமகாலம் வரை தோட்டத் தொழிலாளர்களின் நலன்களில் அதிக அக்கறையோடு செயற்பட்டு வந்த அஷ்ரப் அஸீஸ் பொதுவாக தோட்டத் தொழிலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், பாடகர்கள், தொழிசங்கவாதிகள், அரசியல் பிரமுகர்கள் என பலதரப்பினர்களுடனும் சுமுகமான, நெருங்கிய தொடர்பை பேணி வந்த, மென்மையான குணம் படைத்தவராவார். அவரது பிரிவு இத்தகைய சகல தரப்பினர்களுக்கும் பேரிழப்பாகும்.

## புது வரவு

### வானலைகளில் ஒரு வழிப்போக்கன்

உலக அறிவிப்பாளர், தமிழ் பேசும் மக்களின் அன்பு அறிவிப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீத் எழுதியுள்ள, ஒலிபரப்புத்துறை சார்ந்த, ஒரு தனித்துவமான நூல் "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்".

தனது வாழ்வியல் அனுபவங்களோடு ஒலிபரப்புத்துறை வரலாறு, இலங்கை வானொலியின் வரலாறு, ஒலிபரப்பின் முன்னோடிகள், இத்துறையின் வழிகாட்டிகள், பற்றிய தகவல்கள் உட்பட, ஒலிபரப்பு தொடர்பான பல்வேறுபட்ட, விடயங்களை பரந்த அளவில் இந்நூலில் அவர் சிறப்பாக பதிவு செய்துள்ளார்.

"சிறுவர் மலர் காலத்திலிருந்து கணக்கிட்டால் ஆறு தசாப்த காலமாக, தலைமுறை மாற்றங்களை, வியத்தகு தொழிநுட்ப மாற்றங்களைச் சந்தித்த அனுபவப் பதிவுகள் இவை. ஒவ்வொருவரது வாழ்க்கை அனுபவங்களிலும் கசப்பும் இனிப்பும் உண்டு. கசப்பான அனுபவங்கள் வெறும் புலம்பலாகவே அமையும். அதனால் வாசகனுக்கு எந்தப் பயனும் இல்லை. எனவே பயனுள்ள தகவல் சார்ந்த நல்ல நினைவுகள் மட்டுமே இங்கு பதிவாகியுள்ளன."

"சுயபுராணம் பாடுவதை விட ஒலி ஊடகத்தின் நதிமூலம் பற்றிய தகவல்கள், முன்னோடிகளாக வாழ்ந்தவர்களது பங்களிப்புகளைப் பற்றிய குறிப்புகள், இவனது சமகாலத்தில் ஊடகத்துறைக்குப் பெருந்தொண்டாற்றியவர்கள் பற்றிய நினைவுகள் கலந்த ஓர் ஆவணப் பதிவாகவும் இந்நூல் அமைய வேண்டும் என இவன்



எண்ணி ஆதாரபூர்வமான தகவல்களைத் திரட்டவும் முயன்றான். முடிந்தவரை இதுவரை அறியப்படாத பல தகவல்களை இந்நூலிலே பதிவு செய்துள்ளான். முன்னோடிகளின் வாரிசுகளைத் தொடர்புகொண்டு அவற்றை உறுதி செய்துகொள்ளவும் முடிந்தது." என ஆரம்பத்திலேயே நூலின் உள்ளடக்கத்தைப் பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார் பீ. எச். அப்துல் ஹமீத். "கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க வைத்த நிகழ்வு" முதல் "சொல்லத்தான் நினைக்கிறேன்" வரையான 23 தலைப்புகளில் தனது அனுபவங்கள், அடைவுகள், அனுபவித்த இடர்கள், வழிகாட்டிய முன்னோடிகள், வானொலி வரலாறு, ஒலிபரப்புத்துறை ஜாம்பவான்கள், ஒலிபரப்புத்துறை நுணுக்கங்கள் என பலவேறு விடயங்களை வாசிப்போருக்கு சோர்வு ஏற்படாதவாறு சுவையாக, நேர்த்தியாக, நேர்மையாக, தொகுத்து எழுதியுள்ளார் நூலாசிரியர்.

பேராசிரியர் சபா ஜெயராசாவின், இந்நூல் பற்றிய ஆய்வுரை, அ. முத்துலிங்கம் வழங்கியுள்ள நூல் நயவுரை, 'திசைகளைத் தீர்மானிக்கும் வழிப்போக்கர்!' என த. செ. ஞானவேல் எழுதியுள்ள குறிப்புரை, மூத்த ஒலிபரப்பாளர் சாத்தான்குளம் அப்துல் ஜப்பார் வாழும்போதே வழங்கியுள்ள வாழ்த்துரை, அமுதக் குரலோன் அப்துல் ஹமீத்' என்று காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் எழுதியுள்ள சிறப்புக் கவிதை என்பன ஆரம்பத்திலேயே நூலை அலங்கரித்துள்ளன.

அதேபோல் நூலின் இறுதிப் பகுதியில் இடம் பிடித்துள்ள பேராசிரியர் கா. சிவத்தம்பியின் "தமிழின் முதல் நிகழ்ச்சி அறிக்கையாளர் பி. எச். அப்துல் ஹமீத்", உலக நாயகன் கமல்ஹாசன் எழுதியுள்ள "நான் ரசிக்கும் நடிகர் திலகமே ரசித்த குரல்", மறைந்த 'பல்கலைவேந்தர்' சில்லையூர் செல்வராசன் எழுதிய "ஒரு வரன் முறைக் குறிப்பீடு அன்பு அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத்" எனும் கட்டுரைகள் இந்நூலின் கனதியை மேலும் அதிகரித்துள்ளன. அபூர்வமான, அழகான, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, ஆர்வத்தைத் தூண்டுகின்ற காலத்தின் கண்ணாடியான அதிக அளவிலான, படங்கள் நூலில் இடம் பெற்றிருப்பது வாசிப்போருக்கு பெருவிருந்தாக அமைந்துள்ளது.

தான் 700 பக்கங்களில் எழுதிய நூலை, பின்னர் 300 பக்கங்களாக சுருக்கியதாக "வெண்பா நூல் மனை"யின் ஒருங்கிணைப்பில் கடந்த 2023 ஜூன் 03ஆம் திகதியன்று கொழும்பு அழகியற்கற்கை அரங்கில் நடைபெற்ற இந்நூலின் அறிமுக விழா போது, அன்பு அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத் தெரிவித்தார். ஆனால் இந்நூலை வாசிக்கும்போது, நூலை சுருக்காமல் 700 பக்கங்களையும் இரண்டு பாகங்களாக வெளியிட்டிருந்தால் வாசகர்கள் அதிக பயனடைந்திருப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. மொத்தத்தில் 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்', "ஒலிபரப்புத்துறை வரலாற்றின் தனித்துவமான ஒரு அனுபவக் கருத்துக் களஞ்சியம்" எனலாம்..

நூல்: வானலைகளில் ஒரு வழிப்போக்கன், ஆசிரியர்: உலக அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத், முதற் பதிப்பு: மே 2022, பக்கங்கள்: 316, விலை: ரூபா 1000.00, வெளியீடு: தரு மீடியா (பி) லிட்., சென்னை, தமிழ்நாடு.

## சிந்தனை செய் மனமே

### சொல்வதை அழகாகச் சொல்வோம்!

ஒரு தேநீர் கடையில் 'திருக்குறள்' வடிவத்தில் எழுதப்பட்டிருந்த வாசகம், இப்படி இருந்தது.

"இருவடை எடுத்து ஒருவடை என்பார்
திருவோடு ஏந்தி தெருவோடு போவார்..!"

தேநீர் போடுகிற நேரத்தில், தட்டிலிருக்கும் வடையில் இரண்டை கபளீகரம் செய்து விட்டு, 'ஒரு வடை தான் சாப்பிட்டேன்' என்று காசு கொடுப்பவர்களை கண்டிப்பதற்காக எழுதப்பட்ட வாசகம் இது. சுவாரஸ்யமாக இருக்கிறது என்றாலும் நியாயமாக வடை உண்கிற எல்லோருக்கும் இது ஒருவித சங்கடத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இதைப் படிக்கும்போது உங்களுக்குள் ஏற்படும் மன உணர்விற்கும், இனி வரும் வரிகளை படிக்கும்போது ஏற்படும் மன உணர்விற்கும் உள்ள வித்தியாசத்தினை கவனியுங்கள்.

ஒரு ஆட்டோவில், டிரைவர் சீட்டின் முதுகில் எழுதப்பட்ட வாசகம்.

'உங்களின் வழிச் செலவு,
எங்களின் வாழ்க்கை செலவு.'

இந்த வாசகம், ஆட்டோவிலிருந்து இறங்கிய பின் யாரையும் பேரம் பேச விடாது. 'மீட்டருக்கு மேல் ஐந்து ரூபாய் போட்டுக் கொடுங்க சார்' என்கிற வார்த்தைக்கும் இந்த வாசகத்திற்கு எத்தனை வேறுபாடு என்பதைக் அவதானிப்பது அவசியம்.



ஒரு மொத்த விற்பனை மீன் கடையில் எழுதப்பட்டிருந்த வாசகம் இப்படி இருந்தது.

'மீன் சாப்பிட வேண்டாம் என்று நினைத்தேன்.
மீனவன் சாப்பிட வேண்டாமா?'

ஒரு ஹோட்டலில் எழுதி மாட்டி இருந்த வாசகம்

'வீட்டு சமையலுக்கு ஒரு நாள் விடுமுறை விடுங்கள்.'

ஒருவரது வார்த்தைகளில் இல்லை வெற்றி! அந்த வார்த்தைகள் வெளிவரும் விதத்தில் தான் வெற்றி இருக்கிறது. தேநீர்க் கடையில் எழுதப்பட்டிருந்த வரிகளும், ஆட்டோவில் எழுதப்பட்டிருந்த வரிகளும் ஒரே விஷயத்தை தான் சொல்கின்றன. ஆனால் சொல்லப்பட்ட விதம் தான் அதில் வித்தியாசம்.

சொல்ல வந்ததை அழகாக சொல்வது ஒரு தனியான கலை. மனதில் நினைக்கும் விடயங்களையெல்லாம் பேசாமல், அவற்றை செம்மைப்படுத்தி பேசிப் பாருங்கள். உங்கள் பேச்சு அழகாகும். வெற்றியும் நிச்சயம் கிடைக்கும்.

எண்ணங்கள் அழகானால் வார்த்தைகள் அழகாகும்,
வார்த்தைகள் அழகானால் சிந்தனைகள் அழகாகும்,
சிந்தனைகள் அழகானால் வாழ்க்கையே அழகாகும்!!!

## தகவல் களஞ்சியம்

### ஜப்பானை முந்தும் சீனா!

உலகின் முன்னணி கார் ஏற்றுமதி நாடாக இதுவரை காலமும் இருந்து வந்த நாடு ஜப்பான். ஆனால் தற்போது, ஜப்பானை பின் தள்ளி சீனா முதலிடம் பிடித்துள்ளதாக தவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த வருடத்தின் (2023) முதல் காலாண்டில் 1.07 மில்லியன் கார்களை சீனா ஏற்றுமதி செய்துள்ளதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் அதே காலகட்டத்தில் ஜப்பான் 954,185 கார்களை மட்டுமே ஏற்றுமதி செய்துள்ளது.

தற்போது, உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் தங்கள் நாட்டில் போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்ய மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளித்துள்ளன. இலங்கையிலும் மின்சார வாகனங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை நம் நாட்டு அரசாங்கம் எடுத்து வருவதையும் நாமறிவோம்.

இத்தகைய சூழலில் பெற்றோலில் இயங்கும் கார்களுக்குப் பதிலாக மின்சார கார்கள் தயாரிப்பதற்கு சீனா முன்னுரிமை அளித்தமை அவர்களுக்கு சாதகமாக அமைந்தது என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

---



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 45



கே. பத்மானந்தன்

# திருவள்ளுவத்தில் கட்டுப்படுத்தல்

பொதுவாக நிறுவனங்களில் உள்ள சகல வளங்களும் செம்மையாக வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுகின்றனவா, உருவாக்கப்படும் உற்பத்திகள் தரமுடையனவாக இருக்கின்றனவா, நிறுவன இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான வளங்கள் பெறப்படுகின்றனவா, இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா, வழங்கப்படும் சேவைகள் தரமுடையனவாக இருக்கின்றனவா அல்லது திருப்திகரமாக இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக முகாமையாளர்கள் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாளுகின்ற அதேவேளை பல்வேறு பொறி முறைகளையும் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்குப் பெற்றுக்கொள்ளப்படும் வளங்களை வினைத்திறன் (efficiency) ஆகவும் பயனுறுதி (effectiveness) மிக்கதாகவும் பயன்படுத்தலே கட்டுப்படுத்தல் என்று அந்தனி (Anthony 1965) குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுடன் நிறுவனம் ஒன்றில் நடைபெறுகின்ற எல்லாச் செயற்பாடுகளும் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதனை உறுதி செய்கின்ற ஒரு செயன்முறையாக கட்டுப்படுத்தல் கொள்ளப்படலாம். எனவே கட்டுப்படுத்தல் என்பது திட்டமிட்டபடியும் வழங்கப்பட்ட ஆணைகளின் படியும் அறிவுறுத்தல்களின்படியும் நிறுவனத்தின் செயற்பாடுகள் நடைபெறுகிறதாவென்பதை உறுதி செய்யும் அதேவேளை ஏதேனும் குறைபாடுகள் இருக்கின்றதா என்பதை அறிந்து அவற்றிற்குப் பொருத்தமான தீர்வுகளை முகாமைத்துவம் எடுப்பதற்கும் பயன்படுகிறது. இதற்காகத் தர நிர்ணயவிதிகள், நியதிகளுக்கு எதிராக உண்மையான செயற்பாடுகளை அளவிடல் மற்றும் நியதிகளில் இருந்து ஏற்படக்கூடிய விலகல்களை அல்லது வேறுபாடுகளை அளவிடல் போன்ற பல்வேறு முறைகள் நிறுவனங்களில் புழக்கத்திலுள்ளன. ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் கட்டுப்படுத்தலின் முக்கியத்துவத்தை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

**"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே**
**அற்றந் தரூஉம் பகை" (குறள் 434)**

குற்றம் புரிவது ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாக மாறுவதால் ஒருவன் குற்றம் செய்யாமல் இருப்பதையே நோக்கமாகக் கொண்டு தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும் அதாவது கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது நிறுவனம் ஒன்றில் காணப்படும் குற்றம் குறைகள் என்பன அழிவு பயக்கும் பகையாக மாறி நிறுவனத்தை நட்டமடையச் செய்யும் என்பதால் குற்றம் இல்லாத நிறுவனத்தை முகாமையாளர் தமது வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு அதனைக் காக்க வேண்டும் என்கிறார். எனவே நிறுவனத்தில் ஏற்படக்கூடிய பிழைகளையும் உற்பத்தியில் அல்லது சேவையில் ஏற்படக்கூடிய குற்றங்களையும் குறைகளையும் தவிர்க்க முகாமைத்துவம் முயல வேணடும் என்ற கருத்தை திருவள்ளுவர் இங்கு வலியுறுத்துகின்றார்.

ஹரோல்ட் ஹூன்ஸ் (Harold Koontz/1909 1984) என்பவர் நிறுவனமொன்றில் நடைபெறும் செயற்பாட்டை அளவிடலும் தேவையேற்படின் செயற்பாட்டை சரிப்படுத்தலும் நிறுவனத்தின் இலக்குகளும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளும் சரியான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை அறிய உதவும் என்று கூறுகின்றார். இக்கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் மேலும் சிறப்பாக திருவள்ளுவர் வெளிப்படுத்து கின்றார்.

**"அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃது இல்லார்**
**பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்" (குறள் 170)**

பொறாமைப்பட்டுப் பெருமையடைந்த எவரும் அல்லது புகழ் பெற்று உயர்ந்த எவரும் உலகத்தில் இல்லை. அதேபோல் பொறாமை



இல்லாத காரணத்தால் புகழ் மங்கித் தாழ்ந்த எவரும் உலகத்தில் இல்லை என்கிறார் திருவள்ளுவர். அதாவது பொறாமை கொண்டவருள் செல்வம் பெருக்கியவரும் இல்லை அதேபோல் பொறாமை இல்லாததால் வளர்ச்சியில் குன்றியவரும் இல்லை.

இதேபோல் ஒரு நிறுவனத்தில் குறைகள், குற்றங்கள் இருக்கின்றபோது அந்நிறுவனத்தால் முன்னேற முடியாது என்றோ அதேபோல் குறைகள் இல்லை என்பதற்காக அந்நிறுவனம் முன்னேறிவிடும் என்றோ அர்த்தமில்லை என்பதை அந்நிறுவனத்தின் முகாமைத்துவம் உணர்ந்து கொண்டு நிறுவனத்தில் நிகழும் செயல்பாடுகளை அளவிட சரியான அளவீடுகளைச் சரியான முறையில் சரியான நேரங்களில் மேற்கொள்ள வேண்டும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்தை இக்குறளின் மூலம் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

அதேபோன்று இந்த அளவீட்டு முறைகளைப் பயன்படுத்தி அறிந்த குறைகளை அல்லது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முகாமையாளர் மேற்கோள்ள வேண்டும். உண்மையில் இவ்வாறு நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் தனது நிறுவனச் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்த வேண்டும் என்று எண்ணுவாராயின் அவர் முதலில் சுய கட்டுப்பாட்டை அல்லது மனக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவரினால் அவரது நிறுவனச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும். இக்கருத்தினை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

**"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூங்கு இல்லை உயிர்க்கு" (குறள் 122)**

அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்கவேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிருக்கு எதுவும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். அதாவது சுய அடக்கம், மன அடக்கம் உள்ள ஒருவர் எவ்வாறு வாழ்வில் முன்னேறுகின்றாரோ அதேபோன்று சுய கட்டுப்பாடு உள்ள ஒரு முகாமையாளரால் தனது நிறுவனத்தை வளங்களை வினைத்திறனுடனும் பயனுறுதி மிக்கதாகவும் பயன்படுத்தி இலக்குகளை நோக்கி முன்னேற்றமுடியும்.

உதாரணமாக அடக்கம் என்பதில் முகாமையாளர் என்பவர் தனது நிறுவனத்தில் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படும் தொழில் நுட்பம், தரக் கட்டுப்பாடில் மேற்கொள்ளப்படும் நுட்பங்கள், உற்பத்திக்கான மூலப் பொருட்கள் பயன்படும் விதம், நிறுவனத்தின் வருமானம், இலாபம் போன்ற நிறுவனம் தொடர்பான இன்னோரன்ன விடயங்களைப் பலரும் அறியும் வகையில் கூறக்கூடாது என்ற கட்டுப்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும். அதாவது சில முகாமையாளர்கள் பதவிச் செருக்கினால் அல்லது பணச் செருக்கினால் இவ்வாறான தகவல்களை அடக்கமின்றி தேவை அற்றவர்களுடன் பகிரக்கூடும். இதனால் நிறுவனத்திற்கு தேவையற்ற இடையூறுகள் ஏற்பட்டு நிறுவனம் தனது இலக்குகளை அடைவதில் சிரமங்கள் ஏற்படலாம்.

உண்மையில் நிறுவனம் பொருளீட்டவும் அதாவது இலாபமீட்டவும் அடக்கம் துணை செய்யும் என்பதனால் நிறுவனத்தை முகாமை செய்யும் எவரும் அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய எல்லோருடனும் அடக்கமாகப் பழக வேண்டும். இந்த அடக்கமானது நிறுவனத்தை தேவையில்லாத பல்வேறு இடையூறுகளில் இருந்தும் காக்கும் என்பது திருவள்ளுவரின் எண்ணமாகும். எவ்வளவு வளங்கள் நிறுவனங்களில் இருந்தாலும் அங்கு அடக்கம் எனப்படும் கட்டுப்பாடு இல்லாவிட்டால் அந்நிறுவனத்தை இலக்குகளை நோக்கி வெற்றிகரமாகக் கொண்டு போக முடியாது. இதே கருத்தினை கீழ்வரும் ஈரடியிலும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

**"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து" (குறள் 125)**

அதாவது பணிவுடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லோருக்கும் நல்லதாகும். குறிப்பாக செல்வர்க்கு எல்லாம் இது மற்றொரு செல்வம் போன்றதாகும் என்கிறார் திருவள்ளுவர்.

செல்வநிலை செருக்கைத்தரும் தன்மை கொண்டது. எனவே நிறுவனம் ஒன்றில் செல்வச் செழிப்பு அதிகரிக்க அதிகரிக்க அடக்கம் அல்லது கட்டுப்பாடு குறைந்து கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும். பொதுவாக கல்வி, ஞானம் போன்ற செல்வம் உடைய முகாமையாளர்கள் அச்செல்வங்கள் காரணமாகவே அடங்கி நடத்தல் இயல்பான ஒன்று. ஆனால் பௌதீக நிதி வள ஆதாரங்கள் அதிகம் கொண்ட செல்வச் செழிப்பு உள்ள முகாமையாளர்கள் அல்லது நிறுவனத் தலைவர்கள் பொதுவாக அடக்க குணம் உள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். இந்த அடக்கம் இன்மை காரணமாகவே அவர்களின் செல்வம் காலப் போக்கில் இல்லாமல் போகலாம் அல்லது அவர்களின் நிறுவனம் இலக்குகளை அடைவதில் தோற்றுப் போகலாம். எனவே தான் முகாமையாளர்களுக்கு அடக்கம் அல்லது பணிவு என்ற சுய கட்டுப்பாடு இருக்குமாக இருந்தால் அவர்களது நிறுவனத்தை அவர்கள் இலகுவாகக் கட்டுப்படுத்தி இலக்குகளை நோக்கி முன்னேற்றிச் செல்லலாம்.

**(தொடரும்)**

# சிறுவர் உலகம்

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 68

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| 10 | 11 | | 12 | 13 | 14 |
| 15 | | 16 | | 17 | |
| | | 18 | | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | | 25 |

பெயர் ........................................

வகுப்பு ........................................

தொலைபேசி இல ........................................

பாடசாலை பெயர் ........................................

வதிவிட முகவரி ........................................

........................................

............................ ............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) பாலில் இருந்து பெறப்படும் உணவு. பசும்பாலைக் காய்ச்சி உறைய வைத்துப் பெறப்படும் கொழுப்பு நிறைந்த உணவு.
(4) குளத்தில் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக சுற்றிவர அமைக்கப்படுவது...(தலைகீழான சொல்)
(7) வறியநிலையில் உள்ள ஒருவரைக் குறிக்கும் பொதுப்பாற் சொல்.
(10) மரத்துக்கு இவ்வாறும் ஒரு ஒத்தபொருள் சொல் உள்ளது.
(12) பலவர்ணங்கள் நிறைந்த அழகுத்தோகை கொண்ட பறவை.
(19) சந்தேகத்தின் பேரில் காவலில் வைக்கப்பட்டுள்ளவரையோ அல்லது குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் சிறைவாசம் இருப்பவரையோ குறிக்கும் சொல்.
(21) கிரீடம் அல்லது மணிமுடி என்றெல்லாம் கூறக்கூடிய சொல். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) யானையில் காணப்படுகின்ற பெறுமதி வாய்ந்த வெண்ணிற திண்ம உறுப்பு. ஆனால் எல்லா யானைகளிலும் இந்த உறுப்பு இருப்பதில்லை.
(3) விவசாயிகள் நிலத்தைப் பண்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்ற உபகரணம். (தலைகீழான சொல்)
(5) முதுகில் மூன்று கோடுகள் கொண்ட பாலூட்டிவகை பிராணி. மரத்துக்கு மரம் தாவிச் சென்று கனிகளை உணவாகக் கொள்கின்றது.
(8) நிலம் செழிக்க வேண்டுமானால் இது அவசியம். இல்லையென்றால் வரட்சி ஏற்படும். (தலைகீழான சொல்)
(13) இராமாயணத்தில் தசரதச் சக்கரவர்த்தியின் மனைவியருள் ஒருத்தி. பரதனின் தாயார். (தலைகீழான சொல்)
(16) மாமிசபட்சணியான வெண்ணிறப் பறவை. நீண்ட கால்கள் கொண்ட இப்பறவை நீர்நிலைகளின் கரையோரங்களில் காத்து நின்று மீன்களை கொத்திக் கொள்ளும்.
(20) சந்திரனின் ஒத்தபொருள் சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 67

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கணவாய் 07. வாத்து 10. பரிதி 14. பாடகன்
20. கடை 23. நாளை 24. பாறை

**மேலிருந்து கீழ்**

01. கத்தி 04. வாய் 05. பதுளை 11. பாரி
12. படகு 17. பாகன் 18. நாய்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 66

### பாராட்டு பெறுவோர்

1. **தி. சயந்தவி**
தரம் 06, மட்/வின்சன்ட் ம.உ. பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

2. **லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 05, தாருல் உலூம் ம.ம.வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரீமலுவ, ரம்புக்கன.

3. **எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 07, அலீப் சர்வதேச பாடசாலை,
இல. 41, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

4. **ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி

5. **ஹிமா மர்யம் எம்.எம்.**
தரம் 07E, KG/ தாருல் உலூம் மு.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கன.

6. **எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 05, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

7. **பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவதுறை, கம்பளை.

8. **அஹமட் முஜீப்**
தரம் 06, அல் கசாலி மத்திய கல்லூரி,
அட்டுலுகம, பண்டாரகம.

9. **எம்.எப். அப்துல்லா**
தரம் 05B, தல்துவ ம.ம.வித்தியாலயம்,
இல. 25, சீதாகம, குடாகம வீதி, அவிஸ்ஸாவல.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 68
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**நட்பாராய்தல்: மருவுக மாசற்றார் கேண்மையொன்
றீத்தும் ஒருவுக ஒப்பிலார் நட்பு**

***தெளிவுரை :***
*குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ள வேண்டும், ஒத்தபண்பை இல்லாதவறுடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.*

## 1500 ஆண்டுகள் பழமையான குகை



*1500 ஆண்டுகள் பழமையான இக் குகை ஒரு மாபெரும் கற்பாறை ஒன்றிலிருந்து செதுக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பீகாரில் உள்ள பாபரா குகைகளில் ஒன்றான லோமாஸ் ரிஷி குகையின் புகழ்பெற்ற நுழைவாயில். இந்தியாவின் மிகப் பழமையான சைத்திய வளைவைக் கொண்டுள்ளது.*

*பாபரா குகைகள் புத்த கயாவின் வடக்கே சுமார் 31 கிமீ (19.3 மைல்) தொலைவில் உள்ளது. இது புத்தர்களுக்கு புனித யாத்திரை தளமாகும். ஏனெனில், இது புத்தர் ஞானம் பெற்ற இடமாக நம்பப்படுகிறது. மௌரியப் பேரரசர் அசோகருடன் பாபரா குகைகள் இணைந்திருப்பதால், அவர்களுக்கும் பௌத்த மதத்துடன் தொடர்பு இருப்பதாக கருதலாம். ஏழு குகைகளில் மிகவும் பிரபலமான லோமாஸ் ரிஷி குகையில் இது தெரியும்.*

**திவ்யா...**

*இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் உள்ளே ஹீமோகுளோபின் என்ற வேதிப் பொருள் உள்ளது.*

*இந்த வேதிப்பொருள் தான் இரத்தத்துக்கு சிவப்பு நிறத்தைக் கொடுக்கிறது. ஹீமோகுளோபின் உடலில் உள்ள அனைத்துச் செல்களுக்கும் ஒக்சிஜனை எடுத்துச் செல்கிறது.*

*இரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக்கை குறைந்தால் இரத்த சோகை நோய் ஏற்படும். ஒரு சொட்டு இரத்தத்தில் 55 இலட்சம் இரத்த சிவப்பு அணுக்கள் இருக்கும்.*






சோபியா
சரவணன் / வெரோனிகா
நோர்வே

## ஆலமரம்



*ஆலமரம் நல்ல ஆலமரம்*
*ஆற்றங்கரையில் ஆலமரம்*
*ஓங்கி வளர்ந்த ஆலமரம்*
*ஒய்வுக்கியற்கை தந்த மரம்!*

*சத்திரமில்லா ஊருக்கு - நல்ல*
*சத்திரமானது ஆலமரம்*
*மக்கள் கூடுவதற்கு - ஊரில்*
*உதவி செய்வது ஆலமரம்!*

*பள்ளிக்கூடம் ஆலமரம் - பல*
*பிள்ளைகளுக்குப் பகலிலே*
*பள்ளியறையாம் ஆலமரம் - அங்கு*
*படுக்கப் பலரும் மாலையிலே!*

*விழுதுகள் தொங்கும் ஆலமரம்*
*விளையாட்டு ஊஞ்சல் ஆனதுவே*
*பழுதில்லாதோர் ஆலமரம் - ஏழையர்*
*பலருக்கு வீடாய் ஆனதுவே!*

**கல்லொளுவை பாரிஸ் – மள்வானை**



**ச.டில்ஷியானி**
தரம் 7, க / இந்து தேசிய கல்லூரி புசல்லாவ



**Abinaa sukke Muralitharan**
Gr 09 Hindu Ladies college wellawatte

## எண்ணங்களே ஒருவனை உருவாக்குகின்றன

எண்ணங்கள் தான் உலகின் மிகப்பெரிய உந்து சக்தியாகும். எண்ணங்கள் எவ்வழியில் செல்கின்றவோ அவ்வழியிலேயே உலகம் செயல்படுகிறது. ஒரு மனிதன் உலகில் உருவானதிலிருந்து அவன் உலகிலிருந்து விலகிச் செல்லும் வரை எண்ணங்களே அவனை ஆட்டிப்படைக்கின்றன. உலகத்திற்கே அரசராக நினைத்த அலெக்ஸாண்டருக்கே அவரது எண்ணங்கள் தாம் எண்ணற்கரிய பொக்கிஷமாகத் திகழ்ந்தன.

ஒருவனைக் கெட்டவனாக்குவதும் நல்லவனாக்குவதும் அன்னை வளர்ப்பு என்பார்கள். ஒருவன் கெட்ட சூழ்நிலையில் வளரினும் அவனது எண்ணங்கள் தூய்மையை நாடிச்செல்லுமாயின் அவன் இந்த உலகிற்கு நன்மை தருகிறான். இதற்குச் சிறந்த உதாரணமாகத் திருக்குறள் அளித்த திருவள்ளுவரைக் குறிப்பிடலாம். அவர் இழிந்தகுலம் என அன்று கணிக்கப்பட்ட ஒரு சூழலில் பிறந்தவராயிருந்தும் பாரத நாட்டிற்கும் தமிழர்களாகிய எமக்கும் பெருமை பயக்கும் பார்போற்றும் திருக்குறளை நல்கினார்.

சித்தார்த்தகுமாரன் அரண்மனைச் சுகங்கள் துறந்து, துறவியாய் வனத்தில் வசிக்கப் புறப்பட்டமைக்குக் காரணமும் அவர் உலக நிலையாமை மீது கொண்ட எண்ணங்களே ஆகும். அவர் நோயாளி, துறவி, இறந்த பிணம் இவற்றைக் கண்டு துன்பங்களின் காரணம் பற்றி ஆராயாமல் இருந்திருந்தால், தன் எண்ணங்களை அவர் தூண்டியிருக்க மாட்டார். அதனால்தான் அவரே உரைக்கிறார், "தூய்மையானதைச் சிந்தித்தால் தூய்மையே கிடைக்கும்" என்று.

இறைவனே எண்ணங்களினால் தான் சித்தரிக்கப் படுகிறான். இறைவனுக்கென்றொரு வடிவமில்லை. ஆனால் அவனுக்கு வடிவத்தை வழங்குவதும் எம் மன எண்ணங்களே ஆகும். இறைவன் சுயம்புவானவன் என்கிறோம். இல்லை, இறைவன் எண் குணத்தான். எண்ணங்களால் எண்ணப்பட முடியாதவனல்ல. எண்ணங்களாலேயே சித்தரிக்கப்பட்டவனாவான்.

பாரதியாரின் உள்ளத்தில் பெண் விடுதலை என்ற அந்த எண்ணம் உதித்திருக்காவிடில், அந்தப் பெரும் கவிஞரும் சாதாரண ஒருவராகவே கருதப்பட்டிருப்பார். ஹிட்லரை ஹிம்சை நெறிக்கும் மகாத்மா காந்தியை அஹிம்சை வழிக்கும் வழிநடத்தியது அவரவரது எண்ணங்களேயாகும்.

இன்று கொரோனாவின் கோரத்தாண்டவத்திற்கு முடிவுகட்ட விஞ்ஞானிகள் அரும்பாடு படுகின்றனர். எவ்வாறேனும் முயன்று அதனை இல்லாதொழித்து, உலகிற்கு உவகையை அளிக்க அவர்கள் புதுப்புது விடயங்களைக் கண்டறிந்த வண்ணமுள்ளனர். இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது அவர்களின் உள்ளத்தில் உதித்த உத்தமமான எண்ணங்களேயாகும்.

டொக்டர் அப்துல் கலாம் அவர்கள் "கனவு காணுங்கள்" எனக் கூறியதற்குக் காரணம், கனவுகள் என்னும் எண்ணங்களால் மனிதன் புதிய பாதையைத் தனக்குரியதாக்கி விரைந்து வளர்ந்து கொண்டு, தன் இலக்கை நோக்கி முன்னேற முடியும் என்பதனாலாகும்.

ஒருவனின் இலக்கை நிர்ணயிப்பதும் எண்ணங்களே. ஒருவன் ஓவியனாகுவதா, இல்லை கவிஞனாகுவதா அல்லது அதை விடுத்து வேறு தொழிற்றுறையைத் தேர்ந்தெடுப்பதா என்பவற்றையெல்லாம் அவனது எண்ணங்களே முடிவு செய்கின்றன. ஒரு ஓவியனின் ஓவியத்தில் சித்தரிக்கும் எண்ணங்களை இன்னொரு கவிஞன் தன் கவிதை வரிகளில் வரைகிறான். அதையே வேறொரு கலைஞன் தன் கலைப்படைப்புகள் ஊடாகச் சித்தரிக்கிறான்.

இவ்வுலகினை ஆட்டிப்படைப்பது மனிதனல்ல. அவனது எண்ணங்களே. அவன் தன் எண்ணங்களை எத்திசையில் செலுத்துகிறானோ அவ்வாறே அவை செயல்பட்டு நன்மைகளை அல்லது தீமைகளை உருவாக்குகின்றன. பகவான் கிருஷ்ணன் குறிப்பிடுவது போல, ஐந்துபுலன்களும் ஐந்து குதிரைகளாக அமைய, தேரைச் செலுத்தும் சாரதி எண்ணமாக அமைய, தேரில் அமர்ந்திருக்கும் அரசன் மனிதனாக அமைவான். ஆகவே, அம்மனிதன் எவற்றைக் கட்டளையிடுகிறானோ அவற்றையே எண்ணங்கள் செயல்படுத்த வேண்டும். ஆனால், அக்குரைகளை அச்சாரதி மனிதன் கட்டளையை மீறிச் செலுத்துவானாகில், எண்ணங்கள் தீயவழியில் சென்று மனிதனைப் படுகுழியில் வீழ்த்திடும்.

தோமஸ் அல்வா எடிசன் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது தடவைகள் முயன்று தோற்றுப் போய் ஆயிரமாவது தடவை முயன்ற போதுதான் மின்குமிழைக் கண்டுபிடித்து உலகை ஒளிரச் செய்தார் என்பர். அதற்கு அவரது எண்ணமாகிய ஊக்கமே ஆதாரமாக அமைந்தது.

"ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா ஊக்க முடையானுழை"

என்கிறார் பொய்யாமொழிப் புலவர். ஆகவே நாம் நமது எண்ணங்களனைத்தையும் நல்வழியில் செலுத்தி, நிறைந்த உலகினை உருவாக்குவோமாக. எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன என்பதில் ஐயமேதுமில்லை.

**ச. அருணன்...**

# கண்டுபிடிப்பாளர்கள்

## பெஞ்சமின் பிராங்கிளின்



பெஞ்சமின் பிராங்கிளின் ஐக்கிய அமெரிக்காவை உருவாக்கியவர்களுள் ஒரு மூத்த தலைவர் ஆவார். இவர் ஓர் அரசியல் தலைவர் மட்டுமல்ல, ஒரு எழுத்தாளர், அறிவியலாளர், கண்டுபிடிப்பாளர் ஆவார். மின்னியலில் இவரின் கண்டுபிடிப்புகளுக்கும், கருத்துகளுக்குமாக இவர் இயற்பியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அறிவியலாளராகக் கருதப்படுகிறார். அமெரிக்க ஆங்கில எழுத்திலக்கணத்திலும் சீர்திருத்த முறைமை அவசியத்தை வலியுறுத்தியவர். வணிகம், அறிவியல், இலக்கியம், அரசியல் ஆகிய நான்கு துறைகளில் பெரும் வெற்றி பெற்றவர். இளம் வயதில் கையில் ஒரு காசுகூட இல்லாமல் ஏழ்மையில் இருந்தும் அச்சுத் தொழிலின் மூலமும், பத்திரிக்கையின் மூலமும் நாற்பது வயதுக்குள் செல்வந்தரானவர்.

Poor Richard's Almanack' என்ற புகழ்பெற்ற இதழை உலகுக்குத் தந்தவர். உலகின் மிகப்பிரபலமான தன் வரலாற்று நூல்களுள் ஒன்று அவருடையது. மின்சாரம் பற்றியும் இடி மின்னல் பற்றியும் புகழ்பெற்ற ஆராய்ச்சிகளை செய்து இடி தாங்கியையும், வெள்ளெழுத்துக் கண்ணாடியையும் (bifocal glasses) மற்ற பல கருவிகளையும் கண்டுபிடித்தவர். அரசியலில் சட்டமன்ற உறுப்பினராக, அரசதந்திரியாக, பிரான்சுக்கான தூதுவராக விளங்கியவர். அமெரிக்க சுதந்திர பிரகடணத்தை தயார் செய்து கையெழுத்திட்ட மூவரில் ஒருவர்.

அச்சுத்துறையில் புதுமைகள் செய்த அதேவேளையில் புதிதாக எதையாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அவரிடம் இருந்தது. குறைவான எரி சாதனத்துடன் மிகுந்த வெப்பம் தரக்கூடிய அடுப்பை அவர் கண்டுபிடித்தார். அவற்றைத் தயாரித்து விற்கவும் தொடங்கினார். பயிர்களுக்கு செயற்கை உரமிட்டால் அவை செழிப்பாக வளரும் என்று எடுத்துக் கூறினார். ஆரம்பத்தில் புறக்கணிக்கப்பட்டாலும் அதிலிருந்த உண்மையை உலகம் மெதுவாக புரிந்து கொண்டது. இப்போது கூட உலகம் முழுவதும் செயற்கை உரம் பயன்படுத்தப்படுகிறது.

மின்சாரத்தின் மீது ஆய்வுகள் செய்தவர் மின்னலில் கூட மின்சக்தி இருக்கிறது என்பதை கண்டறிந்தார். கூரிய முனைகளால் மின்சாரம் ஈர்க்கப்படுகிறது. அதேபோல், மின்னலும் கூரிய முனைகளால் ஈர்க்கப்படும் என்பதை பட்டத்தின் மூலம் ஆய்வு செய்து நிரூபித்தார். மின்னல் இடியிலிருந்து கட்டடங்களைப் பாதுகாக்க இடிதாங்கியைக் கண்டுபிடித்தார். முதியவர்கள் தூரப் பார்வைக்கும், கிட்டப் பார்வைக்கும் சேர்த்து அணியும் ஒரே கண்ணாடியான வெள்ளெழுத்துக் கண்ணாடி (bifocal lens) பிராங்கிளின் கண்டுபிடிப்பாகும்.



பிராங்கிளின் சிறந்த சிந்தனையாளர், நேர்மையானவர் என்பதால் அவரை அரசு பயன்படுத்திக்கொள்ள விரும்பியது.

அவரும் சட்டமன்ற உறுப்பினர், அரசதந்திரி, தூதர் என பல்வேறு நிலைகளில் அரசியல் பணி புரிந்தார். இங்கிலாந்தின் காலனித்துவ ஆட்சியில் அடிமைப்பட்டு கிடந்த அமெரிக்காவுக்கு சுதந்திரம் பெற்றுத்தர அவர் தன் அரசியலறிவைப் பயன்படுத்தி பிரான்சின் உதவியைப் பெற்றார். அவர்மேல் பெரும் மதிப்புக் கொண்டிருந்த பிரான்சும் அமெரிக்காவுக்கு உதவ முன்வரவே இங்கிலாந்து பணிந்தது; அமெரிக்காவுக்கு சுதந்திரம் கிடைத்தது. 1789 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முதல் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோர்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் அரசியல் சட்டத்தை இயற்றும் மாபெரும் பொறுப்பை பெஞ்சமின் பிராங்கிளினை உள்ளடக்கிய ஒரு குழுவிடம் ஒப்படைத்தார். அவரது மேற்பார்வையில் உருவான அரசியல் சட்டம் தான் இன்றும் அமெரிக்காவை வழிநடத்துகிறது.

# மஞ்சரி விளையாட்டு




# வெளிநாட்டில் காணாமல்போகும் இலங்கை விளையாட்டு

கரப்பந்து, கால்பந்து எல்லாவற்றினதும் கலவையாகக் கொண்டது கைப்பந்து விளையாட்டு. பந்தை ஒரு பாணியில் கையால் பிடித்து வீசி எறிந்து எதிரணியின் வலைக்குப் போட்டு கோல் பெறுவதுதான் இந்த விளையாட்டின் பண்பு. புதிதாகப் பார்ப்பவர்களுக்கு அழுப்புத்தட்டக்கூடும். என்றாலும், ஐரோப்பா பக்கம் இந்த விளையாட்டு பிரபலம்.

ஆனால், எல்லாவற்றையும் தாண்டி இலங்கையின் தேசிய கைப்பந்து அணியின் கதை உலகப் புகழ்பெற்றது. உண்மையில் அது கைப்பந்து அணியே இல்லை என்பதுதான் இந்தப் பேரும் புகழுக்கும் காரணம். இந்த சம்பவம் நிகழ்ந்தது 2004 ஆம் ஆண்டு.

23 பேர் கொண்ட தேசிய அணி ஜெர்மனிக்கு போட்டித் தொடர் ஒன்றுக்குச் செல்ல ஏற்பாடானது. ஜெர்மன் தூதரகத்தில் விசாவுக்கு விண்ணப்பித்தபோது அதற்கான ஆவணங்கள் கச்சிதமாக இருந்தன. அதுவும் ஒரு நாட்டின் தேசிய அணி என்றால் மறுப்பது எப்படி? எனவே, அந்த 23 பேருக்கும் பிரச்சினை இன்றி விசாக் கிடைத்தது.

'அவர்கள் ஆவணங்களை சமர்ப்பித்தார்கள். ஆவணங்கள் சரியாக இருப்பது போல் தெரிந்தது. எனவே, அவர்களின் விசாவை மறுப்பதற்கான எந்தக் காரணமும் இருக்கவில்லை' என்று அப்போது இலங்கைக்கான ஜெர்மனி பதில் தூதுவராக இருந்த ஹெய்டி ஜங் குறிப்பிடுகிறார்.

ஜெர்மனியர்களின் தலையில் மிளகாய் அரைத்த, அவர்களுக்கு ஒரு மாத விசா கிடைத்தது. உலகை ஏமாற்ற இது போதுமானது.

ஜெர்மனி சென்ற அந்த தேசிய கைப்பந்து அணி காணாமல் போனதை அடுத்தே அவர்கள் செய்த தில்லு முல்லு உலகுக்கு தெரிந்தது.

உண்மையில் அப்போது கைப்பந்து விளையாட்டுப் பற்றி பெரும்பாலான இலங்கையர்களுக்கு தெரியாது. எனவே, ஐரோப்பிய நாட்டுக்கு பிழைப்புக்கு கள்ளத்தனமாகச் செல்ல முயன்றவர்கள் இதனை சாமர்த்தியமாக பயன்படுத்தி இருக்கிறார்கள்.

அப்போது இலங்கையில் தெருவோர கைப்பந்து அணி அல்லது கழகம் ஒன்று கூட இருக்கவில்லை. இலங்கை தேசிய ஒலிம்பிக் சங்கம், ஏன், விளையாட்டு அமைச்சுக்குக் கூட இது பற்றி தெரியவில்லை.

இப்படி அணி ஒன்று உருவாக்கப்பட்டிருப்பது மர்மமாக உள்ளது என்றும் இது எமது உத்தியோக பூர்வ தேசிய அணி இல்லை என்றும் இலங்கை அரசு அறிவித்தது.

இந்தக் கதை கேட்பதற்கு சற்று நகைச்சுவையாக இருந்தாலும், இலங்கையில் விளையாட்டின் கதை இதுதான். ஒரு வாரத்திற்கு முன்னர் கூட இலங்கையின் முன்னணி தடகள வீரர் கிரேஷன் தனஞ்சய சூரிச் தடகள சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்பதற்காக சுவிட்சர்லாந்து சென்று எல்லோருக்கும் தண்ணிகாட்டி விட்டார்.

அங்கு அவர் அந்தத் தடகளப் போட்டியில் பங்கேற்றார். நீளம் பாய்தல் வீரரான அவர் ஒரு பாய்ச்சலைக் கூட சரியாகப் பாயவில்லை. கடைசியில் நாட்டை விட்டே பாய்ந்துவிட்டார்.

அவருடன் அணி முகாமையாளராகச் சென்ற வை.கே. குலரத்ன மற்றும் அவருடன் போட்டியில் பங்கேற்கச் சென்ற சாரங்கி டி சில்வா ஹோட்டலில் இல்லாத நேரம் பார்த்து தனஞ்சய அங்கிருந்து தனது பயணப் பொதிகளையும் எடுத்துக் கொண்டு நழுவிவிட்டார்.

கடைசியாக சாராங்கி டி சில்வாவுக்கு அவர், 'குட் பாய்' என்று குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பவும் தவறவில்லை.

26 வயதான கிரேஷன் தனஞ்சய சாதாரணமானவரல்ல, முப்பாய்ச்சலில் இலங்கையின் முதன்மையான வீரர், நீளம் பாய்தலிலும் அவரை விட்டால் ஆளில்லை.

2019 இல் கொழும்பு சுகததாச அரங்கில் நடந்த தேசிய தேர்வுப் போட்டியில் 16.71 மீற்றர் பாய்ந்து தேசிய சாதனையை படைத்தார். இது தேசிய சாதனை மாத்திரமல்ல தெற்காசிய சாதனையும் கூட. 2016 தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் ரஞ்சித் மஹேஷ்வாரி 16.45 மீற்றர் பாய்ந்த முப்பாய்ச்சல் சாதனையையே அவர் முறியடித்திருந்தார்.

இலங்கை இராணுவ விளையாட்டு கழகத்திற்காக ஆடிய அவர் நீளம் பாய்தலிலும் தேசிய வீரராவார். அவர் தூரம் பாய்தலில் 7.83 மீற்றர் பாய்ந்தது கனிஷ்ட பிரிவில் தேசிய சாதனையாக இருக்கிறது.



எனவே, அவர் காணாமல்போதல் என்பது அவர் மாத்திரமன்றி அவரது திறமையையும் இலங்கை பறிகொடுப்பதாக அர்த்தம். அந்தத் திறமையை வளர்க்க சிரமப்பட்டது அவர் மாத்திரமல்ல என்பதோடு அப்படியான ஒரு திறமையை மீண்டும் கொண்டுவர எத்தனை முதலீடு செய்ய வேண்டி இருக்கும்?

என்றாலும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் காணாமல்போவது இது ஒன்று புதிய கதையல்ல. ஆனால் தடகள வீரர் ஒருவர் வெளிநாட்டில் இப்படி காணாமல் போனது கடந்த 18 ஆண்டுகளில் இது முதல்முறையாகும்.

2005 தென் கொரியாவில் நடந்த மெய்வல்லுனர் போட்டியின் போது தடைதாண்டல் வீரர் இந்திக்க டி சில்வா, 100 மீற்றர் ஓட்ட வீரர் ரவிந்திர புஷ்பகுமார மற்றும் 400 மீற்றர் ஓட்ட வீரர் சுமின்த மெண்டிஸ் அங்கேயே தங்கிவிட்டார்கள்.



ஆனால் இலங்கையில் பொருளாதார நெருக்கடி தீவிரம் அடைந்திருந்த கடந்த ஆண்டு இங்கிலாந்தின் பெர்மிங்ஹாம் நகரில் நடந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்காக சென்ற இலங்கை குழாத்தில் இருந்து ஒன்பது வீரர்கள் மற்றும் முகாமையாளர் ஒருவர் திரும்ப வரவேயில்லை.

கடந்த 2021 ஒக்டோபரில் உலக சம்பியன்சிப் போட்டி ஒன்றுக்காக ஒஸ்லோ சென்ற இலங்கை மல்யுத்த முகாமையாளர் ஒருவர் அங்கேயே டாட்டா காட்டிவிட்டார்.

2014 ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்கு தென் கொரியா சென்ற இலங்கை வீரர்கள் ஓட்டம்பிடிக்க அவர்களை கண்டுபிடிக்கவே முடியவில்லை.

இலங்கையின் சமூக, பொருளாதார சூழலுக்கு மத்தியில் தனிப்பட்ட முறையில் பிழைப்புக்காக தவறான வழியிலேனும் நாட்டை விட்டு வெளியேற நினைப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது உண்மைதான், ஆனால் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாடு சென்று அங்கே காணாமல்போவதன் தாக்கம் என்பது அவர்களோடு நிற்பதல்ல.

எதிர்காலத்தில் விளையாட்டுக்காக வெளிநாடு செல்லும்போது வீரர்களுக்கு விசா பெறுவதில் சிரமங்களை ஏற்படுத்தும் நெருக்கடி இதனால் ஏற்படுகிறது. அது ஒட்டுமொத்த விளையாட்டு கட்டமைப்பையும் பாதிக்கும் ஒன்று.

கடந்த ஆண்டு பெர்மிங்ஹாமில் வீரர்கள் காணாமல் போனதை அடுத்து வெளிநாடு செல்லும் வீரர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விளையாட்டு அமைச்சு கொண்டுவந்திருந்தது. அதன்படி வெளிநாடு செல்லும் ஒவ்வொரு வீர, வீராங்கனைகளும் பிணை ஒன்றில் கையெழுத்திட வேண்டும். அதற்கு 10 இலட்சம் ரூபா பிணை மற்றும் இருவரின் சரீரப் பிணை தேவை.

ஆனால் இந்த கட்டுப்பாடுகள் எந்த அளவுக்கு வெற்றி தரும் என்பது தெரியவில்லை. இப்போது நாட்டை விட்டு வெளியேறியிருக்கும் கிரேஷன் தனஞ்சயவின் கதையை பார்த்தால், அவர் சுவிட்சர்லாந்து சென்றது தனிப்பட்ட அழைப்பில். இதற்கு தடகள சம்மேளனத்தின் தொடர்பு இல்லை. அந்த சம்மேளனம் போட்டியில் பங்கேற்பதற்காக அனுமதியை மாத்திரமே வழங்கி இருக்கிறது.

இதனால் அவர் காணாமல்போனதற்கு நாம் பொறுப்பில்லை என்று அது கைவிரித்துவிட்டது. நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் தனஞ்சயவுக்கு ஐந்து ஆண்டுகள் தடை விதிக்க சம்மேளனம் திட்டமிடுவதாக பேச்சு. அதுதான் இலங்கை தடகள சம்மேளனத்தினால் செய்ய முடியுமாக உள்ள உச்ச நடவடிக்கை.

எஸ்.பிர்தௌஸ்...

# திட்டப்படி ஆடும் இலங்கை




உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் இலங்கை அணி ஆடிய முதல் இரு போட்டிகளிலும் எந்த சவாலும் இருக்கவில்லை. ஐக்கிய அரபு இராச்சியத்தை 175 ஓட்டங்களால் வீழ்த்திய இலங்கை ஓமானை பத்து விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

அதாவது இந்தத் தொடருக்கு இலங்கை அணி வகுத்த திட்டம் இந்த இரண்டு போட்டிகளிலும் கச்சிதமாக இருந்தது. ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்ப விக்கெட்டுக்கு 95 ஓட்டங்களை பகிர்ந்துகொண்ட நிலையில் மத்திய வரிசை வீரர்கள் ஓட்டங்களை அதிகரித்தனர்.

ஆரம்ப வீரர்கள் விக்கெட்டை காத்து நிதானமாக ஆடிய பின் மத்திய வரிசையில் அந்த ஓட்டங்களை அதிகரித்து கடைசி நேரத்தில் வேகமாக ஓட்டங்களை பெறுவது தான் இலங்கையின் திட்டம்.

அதன்படி இலங்கை அணியால் அந்தப் போட்டியில் 50 ஓவர்களுக்கும் 355 ஓட்டங்களை பெற முடிந்தது.

திமுத் கருணாரத்னவை மீண்டும் அணிக்கு அழைத்ததன் நோக்கமும் இது தான். அவரும் அதற்கு ஏற்ப தமது விக்கெட்டை காத்து ஓட்டங்களை பெறுவது தெரிகிறது. அதேபோன்று முதல் வரிசை வீரர் குசல் மெண்டிஸ் அணிக்கு முக்கியமானவராக மாறியுள்ளார். மத்திய ஓவர்களில் ஓட்ட வேகத்தை அதிகரிப்பதில் அவர் தீர்க்கமானவர். சதீர சமரவிக்ரமவும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் 73 ஓட்டங்களை பெற்றதோடு ரன் அவுட் அவர் சதம் பெறுவதை தடுத்தது.

சரித் அசலங்க, தசுன் ஷானக்க மற்றும் தனஞ்சய டி சில்வா கடைசி ஓவர்களில் வேகமாக ஆட முக்கியமானவர்கள். அத்தோடு வனிந்து ஹசரங்கவும் அதிரடியாக ஆடக்கூடியவர்.

பந்துவீச்சில் ஹசரங்க ஆதிக்கம் செலுத்துவது நல்ல செய்தி. ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் அவர் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒருநாள் இன்னிங்ஸில் தனது சிறந்த பந்துவீச்சை பதிவு செய்ததோடு ஓமானுக்கு எதிரான போட்டியில் 13 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர உபாதையால் இந்த இரண்டு போட்டிகளிலும் ஆடவில்லை. என்றாலும் லஹிரு குமார மற்றும் கசுன் ராஜித்த எதிரணிக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் பந்துவீசுகிறார்கள். மஹீஷ் தீக்ஷன சற்று தடுமாற்றம் கண்டபோதும் அவர் எந்த நேரத்திலும் தனது ஆட்டத்திற்கு திரும்பக் கூடியவர்.

இந்த நிலையில் இலங்கை ஏ அணிக்காக சோபித்த மூன்று வீரர்கள் மேலதிக வீரர்களாக சிம்பாப்வே அனுப்பப்பட்டுள்ளனர். இதில் வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க அனுப்பப்பட்டிருப்பது பொருத்தமான முடிவு. அதேபோன்று துனித் வெள்ளாலகே மற்றும் சஹன் ஆரச்சிகே ஆகியோர் மேலதிக வீரர்களாக சென்றுள்ளனர். எனினும் இவர்கள் இலங்கை குழாத்தில் மேலதிக வீரர்களாகவே இருப்பார்கள் என்பதோடு ஐ.சி.சி ஒப்புதல் இன்றி அணியில் இணைத்துக் கொள்ள முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

தகுதிகாண் போட்டி என்பது மிக நீண்ட தொடர் ஒன்றாக இருப்பதோடு, வீரர்களுக்கு காயம் ஏற்பட்டு மாற்று வீரரை அழைக்க வேண்டிய சூழலில் இந்த வீரர்கள் பயன்படுவார்கள்.

முதல் இரண்டு போட்டிகளையும் பார்க்கும்போது இந்த உலகக் கிண்ண தகுதிகாண் தொடர் இலங்கைக்கு நினைத்ததை விடவும் இலகுவானதாக தெரியும். என்றாலும் எதிர்வரும் போட்டிகளை பார்க்கும்போது அதனை அத்தனை இலகுவாகவும் எடுத்துக் கொள்ள முடியாது.

இலங்கை அணி இன்று (25) குழு நிலையில் அயர்லாந்தை எதிர்கொள்ளவிருப்பதோடு தொடர்ந்து ஜூன் 27 ஆம் திகதி ஸ்கொட்லாந்துடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. பி குழுவில் இலங்கை அணி முதலிடத்தில் இருக்கும் நிலையில் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறுவது சவாலானதாக இருக்காது.

என்றாலும் சுப்பர் சிக்ஸ் சுற்றில் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேற போட்டியை நடத்தும் சிம்பாப்வே, மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். இறுதிப் போட்டிக்கு முன்னேறினாலேயே இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற முடியும்.

எனவே, இலங்கை எந்தப் போட்டியையும் இலகுவாகக் கருதுவது நல்லதல்ல.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# வேலி



கவிதா தரம் பதினொன்றில் கல்வி கற்கிறாள். வகுப்பில் எல்லோருடனும் கல கலப்பாக பழகும் கவிதாவின் நிறம் கொஞ்சம் கம்மிதான். என்றாலும் அவள் அழகில் குறை சொல்ல முடியாது. ஏழைக் குடும்பத்தில் பிறந்ததுதான் அவள் செய்த குற்றம். அவளது தாய் நல்லம்மா அப்பம் சுட்டு கிடைக்கும் அன்றாட வருமானத்தில் அவர்கள் வாழ்க்கைச் சக்கரம் நகர்ந்து கொண்டிருக்கிறது.

கடற்கரை வலை வாடிக்கு வேலைக்கு போய் வரும் கவிதாவின் தகப்பன் கதிராமன் மீன் பிடிபடாத நாட்களில் தளவாய் பக்கம் போய் விறகு விற்று வரும் பணத்தை நல்லம்மா கையில் அப்படியே கொடுப்பான். ஒருநாள் விறகு வெட்டி கொண்டு இருக்கும் போது காட்டு யானை அடித்ததில் அவன் உடல் சிதைந்து பலியாகிப் போனான்.

சோகங்களை சுமந்த அந்தக் குடும்பம் பிழைக்க வழியின்றி தவித்தது. குடும்பத்தை காப்பாற்ற வேறு வழியில்லாமல் நல்லம்மா பாலப்பம் சுட்டு விற்க ஆரம்பித்தாள். குடும்பத்தின் ஆணி வேரான கவிதாவின் பாட்டி முதுமையோடு கடைசிக் காலத்தை மெல்ல உருட்டிக் கொண்டிருக்கிறாள். பாட்டியின் முதியோர் தாபரிப்பு பணம் கிடைப்பது குடும்பத்துக்கு ஓரளவு உதவி செய்கிறது.

"கவிதா பக்கத்து வீட்டு அன்ரி அப்பம் கேட்டவ நான் எடுத்து வைத்திருக்கன். இத நீ கொண்டு போய் கொடுத்து விடன்" நெருப்பு எரியாமல் புகைந்து கொண்டிருந்த அடுப்பினுள் சில உடைத்த சிரட்டைத் துண்டுகளை திணித்தபடி சொன்னாள் நல்லம்மா.

வீட்டின் வடக்கு மூலையில் இருக்கும் ஓலைக் குடிசைதான் நல்லம்மாவின் அப்பம் சுடும் அடுப்படி. அதுவும் கரிப்புகை படிந்து கருமை மெருகேறி கவிதாவின் குடும்பத்தை பற்றிப் பிடித்திருந்த வறுமை போல காணப்பட்டது. குடிசைக்குள் இருந்து அடுப்பின் புகை கூரைக் கிடுகை ஊடறுத்து கூரைக்கு மேலால் எழுந்தது. "அந்த அடுப்பு எரியா விட்டால்..அவர்கள் வயிறும் எரியும்". அந்த குடிசையுள் ஒரு மின் குமிழ் புகை படிந்ததால் மெல்லிதாய் மின்னிக் கொண்டு இருந்தது. அவர்களது வீட்டின் பெட்டை நாய் வாசலில் வாலை சுருட்டிய படி எப்போதும் சுருண்டு படுத்திருக்கும். அப்பம் வாங்க யாராவது வந்தால் தலையை நிமிர்த்தி பார்த்து வெள.. வெள என சத்தமாக குரைக்கும். அப்படித்தான் அன்று காலை யாரோ அப்பம் வாங்க வர நாய் சத்தமாகக் குரைத்தது. "அடிய்..ய்" நல்லம்மாவின் அதட்டலில் நாய் அடங்கிப் போனது.

"நீங்க என்னம்மா..எனக்கு நேரம் போகுது ஸ்கூலுக்கு. நான் இன்னும் வெளிக்கிடல்ல அதுக்குள்ள எனக்கு வேல சொல்லுறீங்க". சிணுங்கினாள் கவிதா. " வயது வந்த பிள்ள வீடுகளுக்கு எங்கும் அனுப்பாத. உனக்கும் உலகம் எதுவும் தெரியாது". வீட்டு விறாந்தையில் குந்தியிருந்த கவிதாவின் பாட்டி வாயில் குதப்பிய வெற்றிலை எச்சிலை பக்கத்திலிருந்த சிரட்டையில் "பொக்.." என துப்பி விட்டு சொன்னாள். "அம்மா நீ எதையாவது கதச்சுக் கொண்டு என்னை குழப்ப வேணாம் எனக்கும் நிறைய வேலயிருக்கு. அப்பத்தை கடைகளுக்கு நான் கொண்டு போய் கொடுக்கணும் பேசாமல் இருங்க". "என்ட சொல் அம்பலத்துக்கு ஏறுமா". பாட்டி புறபுறுத்தாள். "புள்ள.. கவிதா இத மட்டும் நீ போய் கொடுத்து விட்டு வா. நேரத்துக்கு அவங்க வேலைக்கு போறவங்க.. மற்ற வேலைய நான் பாக்கிறன். இன்னும் கொஞ்சம்தான் பானைக்குள்ள இருக்கிற கரைச்ச மா முடிஞ்சிடும்".

நகரத்தில் இருந்து ஐந்தாறு கி.மீ தூரத்தில் உள்ள கிராமம் அது. அங்கு உள்ள பாடசாலை சற்று தூரத்தில் இருந்தாலும் கல்வி அபிவிருத்தியில் இன்னமும் பின் தங்கிய நிலையில் உள்ளது. அங்குதான் கவிதாவும் படிக்கிறாள். அன்று காலை அந்தப் பாடசாலை ஆசிரியர் முருகேசனை பொலிஸ் கைது செய்து விளக்க மறியலில் வைத்த செய்தி அந்தப் பகுதி எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

முருகேசன் மாஸ்டர் மூணு வருடங்களுக்கும் மேலாக அந்த பாடசாலையில் விஞ்ஞான பாடம் கற்பிக்கிறார். அவருக்கு வயது நாற்பதுக்கு மேல இருக்காது. தனியார் கல்வி நிலையங்கள் சிலவற்றில் விஞ்ஞான பாட ரீயுசன் மாஸ்டராக நல்ல சம்பாத்தியமும் பெறுகிறார். திருமணமான அவருக்கு வளர்ந்த பிள்ளைகளும் இருக்கின்றனர். அவரை பொலிசார் கைது செய்தது காட்டுத் தீ போல வேகமாகப் பரவ கல்வி அதிகாரிகள் குழுவொன்று விசாரணைக்காக அன்றே அந்தப் பாடசாலைக்கு விரைந்தது. "இந்த வாத்தியை எப்பவோ பொலிஸில் பிடித்துக் கொடுத்திருக்க வேணும் இப்பதான் மாட்டி இருக்கான்". "சே..இவனெல்லாம் ஒரு வாத்தியா தூ..". "வேலியே பயிரை மேய்ந்தால் யாரப்பா..பாதுகாப்பு வழங்க முடியும்" பாடசாலைக்கு முன் குழுமி இருந்த பாடசாலை சமூகத்தினர் மத்தியில் அந்த சம்பவத்தின் பிரதிபலிப்புக்கள் சுடு வார்த்தைகளாய் பிரவாகம் எடுத்தது.

மாணவிகளோடு முருகேசன் பழகும் விதம் குறித்து ஆசிரியர்கள் சிலர் சந்தேகத்தோடும் பார்த்தனர். "பாலா சேர் நம்ம பத்தாம் வகுப்பு 'ஸ்டுடண்ட்' கவிதாவுடன் முருகேசன் சேர் பழகுவது அவ்வளவு நன்றாக இல்ல. நாம்தான் முருகேசனுக்கு புரிய வைக்க வேணும்". "விடுங்க சேர் சிலரை திருத்த முடியாது" ஆசிரியர்கள் சந்திக்கும் போது இது பற்றி கதைத்துக் கொள்வதுடன் நின்று விடும். அன்று விஞ்ஞான ஆய்வு கூடத்திற்குள் தற்செயலாக நுழைந்த புவனா ரீச்சர் அங்கு அரங்கேறிய காட்சியை கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனாள். முருகேசன் மாஸ்டரும் கவிதாவும் மிக நெருக்கமாக அங்கு நின்றனர். "ஓ..வேலியே பயிரை மேயுதா" உள்ளம் குமுறினாள் புவனா ரீச்சர். அருவருப்போடு முகத்தை சுளித்து "சீய்..ய்" திட்டிய படி திரும்பினாள். ஒருவாறு சமாளித்தான் முருகேசன். முகம் கொடுக்காமலே உடனே திரும்பி விட்டாள் புவனா ரீச்சர்.

ஆய்வுகூட சம்பவம் ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டத்தில் எப்படியோ கசிந்து விட்டது. அந்த பாடசாலையில் கற்பிக்கும் சில ஆசிரியர்கள் மனதில் முருகேசன் மாஸ்டர் பற்றிய சந்தேகங்கள் மேலும் வலுத்தாலும் அவர்கள் அந்த விடயத்தில் அக்கறை காட்டிக் கொள்ளவில்லை. கவிதாவின் வீட்டில் அவளது தாயும், பாட்டியும் இருப்பதை கவிதா மூலம் தெரிந்து வைத்திருந்தான் முருகேசன். பாடசாலை "இன்ரவல்" நேரத்தில் வெளியில் போன முருகேசன் கவிதாவின் வீட்டுக்கும் போய் வந்ததை கண்ட பாலா சேர் தனக்கு நெருக்கமான செல்வா சேருடன் அந்த விடயத்தை பகிர்ந்து கொண்டார்.

கவிதா பத்தாம் வகுப்பு படிக்கும் போது முருகேசன் மாஸ்டர் அவளிடம் காட்டிய ஈடுபாட்டைக் கண்டவர்கள் அதனைத் தவறாக நோக்கினர். அந்நிலை பதினொராம் வகுப்பு வரை நீடித்து. கவிதாவின் வீட்டுக்கு முருகேசன் மாஸ்டர் போய்வரும் அளவுக்கு அது விசாலமாகிய போதுதான் அங்கு பிரளயமே வெடித்தது.

கவிதாவின் தாய் நல்லம்மாவுக்கு காலை ஏழு மணியுடன் அப்பம் சுடும் வேலை முடிந்து விடும். அப்பம் சுடும் போதே வழமையாக வாடிக்கையாளர் வந்து அப்பம் வாங்க விற்பனை வீட்டில் தொடங்கிவிடும். "ம்மா..நான் ஸ்கூலுக்கு போறன். அம்மம்மா நீ எங்க இருக்க. நான் போறன்". கவிதா இருவரிடமும் சொல்லி விட்டு பாடசாலைக்கு கிளம்பி விட்டாள். "இவள..திருத்த முடியாது எப்பவும் இப்படித்தான் 'போயித்து வாறன்' என்று சொல்ல வேணும் என்று சொன்னாலும் கேட்க மாட்டாள் போறன் எண்டுதான் சொல்லுவாள்". அலுத்துக் கொண்டாள் பாட்டி. சகுனம் பார்ப்பதில் அதீத நம்பிக்கை கொண்டவள் பாட்டி. "அம்மா அப்பத்தை நான் கொடுத்து போட்டு மாக்கட்டுக்கு போய் கறி சாமான் வாங்கித்து வாறன். நான் வந்து சமைக்கிறன் நீங்க சும்மா இருங்க". அவசரமாக கிளம்பி போய் விட்டாள் நல்லம்மா.

"கவிதா முருகேசன் சேர் எங்கடி இன்னும் வகுப்புக்கு வரல்ல ". "போடி சும்மா இருக்க மாட்டியா..நீ போய் பாரு". "நீதான்டி மொனிற்றர்" கவிதாவின் அருகில் இருக்கும் நண்பி கலாய்த்தாள். கவிதா இப்போது ஸ்கூலுக்கு இடையிடை வராமலும் நின்று விடுவாள். அவள் நடத்தையில் சிறு மாற்றம் இருப்பதை அவள் நண்பி கண்டாள். "கவிதா ஏண்டி நேற்று ஸ்கூலக்கு வரல்ல". "அம்மம்மா சுகமில்லாம இருந்தவ.. அதுதான் நான் வரல்ல". "ஏன்... உன் அம்மா எங்கடி.." "அவ அப்பத்தை எடுத்துக் கொண்டு போய் வித்துப் போட்டு வர பன்னிரண்டாகும். என்ன செய்வது நான்தான் வீட்டில நின்று அம்ம்மாவ பாக்கோணும்".

பாடசாலை அதிபர் கந்தசாமியருக்கு முருகேசன் மாஸ்டர் மேல சின்னதாக ஒரு சந்தேகம் இருந்தது. "மாணிக்கம் முருகேசன் மாஸ்டரை வரச்சொல்லி விடு" அலுவலக பணியாளரை பணித்தார் அதிபர். "சேர்.. என்னை வரச் சொன்னனீங்களா" "வாங்க உங்களோடு நான் கொஞ்சம் கதைக்க வேணும்". "முருகேசன்... நேரடியாவே நான் சில விடயங்களை சொல்லது நல்லது என நினைக்கிறன். நீங்க அந்த ஸ்டுடண்ட் கூட நெருக்கமாக பழகுவதும், அவள் வீட்டுக்கு போய் வருவதும் அழகல்ல. "முருகேசனுக்கு பளார் என கன்னத்தில் அறைந்தது போல் உறைத்தது. " சேர் அவங்கள எனக்கு நல்லாத் தெரியும் அதனால் போய் வந்தன் சேர்". சமாளித்தார் முருகேசன். "நீங்க இப்படி சொல்வது சரியல்ல.. உங்கள் தனிப்பட்ட விடயங்கள வெளியே வைத்துக் கொள்ளுங்க. என்னால் இவ்வளவுதான் சொல்ல முடியும்" அதிபர் அத்தோடு நிறுத்திவிட்டார்.

"அந்த மாஸ்டர் தம்பி ஏன் பிள்ள நம்ம வீட்டுக்கு வந்து போகுது. நாம ஆண் துண இல்லாத வீடு". பாட்டிக்கு முருகேசன் வீட்டுக்கு வருவது கவிதாவோடு கதைப்பது எதுவும் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அன்றும் அதுதான் நடந்தது. கவிதா பாடசாலைக்கு போகவில்லை. அதை சாக்காக வைத்து கொண்ட முருகேசன் 'இன்ரவல்' நேரத்தில் கவிதா வீட்டுக்குப் போனான். முருகேசன் நடத்தையை கூர்ந்து அவதானித்து வந்த பாடசாலைச் சமூகம் பொலிசுக்கு தகவல் வழங்கியது. திடீரென வந்த பொலிஸ் முருகேசனைக் கைது செய்தது. அவர் அதனை எதிர்பார்க்கவில்லை. நடந்த சம்பவத்தால் அதிர்ச்சியில் உறைந்து போனார் அதிபர். "திருந்தாத ஜென்மங்களை ஒரு போதும் திருத்தவே முடியாது சேர் நீங்கள் அழைக்கும் போது நான் விசாரணைக்கு வரத் தயாராக இருக்கிறேன் சேர்". பொலிஸ் இன்ஸ்பெக்டர் புரிந்துகொண்டார். பொலிஸ் ஜீப்பில் முருகேசன் ஏற்றப்பட்டார். பாடசாலையில் அந்த நிமிடமே அமைதி குலைந்து போனது ."உப்பை தின்றவன் தண்ணி குடித்துத்தானே ஆக வேணும்". நிலைமையை ஜீரணிக்க முடியாத ஆசிரியர் ஒருவரின் குமுறல் அங்கு சுடு வார்த்தைகளாக வெடித்தது. "முருகேசன் மாஸ்டருக்கு இனி வேலையும் பறி போய் விடும். இதற்கு பிணையும் கிடைக்காது". "அதுதான் சரியான தண்டனை. இவனைப் போன்றவர்கள் கட்டாயம் ஸ்கூலில் இருந்து களையெடுக்கப்பட வேண்டியவர்கள்". அங்கு குழுமி நின்றவர்களில் சில பேர் பேசிக் கொண்டனர்.

"ஏழைகளுக்கு கல்விதானே மூலதனம் அதையும் கெடுத்து விட இவனைப் போன்றவர்களும் இருக்கிறார்கள். நீங்கள்தான் சரியான நடவடிக்கை எடுக்க வேணும். அந்தப் பிள்ள என்னதான் பாவம் செய்தாளோ அவளின் வாழ்க்கையில் மண்ண அள்ளிப் போட்டு விட்டான். முருகேசனை பொலிஸ் நிலையத்தில் இருந்து பிரச்சனையின்றி மீட்டெடுக்க முருகேசன் சார்ந்த குழுவினர் கடும் பிராயத்தனம் எடுத்தனர். அவர்கள் பொலிஸ் இன்ஸ்பெக்டரை சந்தித்தனர். "எதுவும் செய்ய முடியாது நாளை பத்து மணிக்கு கோர்ட்டில் ஆஜர்படுத்திவிடுவம். கோர்ட்டுக்கு வாங்க". முடிவாகவே சொல்லி விட்டார் இன்ஸ்பெக்டர் ."சேர் கோர்ட்க்கு போனா இதிலிருந்து தப்பவே முடியாது எங்களுக்கு அது புரியுது.. வழக்கு போடாமல் எடுக்க ஏதாவது வழி இருந்தா சொல்லுங்க சேர்". பொலிஸ் அதிகாரியோடு மிக நெருக்கமான ஒருவர் கெஞ்சி நின்றார். "எந்த வழியும் இல்லதான் ஆனால் ஒரு வழியிருக்கு. சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வந்து 'எங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று வாக்கு மூலம் கொடுத்தால் வழக்கு போடவும் கோட்டுக்கு பாரப்படுத்த வேண்டிய அவசியமும் இருக்காது . "அம்மா உங்களோடு நாங்க கொஞ்சம் கதைக்க வேணும் நீங்கதான் உதவி செய்யணும்". நல்லம்மா எதிரில் இருவர் மண்டியிடாத குறையாய் கெஞ்சி நின்றனர். அழுதழுது கண்ணீர் காய்ந்து போய் வாசலில் குந்தி இருந்த நல்லம்மா நிமிர்ந்து பார்த்தாள். வீட்டுக்கு வந்திருந்த இருவரும் முருகேசன் மாஸ்டருக்கு மிக நெருக்கமானவர்கள் என்பது புரிந்து போனது. "சொல்லுங்க" என்றாள் நல்லம்மா.

"நாங்க காலையில நடந்த பிரச்சினை பற்றி கதைக்க வேணும்" "இனி என்ன கதைக்க போறயள். எங்களால வெளிய தல காட்ட முடியல்ல. நான் சொன்னத என்டமகள் கேட்டிருந்தா இவ்வளவு பிரச்சினை வந்திருக்குமா இப்ப தலைக்கு மேல..வெள்ளம் போயித்து. அத இனி பொலிஸ் பாக்கட்டும்". வீட்டு விறாந்தையில் குந்தியிருந்த பாட்டியின் உறுதியான வார்த்தைகளால் உடைந்து போயினர் வந்தவர் இருவரும். "அம்மா நீங்க கொஞ்சம் பேசாம இருங்க வந்தவர்கள் கதைகட்டும் .." தாயை அடக்கினாள் நல்லம்மா. கவிதா அறைக்குள் அழுதபடி முடங்கிக் கிடந்தாள். "நடந்த சம்பவம் எங்களுக்கு வேதனையை தருது. பொலிஸ் வரை இது போய்விட்டது. கோட்டுக்கு போனால் இரண்டு பகுதியிலும் அவமானம் தான் மிஞ்சும். இதால பிள்ளையின் எதிர்காலம் பாழாப் போகும்". "இன்னும் என்ன இருக்கு அதுதான் பாழாக்கி போட்டானே அந்த வாத்தி இதைத்தான் நீங்க சொல்ல வந்தீங்களோ". பாட்டி கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டினாள்.

"இஞ்ச பாருங்க நிலைமை இப்ப கைமீறி போகுது. இத உடனே சரி செய்து முடிக்க வேணும் கோட்டுக்கு போய் விட்டால் பிறகு எதுவும் செய்ய முடியாது. அதுமட்டுமல்ல முருகேசன் மாஸ்டருக்கு ஆசிரிய தொழிலும் போய் விடும். இந்தப் பிள்ளையும் படிக்கிற வயசில் கோட்டுக்கு ஏறி இறங்கினா நல்லாவா இருக்கும். யோசிச்சு பாருங்க. நீங்க மட்டும் பொலிசுக்கு வந்து எந்த பிரச்சனையும் இல்ல என... ஒரு கையெழுத்து வைச்சா போதும். பிள்ளைய வேற ஸ்கூலில் விட்டு படிப்பிக்க வைக்கிறது எங்கள் பொறுப்பு. இத வைச்சு கொள்ளுங்க". அது சில இலட்சங்கள் கொண்ட பணப்பொதி. திகைத்து போனாள் கவிதாவின் தாய் நல்லம்மா. பாட்டிக்கு பேச நா எழவில்லை. அங்கு அரங்கேறும் நிகழ்வுகளை அவதானித்த படி வெற்றிலை பாக்கை..வாயில் போட்டு மென்றுகொண்டிருந்தாள். "அம்மா சீக்கரம் நாங்க திரும்பவும் வாறம் வெளிக்கிட்டு ஆயத்தமாக இருங்க..."

ஆனால் நல்லம்மா தனது முடிவில் உறுதியாக இருந்தாள். தனது மகளுக்கு நேர்ந்ததற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள். முருகேசன் தனது தவறுக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டும். அதில் எந்த விட்டுக் கொடுப்புக்களுக்கும் இடமிருக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்து விலக அவள் தயாராக இல்லை.

**வெல்லாவெளி விவேகானந்தம்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 75



திரு/திருமதி.செல்வி ........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ........................................

........................................

........................................

........................ ........................

திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 75
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 75

### இடமிருந்து வலம்

1. அடையாளம்
3. ஒரு தமிழ் மாதம்
6. இந்தியாவிலுள்ள ஒரு நதி
7. கணிதத்தில் வரும் கழித்தல் குறியீடு
8. வேதனைதரும் துன்புறுத்தல்
9. ஊதியம் (குழம்பியுள்ளது)
11. நிலத்துக்கு அடியிலான ஆழமான பள்ளம் (திரும்பியுள்ளது)
13.பல்லக்கு
15. சூரியன்
17.பெரும் ஏற்பாடுகளுடன் நடத்தப்படும் நிகழ்ச்சி (திரும்பி யுள்ளது)
18. அளவுக்கு மிஞ்சி மது அருந்துபவன் குழம்பிவிட்டான்.
21. வான்வழி போக்குவரத்துச் சாதனம் ( குழம்பியுள்ளது)
23. ஒருவகைத் தானியம்
24. விஷமுள்ள ஜந்து

### மேலிருந்து கீழ்

1. ருசி
2. பிரிவு அல்லது கூறுபாடு
3. சந்தேகம்
4. எழுபத்தைந்து வருட நிறைவுக் கொண்டாட்டம்.
5. மயானத்தில் தகனம் செய்யப்படும் அமைப்பு
7. ஒருவகை அரிசி
9. எப்போதும்
10. உணவருந்தத் தூண்டும் உணர்வு
11. உறுதியான நிலை (குழம்பியுள்ளது)
12. வண்டினத்தைச் சார்ந்த விஷமுள்ள உயிரினம் (குழம்பியுள்ளது)
14.காவல்துறையினர் குற்றவாளியைக் கைதுசெய்யும்போது இதனைப் பயன்படுத்துவர்
16. சுலபமாக இல்லாதது
19. இது ஒரு காட்டு விலங்கு (தலைகீழ்)
20. சுமை (குழம்பியுள்ளது)
22. பூமி (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 74

### விடைகள்

| இடமிருந்துவலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. புதல்வன் | 16. கன்னி | 1. புகார் | 14. கர்வம் |
| 5. வாவி | 17. ஊதா | 2. தலை | 15.புனிதம் |
| 7. காலை | 19 வலி | 3. வசதி | 17. ஊகம் |
| 8. சமாதானம் | 20. மானம் | 4. மான் | 18. தானம் |
| 10. ஆதி | 21. காந்தம் | 5. வானரம் | 19. காலி |
| 11. மரம் | 22. சுகம் | 6. விம்மல் | 20 மாசு |
| 12. ஆம்பல் | | 9. ஆதாயம் | |
| 13. ஆர்வம் | | 10.ஆடவன் | |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 74

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **எம்.எச்.சி.என். சம்ரா,** 411, அளுத் வீதிய, வெலிகம | **ரதி சிவசீலன்,** நீர்வேலி வடக்கு நீர்வேலி | **எம்.ஏ.எச்.எம். வஃபா.,** வெடிங் ரிங், 517, காலி விதி, கொழும்பு 04 |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ். கிருஷ்ணராஜா** மட்டக்களப்பு.
2. **அப்துல் வாஹித்** பதுளை.
3. **எஸ். சித்தி உம்மா** ஓவத்த.
4. **எம்.ஏ. நஜிமுத்தீன்** அக்கரைப்பற்று.
5. **எம்.எம் சஷாட்** மருதமுனை.
6. **எம்.எம்.எம் லெப்பே** பதுளை.
7. **கே. ராஜனேஷ்வரி** மல்வத்தை.
8. **எம்.பி.அகிலன்** திருகோணமலை.
9. **சாஹா ஹனீம்** துல்ஹிரிய.
10. **அஸ்ரா மூஜீப்** பண்டாரகம.

# வாரபலன்



25.06.2023 - 01.07.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

மேஷ இராசிக்கு 3ஆம் இடத்தில் சூரியன் இருக்கிறார். அவரோடு புதனும் இருக்கிறார். அது தைரிய ஸ்தானம் என்பதால் பேச்சு மற்றும் செயலில் மாறுபாடுகள் இருக்கும். புதன் வலுவாக இருப்பதால் கல்வி கேள்விகளில் சிறப்பு இருக்கும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் பத்திரிகைப் பிரிவில் வேலை செய்பவர்களுக்கு ஆதாயம் உண்டு. எதையும் பிரித்துப் பார்த்து சரியான விஷயத்தைத் தேர்ந்தெடுத்துச் செய்வதில் உங்கள் வெற்றி அமையும். வேலை தேடுபவர்கள், குறிப்பாக அரசு வேலைக்கு முயற்சி செய்பவர்கள் வெற்றி அடைய வாய்ப்புண்டு. இராசியில் ராகு இருப்பதால் பண வரவு உண்டு. தொழில் விஸ்தரிப்பு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். நிலம் வண்டி வாகன யோகம் உண்டு.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

கேந்திர அதிபதியான சூரியன் புதனோடு இணைந்து உங்கள் இராசிக்கு 2 இல் அதாவது குடும்ப ஸ்தானத்திலிருந்து தனுசு இராசியைப் பார்வையிடுகிறார். மிகவும் வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்குவீர்கள். செயல்களுக்கான பலன்கள் விரைந்து கிடக்கும். உங்கள் நோக்கம் நிறைவேறும் வாய்ப்பு உண்டு. புதிய தொழில்களைத் தொடங்கினால் வெற்றி பெறலாம். பெரியவர்கள் ஆசி உண்டு. பயணங்களால் நன்மை உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டு. சகல காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். குரு இணைந்திருப்பதால் செலவுகளை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். 6 இல் உள்ள கேதுவால் நற்பலன்கள் உண்டு. விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி உண்டு.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

சந்திரனுடைய நிலைப்பாடு மற்றும் சூரியனுடைய நிலைப்பாடு சில சாதகமான பலன்களை உங்களுக்கு ஏற்படுத்தித் தரும். இராசிநாதன் புதன். அவர் ஸ்தானத்தில் இருக்கிறார். அவரோடு சூரியனும் இணைவு பெறுகிறார். மிகுந்த கவனத்துடனும் திட்டமிடலும் இருந்தால் தாமதமின்றி செயல்களை முடித்துக் கொள்ளலாம். 2ஆம் இடத்தில் சுக்கிரனும் செவ்வாயும் இருப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும். செயலூக்கம் பெருகும். முடிக்கப்படாத வேலைகள் முடியும். வீட்டில் சுபகாரியங்கள், குறிப்பாக திருமண விஷயங்கள் சாதகமாக முடியும். வெளிநாடு விடயமாக முயற்சி செய்பவர்கள் வெற்றி பெற வாய்ப்புண்டு. நினைத்த காரியங்கள் நிறைவேறும். பொருளாதார ஏற்றமும் கிடைக்கும்.

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

இராசிநாதன் சந்திரன் நிலை மற்றும் சூரியனுடைய நிலை உங்களுக்குச் சாதகமான பலன்களைத் தரும். நல்ல நிகழ்வுகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். தந்தை வழியில் பல உதவிகள் கிடைக்கும். அரசு சார்ந்து வாய்ப்புகள் பெறுவீர்கள். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். பத்திரிகை, தொழில்நுட்பம், நுண்ணறிவு பிரிவு போன்றவற்றில் பணிபுரிபவர்களுக்கு பிரகாசமான வாய்ப்புண்டு. எதிர்பாராத சில நல்ல விடயங்கள் நடைபெறும். ஆத்மகாரகனான சூரியன் புதனோடு இருப்பது பல அரிய வாய்ப்புகளை பெற்றுத் தரும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

இராசிநாதன் சூரியன் பலமாக 11ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் புதனோடு இணைந்திருக்கிறார். வாரம் முழுவதும் சுறுசுறுப்போடு செயல்படுவீர்கள். மிகுந்த வேகமும் உற்சாகமும் செயல்களில் இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்களை பாராட்டுவார்கள். நீங்கள் நினைத்த உயரத்தை அடைவதற்கு இம்மாதிரியான சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பலருக்கு பரிசுப் பொருட்களும் சம்பள உயர்வும் கிடைக்க வாய்ப்புள்ளது. கௌரவமும் மதிப்பும் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் லாபகரமாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும். அதற்குத் தகுந்தவாறு திட்டமிடுங்கள். அரசாங்க வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு வேலை கிடைத்துவிடும்.

## கன்னி

(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)

ஆத்மகாரகன் சூரிய பகவான் கர்ம, தொழில் ஸ்தானத்தில் பலமுடன் இருப்பது நல்லது. தொழில் விஸ்தரிப்பு முயற்சிகள் பலனளிக்கும். உத்தியோகத்தில் கௌரவமும் பாராட்டும் கிடைக்கும். நண்பர்கள் உதவுவார்கள். காரணம், செவ்வாய் 11ஆம் இடத்தில் இருக்கிறார். சகோதரர்கள் உதவி உண்டு. கணவன் மனைவி ஒற்றுமை நீடிக்கும். உங்களுக்குள்ள உரிமை கவுரவத்தை நிலை நாட்டுவீர்கள். கோயில், குளம், புனிதப் பயணம் போன்றவற்றை மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. பெரியோர்களின் ஆசி உண்டு. ஆறாம் வீட்டில் சனி உலவுவதால் நினைத்த காரியத்தில் வெற்றி உண்டு. எட்டில் உள்ள ராகுவால் நன்மை உண்டு.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

சுக்கிரனுடைய இராசியான துலா இராசி நேயர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கம் இல்லாத மிகுந்த சிக்கலை தராத நல்ல வாரமாக அமையும். இராசி அதிபதியான சுக்கிரன் ராசிக்கு 10ஆம் இடத்தில் சஞ்சரித்தாலும் பெரிய தீமையைச் செய்ய மாட்டார். கட்டுமானத் தொழில்கள், இரசாயன தொழில்கள் நல்ல முறையில் நடைபெறும். கடல் கடந்து செல்ல வாய்ப்பு உண்டு. புதன் ஆட்சி பெற்று இருப்பதால் தகவல் தொழில் நுட்பம், ஐ.டி, பத்திரிகை துறையில் உள்ளவர்களுக்கு ஆதாயம் உண்டு. சுக்கிர பலத்தால்கலைத்துறையில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

ஆத்மகாரகன் சூரியனும் மனோகாரகன் சந்திரனும் இந்த வாரத்தை உங்களுக்கு நல்ல முறையில் அமைத்து தருவார்கள். இராசிக்கு 8ஆம் வீட்டில் புதனோடு சூரியன் சஞ்சரித்து 2ஆம் இராசியைப் பார்க்கிறார். ஆழ்ந்த சிந்தனை செயல்களில் சற்று தாமதத்தைத் தந்தாலும் வெற்றியைத் தரும். சில எதிர்பாராத சவாலான விஷயங்களைச் செய்ய வேண்டி இருக்கும். மனைவி மற்றும் மனைவி சார்ந்த உறவினர்களால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவ மாணவிகள் அவர்கள் விரும்பிய துறையை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு உண்டு. பிரபல மானவர்கள் சந்திப்பு நிகழும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

பெரும்பாலான கோள் நிலைகள் சாதகமாக இருப்பதால் உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிர்மறை செயல்கள் மாறி நல்ல விஷயங்கள் நடக்கும். உங்களைத் தவறாக நினைத்தவர்கள் புரிந்து கொண்டு வருத்தம் தெரிவிப்பார்கள். திருமண முயற்சிகள் முதலில் சுபகாரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகம் தொழில் சார்ந்த விஷயத்தில் நல்ல மாற்றங்கள் வரும். பதவி உயர்வுக்கான வாய்ப்புண்டு. மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்பு உண்டு.

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

## மகரம்

ஆத்ம காரகனான சூரியனும் உடல் காரகனான சந்திரனும் இந்த வாரத்தை சாதகமான வாரமாக மாற்றித் தருவார்கள். 6ஆம் இராசியில் சூரியன் புதனோடு இருக்கிறார். புதிய முயற்சிகள் மற்றும் புதிய தொழில்களில் நாட்டம் பிறக்கும். புதிய விஷயங்களைச் செய்வதில் ஆர்வம் ஏற்படும். ஆன்மிக பணிகளிலும் செயல்களிலும் ஆர்வம் அதிகரிக்கும். திருமணம் முதலிய சுபகாரியங்கள் நடைபெறும் வாய்ப்பு அதிகரிக்கும். அரசியலில் இருப்பவர்கள் ஆதாயம் அடைவார்கள். உங்களுக்குச் சாதகமான இரண்டு கிரகங்கள் இருக்கின்றன. ஒன்று புதன் இரண்டு சுக்கிரன். இவர்களின் அமைப்பினால் நல்ல உற்சாகமான எண்ணங்கள் உருவாகும்.

## கும்பம்

(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்) இராசியில் சனி பகவான். 3 ஆம் வீட்டில் குரு பகவான். 5ஆம் வீட்டில் சூரியன் புதன் என்ற கோளமைப்பு இந்த வாரத்தை முடிவு செய்கிறது. உத்தியோகம், தொழில் முதலியவற்றில் எந்தத் தொந்தரவும் இல்லை. அது முன்னேற்றமாக நடக்கும். வண்டி, வாகனங்கள், நிலம், வீடு முதலியவை வாங்கும் வாய்ப்பு உண்டு. சுறுசுறுப்பும் ஆரோக்கியமும் நன்றாகவே இருக்கும். சில நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இவ்வாரம் முயற்சியால் முடியும். மாணவ மாணவியர்கள் தங்கள் விரும்பிய துறைகளில் படிக்கும் வாய்ப்பு உண்டு. பெரும்பாலான விஷயங்கள் இவ்வாரம் சாதகமாகவே இருக்கும்.

5ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிக்கிறார். எந்த விஷயத்திலும் கவனக்குறைவு மிகப்பெரிய சிக்கலைத் தரும். சிலருக்கு உத்தியோக மாற்றம் இடமாற்றம் ஏற்படும்.

## மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

இராசிநாதன் 2ஆம் இடத்தில் இருப்பதும், சூரியன் 4ஆம் இடத்தில் புதனோடு இருப்பதும் நல்ல அமைப்புகள். புதிய விஷயங்களை ஆர்வத்தோடு கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். சில முக்கியமான பயணங்களை மேற்கொள்வீர்கள். எதிலும் நேர்மறை சிந்தனையோடு ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுவீர்கள். நீதிமன்ற வழக்குகள் உங்களுக்கு சாதகமான முடிவைத் தரும் வாய்ப்பு உண்டு. மனைவி வழி உறவினர்களால் ஆதரவு உண்டு. சகோதர சகோதரிகள் கை கொடுப்பார்கள். வேலை மாற்றம், உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு முதலிய திருப்பங்கள் ஏற்படும். தனஸ்தானத்தில் உள்ள ராகு தாராளமான பொருளாதாரத்தைத் தருவார்.

# யோகா செய்யும் 36 மில்லியன் அமெரிக்கர்கள்



யோகா அலையன்ஸ் மற்றும் யோகா ஜர்னல் ஆகியவற்றின் 2016ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி, 36 மில்லியன் அமெரிக்கர்கள் யோகா பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் அவர்கள் யோகா வகுப்புகள் மற்றும் அதற்கான பிரத்தியேக உடைகள் உள்ளிட்டவற்றுக்காக மட்டும் மொத்தம் 16 பில்லியன் டாலர்கள் செலவிடுகின்றனர் என்றும் அந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

**“முதுகுவலி மற்றும் குடலிறக்கப் பிரச்சினைகளுக்கு அறுவை சிகிச்சை மற்றும் மருந்துகள் இல்லாமல் தீர்வு காண யோகா எனக்கு உதவியது”**

எதற்கும் வளைந்து கொடுக்கும் தன்மை (61%), மன அழுத்தத்தில் இருந்து நிவாரணம் (56%) உடற்பயிற்சி (49%) ஒட்டுமொத்த உடல்நலத்தை மேம்படுத்துதல் (49%) மற்றும் உடல்தகுதி (44%) ஆகியவை, அமெரிக்கர்கள் யோகாவை மேற்கொள்வதற்கான முதல் ஐந்து காரணங்களாக குறிப்பிடுவதாகவும் அந்த புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

“முதுகுவலி மற்றும் குடலிறக்கப் பிரச்சினைகளுக்கு அறுவை சிகிச்சை மற்றும் மருந்துகள் இல்லாமல் தீர்வு காண யோகா எனக்கு உதவியது” என்கிறார் மேரிலேண்டில் யோகா பயிற்சி மையத்தை நடத்தும் சூசன் நியூபாயர்.

மேலும், யோகா பயிற்சியை மேற்கொள்பவர்களால் உடல் மற்றும் மனரீதியான மறுமலர்ச்சியை உணர முடியும் என்று கூறுகிறார் சூசன், இதன் மகத்துவத்தை மேலும் அறிந்து கொள்ள இந்தியாவிற்கு தான் பயணம் மேற்கொண்டதாகவும் அவர் கூறுகிறார்.

யோகா பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்ளும் ஒருவரால் அவரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த முடியும் என்று உலக சுகாதார நிறுவனமும் கூறுகிறது.

# கவிஞர் ஜலீலா முஸம்மிலின் சிறகு முளைத்த மீன்

## கவிதை நூல் அறிமுகம்

வைத்தியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஜலீலா முஸம்மில் மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பின் கிழக்கெல்லை யாக விளங்கும் ஏறாவூர் நகரில் பிறந்தவராவார். தமிழ் மொழியின் மீதும் இலக்கியத்தின் மீதும் அளவற்ற காதல் கொண்டவர். அதிக வாசிப்புப் பழக்கத்தை தன்னகத்தில் கொண்டதனால் பாடசாலைக் காலங்களில் பேச்சு, பாடல், கட்டுரை, பட்டிமன்றம், அறிவிப்பு, கவிதைகள் என்று தன்னைத்தானே தனது தந்தையின் துணையோடு செதுக்கிக் கொண்டவர். அத்துடன் பல பத்திரிகைகளையும் தனது எழுத்துக்களால் அலங்கரித்தவர். சிறகு முளைத்த மீன் என்னும் கவிதைத் தொகுதியை வெளியிட்டு இலக்கியத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றார்.

கவிதாயினி ஜலீலா முஸம்மில் சிறந்த கவிஞர் மட்டுமல்ல சிறந்த விமர்சகர், நல்ல ரசிகை, பரந்த சிந்தனா சக்தி கொண்டவர், வித்தியாசமான கருவூற்றுடன் எடுத்த விடயத்தை அப்படியே முன் வைப்பதில் திறமையானவர். மருத்துவரான இவர், தனக்குக் கிடைக்கும் நேரத்தில் குடும்பத்தையும் கவனித்து இலக்கிய படைப்புக்களையும் வழங்கி வருவதானது அவர் இலக்கியத்தின் மீது கொண்ட அளவிட முடியாத பிரியத்தின் காரணமேயாகும்.

சிறகு முளைத்த மீன் சுமார் 85 கவிதைகள் கொண்டதாக 127 பக்கங்களில் வடிக்கப்பட்டுள்ளது.

இங்கே கவிதாயினி ஜலீலாவின் கவிதை நடையும் அதன் பாணியும் கவிதைக்குக் கவிதை மாறுபாட்டுடன் பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது. பெரும் கவிஞர்கள் கூட ஒரே பாணியிலும் நடையிலுமே கவிதைகளைப் புனைவர். ஆனால் எமது பாவலரோ பல நடைகள் மற்றும் பல பாணிகளில் பயணித்திருப்பதை அவரது கவிதைகள் பலவற்றின் மூலம் அவதானிக்கலாம். கவிஞர்கள் பெரும்பாலும் தமக்கு முன்னோடியாக, தமக்கு விருப்பமான கவிஞர்களினது நடையினைப் பின்பற்றி கவிதைகளை எழுதி வருவது அனைவரும் அறிந்ததே. ஆனால் எங்கள் கவிஞர் வித்தியாசமானவர்.

**நூல்: சிறகு முளைத்த மீன்**
**நூல் வகை: கவிதை**
**நூலாசிரியர்: டாக்டர் ஜலீலா முஸம்மில்**
**வெளியீடு: எழிலினி பதிப்பகம், சென்னை**

ஒரு சில கவிதைகளை வாசகர்களுக்காக அசைபோட்டுப் பார்க்கலாம்.

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை (பக்கம் 06) என்ற கவிதையின் பின்வரும் வரிகளில் கவிஞரின் இரக்கமும் பாசமும் உணர்வு பூர்வமாக உரைக்கப்பட்டிருக்கிறது.

பரிவோடு தலைகோதும்
உங்கள் கைகள் எங்கே
உரிமையுடன் சாய்ந்து கொள்ள
தோள்கள் எங்கே
நெஞ்சமெல்லாம் உன் ஞாபகங்கள்
கொஞ்ச நஞ்சமல்ல
நெருஞ்சிபோல் எம்மை
நெருடித்தான் போகிறதே..

கவிதாயினி தனது கவிதைகளை ஒரே வடிவில் மாத்திரம் அமைக்கவில்லை. நாட்டார் கவிகள், அந்தாதிகள், செய்யுள், தன்முனைக் கவிதைகள் என்று பல வடிவங்களில் சுற்றிச் சுழன்றிருக்கின்றார். ஒவ்வொரு தலைப்பும் ஒவ்வொரு சரித்திரத்தை, வலியை, மகிழ்ச்சியை, வாழ்வியலை, நட்பை, அழகை, துணிவை, தொழிலை, பெருமையைப் பற்றிக் கூறி நிற்பது கவிதாயினியின் பரந்த அறிவினைக் காட்டுகின்றது.

காதலின் ஆழத்தை உணர்த்தும் வகையில் சிறகு முளைத்த மீன் (பக்கம் 12) என்னும் தலைப்பில் கவிதை அமைந்துள்ளது. இக் கவிதையின் சில வரிகள் இதோ:

என் கஷ்டமும் நீதான்
என் இஷ்டமும் நீதான்
தென்றல் புயல்
எல்லாம் நீதான்"

என்ற வரிகளில் மூலம் வாழ்வியலையும் துணையின் ஸ்திரத்தையும் காட்ட முயல்கின்றார். இக்கவிதையின் தலைப்பையே தனது நூலுக்கு மகுடமாய்ச் சூடி இருப்பது அழகாய் அமைந்துள்ளது.

பெண்ணியம் போற்றுவோம் (பக்கம் 41) என்ற கவிதை பெண்ணின் பெருமையை, அவளது சுயநலமற்ற தன்மையை, தியாகத்தை, பொறுமையைப் பற்றி கவிதாயினி தன்னையே மனதில் நிலைநிறுத்தி எழுதியிருக்கிறார் போலும். மொத்தமாய் அவரது இயற்கையான குண நலன்களுடன் அப்படியே இந்தக் கவிதை ஒன்றித்துப் போய் உள்ளது. தேவதையும் மகளும் (பக்கம் 51) என்ற கவிதையில் மகள் என்பவள் தேவதையை மிகைத்தவளாய் கவிஞரின் மனம் படம் பிடித்துள்ளது.

தேவதையும் மகளும்
ஒன்றாகவே பிறந்தனர்
ஆயினும் பிரித்தறிய
பெரும் பிரயத்தனம் வேண்டும்

என்ற கவிதையின் வரிகளின் மூலமாக தேவதைக்கும் மகளுக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுவது மகளின் மீது கொண்ட அதீத பாசத்தை மையப்படுத்தி ஒரு தாயாய் வெளிக்காட்டியுள்ளமை மேன்மைக்குரிய விடயமாகும். நாட்டார் பாடல் (பக்கம் 64) என்ற கவிதையில் காதலன் காதலி உரையாடல் போல அதாவது கேள்வி பதில் போல அமைந்திருப்பது ரசிக்கத்தக்க விடயமாகும்.

முகமூடி (பக்கம் 69) என்ற கவிதையில் முகமூடிகளின் முகத்திரையைக் கிழித்து எறிகிறார்.

கண்கள் இரண்டினில்
சாந்தம் குடியிருக்கும்
கருநாகம் ஒன்று
நெஞ்சகத்தில் சுருண்டிருக்கும்

என்ற மேலுள்ள கவிதை வரிகளில் ஒட்டுமொத்த நயவஞ்சகத் தனமும் கருக்கொண்டு நிற்பதைச் சுட்டிக் காட்டியுள்ளமை அருமையிலும் அருமையாக அமைந்துள்ளது.

சிறகு முளைத்த மீன் கவிதாயினியின் கன்னி நூல் என்பதை எந்த இடத்திலும் காணக் கிடைக்கவில்லை. காரணம் அனுபவம் பெற்ற பெருங்கவிஞர்களைப் போல் மிகத் துணிவுடன் தனது பல கவிதைகளில் மிகச் சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து தொகுத்து கவி மாலை படைத்துள்ளமை பாராட்டத்தக்கது. அதேபோல் எந்த இடத்திலும் தொய்வோ தடங்கலோ இல்லாமல் கவிதைகள் சிறப்பாகக் கோர்க்கப்பட்டுள்ளன.




என்.எம். ஆரிபா
ஏறாவூர்

## கட்டுமான கைவினைஞர்களுக்கான தேசிய கைவினை அடையாள அட்டை வழங்குதல் மற்றும் திறமையான கைவினைஞராக கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்தல்.

2014 இலக்கம் 33 கீழ் கட்டுமானத் தொழில் அபிவிருத்தி சட்டத்தின் படி திறமையான கட்டுமானத் தொழிலாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் தொழில்முறை அணுகுமுறைகளைப் பரிசீலனைசெய்து கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல் மற்றும் அவர்களின் தகவல்களை பராமரிக்கும் நோக்கத்துடன், திறமையான கட்டுமானத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் 27 துறைகளின் வகைப்படுத்தப்படுகிறார்கள் "பிரதான கட்டுமான கைவினைஞர்கள்" மற்றும் "கட்டுமானத் கைவினைஞர்கள்" என 2 முக்கிய பிரிவுகளின் கீழ் தனித்தனியாக பின்வரும் திறன் தரத்திற்காக தொழில்நுட்ப அடையாள அட்டை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கட்டுமானத் கைவினைஞர்கள்**

- MSN கட்டுமானத் கைவினைஞர் (கொத்தனார்) (Construction Craftsman (Masonry))
- WCB தச்சுவேலை (கட்டிடம்) (Wood Craftsman (Buildings))
- WCF தச்சுவேலை (தளபாடம்) (Wood Craftsman (Furniture))
- TIL டைல் நிறுவுனர் (Tile Layer)
- PNT வர்ண பூசுபவர் (கட்டிடம்) (Painter (Buildings))
- ELC மின் வல்லுநர் (Electrician)
- PLB குழாய் பணியாளர் (Plumber)
- BBD கம்பி வளைக்கும் வல்லுநர் (Bar Bender)
- WLD ஒட்டுநர் (Welder)
- ALF அலுமினியம் கட்டமைத்தல் (Aluminum Fabricator)
- OTH வேறு (Other)

**கட்டுமான இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்கள்**

- CEM கட்டுமான இயந்திர வல்லுநர் (Construction Equipment Mechanic)

**கட்டுமான இயந்திரங்களை இயக்குபவர்**

- LE இலகு கட்டுமான இயந்திரம் இயக்குபவர் (Light Equipment Operator)
- T ட்ரக்டர் இயக்குபவர் (Tractor Operator)
- SPVR தன்னியக்க அதிர்வு உருளை இயந்திரம் இயக்குபவர் (Self-propelled Vibrator Roller Operator)
- BL பெக்கோலோடர் இயந்திரம் இயக்குபவர் (Backhoe Loader Operator)
- WL வீல்லோடர் இயந்திரம் இயக்குபவர் (Wheel Loader Operator)
- HE ஹைட்ரோலிக் இயந்திரம் இயக்குபவர் (Hydraulic Excavator Operator)
- MG மோட்டர் கிரைண்டர் இயக்குபவர் (Motor Grader Operator)
- CT கிரவல் ட்ரக் இயக்குபவர் (Crawler Tractor Operator)
- MC நடமாடும் கிரேன் இயக்குபவர் (Mobile Crane Operator)
- DT ட்ரம்ப் ட்ரக் இயக்குபவர் (Dump Truck Operator)
- FLT போர்க்லிப்ட் ட்ரக் இயக்குபவர் (Forklift Truck Operator)
- PT இயந்திரங்களை இடமாற்றும் இயக்குபவர் (Plant Transporter Operator)
- SSL ஸ்கிட் ஸ்டீயர் லோடர் (Skid Steer Loader Operator)
- TMC ட்ரக் இணைப்பு கிரேன் இயக்குபவர் (Truck Mounted Crane Operator)
- OTH ஏனையவை (Other)

**திறமையான கட்டுமான கைவினைஞர்களாகப் பதிவு செய்யும் உங்களுக்காக**

- உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப வலுவூட்டல் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அணுகுதல்.
- திறமையான கைவினைஞராக சமூக அங்கீகாரம் பெறுதல்.
- தொழில்முறை தரத்தை மேம்படுத்துதல்.
- அதிக உற்பத்தி மற்றும் தரம் வாய்ந்த திறமையான பணியாளர்களின் ஒரு அங்கம் வகிப்பதற்கான வாய்ப்பு.

**பதிவுக்காக விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்**

- 18 வயதுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.
- ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- தேசிய தொழில் திறன் தகுதி (NVQ) சான்றிதழ் மற்றும் அனுபவம். (NVQ இல்லாத கைவினைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.)
- அரச/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயமாக கட்டுமானத் துறையில் பணிபுரிபவர்கள்.

**தேர்வு செய்யப்படும் முறை**

விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உங்கள் துறைத் திறன்களை மதிப்பிடுவதற்கான திறன் பரீட்சைக்கு (Skills Test) உட்படுத்தப்படுவீர்கள்.

**அனுகூலங்கள்**

- உங்கள் அனுபவம் மற்றும் அனைத்து தகவல்களுடன் QR குறியீட்டுடன் தேசிய கட்டுமான கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல்.
- கட்டுமானத் துறையில் உங்களைப் பற்றிய தொழில்முறைத் திறனை அங்கீகாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- உங்கள் பதிவு தொடர்பான தகவலை CIDA இணையதளத்தில் உள்ளிடுவதன் மூலம், உங்கள் சேவையைப் பெற விரும்பும் தரப்பினர் உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள உதவுகிறது.
- பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் கைவினைஞர்களை அடையாளம் கண்டு கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதை உறுதி செய்தல்.

**NVQ சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல்**

NVQ சான்றிதழ்கள் இல்லாத கைவினைஞர்களுக்காக முன் அறிவுடன் சான்றளிக்கப்பட்ட RPL (Recognition of prior learning) முறையின் கீழ் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**விசாரணைகள்** ஏ.ஏ. லத்தீப் அவர்கள் : 011-3119002 / 070-2731990

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

"செவ்சிரிபாய" இல-123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி : 011-2699801, 011-2695965, 011-2686092 பெக்ஸ் : 011-2699737
மின்னஞ்சல் : cidatraining@gmail.com இணையம் : www.cida.gov.lk

---

## கேள்வி அறிவித்தல்

### கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம்

### ரேடியோ தொடர்பாடல் உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் ஆரம்பித்தல்

**(ஒப்பந்த இல. DFAR-DPC-2023.02.01)**

ரேடியோ தொடர்பாடலை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் ஆரம்பித்தலுக்கு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் விற்பனையாளர் அனுமதிப் பத்திரத்தை கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு இல. | உருப்படி வகை | எண்ணிக்கை | மீளளிக் கப்படாத கேள்வி வைப்பு | விலைமனுப் பிணை (90 நாட்களுக்கு செல்லு படியாகும்) |
|---|---|---|---|---|
| DFAR-DPC-2023.02.01 | ரேடியோ தொடர்பாடல் உபகரணங்கள் 250W SSB HF RADIO வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் ஆரம்பித்தல் | 01 | ரூ. 1000.00 | ரூ. 25,000.00 |

எல்லா விலைமனுதாரர்களும் கீழ்க்காணும் விதிகளையும், நிபந்தனைகளையும் பூரணப்படுத்தல் வேண்டும்.

1. எல்லா விலைமனுவுடனும் இலங்கையின் அரசு அனுமதி பெற்ற வர்த்தக வங்கியினால் விநியோகிக்கப்படும் மேலே குறிப்பிடப்படுமாறு விலைமனுப் பிணையொன்றை இணைத்தல் வேண்டும்.
2. கம்பனி கடிதத் தலைப்பில் எழுத்துமூல வேண்டுதலைச் சமர்ப்பித்தல் அத்துடன் 2023 ஜூன் 26 முதல் 2023 ஜூலை 12 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கொழும்பு-10, மாளிகாவத்த, புதிய செயலகம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், 3ஆம் மாடி, கணக்காளர் (வழங்கல்கள்) இடமிருந்து கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மேலேயுள்ளவாறு ஒவ்வொரு தொகுதிக்கும் காசாக மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் விலைமனு ஆவணங்களை பரிசீலிக்கலாம் மற்றும் சேகரிக்கலாம்.
3. முறையான விலமனு ஆவணங்களை பொறியிடப்பட்ட கடித உறையில் உள்ளடக்கப்பட்டு கொழும்பு-10, மாளிகாவத்த, கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், 3ஆம் மாடி, திணைக்கள பெறுகைக்குழு தலைவரை அடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது 2023 ஜூன் 17ம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்பு அதே வளாகத்தில் உள்ள நிதிப் பிரிவில் கணக்காளர் (வழங்கல்கள்) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
4. விலைமனுக்கள் கொழும்பு-10, மாளிகாவத்த, DFAR, 3ம் மாடி, நிதிப் பிரிவில் உள்ள மேலே குறிப்பிடப்படுமாறு மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுள்ள அவர்களது பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.
5. மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு DFARஇன் உதவிப் பணிப்பாளர் (MCS) ஐ தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள். (தொ.பே. இல. 011-2431448/ 011-4340746).

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம்.**

திகதி:

---

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
### விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -
### கமத்தொழில் அமைச்சு - IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

### வடக்கு, கிழக்கு, வட மத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட கொத்தணிகளுக்காக உரங்களை (Urea, TSP, MOP & CaS04) வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஜடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு,வட மத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட கொத்தணிகளுக்காக உரங்களை **(Urea, TSP, MOP & CaS04)** வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. வடக்கு, கிழக்கு, வட மத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட கொத்தணிகளுக்காக உரங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப்பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| Supply and delivery 162677 kg of Urea, 117364 kg of TSP, 358854 kg of MOP and 13279 Kg of CaS04 for Northern Province, North Central Province, Uva province, Central Province, Eastern Provinces. | LK-MOA-PMU-364782-GO-RFB | 2,640,000.00 | 35,000.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2023.06.26 ஆம் திகதியிலிருந்து 2023.07.17 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.
6. 2023.07.17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 2023.07.17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதியென'' சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான **''Supply and Delivery of Fertilizers (Urea, TSP, MOP & CaS04) for ASMP Clusters in Northern, Eastern, North Central, Central & Uva Provinces''** என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
**திகதி: 25.06.2023**

---

## விவசாயத் திணைக்களம்

**நீங்களும் வெற்றிகரமான விவசாய தொழில்முயற்சியாளர் ஒருவராக விரும்புகின்றீர்களா? அவ்வாறாயின் இவ் அரிய வாய்ப்பு உங்களுக்கே !**

விவசாயத் தொழில்முயற்சியாளர்களுக்காக விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் விவசாய வியாபார ஊக்குவிப்புப் பயிற்சி பாடநெறிகளில் நீங்களும் பங்கேற்கலாம்.

இப்பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்பதன் மூலம் விவசாயப் பொருட்களின் உற்பத்தி, பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகளை வழங்கல் தொடர்பான வர்த்தகம் ஒன்றினை நம்பிக்கையுடன் ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை அறிவு மற்றும் ஆற்றலை பெற்றுக் கொள்வதற்கும் இத்துறை சார் நிபுணத்துவம் தொடர்பான பெறுமதிமிக்க சான்றிதழ் ஒன்றினை பெற்றுக் கொள்ள முடியும்.

| பாடநெறி இல. | பாடநெறி விபரம் | பாடநெறி காலம் | பாடநெறி கட்டணம் | நடாத்தப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | சந்தை சார்ந்த பாதுகாக்கப்பட்ட விவசாய தொழில்நுட்பங்கள் | 03 | 1,500.00 | கன்னொறுவை |
| 02 | பழப்பயிர் நாற்றுமேடை முகாமைத்துவம் | 02 | 1,000.00 | கன்னொறுவை |
| 03 | வர்த்தக பண்ணைகளில் நுண்நீர்ப்பாசன தொழில்நுட்ப பாவனை | 02 | 1,000.00 | பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம், அனுராதபுரம் |
| 04 | பழத்தோட்ட முகாமைத்துவம் | 02 | 1,000.00 | கன்னொறுவை |
| 05 | பாதுகாப்பானதும் தரமானதுமான விவசாய உற்பத்திகளுக்கான உணவுப் பொருட்களை உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு அனுப்புவதற்கான நடைமுறைகள் | 02 | 1,000.00 | கன்னொறுவை |
| 06 | காய்கறி பயிர்களுக்கு கலப்பின விதை உற்பத்தி | 02 | 1,000.00 | கன்னொறுவை |
| 07 | நை மிரிஸ் மிளகாயைப் பயன்படுத்தி சாஸ் மற்றும் பிற வித்தியாசமான தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 01 | 500.00 | கன்னொறுவை |
| 08 | சோயாபீன் மற்றும் நிலக்கடலையைப் பயன்படுத்தி அதனுடன் தொடர்பான உற்பத்திகள் | 01 | 500.00 | கன்னொறுவை |
| 09 | காளான் வளர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள் | 01 | 500.00 | கன்னொறுவை |
| 10 | மாம்பழம் மற்றும் அம்பரெல்லா போவற்றிலிருந்து ஊறுகாய் மற்றும் சட்னி உற்பத்தி செய்தல் | 01 | 500.00 | கன்னொறுவை |
| 11 | விவசாய நிலம் | 01 | 500.00 | கன்னொறுவை |
| 12 | விவசாய சுற்றுலா | 01 | 500.00 | கன்னொறுவை |

பாடநெறி காலப்பகுதியினுள் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் - குறித்த பயிற்சி நிலையங்களிலிருந்து சாதாரண விலைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

மொழிமூலம் : சிங்களம்

பாடநெறி பதிவுக்கட்டணம் : ரூ.200.00 (மீள்செலுத்தப்படாத)

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. பங்கேற்பவரின் பெயர் : திரு / திருமதி / செல்வி :…………………………………………
2. முகவரி மற்றும் தொலைபேசி இல. ………………………………………………………

| பாடநெறி இல. | பாடநெறி விபரம் | தங்குமிட வசதி (அவசியம் / அவசியமில்லை) |
|---|---|---|
| | | |
| | | |

மேற்படி பாடநெறிக்கு / பாடநெறிகளுக்கு பதிவு கட்டணமாக …………………… இலக்கமுடைய ரூபா …………………… பெறுமதியான மக்கள் வங்கி பற்றுச் சீட்டினை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

திகதி : ……………………………… கையொப்பம் : ……………………………

பாடநெறிக்கான கட்டணமானது மக்கள் வங்கியின் பேராதனை கிளையில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலுள்ள கணக்கிலக்கம் 0571001799027204 எனும் கணக்கிற்கு பணத்தினை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார் செய்த விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் குறித்த பாடநெறிகளுக்கான பதிவினை மேற்கொள்ள முடியும்.

**மேலதிகப் பணிப்பாளர் (விவசாய வியாபாரம்) தபால் பெட்டி இல. 05 விவசாயத் திணைக்களம் பேராதனை.**
தொலைபேசி இல. 081-2388734, 081-2388465 மின்னஞ்சல் : **doagbiz@yahoo.com**

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்ய : (இணைய இணைப்பு, QR குறியீடு)

**https://doa.gov.lk/agriculture-entrepreneurship-development-training-programme-en/**



விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி : 2023.07.23

"வளமான நாளைய தினத்திற்கு"

# உலகை இலங்கைக்கு கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றும் பவர் நிறுவனம்



“நாட்டினால் உங்களுக்கு என்ன செய்ய முடியும் எனக் கேட்பதைத் தவிர்த்து, உங்களால் நாட்டுக்கு என்ன பங்களிப்பை செய்ய முடியும்” எனும் வரலாற்றுக்கூற்றுக்கமைய, பவர் என அறியப்படும், ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், இலங்கையில் அல்பிரட் பவர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது முதல் தொடர்ச்சியாக இந்தப் பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது. 125 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் பிரசன்னத்தைக் கொண்டுள்ள பவர், முன்னரை விடவும் மீண்டெழுந்திறனுடன், உறுதியான வளர்ச்சியை பதிவு செய்யும் வகையில் இயங்குகின்றது.

பல தசாப்த காலங்களாக தொடரும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில், விவசாயம், தொழிற்துறை மற்றும் அறிவுசார் அம்சங்களில், தேசத்தின் நிலைபேறான வளர்ச்சியில் பவர் பெருமளவு பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது. சுவிட்சர்லாந்தின், ஜெனிவாவைச் சேர்ந்த Alfred et Eug□nie Baurs மையத்தின் உரிமையாண்மையில் இயங்கும் இந்நிறுவனம், சுவிஸ் பாரம்பரியங்களுக்கமைய தனது பெறுமதிகளை பின்பற்றுகின்ற போதிலும், அனைத்து அம்சங்களிலும் உண்மையான இலங்கை நிறுவனமாக பவர் திகழ்கின்றது.

இலங்கையின் விவசாயத் துறையின் முன்னோடியாகத் திகழ்வதுடன், இந்தத் துறையில் தனது புத்தாக்கம் மற்றும் சாதனைகளை பவர் நிறுவனம் உறுதியாக பதிவு செய்துள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் உயர் திறன் படைத்த, தொழில்நுட்ப அம்சங்கள் பொருந்திய உரக் கலவை வசதிகளை தன்வசம் கொண்டுள்ளதுடன், அமெரிக்காவின் சிறந்த துறைசார் செயற்பாட்டாளர்களிடமிருந்து இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்துள்ளது.

# தெஹிவளை மரைன் டிரைவ் பிரதேசத்தில் 43 By The Sea ஐ அறிமுகம் செய்யும் Prime Group

மரைன் டிரைவ் பிரதேசத்தில் Prime Group இன் 43 By The Sea தொடர்மனை அறிமுகத்துடன், கொழும்பில் அதிகளவு விரும்பப்படும் புதிய முகவரி தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நகரின் மையத்தில் அமைதியான மற்றும் நகர்ப்புற வாழ்க்கையை குடியிருப்பாளர்களுக்கு வழங்கும் வகையில் Prime Group இனால் சொகுசு தொடர்மனைத் தொகுதியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



இலங்கையின் நம்பிக்கையை வென்ற முன்னணி சொத்து வடிவமைப்பாளரான Prime Residencies PLC இனால் இந்தத் தொடர்மனை வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தொடர்ச்சியாக LMD சஞ்சிகையினால் நன்மதிப்பை வென்ற றியல் எஸ்டேட் நிறுவனம் என பல விருதுகளால் கௌரவிக்கப்பட்ட நிறுவனமாக இது திகழ்கின்றது.

கொழும்பின் புகழ்பெற்ற மரைன் டிரைவ் பகுதியில் நிர்மாணிக்கப்படும் 43 By The Sea இனால், குடியிருப்பாளர்களுக்கு சமுத்திரத்தின் சிறந்த காட்சியமைப்பு வழங்கப்படுகின்றது. நெரிசல் மிகுந்த நகர வாழ்க்கையிலிருந்து சற்று மாறுபட்ட அமைதியான வாழ்க்கையை முன்னெடுக்கக்கூடிய வகையில் இந்த தொடர்மனை அமைந்துள்ளது. சிறுவர்கள் மற்றும் வளர்ந்தவர்களுக்கான பெரிய நீச்சல் தடாகம், 24 மணி நேர பாதுகாப்பு, பிரவேசம் கட்டுப்படுத்தப்பட்ட நுழைவாயில்கள், ஜிம், விருந்தினர் வரவேற்பு பகுதி மற்றும் லோஞ்ச், சிறுவர் விளையாட்டு பகுதி, மொட்டைமாடி டெரஸ் மற்றும் ஸ்கை லோஞ்ச் ஆகிய வசதிகளையும் கொண்டுள்ளது.

43 By The Sea இன் விசேட அம்சங்களாக, அதன் அமைவிடம் மற்றும் குடியிருப்பாளரால் இலகுவில் அனைத்து பகுதிகளையும் சென்றடையக்கூடிய வசதி போன்றவற்றை குறிப்பிடலாம்.

# Great Place to Work சான்றிதழைப் பெற்றுக் கொண்ட Orient Finance



ஜனசக்தி குழுமத்தின் ஓர் அங்கத்தவரான Orient Finance PLC, தமது மதிப்புமிக்க சொத்துக்களாகக் கருதும் ஊழியர்களுக்கு நேர்மறையானதோர் பணிக் கலாச்சாரத்தையும் சூழலையும் பெற்றுக் கொடுப்பதினை உறுதிப்படுத்திடும் வகையிலும் இலங்கையில் சிறந்த பணியிடமாக தங்களை மேலும் வலுப்படுத்திடும் வகையிலும் மதிப்புமிக்க Great Place to Work சான்றிதழை தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டிலும் பெற்றுக் கொண்டுள்ளது.

Great Place to Work என்பது பணியிட நடைமுறைகள் மற்றும் கலாச்சாரத்தை மதிப்பிடுவதற்காக பெயர் குறிப்பிடாத பணியாளர் ஆய்வுகளை நடாத்திடும் ஒரு சுயாதீன ஆய்வாளர் ஆவர். அவர்களின் பகுப்பாய்வின் அடிப்படையில் நிறுவன ஊழியர்களின் நல்வாழ்வு மற்றும் வணிக வெற்றியை ஊக்குவிக்கும் உயர் நம்பிக்கை, செயற்திறன் கொண்ட பணியிட கலாசாரங்களை உருவாக்கிட நிறுவனங்களுக்கு முடியும். பணியாளர்களின் பின்னூட்டல் கருத்துக்கள், பணியிடக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கிய முழுமையான சரிபார்ப்பு செயன்முறைக்கு உட்படுத்திய பின்னரே நிறுவனங்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இச்சான்றிதழானது நிறுவனத்தின் கலாச்சாரத்தின் கடுமையான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகிறது. இது அக்குறிப்பிட்ட பணியிடத்தில் நம்பிக்கை நேர்மை, மரியாதை மற்றும் நட்புறவு ஆகியவற்றினையும் மதிப்பீடு செய்கிறது. அவ்வாறானதொரு பணியிடச் சூழலை கட்டியெழுப்பிட ஊழியர்களின் ஈடுபாடு மற்றும் அதை ஏற்றுக்கொள்ளும் தன்மை என்பவை முக்கியமானவையாகும்.

# உயர் தொழில்நுட்ப விளையாட்டு கையுறைகளை அறிமுகப்படுத்தும் Dipped Products

நிலையான ஒருங்கிணைந்த கையுறை உற்பத்தியில் உலகளாவிய முன்னோடிகளான Dipped Products PLC (DPL), Hayleys குழுமத்தின் துணை நிறுவனமானது, பியகமவில் உள்ள அதன் அதிநவீன உற்பத்தி ஆலையில், வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்து, துல்லியமான பொறியியல் விளையாட்டு கையுறைகளில் அதன் லட்சிய பல்வகைப்படுத்தலுக்கு ஏற்ப வணிக நடவடிக்கைகளைத் ஆரம்பித்துள்ளது.



1.3 பில்லியன் ரூபா முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த புதிய வசதி கொண்ட ஆலையானது, தொழில் துறை, வீட்டு மற்றும் மருத்துவப் பயன்பாடுகளுக்கான கையுறைகளை உற்பத்தி செய்வதில் DPL இன் விதிவிலக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, அதிகபட்ச செயல்திறன், பாதுகாப்பு மற்றும் வசதியை வழங்கும் விளையாட்டுக் கையுறைகளை வடிவமைத்து உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

"DPLஇன் துல்லியபொறியியல் விளையாட்டு கையுறைகளின் உற்பத்தியை முறையாக ஆரம்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். உலகளாவிய ரீதியில் இந்த பிரிவு 2027 ஆம் ஆண்டளவில் 1.7 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் DPLக்கு குறிப்பிடத்தக்க சந்தைப் பங்கைக் கைப்பற்றுவதற்கான மகத்தான சாத்தியக்கூறுகளை நாங்கள் காண்கிறோம்.

எமது நாட்டின் நன்கு நிலைநிறுத்தப்பட்ட ஆடை உற்பத்தித் திறன்களை DPL இன் தொழில்சார் கைப் பாதுகாப்பில் உயர்தரம் வாய்ந்த, தரமான விளையாட்டுக் கையுறைகளை இலங்கையில் உற்பத்தி செய்வதே எமது இலக்காகும்” என DPL முகாமைத்துவப் பணிப்பாளர் புஷ்பிக ஜனதீர தெரிவித்தார்.

# ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்: முற்போக்கான வேலைத்தளம்

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நாட்டின் மிகப் பெரிய அரசுக்கு சொந்தமான காப்புறுதி நிறுவனம், பல்வேறு பின்னணிகளைக் கொண்ட பெருமளவிலான ஊழியர்களைக் கொண்ட நிறுவனம்.



2600க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் 8000க்கும் மேற்பட்ட முகவர்களுடன், SLIC அனைத்து ஊழியர்களிடையேயும் பகிரப்பட்ட மதிப்புகளைக் கொண்ட நிறுவன கலாசாரத்தை நம்புகிறது. பரஸ்பர நம்பிக்கை மரியாதை, ஒற்றுமை, நிபுணத்துவ அர்ப்பணிப்பு, நெறிமுறைகள், ஒருமைப்பாடு மற்றும் சிறந்ததற்கான முயற்சி ஆகியவை SLIC இன் பகிரப்பட்ட முக்கிய மதிப்புகளாகும், இது நிறுவனத்தின் தலைமைத்துவத்தில் தொடங்கி அனைத்து மட்டங்களிலும் நடைமுறையில் உள்ளது.

ஒரு தலைவர் தனது மக்கள் மீது அனுதாபம் காட்டுவது மிகவும் அவசியமானதாகும், எனவே SLIC இருவழித் தொடர்பின் முக்கியத்துவத்தை நம்புகிறது. SLIC இல் உள்ள கலாசாரம் அதன் ஊழியர்களை தங்கள் எண்ணங்களையும் குறைகளையும் நிர்வாகத்துடன் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கிறது, அங்கு கவலைகளை சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். தொற்றுநோய்களின் போது நெகிழ்வான வேலை நேரம், தொலைதூர வேலை விருப்பங்கள் வழங்கப்பட்டன மற்றும் அந்தந்த பங்குதாரர்களிடையே பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த நடைமுறைகள் இன்றுவரை தொடர்கின்றன. இதேபோல், வணிக நோக்கங்களை இயக்க புதுமையான யோசனைகளைப் பகிர்ந்து கொள்வதில் பணியாளர்கள் ஈடுபடுவதற்கு பல மன்றங்கள், தளங்கள் உள்ளன.

SLIC அனைத்து நிலைகளிலும் பணியிட துன்புறுத்தலில் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை பின்பற்றுகிறது. துன்புறுத்தலின் தன்மையைப் பொருட்படுத்தாமல், இதுபோன்ற செயல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கையை நிறுவனம் எப்போதும் எடுக்கும்,

# சிறந்த செயல்திறனைப் பதிவு செய்துள்ள ஏசியா அசெட் ஃபினான்ஸ் பிஎல்சி

52 வருட சிறந்த வரலாற்றைக் கொண்ட இலங்கையின் முதன்மையான, தங்கத்தை மையமாகக் கொண்ட நிதியியல் தீர்வு வழங்குனரான ஏசியா அசெட் ஃபினான்ஸ் பிஎல்சி, 2022/23 ஆம் நிதியாண்டை சிறப்பாக நிறைவு செய்துள்ளது.

இலங்கை முன்னெப்போதும் முகங்கொடுத்திராத பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், முன்னைய ஆண்டிலிருந்து இந்த ஆண்டுக்கு ஒப்பீட்டு அடிப்படையில், பல்வேறு நிதியியல் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளில் மிகச் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளது.

பல சவால்கள் இருந்தபோதிலும், நிறுவனம் மிகச்சிறந்த எழுதிறனை வெளிப்படுத்தியுள்ளதுடன், தன்னுடன் தொடர்புபட்ட தரப்பினருக்கு சிறந்த பெறுமானத்தை வழங்கியுள்ளது.

மொத்த சொத்துக்கள் ரூபா 25 பில்லியனை எட்டியுள்ளது (முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 29% வளர்ச்சி) மொத்த இலாபம் ரூபா 284 மில்லியனாக அதிகரித்துள்ளது. (முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 139% வளர்ச்சி) மொத்த கிளைகளின் எண்ணிக்கை 75ஐ எட்டியுள்ளது (முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27% வளர்ச்சி) மொத்த நிலையான வைப்புத் தொகை ரூபா 13.2 பில்லியனாக அதிகரித்துள்ளது. (முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 52% வளர்ச்சி) மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 10,502 ஆல் அதிகரித்துள்ளது.

மூலதனப் போதுமை அளவு விகிதம் 26.25% ஏசியா அசெட் ஃபினான்ஸ் பிஎல்சியின் செயல்திறனின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்று, பங்கொன்றுக்கான வருவாயின் போற்றத்தக்க வளர்ச்சியாகும், இது வியத்தகு அளவிற்கு 150% ஆல் உயர்வடைந்துள்ளது. இந்த குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அதன் பங்குதாரர்களுக்கு கணிசமான வருமானத்தை தோற்றுவிக்கும் நிறுவனத்தின் திறனை பிரதிபலிக்கிறது.

# இசைத் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள SLT–MOBITEL

உள்நாட்டு இசைத் துறையில் புரட்சியை ஏற்படுத்திடும் வகையில், SLT MOBITEL, இலங்கையின் முதலாவது தொழில்நுட்ப வலுவூட்டப்பட்ட பிரத்தியேகமான திறன் கட்டமைப்பான mStudio ஐ அறிமுகம் செய்துள்ளது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இசைக் கலைஞர்கள் மற்றும் கலைஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்த அறிமுகம் அமைந்துள்ளது. One Galle Face இன் PVR Cinemas இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த அறிமுக நிகழ்வில் தொலைக்காட்சி மற்றும் இசைத் துறையைச் சேர்ந்த பிரபலங்கள் பலரும் கலந்து கொண்டனர்.

டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் SLT MOBITEL இனால் மேற்கொள்ளப்படும் பரந்தளவு செயற்பாடுகளில் ஒரு அங்கமாக mStudio அறிமுகம் அமைந்துள்ளது. பரந்தளவு பின்புலங்களைக் கொண்ட நபர்களுக்கு வலுச்சேர்ப்பதை அடிப்படையாகக் கொண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ள mStduio இனால், இலங்கையர்களுக்கு தரமான இசையை தயாரிப்பது, உருவாக்குவது மற்றும் அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

mStudio Online, mStudio Talent, mStudio Live மற்றும் mStudio Unplugged ஆகிய நான்கு பகுதிகளை mStudio கொண்டிருக்கும். இதனூடாக, இசை அனுபவிக்கப்படுவது, பகிரப்படுவது மற்றும் கொண்டாடப்படுவதில் புத்தாக்கமான மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும்.

# முதலாவது சர்வதேச விற்பனை நிலையத்தை துபாயில் அங்குரார்ப்பணம் செய்துள்ள Trans Asia Cellular

இலங்கையின் முன்னணி மொபைல் தொலைபேசி உதிரிப்பாகங்கள் மற்றும் தொலைத்தொடர்பாடல் பாகங்கள் வழங்குநரான Trans Asia Cellular (Pvt) Ltd. தனது முதலாவது சர்வதேச விற்பனை நிலையத்தை துபாய் நகரில் ஆரம்பித்துள்ளது.

வர்த்தக நாமத்தின் சர்வதேச விரிவாக்கல் திட்டங்களின் முதல் அங்கமாக இந்த நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

துபாய் நகரின் மையப்பகுதியில் டெய்ராவில் அமைந்துள்ள இந்த நிலையத்தை, மே மாதம் 29 ஆம் திகதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஷேக் மொஹமட் அல் ஷெஹி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் குழுமத்தின் தவிசாளர் முஃபீல் யசீன் கலந்து கொண்டதுடன், இதர முக்கிய பிரமுகர்களும் பங்கேற்றனர்.



1994 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது முதல், கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில், Trans Asia Cellular, அசல், உயர் தரம் வாய்ந்த மொபைல் தொலைபேசி மற்றும் தொடர்பாடல் சாதனங்களை சிறந்த வாடிக்கையாளர் சேவையுடன் வழங்குவதில் கீர்த்தி நாமத்தைப் பெற்றுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 ஜூன் 25 ஞாயிற்றுக்கிழமை
கிருஷாந்தினி
உஷா
Pic. by: Wimal Karunathilaka

# காட்டுக்குள் 40 நாட்கள்

## உயிர் தப்பிய 4 சிறுவர்கள்



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

நான்கு சிறுவர்கள் அதிலும் 11 மாத குழந்தை வேறு, நட்ட நடுக்காட்டில் 40 நாட்கள் உயிர் தப்பி வாழ்ந்தார்கள் என்று நினைப்பதற்கு அதிசயமாக இருக்கும். ஆனால் கொலம்பியாவின் அமேசன் காட்டுக்குள் பாரிய தேடுதல் வேட்டைக்குப்பின் அந்த சிறுவர்கள் உயிரோடு கண்டுபிடிக்கப் பட்டார்கள்.

13, 9, 4 வயதுடன் அந்தக் கைக் குழந்தையும் காட்டுக்குள் சிக்கிய கதை பயங்கரமானது. அனைவருமே உடன் பிறந்தவர்கள். இவர்கள் தனது தாயுடன், தனது தாத்தா மற்றும் உறவினர்களை பார்க்க சிறு விமானத்தில் பயணித்த போது அந்த விமானம் கடந்த மே 1 ஆம் திகதி காட்டுக்குள் விழுந்து விட்டது. தாய் உட்பட மூவர் கொல்லப்பட்டார்கள்.

விபத்துக்குப் பின் தாய் உயிருடன் இருந்தாலும் படுகாயத்துடன் உயிர் பிழைப்பது கஷ்டமாக இருந்தது. இரண்டு நாட்கள் கழித்து அந்தத் தாயே தன்னை விட்டு விலகிச் சென்று உயிர் தப்பும்படி பிள்ளைகளை அறிவுறுத்தி இருக்கிறார். அது பற்றி காப்பற்றப்பட்ட மூத்தவளான 13 வயது சிறுமி பின்னர் குறிப்பிட்டிருந்தாள்.

கொலம்பிய இராணுவம் விமானம் இருக்கும் இடத்தை கண்டுபிடித்த போதும் அங்கே மூன்று சடலங்கள் இருந்தன. ஆனால் நான்கு குழந்தைகளையும் காணவில்லை. சுற்றும்முற்றும் பார்த்தால் அவர்கள் சென்ற கால் தடங்கள் தெரிந்தன. சாப்பிட்டுவிட்டு துப்பிய பழங்களின் எச்சங்கள் இருந்தன.

எனவே, அவர்களை தேடும் பாரிய வேட்டை ஆரம்பமானது. இராணுவத்துடன் உள்ளூர் பழங்குடியினரும் தேடுதலில் இறங்கினார்கள்.

“அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை நாம் உறுதியாக நம்பினோம். அது எம்மை தொடர்ந்து தேடுவதற்கு தூண்டியது” என்கிறார் மீட்புக் குழுவுக்கு ஆலோசனை வழங்கிய கொலம்பிய இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஒஸ்கார் கார்சோன்.

ஆறு வாரங்கள் நீடித்த தேடுதலின் பின்னர்தான் அந்த சிறுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்கள் காட்டுக்குள் சிரமப்பட்டதற்கான அடையாளங்கள் இருக்கவில்லை. சோர்வுதான் அதிகமாக இருந்தது. மற்றபடி உடல் பாதிப்புகள் இல்லை.

அந்த பயங்கர இருண்ட காட்டுக்குள் பெரிவர்களாலேயே நீண்ட காலம் நின்றுபிடிக்க முடியாது என்ற போதும் சிறுவர்கள், அதுவும் குழந்தை ஒன்றுடன் எப்படி உயிர் தப்பினார்கள்?

ஆனால் இந்தக் கதை உள்ளூர் பழங்குடி மக்களுக்கு அச்சரியமான ஒன்றாக இருக்கவில்லை. அந்த சிறுவர்களும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு காட்டில் உயிர் தப்புவது தெரிந்திருக்கிறது.

அந்தக் குட்டி விமானத்தின் பின் புறமாக இருந்ததாலேயே சிறுவர்கள் உயிர் தப்பி இருக்கிறார்கள். விமானம் விழுந்த இடத்தில் கொரில்லா கூட்டம் ஒன்றின் அச்சுறுத்தல் இருந்ததால் அவர்கள் அங்கிருந்து வெளியேறி இருக்கிறார்கள்.

இந்தத் தேடுதலில் இராணுவத்திற்கு உதவியாக இருந்த பழங்குடியினரான அல்பிரேடோ அகொஸ்டா கூறும்போது, “இறந்த சடலங்கள் இருப்பதாலேயே விபத்து இடம் பெற்ற இடத்தை சிறுவர்கள் கைவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இறந்த உடல்கள் விலங்குகளை கவரக்கூடியவை. அதேபோன்று அவர்கள் உணவு மற்றும் குடிநீரை தேடிச் செல்ல வேண்டி இருந்திருக்கிறது” என்கிறார்.





காட்டுக்குள் மரக் கிளைகளை வைத்து சிறிய கூடாரம் ஒன்றை கட்டியிருக்கும் இந்த சிறுவர்கள், ஆரம்பத்தில் விமானத்தில் இருந்த மரவள்ளிக்கிழங்கு மாவை சாப்பிட்டிருக்கிறார்கள். அதுவே அவர்களுடன் இருந்த குழந்தைக்கு உணவாகவும் இருந்திருக்கிறது. அது தீர்ந்த பின், விதைகளை சாப்பிட்டிருக்கிறார்கள் என்று சிறுவர்களை தேடுவதில் பங்கேற்றிருந்த எட்வின் பாக்கி என்பவர் சொல்கிறார்.

“அவிசுர் என்று அழைக்கப்படும் பேஷன் பழம் போன்ற ஒரு பழம் இருக்கிறது. அவர்கள் அதன் விதையை சாப்பிட விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து ஒன்றரை கிலோமீற்றர் வரை அந்த மரத்தை தேடி வந்திருக்கிறார்கள்” என்று குறிப்பிட்டார்.



இந்த தேடுதலில் ஈடுபட்ட மற்றொரு பழங்குடியினரான ஹென்ரி குவரேரோ கடைசியில் சிறுவர்கள் இருந்த இடத்தை கண்டுபிடித்தார். உள்ளூர் மக்களால் மிலிபோசோஸ் என்று அழைக்கப்படும் மரத்தில் வரும் பழத்தையும் அவர்கள் சாப்பிட்டிருக்கிறார்கள் என்றும் குவரேரோ குறிப்பிடுகிறார். அவர்களை கண்டுபிடிக்கும் போது ஒருவரின் வாயில் விதை ஒன்று இருந்ததாக அவர் கூறினார்.

நல்லவேளை சிறுவர்கள் காணாமல்போன பருவம் என்பது மரங்களில் பழங்கல் விளைந்த காலம். என்றாலும் அதனை சாப்பிட எந்தப் பழம் விசமானது, எது நல்லது என்ற அறிவு இருக்க வேண்டும். மூத்தவளான லெஸ்லிக்கு அதுபற்றி நன்றாக தெரிந்திருக்கிறது.

என்றாலும் காடு மனித வாழ்வுக்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. அது ஒரு அடர்த்தியான காடு. எந்தப் பக்கம் பார்த்தாலும் இராட்சத மரங்கள் தெரியும். அங்கே கண்ணை மூடி திறப்பதற்குள் காணாமல்போய்விடலாம் என்று தேடுதலில் ஈடுபட்ட இராணுவ வீரர் ஒருவர் சொல்கிறார்.

அந்த சிறுவர்கள் காட்டுக்குள் மான்கள், தும்பிப்பன்றி, சிறிய சிறுத்தை போன்று தெரியும் ஒன்சில்லா பூனைகள் மற்றும் விசப் பாம்புகளை கண்டிருக்கிறார்கள். நுளம்பு, எறும்புகளின் கடிகளையும் அந்த சிறுவர்கள் தாங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

குறிப்பாக அமேசன் காட்டில் நுளம்புக் கடி ஆபத்தானது. அதனால் மலேரிய நோய் தொற்றும் அச்சுறுத்தல் இருக்கிறது.

அடிக்கடி மழை பெய்வதால் எப்போதுமே ஈரமாகவே இருந்திருக்கிறார்கள்.

இவர்கள் விலங்குகள் மற்றும் ஏனைய அச்சுறுத்தல்களுக்கு பயந்து காட்டுக்குள் ஒளிந்தே இருந்ததால் அவர்களை கண்டு பிடிப்பதில் மேலதிக சிரமத்தை சந்தித்ததாக மீட்பாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்த சிறுவர்களும் தம்மை கொரில்லாக்கள் துரத்துவதாக அஞ்சியே காட்டுக்குள் ஒளிந்து இருந்திருக்கிறார்கள்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து இரண்டரை மைல் தொலைவிலேயே அந்த சிறுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள்.



பையன்: அப்பா ராமு என்னை அடிச்சுட் டான்பா...
அப்பா: வாத்தியார் கிட்ட புகார் கொடுக்க வேண் டியது தானே ?
பையன்: வாத்தியார் பெயர் தான் ராமு.



குமார்: டேய், என்ன பவுடர் யூஸ் பண்ணற?
கார்த்தி: தேஷ்வா பவுடர்.
குமார்: என்ன செண்ட் யூஸ் பண்ணற?
கார்த்தி: தேஷ்வா செண்ட்.
குமார்: என்ன ஹேர் ஆயில் யூஸ் பண்ணற?
கார்த்தி: தேஷ்வா ஹேர் ஆயில்.
குமார்: ஓ, தேஷ்வா அவ்வளவு பெரிய பிராண்டா?
கார்த்தி: இல்லடா, தேஷ்வா என் ரூம் மேட்.



பையன்: ஏம்மா இந்த மருந்து பாட்டிலை கைலவச்சிக்கிட்டு தடவிக்கிட்டு இருக்க?
அம்மா: கால் வலிச்சா இந்த மருந்தை தடவ ணும்னு டாக்டர் தாம்பா சொன்னாரு




ஆசிரியர் : நீ உயரமா வளரனும் னா என்ன செய்ய செய்யனும்?
மாணவன் : ஹை ஹீல்ஸ் ஷூ வாங்கி போடணும் சார்!



அப்பா: உன் வகுப் புல மொத்தம் 53 பேர் தானே..?
மகன்: அட.. எப் படிப்பா சரியா சொல்றீங்க?
அப்பா: உன் ரேங்க் பார்த்தாலே தெரியுதே..!



மனைவி : ஏங்க? டீ வி யில ஜல்லிக்கட்டு பாக்கு றிங்கலே ! அவ்ளோ பிடிச் சிருந்தா நேர்லயே போய் மாட்ட அடக்க வேண்டி யது தானே!
கணவன் : கட்டுன மாட்டையே என்னால் அடக்க முடியலங்கும் போது... கயிறு கட்டாத மாட்டை எப்படி அடக் குறது யோசிட்டு இருக் கன்??








கடந்த 44 வருடங்களாக தலைநகரில் கலைஞர் ராதா மேத்தாவின் வழிகாட்டலின் கீழ் மிகவும் சிறப்பாக இயங்கி வரும் புதிய அலை கலை வட்டம் அதன் கலை இலக்கியப் பிரிவை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தபோது...



# ரசிகர்களை பிரமிக்க வைத்த 'கீத் ராத் 58' பாட்டும் பாராட்டும் இசை மாலைப் பொழுது

## பிரபல சமூக சேவையாளர் டாக்டர் எம்.சி. பஹார்தீன் 'சேவை சிகரம்' கௌரவ பட்டம் பெற்றார்



தினகரன் தினகரன் வாரமஞ்சரி சக்தி தொலைக்காட்சி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் 'கீத்ராத் 58' பாட்டும் பாராட்டும் மாபெரும் இசை நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07 ஜே.ஆர் ஜெயவர்த்தன மண்டபத்தில் இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர், தினகரன் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்ணான்டோ, பிரபல தொழிலதிபரும் கல்விசமூக நலன்களுக்கான அரும்பெரும் சேவையாற்றியவரும் கொழும்பு அல் ஹிதாயா கல்லூரியின் பழைய மாணவருமான டாக்டர். எம். சி.பஹார்தீனுக்கு 'சேவை சிகரம்' சிறப்புப் பட்டமும் கௌரவமும் வழங்கப் பட்டது. ரசிகர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்திருந்தனர். பிரமிக்க வைத்த இசைமாலைப் பொழுதென ரசிகர்கள் பாராட்டி மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சியைப் பாடகர் அறிவிப்பாளர் கவிக்கமல் தொகுத்து வழங்கினார்.



மத்திய மாகாண புகைப்பட அமைப்பினரால் மூத்த கலைஞர்கள் சிலர் கௌரவிக்கப்பட்டனர். கண்டி றோயல் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் புகைப்படக் கலைஞர் கந்தசாமி பாலச்சந்திரன் மூத்த கலைஞரால் பொன்னாடை போர்த்தி கெரவிக்கப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.



அமிர்தவர்ஷினி



Dhanurshan Akilesh



F.H uda Musharrif
Negombo
24.06.2020



D. பிரதிகா
பலாங்கொடை



Siva Sinaneshwaran



ஜயரட்னம்



கலைக் குடும்பம்



சிவகுமார்



நடராஜா தாமரைச் செல்வி



மலையக தேவா



கலைஸ்ரீ



வாசுகி பி வாசு

**உங்களைப் பற்றி கூறுங்கள்?**

நான் கண்டி மாவட்டத்தில் உள்ள தெஹிதெனிய மடிகே என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். ஆரம்பக் கல்வியை தெஹிதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மாவனல்லை ஸாஹிராக் கல்லூரியிலும் கற்றேன். பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் எனது பட்டப் படிப்பை முடித்துவிட்டு மேற்படிப்புக்காக மலேசியா சென்றேன். அதுதான் என் வெளிநாட்டு வாழ்க்கையின் தொடக்கப் புள்ளி. இப்போது நியூசிலாந்தில் வசித்து வருகிறேன்.

**உங்களது குடும்பத்தவர்களுக்கும் இலக்கியத் துறையில் நாட்டம் உண்டா?**

இலக்கியத் துறையில் ஈடுபாடுள்ளவர்கள் யாரும் என் குடும்பத்தில் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஆனால், என் வாசிப்பை அவர்கள் ஊக்கப்படுத்தினார்கள். என் எழுத்துப் பயணத்துக்கான பாதையைச் செப்பனிட்டுத் தந்தார்கள். என் தந்தை மர்ஹூம் இல்யாஸ் சிங்கள மொழி மூலம் கல்வி கற்றவர். ஆனால் தமிழ் மொழியையும் காதலித்தார். என் எழுத்துக்களை நேசித்தார். நான் கேட்கும் புத்தகங்களை எனக்கு வாங்கித் தந்தார். எனது தாய் மாமனாரும், மதரஸத்துன் நயீமியாவின் ஸ்தாபகருமான பிரபல சமூக சேவையாளர் மர்ஹூம் நயீம் ஹாஜியார் என் ஆக்கங்கள் வெளியாகும் போதெல்லாம் எனக்குப் பரிசுகள் வாங்கித் தந்து, என்னை மேலும் எழுதத் தூண்டினார். திருமணத்தின் பின்னர் என் கணவர் எம்.வை.எஸ். ஷாபி என் இலக்கிய முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்.

**நீங்கள் எந்த வயதில் எழுத ஆரம்பித்தீர்கள்?**

1980 களில் தான் எனது இலக்கியப் பயணம் ஆரம்பமாகியது. நான் எட்டாம் ஆண்டில் கல்வி கற்கும் போது தினகரன் பத்திரிகையின் சிறுவர் உலகம் பக்கத்தில் எழுத ஆரம்பித்தேன். 1980 ஆம் ஆண்டில்; தினகரன் சிறுவர் உலகம் பகுதியில்தான் எமது பாடசாலை என்ற தலைப்பிலேயே எனது முதலாவது ஆக்கம் வெளிவந்தது. அதன் பிறகு கவிதை, சிறுகதைத் துறையில் மெதுமெதுவாகக் காலடி எடுத்து வைத்தேன். என் முதல் கவிதை, முதல் சிறுகதை எல்லாமே தினகரன் பத்திரிகையில் தான் வெளியாகின. 1982 இல் எனது முதலாவது சிறுகதை வெதும்புகின்ற ஊமைகள் என்ற தலைப்பில் வெளிவந்ததாகவே எனக்கு நினைவு.

அத்துடன்; தினகரன், சிந்தாமணி, நவமணி, மித்திரன், வீரகேசரி போன்ற தேசிய நாளிதழ்களில் எல்லாம் எனது பல்வேறு வகையான ஆக்கங்கள் வெளியாகின. வானொலியிலும் நான் நிறையவே எழுதினேன். சஞ்சிகைகள் பலவற்றிலும் எனது பல படைப்புகள் வெளியாகி உள்ளன.

**சமூகம் சார்ந்த பிரச்சினைகளை உங்கள் படைப்புகளில் எப்படிக் கொண்டு வருகின்றீர்கள்? உங்கள் படைப்புகளை பொதுவாக எப்படி வரையறுக்க விரும்புகிறீர்கள்?**

இறைவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான ஆற்றலைக் கொடுத்துள்ளான். அதை சமூகத்துக்குப் பயனளிக்கும் விதத்தில் உபயோகிக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருப்பதாக நான் நம்புகிறேன். அதனால் நான் பொழுது போக்குக்காக எதையும் எழுதுவதில்லை. அன்றாட வாழ்வில் எனக்குக் கிடைக்கின்ற அனுபவங்களும், அவதானிப்புகளும் என் படைப்புக்களின் கருவாகின்றன. கற்பனைக் கதாபாத்திரங்களைக் கொண்டு மாய உலகை உருவாக்குவதில் எனக்கு இஷ்டமில்லை. இரத்தமும் சதையும் கொண்ட அன்றாட மனிதர்களின் வாழ்வியல் போராட்டங்களைப் படம் பிடித்துக் காட்ட வேண்டும் என்பதில் எனக்கு அதிக அக்கறை இருக்கிறது.



**இதுவரை வெளிவந்த உங்களது நூல்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

01. குமுறுகின்ற எரிமலைகள் சிறுகதைத் தொகுதி (1998)
02. தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள் ஓர் ஆய்வு (1998)
03. இரவைக் காக்கும் இமைகள் கவிதைத் தொகுப்பு (2022)
04. என் சிறகில் சிக்கிய வானம் பயணக் கட்டுரைகள் (2023)

ஆகிய 04 நூல்களையே இதுவரை நான் வெளியிட்டுள்ளேன்.

**நீங்கள் இதுவரை எழுதியுள்ள கவிதைகள் பற்றிக் குறிப்பிட முடியுமா? எவ்வகையான கருப்பொருட்களை மையமாக வைத்து உங்களது கவிதைகளை எழுதுகின்றீர்கள்?**

நான் நியூஸிலாந்துக்குப் புலம் பெயர்ந்து வந்தபின் கொஞ்ச நாட்கள் எழுத்துலகில் இருந்து ஒதுங்கி இருந்தேன். ஒரு விபத்தில் சிக்குண்ட நான் சக்கர நாற்காலியில் இருந்தேன். நண்பர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். என்னைத் தெரிந்தவர்கள் நான் யாரென்று கேட்டார்கள். அப்போது கோபத்திலும் விரக்தியிலும் பல கவிதைகளை எழுதிக் கிழித்துப் போட்டேன். என் உடல் நிலை தேறிய பின்புகூட எழுத்துத் துறையில் நான் ஈடுபடவில்லை. ஆனால், முகநூல் கணக்குத் திறந்த பிறகு, எழுதச் சொல்லி என் பேனா அடம் பிடித்தது.

முகநூல் மூலம் அவுஸ்திரேலியா வானொலி முஸ்லிம் சேவைத் தயாரிப்பாளர் முஹம்மது முஹுனின் தொடர்பு ஏற்பட்டது. வானொலி நிகழ்ச்சிகளுக்காக அவர் என்னைத் எழுதத் தூண்டினார். என் இலக்கியப் பயணத்தில் ஏற்பட்ட இடைவெளியை அப்போது நிரப்ப ஆசைப்பட்டேன். அந்த ஆசையின் விளைவாகவே இரவைக் காக்கும் இமைகள் என்ற கவிதைத் தொகுப்பு வெளியானது. இந்தத் தொகுப்பில் இருக்கும் பாதிக் கவிதைகள், ஓர் இளம் படைப்பாளியாக பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு நான் ஆரம்ப காலத்தில் எழுதியவை. மீதிக் கவிதைகள் வானொலியிலும் முகநூலிலும் எழுதியவை. என் கவிதைக்கான கருவும் நடைமுறை வாழ்க்கையில் கிடைப்பதுதான். காதல், வீரம், துணிவு, ஏமாற்றம், சவால்கள், அடக்குமுறைக்கு எதிரான குரல், யுத்த காலச் சூழல் என்று வெவ்வேறு கருப்பொருளில் என் பேனா பேசுகிறது.



# கற்பனைக் கதாபாத்திரங்களைக் கொண்டு மாய உலகை உருவாக்குவதில் எனக்கு இஷ்டமில்லை

கலாநிதி
**மரீனா இல்யாஸ் ஷாபி**

**சிலரை கவிதை எழுதத் தூண்டுவதே காதல் என்று சொல்கிறார்களே. இதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

என்னைக் கவிதை எழுதத் தூண்டிய காரணிகள் பல. அதில் வாசிப்பும் ஒன்று. இரண்டாவது காரணி நான் வாழ்க்கையில் அனுபவித்த வலிகள், வேதனைகளை அனுபவித்து எழுதும் கவிதைகளில் வார்த்தைகள் வசப்பட்டு விடும். பிறரின் வலிகளை உணர்ந்த தருணங்களிலும் கவிதை எழுதுவேன். அதற்காக நான் காதல் கவிதைகள் எழுதவில்லை என்று சொல்ல வரவில்லை. இளமையில் காதலைப் பாடினேன். அது ஒரு குறுகிய பார்வையில் தெரிந்த காதல் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காதல் அது. இப்போது காதல் என்ற சொல் வானத்தைப் போல விரிந்து தெரிகிறது. தந்தையை, தாயை, இயற்கையை, இலட்சியங்களை.. என்று எல்லாவற்றையும் நான் காதலிக்கிறேன். அந்த உணர்வுகளைக் கவிதையில் வடிக்கிறேன். அன்று எழுதிய காதல் கவிதைகளுக்கும் இன்று எழுதும் காதல் கவிதைகளுக்கும் வித்தியாசம் இதுதான்.

**தற்போது நீங்கள் வெளி நாட்டில் வசித்து வருகின்றீர்கள். அங்கிருந்து கொண்டு உள் நாட்டில் நூல்களை வெளியிடுவது சிரமமாகத் தோன்றவில்லையா?**

அது மிகவும் சிரமமான காரியம் என்பதால்த் தான் நூல் வெளியீட்டில் நான் அக்கறை காட்டாமல் இருந்தேன். வெளிநாட்டில் இருப்பதால் நியாயமான விலைக்கு புத்தகம் அடிப்பதுகூட கஷ்டமாக இருக்கிறது.

**கவிதை, சிறுகதைத் துறை தவிர வேறு எந்தெந்தத் துறைகளில் உங்களுக்கு ஆர்வம் அதிகம்?**

நாடகத் துறையில் எனக்கு அதிக ஈடுபாடு இருக்கிறது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான நாடகங்களே, மக்கள் மத்தியில் என்னை அறிமுகப்படுத்தியது என்று கூடச் சொல்லலாம்.

**நாடகத் துறையில் நீங்கள் ஆற்றிய பங்களிப்புகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நான் நிறைய நாடகங்கள் எழுதி உள்ளேன். அதில் ஒரு தொடர் நாடகமும் அடங்கும். அதன் பின்பு அவுஸ்திரேலியா வானொலியின் 'வளர்பிறை' முஸ்லிம் நிகழ்ச்சிக்காக நாடகங்களை எழுதி, நானே பல குரல்களில் நடித்தும் இருக்கிறேன். உரைச் சித்திரம் நிகழ்ச்சிகளிலும் நானே எழுதி நடித்திருக்கின்றேன்.

**வானொலிக்கு ஆக்கங்களை எழுதிய காலத்தில் உங்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் பற்றிச் சொல்லுங்கள்?**

சமூக வலைத்தளங்கள் இல்லாத அந்தக் காலகட்டத்தில், வானொலி நேயர்கள் தங்கள் கருத்துக்களையும், பாராட்டுக்களையும் கடிதங்கள் மூலமாகவே பகிர்ந்து வந்தார்கள். வானொலியில் நாடகங்கள் ஒலிபரப்பாகினால், தொடர்ந்தும் இரண்டு, மூன்று வாரங்களுக்குக் கடிதங்கள் வந்து கொண்டே இருக்கும். எங்கள் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றாலும் நாடகங்கள் பற்றிய பேச்சு கட்டாயமாக இருக்கும்.

என் தந்தையின் நட்பு வட்டத்தில் இருப்பவர்கள் அவரைக் காணும் போதெல்லாம் உங்கள் மகளின் நாடகத்தைக் கேட்டு மகிழ்ந்தோம் என்று நாடகம் பற்றி கருத்துப் பரிமாறுவார்களாம். வாப்பா வீட்டுக்கு வந்து அந்தக் கருத்துக்களை என்னிடம் எத்தி வைத்து விட்டு, என்னைப் பக்கத்தில் உட்கார வைத்து ஷஷஉங்கள் எழுத்துக்கள் நிறைய மக்களைச் சென்றடைகிறது. அதனால் எப்போதும் சமூகத்துக்கு பயனுள்ள விடயங்களையே எழுதுங்கள்' என்று சொல்வார். நாடகத்தைக் கேட்கத் தவறியவர்கள் நான் ஒலிப்பதிவு செய்து வைத்த, ஒலிப்பதிவு நாடாவைக் கேட்டு வருவார்கள். அது கை மாறி மாறி எங்கெல்லாமோ போகும். ஆனால் அபூர்வமாகவே திரும்பி வரும்.

**சிறுவர் படைப்புகளை வெளியீடு செய்வதில் உங்களுக்கு நாட்டம் இல்லையா?**

சிறுவர்களுக்காக வானொலியில் உரைச் சித்திரங்கள் எழுதி உள்ளேன். சிறுவர்களின் உள நல மேம்பாட்டுக்கான நிகழ்ச்சிகளை நேரில் நடாத்தி வருகிறேன். சிறுவர் படைப்புக்களில் நாட்டமில்லை என்று சொல்வதற்கில்லை. அதற்கான நேரமில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

**உங்களது இலக்கியப் பங்களிப்புகளுக்காக இதுவரை நீங்கள் பெற்ற பாராட்டுக்கள், பட்டங்கள், கௌரவங்கள், விருதுகள் பற்றிக் கூறுங்கள்?**

விருதுகள் விற்கப்படும் ஒரு கால கட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். பட்டங்கள் மலிந்து அதன் உண்மையான பெறுமதியை இழந்துவிட்டன. பணம் தந்தால் பாராட்டு விழா நடத்துவோம் என்று நிறைய இயக்கங்கள் கிளம்பி இருக்கின்றன. இவற்றை விட்டும் தூரப்பட்டு இருப்பதில் மகிழ்ச்சி. நான் முகநூலை என் எழுத்துக்களுக்கு சிறந்ததோர் களமாகப் பயன்படுத்தி வருகிறேன். என் எழுத்துக்கள் பரந்துபட்ட வாசகர்களைச் சென்றடைய முகநூல் உதவுகிறது. வாசகர்களின் நேர்மையான பின்னூட்டங்களை மிகவும் மதிக்கிறேன். அவைகள் தாம் என் எழுத்துக்குக் கிடைக் கும் மிகச் சிறந்த கௌரவங்கள்.

நேர்கண்டவர்:
வெலிகம ரிம்ஸா முஹம்மத்







# நாடறிந்த கலை உலக சிற்பி கலாபூஷணம் எஸ்.என் நடராஜா

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கஹாவத்தையில் பிறந்து வளர்ந்தவர் எஸ். என் நடராஜா. சகல கலைகளுக்கும் அதிபதியாக விளங்குபவன் சிவன். அந்த சிவனுடைய திருநாமத்தை தனது திருநாமத்தில் கொண்டதாலோ என்னவோ இவரும் கலைகளில் சிறந்து விளங்கி வருகிறார். பெயரில் ராஜா இருப்பது போல கலையிலும் இவர் ராஜாவாகத் திகழ்கிறார். மலையக மண்ணிலும் நல்ல கலைஞர்கள் உருவாகி இருக்கிறார்கள். உருவாகி வருகிறார்கள் என்பதற்கு இவர் ஒரு சான்று.

தமிழர்கள் எங்கும் வாழ்ந்தாலும் தமிழையும் சைவத்தையும் போன்று கலைகளையும் வளர்க்கத் தவறவில்லை. கடவுளை வழிபட வழிபாடுகளை செய்யும் போது கலைகளின் மூலம் கடவுளின் திருவருளைப் பெற தவறுவதில்லை.

மலையக மண்ணில் பிறந்த இவருக்கும் கலை உலகுக்குள் நுழைய 13 வயதில் திருவருட் கிடைத்துள்ளது.

அன்றாடம் பாடுபட்டு வேலை செய்த மலையகத் தமிழர்கள் தங்கள் அழுப்புத் தீர கலைநிகழ்வுகளை நடத்துவதுண்டு. காமன்கூத்து, நாட்டுக்கூத்து என பல்வேறு கலை வடிவங்கள் இங்கு களைகட்டி வளர்ந்தன. இவருக்கு 13 வயதில் மலையக நாட்டுக்கூத்தில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. நாட்டுக்கூத்து, கலைநிகழ்வுகளில் பங்குபற்றி வந்தவருக்கு தொழில் நிமித்தம் தலைநகர் கொழும்புக்கு வர நேரிட்டது.

தலைநகருக்குள் வந்தாலும் கலை மீது கொண்ட தாகம் இவருக்கு தீர்ந்தபாடில்லை. இதனால் மேடை நாடகங்கள் மூலம் தனது கலைத் தாகங்களை தீர்த்துக் கொள்ள தலைப்பட்டார்.

இவர் மேடைநாடகங்களில் கொடிகட்டிப் பறந்த காலகட்டங்களில் வருடாந்தம் ஏழு, எட்டு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இவருக்கு இவ்வாறு மேடையேற்றப்பட்ட அனைத்து நாடகங்களிலும் நடிக்க ஆசையாக இருந்துள்ளது. எனவே இவர் இவ்வாறு பல முன்னணிக் கலைஞர்களுடன் இணைந்து முன்னணிக் கலைஞர்களின் 50க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார்.

மேடை நாடகங்களில் நடித்து வந்தவருக்கு சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டது. அதற்கான வாய்ப்பும் இவருக்கு இலகுவாக கிடைத்தது. இவருக்கு டாக்ஸி டிரைவர் என்ற திரைப்படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. சுண்டுக்குளி சோமசேகரன் தயாரித்த அந்த திரைப்படத்தில் தான் இவருக்கு நடிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இந்தத் திரைப்படத்தைத் தொடர்ந்து, மஞ்சள் குங்குமம், நிர்மலா, தெய்வம் தந்த வீடு, நான் உங்கள் தோழன், மாமியார் வீடு, ஷர்மிளாவின் இதயராகம், மீனவப் பெண் ஆகிய இலங்கை தமிழ்த்திரைப்படங்களில் நடிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட இந்தத் தமிழ்த் திரைப்படங்களைத் தவிர 10 சிங்களத் திரைப்படங்களிலும் இவர் தனது நடிப்புத் திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

இது வரை காலமும் நடிகராக மட்டும் தனது நடிப்பாற்றலை வெளிக்கொணர்ந்த இவர், நெறியாளராகவும், இயக்குனராகவும் தனது ஆற்றலை 1972ஆம் ஆண்டு ஓம் சரவணா புரோடக்ஷன் என்ற அமைப்பை அமைத்த பின் காட்டத் தொடங்கினார். இவர் இந்த அமைப்பை அமைத்த பின் 10 நாடகங்களை மேடையேற்றியுள்ளார். இவற்றில் எட்டு நாடகங்களை இவரே இயக்கியுள்ளார்.

இவர் நாடகங்களில் நடிப்பது மட்டுமல்ல, நாடகங்களை இயக்குவது மட்டும் அல்ல, நாடகங்களை எழுதுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் எழுதி இயக்கிய நாடகங்களில் பருவம் ஒரு பாடம், எங்கே நீதி, யாரைத்தான் நம்புவது, வெள்ளிக்காசுகள் ஆகியன ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களை பெற்ற நாடகங்களாகும்.

எவ்வளவு தான் வெற்றிகரமாக நாடகங்கள் மேடையேற்றப்பட்டாலும் ரசிகர்கள் ஆதரவுகள் வழங்கினாலும் நாடகங்கள் முடிவடைந்தபின் வீட்டுக்குச் செல்வதற்கு பஸ்ஸுக்குக் கூட காசு இல்லாத நிலைமையே இருந்தது. இது இவருக்கு மட்டும் அல்ல, பல கலைஞர்களுக்கு ஏற்பட்ட அனுபவமாக இருந்தது. இருந்தாலும் ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவு இருந்ததால் நாடங்கள் மேடையேற்றப்பட்ட பின் ஒரு ஆத்மா திருப்தி இருந்தது.

கலைஞர்களான வி.பீ. கணேசன், கலாபூஷணம் கலைச்செல்வன், லடீஸ் வீரமணி, டொன் பொஸ்கோ, மோகன்குமார், சண்முகராஜ், கலைவேந்தன் முத்தையா, உதயகுமார், ஹெலன்குமாரி, கௌரி, ஶ்ரீதேவி, ஜெயதேவி, ஜெந்தி, ரத்னகலா, எம். வி. தாஹிரா, மல்லிகா கீர்த்தி ஆகியோருடன் இணைந்து நடித்துள்ளார்.

இவர், 1999 ஆம் ஆண்டு அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தால் இரத்தினபுரியில் கலைக்கதிர் என்னும் சாமஸ்ரீ விருது பெற்றார், 2008ஆம் ஆண்டு இவருக்கு அரசாங்கத்தின் தேசிய விருதான கலாபூஷணம் விருது வழங்கப்பட்டது.









கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

Senthooram செந்தூரம்



# அஞ்சலியை மோசமாய் சித்திரவதை செய்த சொந்தக் குடும்பம்



நடிகையாக என்னதான் சினிமாவில் அஞ்சலி கெத்து காட்டினாலும் அவருடைய குடும்பத்தில் ஏகப்பட்ட சித்திரவதையை அனுபவித்திருக்கிறார்.

திரையுலகில் 17 வருடங்களாக நடிகையாக தமிழ், தெலுங்கு. கன்னடம் மற்றும் மலையாள படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் நடிகை அஞ்சலி, படத்தில் பெரும்பாலும் செம போல்ட் ஆன கதாபாத்திரத்தை எடுத்து நடிக்க கூடியவர். இவருடைய துணிச்சலான பேச்சு மற்றும் தைரியத்தை குடும்பம் தான் கொடுத்திருக்கிறது. அதே குடும்பத்தால் இவர் மிகவும் மோசமாக சித்திரவதைகளை அனுபவித்திருக்கிறார்.

இதனால் சினிமாவே வேண்டாம் என சில வருடங்கள் அவர் ஒதுங்கி இருந்துள்ளார். அதன் பிறகு அஞ்சலியின் நடிப்பு திறமை வீணாய் போய் விடக் கூடாது என பிரபலம் ஒருவர் கொடுத்த துணிச்சல்தான் அவரை மறுபடியும் சினிமாவில் ரீ என்ட்ரி கொடுக்க வைத்தது. ஆந்திராவில் பிறந்து வளர்ந்த அஞ்சலி தனது சித்தியுடன் சென்னைக்கு பள்ளி படிப்பிற்காக வந்துள்ளார். அப்போதுதான் அவருக்கு கற்றது தமிழ் என்ற படத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அந்த படத்தில் நடிக்கும்போது அஞ்சலி 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். முதல் படத்திலேயே அவருடைய இயல்பான நடிப்பை பார்த்து அடுத்தடுத்த பட வாய்ப்புகள் கிடைத்தது. அதிலும் வசந்த பாலன் இயக்கத்தில் வெளியான அங்காடித் தெரு படத்தில் அச்சு அசல் துணிக்கடையில் பணிபுரியும் பெண்ணாகவே மாறி இருப்பார். அதன் பின் எங்கேயும் எப்போதும் படத்தில் ஜெய் உடன் இணைந்து நடித்தார். இந்தப் படத்தில் அவர்களுக்கிடையே கெமிஸ்ட்ரி பக்காவாக வர்க் அவுட் ஆனது மட்டுமல்லாமல் திரை மறைவில் இருவரும் காதலிப்பதாகவும் விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் கிசுகிசுக்கப்பட்டது. ஆனால் அந்த வதந்தியை இருவரும் மறுத்துவிட்டனர். அந்த சமயத்தில்தான் அஞ்சலியை அவருடைய சித்தி பல சித்திரவதைகளை செய்திருக்கிறார்.

அவரின் டார்ச்சர் தாங்க முடியாமல் ஒரு கட்டத்தில் சினிமாவே வேண்டாம் என ஆந்திராவிற்கு சென்றுவிட்டார். அங்கு பிரபல தெலுங்கு தயாரிப்பாளர் ஒருவரின் உதவியுடன் தெலுங்கு படத்தில் நடித்தார். இப்போது மறுபடியும் அஞ்சலி தமிழ் படங்களில் ரீ என்ட்ரி கொடுத்திருக்கிறார். அஞ்சலி தன்னுடைய 50வது படமான ஈகை என்ற படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை சமீபத்தில் வெளியிட்டு சோசியல் மீடியாவில் ட்ரெண்ட் ஆக்கினார். ஒரு நடிகை திரையுலகில் 50வது படம் நடிப்பதெல்லாம் சாதாரண விஷயம் அல்ல. அதுவும் குடும்பத்தில் ஏகப்பட்ட டார்ச்சர் இருக்கும் நிலையில் எந்தவித துணையும் இல்லாமல் இந்த அளவிற்கு அவர் முன்னேறி இருக்கிறார் என்றால் அவருடைய தன்னம்பிக்கை மட்டுமே முழுக் காரணம் என்று அஞ்சலியின் 37வது பிறந்தநாளான இன்று அவருடைய ரசிகர்களும் பிரபலங்களும் தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.



# காதலுக்கு பணம் முக்கியம் இல்லை






கடந்த சில நாட்களாகவே தமன்னா பற்றிய செய்திகள் தான் சோசியல் மீடியாவை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. பலரும் வாயடைத்து போகும் அளவுக்கு கிளாமர் களத்தில் குதித்திருக்கும் இவர் இதன் மூலம் மீடியாக்களுக்கு சரியான தீனி போட்டுள்ளார்.

இது ஒரு புறம் இருந்தாலும் பாலிவுட் நடிகரான விஜய் வர்மாவுடன் இவர் டேட்டிங் செய்து வருவது பல விமர்சனங்களை முன்வைத்தது. ஆனால் இது பற்றி எந்த விளக்கமும் அளிக்காத தமன்னா அண்மையில் தான் தன்னுடைய காதலை பகிரங்கமாக போட்டு உடைத்தார்.

அதைத்தொடர்ந்து இவர்களின் ஜோடி பொருத்தத்தை பற்றி பலரும் சிலாகித்து பேசி வருகின்றனர். அதை தொடர்ந்து இவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் அந்தஸ்து சொத்து விவகாரம் பற்றிய தகவலும் மீடியாவை கலக்கிக் கொண்டிருக்கிறது. அதாவது தமன்னா தமிழ், தெலுங்கு, ஹிந்தி என ரவுண்டு கட்டி நடித்து வருகிறார். இதன் மூலம் கை நிறைய சம்பாதித்து வரும் அவர் இப்போது 110 கோடிக்கு அதிபதியாக இருக்கிறார். ஆனால் அவருடைய காதலர் விஜய் வர்மா வெறும் 17 கோடிக்கு மட்டுமே சொந்தக்காரராக இருக்கிறார். இப்படி இருக்கும் நிலையில் தமன்னா அந்தஸ்து, காசு, பணம் எதுவும் பார்க்காமல் காதலில் விழுந்திருப்பது பலரின் பாராட்டுகளையும் பெற்று வருகிறது.

ஏனென்றால் ஹீரோயின்கள் என்றாலே நல்ல புளியங்கொம்பாக பார்த்து தான் செட்டில் ஆவார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை, தொழிலதிபர், டாப் ஹீரோ என யாரையாவது திருமணம் செய்து கொண்டு அவர்கள் சொகுசாக வாழ்ந்து வருவார்கள். இவர்களுக்கு மத்தியில் காதலுக்கு பணம் முக்கியம் இல்லை என்று கூறும் வகையில் இருக்கிறது தமன்னாவின் காதல். இவ்வாறாக தன்னைவிட கம்மியான சொத்து மதிப்பு இருந்தாலும் பரவாயில்லை என அவர் விஜய் வர்மாவை காதலித்து வருகிறார். இதைத்தான் தற்போது பாலிவுட் திரையுலகினர் ஆச்சரியமாக பேசி வருகின்றனர்.

மேலும் மில்க் பியூட்டியான இவருடைய மனசு கூட பால் மாதிரி வெள்ளையாக இருக்கிறது என ரசிகர்களும் ஓவராக புகழ்ந்து தள்ளி வருகின்றனர்.

# சாவின் விளிம்பிற்குச் சென்று மீண்ட ரோபோ சங்கர்






ரோபோ சங்கர் பல மாதங்களுக்கு பிறகு இப்போது நிறைய யூடியூப் சேனலில் பேட்டி கொடுப்பதை பார்க்க முடிகிறது. ஆனால் முன்பு போல ரோபோ சங்கரிடம் இருந்த எனர்ஜி சற்று குறைவாகத்தான் இருக்கிறது. மேலும் இவ்வளவு நாள் தான் கடந்து வந்த பாதையை கூறி அனைவரையும் கண்கலங்க செய்துள்ளார். அதாவது சமீபத்தில் கல்லூரி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரோபோ சங்கர் மாணவர்களுக்கு தனது வாழ்க்கையையே எடுத்துக்காட்டாக கூறியிருக்கிறார். நாலு மாசமாக யூடியூபில் சூப்பர் ஸ்டாராக நான் தான் இருந்தேன். தெரியா தனமாக ஒரு கிளியை வளர்த்தது குத்தமா? கிளி வளர்த்தால் பெயர் சொல்லும் என்பார்கள். ஆனால் அது எந்த நாட்டு கிளி என்பது நமக்கு தெரியாது இதனால் பிரச்சனையை சந்தித்தேன். அதற்கு அடுத்தபடியாக சினிமாவுக்காக உடலை குறைத்தேன். அந்த சமயத்தில்தான் தனக்கு மஞ்சள் காமாலை வந்து விட்டது. அதற்குக் காரணம் என்னுடைய கெட்ட பழக்கம் தான். இதனால் 5 மாதம் கிட்டத்தட்ட படுத்த படுக்கையாகவே இருந்து சாவின் விளிம்பிற்கு சென்று வந்தேன்.

அந்த கெட்ட பழக்கத்திற்கு மிகவும் அடிமையானதால் அதிலிருந்து வெளிவர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் கடந்த ஜனவரி மாதம் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு சென்றது. ஏனென்றால் மது அருந்த முடியவில்லை என்றால் இது போன்ற எண்ணங்கள் வர ஆரம்பித்தது. அந்த சமயத்தில்தான் நக்கீரன் பத்திரிக்கையாளர் கோபால் தன்னை சரியான மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை கொடுத்தார். நேரத்தில் என்னுடைய ரத்தத்தில் எவ்வளவு தூரம் மஞ்சள் காமாலை பாதித்ததால் உறுப்புகள் செயல் இழந்தது என்பது தெரிய வந்துள்ளது. அப்போது எனக்கு சிகிச்சை அளிக்கும் போது தூக்கம் இல்லாமல் குடும்பம் தான் என்னை பார்த்துக் கொண்டதாக ரோபோ சங்கர் கூறியிருக்கிறார். மேலும் சினிமாவில் உள்ளதால் பல பிரபலங்கள் தனக்கு ஆறுதல் கூறி இருந்தனர். இப்போது எந்த கெட்ட பழக்கமும் இல்லாமல் மீண்டு வந்திருக்கிறேன். தினமும் உடற்பயிற்சி மற்றும் சத்தான உணவு பழக்கவழக்கங்களால் மீண்டும் பழைய நிலைமைக்கு ரோபோ ஷங்கர் வந்துள்ளாராம். இதனால் அவரது ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

# தவறான விமர்சனத்திற்கு பதிலடி கொடுத்த அனுபமா



2016ல் துரை செந்தில் குமார் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் வெளிவந்த படம் தான் கொடி. இப்படத்தில் தனுஷ், திரிஷா, அனுபாமா பரமேஸ்வரன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருப்பார்கள். இப்படம் இவருக்கு நல்ல விமர்சனங்களை பெற்று தந்த நிலையில், 2021ல் தள்ளி போகாதே என்னும் படத்தில் முன்னணி கதாநாயகியாக நடித்தார். இவருக்கு தமிழில் வாய்ப்புகள் சரிவர இல்லாததால் தெலுங்கு, மலையாள படங்களில் ஆர்வம் காட்டி வருகிறார். மேலும் ஆரம்ப காலத்தில் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன் என கூறிய இவர் தற்பொழுது தன்னுடைய கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு வைரலாக்கி வருகிறார். அதைத்தொடர்ந்து ரசிகர்களை தக்க வைத்துக் கொள்ள இது போன்ற கவர்ச்சி நடிப்பில் ஆர்வம் காட்டி வருகிறார். தெலுங்கு, மலையாள படங்களில் இவருக்கு என்று ரசிகர்கள் இருக்கும் நிலையில், தற்பொழுது பட வாய்ப்புக்காக இது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறார். ஒரு சில பிரபலங்களின் படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்த நிலையில், பல படங்களில் பிரபலமாகாத நடிகர்களுடன் தான் இணைந்து நடிக்க வாய்ப்பு கிடைத்து வருகிறது. இந்நிலையில் ரசிகர் ஒருவர் நீங்கள் ஒன்றும் பெரிய கதாநாயகி இல்லை. அதனால் பிரமாண்டமான பிரபலங்களோடு நடிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. உண்மையை சொல்ல வேண்டும் என்றால் நீங்கள் கதாநாயகிக்கான தகுதி பெறவில்லை என விமர்சித்துள்ளார். அதற்கு பதிலடியாக ஆமாம் நீங்கள் சொல்வது உண்மைதான் ஆனால் நான் கதாநாயகி அல்ல நான் நடிகை ரகம் என நேக்காக பதிலடி கொடுத்துள்ளார். இவரின் இத்தகைய புத்திசாலித்தனமான பதில் பலரின் பாராட்டை பெற்று தந்தது.



# அந்த மாதிரி விஷயத்தில் தமிழ் ஹீரோக்கள் ரொம்ப மோசம்

## கழுவி ஊற்றிய நித்யா மேனன்



திடீரென நித்யா மேனன் இப்படி கூறியுள்ளதால் யார் அந்த ஹீரோ என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. குஷ்புவுக்கு அடுத்தபடியாக சற்று குண்டாக இருந்தாலும் ரசிகர்களை கவர்ந்தவர் நித்யா மேனன். கடைசியாக தமிழ் சினிமாவில் அவருடைய நடிப்பில் வெளியான திருச்சிற்றம்பலம் படம் ரசிகர்களை பெரிய அளவில் கவர்ந்தது. தாய்க் கிழவியாக ரசிகர்களின் மனதை கொள்ளை அடித்து விட்டு சென்றார். இப்படிப்பட்ட கதாபாத்திரத்தில்தான் ஹீரோயின் நடிக்க வேண்டும் என்பதற்கு விதிவிலக்காக நல்ல கதாபாத்திரங்களாக இருந்தால் நித்யா மேனன் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். இந்நிலையில் அவர் கூறிய சம்பவம்தான் இப்போது கோலிவுட் சினிமாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது சினிமாவை பொருத்தவரையில் அட்ஜஸ்ட்மென்ட் இருப்பதாக பலர் சொல்லி உள்ளனர். அதுவும் பிரபல நடிகைகளே இது பற்றி சமீபத்தில் பேட்டி கொடுத்திருக்கின்றனர். இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் என பலரும் தங்களை அட்ஜஸ்ட்மெண்ட் கேட்டுள்ளதாக வெளிப்படையாக கூறி இருக்கின்றனர்.

சில நடிகைகள் வாய்ப்புக்காக அட்ஜஸ்ட்மென்ட் செய்ததாகவும் ஒத்துக்கொண்டு உள்ளார்கள். ஆனால் சில நடிகைகள் திறமையை மட்டுமே நம்பி சாதித்தவர்களும் உண்டு. இந்நிலையில் நித்யா மேனன் இதுகுறித்து சமீபத்திய பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார். அதாவது தமிழ் ஹீரோவால்தான் அட்ஜஸ்ட்மென்ட் பிரச்சனையை சந்தித்துள்ளதாக நித்யா மேனன் கூறி பரப்பரப்பை ஏற்படுத்தியிருக்கிறார். நித்யா மேனன் தமிழ் சினிமாவை பொறுத்தவரையில் சில படங்கள்தான் நடித்திருக்கிறார். விஜய், தனுஷ், உதயநிதி போன்ற முன்னணி நடிகர்களுடன் ஜோடி போட்டு இருக்கிறார். இந்த சூழலில் திடீரென நித்யா மேனன் இப்படி கூறியுள்ளதால் யார் அந்த ஹீரோ என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. அதுமட்டுமின்றி தமிழ் சினிமாவில்தான் இது போன்ற பிரச்சினையை சந்தித்ததாகவும், தெலுங்கு சினிமாவில் இப்படி எனக்கு நடந்தது இல்லை என்றும் கூறி இருக்கிறார். மேலும் பல நடிகைகள் தமிழ் இண்டஸ்ட்ரியில் சிரமத்தை சந்தித்து வருகிறார்கள் என்று கூறியிருக்கிறார். தமிழ் ஹீரோக்கள் இவ்வளவு மோசமாகவா இருப்பார்கள் என பலரும் நித்யா மேனன் பேட்டிக்கு கீழே கமெண்ட் செய்து வருகிறார்கள்.

# சேலை கட்டும் பெண்ணுக்கொரு வாசம் உண்டு கண்டதுண்டா கண்டவர்கள் சொன்னதுண்டா

குடும்ப விழாக்கள் மற்றும் பண்டிகை நாட்களில் பாரம்பரிய உடையான புடவையை அணிந்து கொண்டால்தான் பலருக்கு அந்த நாள் நிறைவானதாக தோன்றும். அழகாகப் புடவை கட்டுவதை, ஒரு கலை என்றே கூறலாம். மாடர்ன் உடைகள் பல வந்தாலும், சேலைகள் மீது பெண்களுக்கு உள்ள ஈர்ப்பு இன்னும் குறையாமல் இருக்கிறது. காலத்துக்கு ஏற்ப சேலையிலும், அது அணியப்படும் விதத்திலும், எளிமையும், புதுமையும் புகுத்தப்படுவதே இதற்கு காரணமாகும். ஆனால் தற்போது பல இளம்பெண்கள் புடவை அணிவதற்கு சிரமப்படுகின்றனர்.



அவர்களுக்காகவே தற்போது சந்தையில் கிடைக்கிறது 'ஒன் மினிட் புடவைகள்'. இவற்றை ரெடிமேட் புடவைகள் என்று அழைக்கிறார்கள். சிபான், பட்டு, காட்டன் என எவ்வகையான சேலையாக இருந்தாலும் இந்த முறையில் சுலபமாகக் கட்டிக் கொள்ளலாம். சாதாரண புடவையை படத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளின்படி, ரெடிமேட் சேலையாகத் தைத்தால் விழாக்களுக்கு சட்டென தயாராக முடியும்.

படம் 1 முந்தானைப் பகுதி எவ்வளவு நீளமாக இருக்க வேண்டுமோ அதை அளந்து, மடிப்புகள் வைத்து அவை கலையாதவாறு சேப்டிபின் குத்திக் கொள்ளுங்கள்.

படம் 2 மார்புப் பகுதியில் சேலை மடிப்புகள் எவ்வளவு அகலமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யுங்கள். இப்போது முதல் மடிப்பை உட்புறமாக திருப்பிக் கொண்டு, எல்லா மடிப்புகளையும் சேர்த்து அந்தப் பகுதியில் ஒரு தையல் போட்டுக் கொள்ளுங்கள். இந்த தையல் உள்பக்கமாக இருப்பதால் வெளியில் தெரியாது.

படம் 3 முன் பகுதியில் கொசுவம் வைப்பதற்காக 'ப்ளீட்ஸ்' எடுத்து வரிசைப் படுத்திக்கொள்ளுங்கள்.

படம் 4 அந்த மடிப்புகளை விசிறி போன்று சிறு இடைவெளியுடன் வருவதுபோல அடுக்கிக் கொள்ளுங்கள்.

படம் 5 கொசுவ மடிப்புகளை எந்த அளவிற்கு உள்ளே சொருகுவீர்கள் என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

படம் 6 அந்த அளவிற்கு எல்லா மடிப்புகளையும் சேர்த்து ஒரு தையல் போடுங்கள். அவ்வளவுதான், உங்களுடைய 'ஒன் மினிட் சேலை' ரெடி. உங்கள் உடல்வாகிற்கு ஏற்ப நீங்களே தயார் செய்திருப்பதால், உங்களுக்கு இவ்வகை சேலை அழகாகவும், பொருத்தமாகவும் இருக்கும். வீட்டில் தையல் இயந்திரம் இல்லாதவர்கள், இதே முறையில் கைகளால் தைத்துக்கொள்ளலாம்.




# ஆடைகளுக்கு ஏற்ப அணிகலன்கள் அணிவது எப்படி?

உடலுக்கு தகுந்த நேர்த்தியான ஆடைகள் அணியும் போது அழகு கூடுகிறது. அதேநேரத்தில் ஆடைகளுக்கு ஏற்ப அணிகலன்கள் அணிந்தால் அழகு இரட்டிப்பாகிறது. அதனால், பெண்கள் அணிகலன்களை தேர்ந்தெடுக்கும்போது சிறிது கவனம் அவசியம். ஏனெனில், அணிகலன்கள் அணியும்போது, சந்தோசத்தையும் அழகின் மேல் ஈர்ப்பையும் அளிக்கிறது. நகைகள் மட்டுமே அணிகலன்கள் அல்ல. பொன்நகைகளோடு சேர்ந்த காலணிகள், ஹேண்ட்பேக், கண்ணாடி, வாட்ச், பெல்ட், ஸ்கார்ப், வாசனை திரவியம், துப்பட்டா, தொப்பி, கைக்குட்டை, டை என பட்டியல் வெகுநீளம். பெண்களை அதிகம் ஈர்ப்பது பொன்நகைகள் தான். பெண்களின் வாழ்வில் நகைகள் ஒரு அங்கமாகவே மாறிவிட்டது.

அழகு, ஆடம்பரம், கௌரவம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் கண்ணாடியாக நகைகள் விளங்குகின்றன. திருமண விழாக்கள், பார்ட்டி என எந்த சுக நிகழ்வுக்கு சென்றாலும், பெண்கள் அணியும் நகைகளே, பிறரை கவர்வதற்கு முக்கியபொருளாக உள்ளது.

பாரம்பரிய நகைகள், பேஷன் நகைகள், மரம், கண்ணாடி, சணல் மற்றும் பேப்பரில் தயாரான நகைகள் என, எண்ணத்திற்கு ஏற்ப பெண்களின் விருப்பங்கள் மாறுபடும். செல்லும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப நகைகளை அணிய வேண்டும். ஏனெனில், ஒருசில நேரங்களில் அணியும் நகைகள், பிறர் முகம் சுளிக்க வைக்கவும் செய்யும்.

பட்டுப்புடவைக்கு நெக்லஸ், ஆரம் மற்றும் முத்துமாலையை அணியலாம். மாறாக மெல்லிய செயின், கண்ணாடிகளால் ஆன நகைகளை அணிந்தால் பொருத்தமாக இருக்காது. பகல்நேரத்தில் சில்வர் கலர் நகைகளும், மாலை நேரத்தில் கோல்டு கலர் நகைகளும் ஏற்றவையாகும். நகைகளை பொறுத்தவரை பார்மல், கேஷூவல், ரைடல், ஈவ்னிங், ஸ்பிரிச்சுவல் என 5 வகைகளாக பிரிக்கலாம். பார்மல் நகைகள் ஒயிட் மெட்டல், பிளாக் மெட்டல், கனிம, சிபி, துருபிடிக்காத எக்கு ஆகியவையால் தயாரிக்கப்படுகிறது.

மேலும், இந்நகைகளில் ரத்தினம், கிரிஸ்டல், அலங்காரக்கல் பயன்படுத்தப்படுகின்றன. பார்மல் நகைகளான நெக்லஸ், வளையல், பிரேஸ்லெட், மோதிரம், காதுவளையம் ஆகியவை திருமணம், மீட்டிங் ஆகிய சம்பிரதாயமான விழாக்களில் அணியலாம். உடைக்கும் பொருத்தமாக இருக்கும். கேஷூவல் நகைகள் சணல், மரம், பேப்பர் கொண்டு தயாரிக்கப்படுகிறது. தினமும் அணியக் கூடியவைகளில் கேஷூவல் நகைகளும் ஒன்று. தண்ணீரில் நனைந்தாலும் பாதிப்பு ஏற்படாது.

இவற்றில் செயின், வளையல், மோதிரம் ஆகியவற்றை கேஷூவல் நகைகளில் பொருந்தும். சிப்பிகளால் தயாரிக்கப்படும் நகைகளை இளம் தலைமுறையினர் பயன்படுத்தினால், வித்தியாசமான தோற்றம் கிடைக்கும். ரைடல் நகைகள் ஒயிட் மெட்டல், ஒயிட் கோல்டு, மஞ்சள் கோல்டு, வைரம், ரத்தினம் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. திருமணப்பெண் அணியக் கூடிய நகைகள் ரைடல் எனப்படும். இந்த நகைகள் பலவிதமான வெரைட்டிகளுடன் மார்க்கெட்டில் கிடைக்கின்றன.



# பெண்கள் விரும்பும் அழகை தரும் எலுமிச்சை தோல்

பெண்கள் என்றாலே அவர்களின் அழகைப் பராமரிப்பதிலேயே அதிக நேரத்தை எடுத்து கொள்வார்கள். அவ்வாறு அழகாக இருக்க விரும்பும் பெண்களுக்கு பயனுள்ள ஒரு குறிப்புக்கள் இதோ.

நாம் அனைவரும் அடிக்கடி வீட்டில் பயன்படுத்தும் பொருள் எலுமிச்சைப்பழம் ஆகும். இதை நாம் சாற்றை பிழிந்து எடுத்து விட்டு தோலை எரிந்து விடுவதுண்டு ஆனால் இந்த தோலில் சாற்றை போன்று பல மடங்கு நன்மை அடங்கி உள்ளது என்றால் நம்புவீர்களா.



உச்சி முதல் பாதம் வரை அழகைப் பராமரிப்பதில் எலுமிச்சை தோல் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

இதில் விற்றமின், தாதுக்கள், நார்ச்சத்து ,பொட்டாசியம் , கல்சியம் மற்றும் ஆன்டிஆக்சிடண்டுகள் அதிகமாக உள்ளது என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எலுமிச்சை தோலின் நன்மை பல, பற்களுக்கு உறுதி அளிக்கும் உடலில் உள்ள குறுத்தெலும்புகள், தசைநார்கள், தோல், ஹார்மோன் சுரப்பியின் சீரான செயல்பாட்டுக்கு உதவும். இத்தகைய எலுமிச்சம் தோலை எப்படி பயன்படுத்துவது என்று தெரியுமா?

எலுமிச்சம் பழத்தோலை குளிக்கும் தண்ணீரில் போட்டு வைத்து சிறிது நேரம் கழித்து குளித்தல் உடலுக்கு புத்துணர்ச்சியாக இருக்கும்.

அக்குள், தொடை இடுக்குகளில் உள்ள கருமையை நீக்க தேங்காய் எண்ணையை பூசி எலுமிச்சை தோலால் தேய்க்க சிறிது காலத்தில் கருமை நீக்கும்.

எலுமிச்சம் தோல், புதினா இல்லை இரண்டையும் அரைத்து முகத்தில் பூசி வந்தால் சருமத்தில் உள்ள அழுக்கு நீங்கி விடும்.

முகம் கை காலில் உள்ள இறந்த செல்களை நீக்க 3 டீஸ்பூன் எலுமிச்சை தோலை பொடி செய்து பூசி, 3 டீஸ்பூன் ஓட்ஸ் பொடி ,2 டீஸ்பூன் தேன் ,2 டீஸ்பூன் ரோஜா பன்னீர் இவை அனைத்தையும் பசை போல கலக்கவும் பின் பூசிவிட்டு 10 நிமிடம் கழித்து குளிக்க நல்ல பயன் கிடைக்கும்.







கோவிலூர் செல்வராஜனின் பொன் விழாவும், நல்லது நடக்கட்டும் ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் (17) சனிக்கிழமை மாலை நடைபெற்ற போது இரு நூல்களின் முதல் பிரதிநிதிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசீம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் விழாவுக்கு தலைமை வகித்த சதீஷ் குமார் சிவலிங்கம் முன்னிலை வகித்த தே.செந்தில் வேலவர் மற்றும் சிவ ஸ்ரீ பாபு சர்மா ராமச்சந்திர குருக்கள், வணபிதா அருட் கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ, முன்னாள் இந்து சமய கலாச்சார அமைச்சர் பி பி தேவராஜ் உடுவை எஸ் தில்லை நடராஜா, உலக அறிவிப்பாளர் பி எச் அப்துல் ஹமீத், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ் ஸ்ரீகஜன், ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் ஞானம் ஞானசேகரன், தொழிலதிபர் பிச்சை கிருஷ்ணா உட்பட ஏனைய பிரமுகர்களை படங்களில் காணலாம்.



# சாய்ந்தமருது அல்-ஹிலாலில் முதலுதவிப் பயிற்சிப்பட்டறை







*எம்.எஸ்.எம்.ஸாகிர்*

சென்.ஜோன் அம்பியூலன்ஸ் சிறிலங்கா அமைப்பினால் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் முதலுதவி அறிமுகத்துடன் அமைந்த முதலுதவிப் பயிற்சிப்பட்டறை மாணவர்களுக்கு அண்மையில் (18) நடத்தப்பட்டது. பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொறியியலாளர் எம்.ரீ.கமால் நிசாத் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்து மாணவர்கள் பயன் பெறும் வகையில் கருத்துக்களை வழங்கினார். இந் நிகழ்வில் வளவாளர்களாக சென்.ஜோன் அம்பியூலன்ஸ் சிறிலங்கா அமைப்பின் அம்பாறை மாவட்ட ஆணையாளரான கெப்டன் எம்.ரீ. நௌஸாத் வபி மற்றும் உதவி ஆணையாளரான மேஜர் கே.எம்.தமீம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகளை வழங்கினர். இதன்போது ஆசிரியர்களான ஏ.எல்.எம். இர்ஸாத், எம்.எஸ்.எம். நுஸ்கி, எஸ்.ஐ. நஸீஹா பேகம் உட்பட பழைய மாணவ சங்க செயலாளர் எம்.ஐ. சர்ஜுன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா கனடா ஸ்காபுறோ நகரில் அண்மையில் நடைபெற்றது. இவ்வருடத்திற்குரிய 'தலைமைத்துவ விருதினை வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற சட்டத்தரணி லக்சமி வாசன் மேடையில் விருதினைப் பெற்ற மகிழ்ச்சியில் உணர்ச்சிவசப்பட்டவராக நிற்க அவரைக் கௌரவித்த மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதியுடன் பெண்மணிகள் நிற்பதைக் காணலாம்.

## வழிகாட்டுங்கள்




## நிறம் தீட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்




## இடைவெளியை நிரப்புங்கள்


____ன்டை மீன்


____ள்வி


____க்கடிகாரம்


____க்கு


____லம்


____ளி

## 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







# மருதமுனையின் இலக்கியப் பரப்பில் மற்றுமொரு இளம் எழுத்து ஆளுமை ஜலால்தீன் முஹம்மது நௌபாஸ்

**மருதமுனையின் இலக்கியப் பரப்பில் மற்றுமொரு இளம் எழுத்து ஆளுமை ஜலால்தீன் முஹம்மது நௌபாஸ் தடம்பதித்து வருகின்றார்.கலைப்பட்டதாரியான இவர் ஆசிரியராக் கடமையாற்றிவருகின்றார். நட்புக்களை நன்றாகப் பேணிவரும் இவர் மாணவர்களை அரவணைத்து கற்பிப்பதில் ஆற்றல் மிகுந்தவராகக் காணப்படுகின்றார். எப்போதும் சிரித்த முகத்துடன் எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகும் தன்மை கொண்டவர். இவர் இளம் வயதிலேயே எழுத்துலகில் பிரவேசித்து இதுவரை எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.**






















## பிறப்பும், கல்வியும் கற்பித்தலும்

இவர் மருதமுனையைச் சேர்ந்த ஆதம்பாவா ஜலாதீன், யாஸீன் ஆலிம் பாத்துமுத்து தம்பதிக்கு மகனாக 1981ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் வரை மருதமுனை அல்மானார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் கற்றுள்ளார். க.பொ.த.உயர் தரம் வரை பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் கற்றுள்ளார். பேராதனப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைமானி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ளார்.

பின்னர் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமா (2017) கற்கைநெறியைப் பூர்த்தி செய்துள்ளார். அதனைத் தொடர்ந்து இந்திய தமிழ்நாடு அழகப்பா பல்கலைக்கழகத்தில் முதுகலை (2020)பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.தற்பொழுது பட்டதாரி ஆசிரியாராக் கடமையாற்றும் இவர் 2008ஆம் ஆண்டு 9ஆம் மாதம், 11ஆம் திகதி பட்டதாரி ஆசிரியராக முதல் நியமனம் பெற்று சின்ன பாலமுனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கடமையைப் பொறுப் பெற்றார்.

அப்பாடசாலையில் 2008.09.11ஆம் திகதி தொடக்கம் 2009.03.31ஆம் திகதி வரை கடமையாற்றிய நிலையில் 2009.04.01ஆம் திகதி தொடக்கம் பொத்துவில் சின்ன உல்லை அல்அக்ஷா வித்தியாலயத்திற்கு இடமாற்றமாகி 2012.12.31ஆம் திகதிவரை அங்கு கடமையாற்றியுள்ளார். அதன் பின்னர் 2013.01.01ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆம் திகதி வரை அட்டாளைச்சேனை அல்முனீறா பெண்கள் உயர்தர பாடசாலையில் கடமையாற்றி 2020.01.01.ஆம் திகதி தொடக்கம் இன்று வரை பெரியநீலாவணை புலவர் மணி ஷரீபுத்தீன் மஹா வித்தியாலயத்தில் கடமையாற்றிவருகின்றார்.

இதுவரை இவர் வெளியீடு செய்த நூல்கள்

1 தேடலின் தேன் துளிகள் (தேசிய,சர்வதேச அறிஞர்களின் சிந்தனைகளின் தொகுப்பு)

2 இஸ்லாமிய வரலாறு வினாவிடைத் தொகுப்பு. (தரம் 11,12,13 மாணவர்களுக்கானது)

3 வரலாறு வினாவிடைத் தொகுப்பு (தரம் 10,11 மாணவர்களுக்கானது)

4 மனிதனுக்குத் தேவை வஹியின் வழிகாட்டல் (ஆய்வு நூல்)

5 கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி சிந்தனைகளும் கருத்துக்களும்

6 கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரியின் ஆய்வுக் கட்டுரைகள்

7 கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரியின் சிந்தனைகள் (இஸ்லாமிய சிந்தனை முத்திங்கள் இதழில் வெளிவந்த ஆசிரியர் தலைப்புகளின் தொகுப்பு)

8 கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி இலங்கை முஸ்லிம்களின் புலமைச் சொத்து. (ஆய்வு நூல்) ஆகிய எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

மேலும் சமூக சேவையில் அக்கறை கொண்டு இலங்கை ஜமாஅதே இஸ்லாமியில் இணைந்து செயற்பட்டுவருவதுடன் பல சமூக சேவை அமைப்புக்களிலும் இணைந்து செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

## ஒளவன் கவிதை

புதர்வழிப்பாதத்தின் கீறலில்
கசிகிறது காலத்தின் குருதி
அடர்ந்த ஞாபகங்களின் சிதறிய
கூட்டிலிருந்து வழிகிறது தேன்
முடியாப் பயணமொன்றின் திசையறிகை
கால்களிடமா
கண்களிடத்தா
மனக்கடிகாரம் சொல்லிற்று
முன்னைய ஒற்றை வழிப்பாடு
தூர்ந்த சுவட்டின் மீதென்ன
முட்களின் வீரியம்
வேர்மேல் படர்கிறது
என் நான்காம் தசாப்தத்தின் பிஞ்சுக்காலடி
புதர் விலகும் வனத்திடை கேட்டேன்
ஆதிக் குருவியினிசை
வனத்திடை கண்டேன்
அதே குருவியின் வெண் சிறகசைவு
ஐந்தாம் தசாப்தத்தின் பொழுது வீழ்கையில்
அடியிலுறைந்து கிடக்கிறது கரு
நிறத்திலொரு சொல்



## உரையாடல் = ஒத்தாடல் + எதிர்த்தாடல்

இலக்கிய உரையாடல் களத்தில் ஒத்தும் எதிர்த்துமான கருத்தியல் என்றைக்கும் உண்டு. இந்தக் கருத்தியல் பற்றிய ஆழ நோக்கு ஆரோக்கியமான கதையாடலால் ஆகிறது.

இன்றைய உரையாடல் முன்வைக்கும் எழுவினா அழகியல் கொள்கை எப்போதுமே கற்பனை வர்ணனை சார்ந்தே நிற்கிறதே ஒழிய அது சமுதாய சிந்தனை மீது ஆர்வம் காட்டுவதில்லை'' என்பார் கருத்தியல் ஏற்புடையதா?

ஒத்தாடலாயும் எதிர்த்தாடலாயும் உங்கள் உரையாடலை நிகழ்த்தலாம். மறு சொல் மறுபடி எழுதும்.

## மழைசொல்

முல்லை முஸ்ரிபா



## ஹஜ்ஜின் கவிதை

தியாக உணர்வென்பது வரலாறு நெடுகிலும் மனித சமூகத்தின் அச்சாணியாக இருந்து வந்துள்ளது. அத்தகைய தியாகத்தின் பெறுமானமும் பெரும்மதிப்பும் வார்த்தைகளுக்குள் சொல்லிவிட முடியாதது. அன்னை ஹாஜராவின் தியாகத்திலிருந்து தொடங்குகிறது ஹஜ்ஜின் கதை. வெறும் பாலை வனத்திலான அவரது தவிப்பும் பால் வற்றாப் பாலகன் மீதான அன்பின் தகிப்பும்தான் பாலையூற்றாகி ஸம்ஸம்மாய் பீறிடச்செய்தது. இது தியாகித்தலுக்கான ஆனந்த பரிசு. காலம்
முழுதும் வற்றா ஜீவ ஊற்று. போதும் போதும் எனும் அளவுக்கு ஸம்ஸம் நெஞ்சம் நிரப்பியது. இதற்குள்ளிருக்கும் இபுறாஹிம் நபியின் தியாகம் வரலாற்றின் காயாத பக்கம்.

ஸம்ஸம்மாய் ஊற்றெடுக்கும் தியாகத்தில் ஹாஜராவின் வியர்வைத் துளிகளைக் கண்டேன்'' என்கிறான் கவிஞனொருவன். ஸபாவும் மர்வாவுமாகிய மலைக் குன்றிலல்லவா வரலாற்றின் மைற்கற்கள்; தியாகத்தின் வழித் தடங்கல்;. அன்னை ஹாஜராவின் பாதச்சுவடுகள் மீது

ஹஜ்ஜாஜிகளின் பாத நீட்சி தியாகிப்பின் ஞாபகிப்பு.
ஸபா மர்வா குன்றுகள் பதற குடிநீருக்காய்
விழிநீர் தோய்ந்தவள் வழிந்தோடிக்கொண்டிருக்கிறாள் தியாகத்தின் காட்சியாய்...'' என்று பாடுகிறான் மற்றொரு கவிஞன்.

கல்லைப் பிளக்கும் கூரிய கத்தி கழுத்தறுக்க மறுப்பதும் தியாகத்தின் சாட்சிதான். இபுறாஹிம் நபிகளாரின் ஈரமூறிய ஈமானிய இதயத்தில் வழிந்தது இறையன்பெனும் இறை கட்டளையை ஏற்கும் கணத்தின் கனம்; குர்பானிய தியாகத்தின் காட்சிதானே ஹஜ்ஜின் நீட்சியாய்த் தொடர்கிறது.

இபுறாஹிம் நபிகளாரின் கத்திக்கும் தெரியும் தியாகத்தின் கூர்மை எத்திக்கும் விரியும் இறை பற்றின் ஓர்மை'' என்கிறான் இன்னொரு கவிஞன். கஃபா அல்லாஹாவின் கிப்லா.
என்ன இது வெண்மையாய் மின்னிக்கொண்டிருப்பது
மறுமையின் மாணிக்கக்கல்லோ அன்றேல் மீட்சி பெற்ற இறையடிமைகளோ'' என்கிறார் கவி எம். பி.ஹம்ஸா.

கஃபா கல்பில் நினைந்தூறும் கறுப்புக் கற்கண்டு(ச்சுவை) என்கிறார் அபுதாலிபு. ஊரெல்லாம் சுற்றினேன் பாவங்கள் சேர்ந்தன உன்னை வந்து சுற்றினேன் பாவங்கள் தொலைந்தன'' என்கிறார் கிண்ணியா அமீரலி.

கஃபாவும் அல்லாஹ்வின் கவிதை தான்.

## விதிக்கப்பட்ட கதை 4



அந்த வல்ல பெரிய ரகுமான் முகம் பார்ப்பான்...'' என்கிற வாசகத்தை மனத்திடை தோயும் நம்பிக்கையின் சாரமாகக் கதை சொல்லும் மருதூர்க் கொத்தனின் ஒளி எழுத்து சிறுகதையுலகின் தனித்துவ அடையாளம்.

எண்பதுகளில் வெளிவந்த மருதூர்க் கொத்தன் கதைகள் பிரதியிலிருந்து உயர் வகுப்புத் தமிழின் பனுவலாக வாசிக்கப் பட்ட ஒளி மீனவ வாழ்வின் கோலத்தைப் பின்னுகிறது.

மலையிடை இழியும் அருவியின் வேகத்தில் மையிருட் கனதியைக் குடைந்து நடக்கிறான்'' அப்துல் கரீம் என்கிற மீனவத் தலைமைப் பாத்திரத்தை மையப்படுத்திய மருதூர்க் கொத்தனின் ஒளி மீனவ வாழ்வின் இருளைப் பேசுகிறது: ஒளியை அவாவுகிறது. மருதூர்க்கொத்தனின் கதைப்பொருளும் அதற்கேற்றாற் போலான மொழி கதைப்பின்னல் வலைப்பின்னலாய் இழையோடுகிறது. வாழ்க்கையெனும் கொல்லன் கொப்பரையில் கொழுந்து தள்ளும் வறுமைத்தீயில்

பசித்த நாக்குகளுக்கு இரையாகும் குடும்பத்தில் வசந்தம் சிரிக்கும் என்று நம்புபவனின்'' தொழிலாட்டத்தை கதை சொல்கிறது. ஏழ்மை வாழ்வு, எலிவளையான குடிசை, கரை சேராக் குமர்; கடலின் மிதப்பு, வழிதவறிய மீன் பிடிப்பு, சட்டவிரோதத்தில் கையிழப்பு எனக் கதை முழுவளமும் கதைக்களமும் கதாமாந்தரும் மொழியாடலும் கதையோட்டமும் உணர்வுக் கோலமுமென ஒளி கதை ஒரு துன்பியல் அனுபவத்தின் பரிமாறல்தான்.

''கவி வளமிக்க கிழக்கிலங்கை மண்ணை ஜீவத்துடிப்புடன் கதைகளில் படைக்கும் சிருஷ்டி கர்த்தா இவர். நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடும். ஆர்வமுமிக்க மருதூர்க்கொத்தன் இலக்கிய வெறியுடன் சிருஷ்டித்துக் கொண்டிருப்பவர்'' என

டொமினிக் ஜீவா குறிப்பிடுகிறார். கவிதைத் துடிப்பான மொழியூடு கதை சொல்ல வல்லவர் கொத்தன். ஒளிக்கதையின் கள விபரிப்புக்கூட கவித்துவமானது.

ஊதற்காற்றின் உந்துகை தங்களுக்காய்ப் பிறப்பிக்கப்படும் ஆக்ஞையேனும் மருட்சியிற் தன்னையுண்டு வேலித்தலைகளும் தென்னங்கீற்றுகளும் பாழ்வளவுகளில் மண்டிக்கிடக்கும் செடிகளும் அசைந்தரற்றும் மெல்லோசையைச் சுருதியாகக் கொண்டு வெண்கருமக் குறுமணலில் மூழ்கி மீண்டும் சரக்சரக் இசைபாடும் அவர்கள் பதங்களுக்குக்கூட அந்த நம்பிக்கை'' என கதைக்களம் விரிப்பார் மருதூர்க்கொத்தன்.

"அந்த வல்ல பெரிய ரகுமான் முகம் பார்ப்பான்'' என்ற நம்பிக்கையைச் சுற்றிவதும் உணர்வின் எத்தலை மொழி செப்பனிடுகிறது. அந்த வல்ல ரகுமான் முகம் பார்ப்பான்'' கரீமை யுத்த சன்னத்தனாய் வழியனுப்பும்போது மனைவி கூறிய நன்மாராயம். அவனுக்கு அது வெறும் ஒற்றை வாக்கியமல்ல வாழ்க்கைத் தத்துவம்.

கொத்தனின் உரை வீச்சமானது. போர்க்களத்துச் சஞ்சயன் போல் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கையை தெளிவாக அறிந்து நிர்த்தாட்சண்யமாய் சொல்லக்கூடிய ஒருவரென'' வ.அ.இ. குறிப்பிடுவார் சொல்லக்கூடிய முறைமையில்.

புத்தாக்குநர். சுருங்கிய சொற்களின் விரிபொருள் சிறியதும் பெரியதுமான வாக்கியப்பிரயோகம், உவமை உருவக கவர்ச்சி, பாத்திர உயிர்ப்பு, வர்ணித்தல், கற்பனை மேம்பாடு, இறுக்கமான கவித்துவ மொழிக் கையாட்சியென மருதூர்க் கொத்தன் கதைப்பின்னல் அழகிய வலைப் பின்னல்தான்.

கலாபூர்வமான கரிசனையுள்ள அவருடைய சிருஷ்டிகள் காலத்தை வென்று நிலவக்கூடும் என வை. அஹ்மத் எழுதுவது நிதர்சனம். கரீம், மனைவி கமீலா, மகள், மகன் எனக் குடும்ப பாத்திரங்களில் கதை சுழல்கிறது. கரீம் கடந்த காலத்தின் வீறாப்புப் பாத்திரம், வாலிபத்தின் முறுக்கேறிய காரியக்காரன். தொடுவானுக்குத் தோணியோட்டி வெயிற்பால் குடிப்பவன்.

அவனது மீனவ வாழ்வின் ஏற்ற இறக்கங்களை இன்ப துன்பங்களை நம்பிக்கைகளை கொத்தன் கதை பின்னுகிறது.

கரீமின் செயற்பாடுகளுக்குச் சமூகக் கட்டமைப்பு காரணியாகி நிற்கிறது.

வர்க்க பேதம் ஏற்றத்தாழ்வு சம்பிரதாயங்கள் எப்படி தனிமனித வாழ்வைத் தீர்மானிக்கின்றன என்கிற செய்தி இக்கதையில் வெளிப்படுகிறது. மீன்பிடிக் கலைஞனான கரீம் அத்துறையின் வளைவு சுழிவுகள் தெரிந்தவன்.

சட்டவிரோத மீன்பிடிக்காரனாக இருந்தவன். அதன் விபரீதமுணர்ந்து கை விட்டவன்.

எனினும் குடும்ப குத்து விளக்கை ஒளியேற்ற டைனமற் தீயேற்றுபவனாக மாறுகிறான். மகளின் கழுத்தில் தாலியேற்றி சுமங்கலியாகப் பார்க்க நேர்ந்தவனின் உணர்வுகளின் கோலம் ஒளி.

கதையின் உச்சக்கட்டம் ஒரு நாடகம் போல் நிகழ்கிறது. மகனுடன் கடலில் டைனமற் வைத்து மீன் பிடிக்க முயல்கிறான். வீறார்ந்த கதையின் உணர்வுப்பெருக்கு வாசிப்பனுபவம் தருவது. தோணி வழுக்கிச் செல்கிறது. ஆண்டவா வல்ல பெரிய ரகுமானே ஏழை குமருக்காக முகம் பாரு நாயனே மனம் ததும்புகிறது''

உன்னையே இல்லை என்பார்க்கும் இரங்கும் தயாபரனே ஏழைக் குமருக்காக மனமிரங்கு நாயனே'' வீச ஓடிவாம்மா... ஓடிவா அம்மா தாயே... செகப்பாக ஓடிவா...'' என்கிற உணர்வுத் துடிப்புடையது.

கரீம் வெடியையும் தீப்பெட்டியையும் உரசும்போது வாசக மனசும் உராய்வுறுகிறது. தீயும் திரியும் புல்லுகின்றன. சுடரில் சுடர்விடும் தீ மகளுக்கும் மருமகனுக்கும் எடுக்கவிருக்கும் மங்கள ஆராத்தியை நினைவூட்டுகிறதா?''

கதையின் உச்சத்தில் வெளிவரும் ''யாமுகியித்தீன் என்ன வாப்பா'' ஒருகையில் வெடித்து விரல்கள் துண்டாடிச் சிதைய...'' ஒரு கைபோனா மத்தக்கை இருக்கு கதை முடிகிறபோது... நம்பிக்கை நிமிர்கிறது.

''முண்டகமொக்காக முருகு தள்ளும் மடந்தையின் நெஞ்சத்து நுங்கின் பூரிப்புடன் கடற் குமாரியின் மார்பைப் பிளந்து தாவுகிறான் செம்பருத்திக்கு தலை வி.எம். இஸ்மாயில் என்கிற மருதூர்க் கொத்தன் கதையுலகின் ஒரு தாவல்.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் – 14

தமிழ்நாட்டில் சென்னையில் தனது இரு பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து கொடுத்திருந்தால் நல்ல சீர் வரிசை கிடைத்திருக்கும். வசதியாக வாழ்ந்திருப்பார்கள். ஆனால் சத்திய பாமா தனது இரு பிள்ளைகளுக்கும் பாரம்பரிய வழியில் கேரளாவிலே திருமணம் செய்து வைத்தார். இதனால் குடும்பம் ஏழ்மையில் இருந்தது.

திருமணம் முடிந்ததும் குடியிருந்த வீட்டிலிருந்து அடையாறில் உள்ள வீட்டுக்கு இடமாறுவதற்கு அம்மா ஏன் திடீரென்று முடிவெடுத்தார் என எம்.ஜி.ஆர். சிந்தித்தார். சிந்தித்தும் ஏன் எனும் கேள்விக்கும் விடை கிடைக்கவில்லை. ஆதலால் எம்.ஜி.ஆர். ஒருநாள் அண்ணியிடம் தனியாக இந்த விடயத்தைப் பற்றி விளக்கம் கேட்டார். அதற்கு அண்ணி தனது கொழுந்தனாரை நோக்கி அம்மா எதை செய்தாலும் காரணம் இல்லாமல் செய்ய மாட்டார். அம்மா தனது மனதிற்குள் மறைத்து வைத்துள்ள ஒரு முக்கியமான விடயத்தைக் கூறுகிறேன். ஆனால் நான் சொல்லும் விடயம் பற்றி யாருக்கும் சொல்லக் கூடாது என்று அன்பாகக் கேட்டுக் கொண்டார். நாம் அந்த குடியிருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் இருந்து ஒரு பெண் தினமும் காலையில் தண்ணீர் எடுக்க வருவாளே அவள் தான் காரணம். அந்தப் பெண்ணை நீங்கள் காதலிப்பதாக நினைத்துத்தான் உங்களது அம்மா உங்களுக்கு உடனே திருமணம் செய்து வைக்க வேண்டும். சொந்த ஊரில் சொந்தத்திலேயே திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நினைத்து உங்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். அதனால் எடுத்த அவசர முடிவுகள்தான் இது. அம்மா உங்கள் மீது வைத்திருக்கின்ற அன்பும் பாசமும்தான் இதற்குக் காரணம். எனவே நடந்தவை எல்லாவற்றையும் மறந்து நமது குடும்ப வளர்ச்சிக்கு பாடுபட வேண்டிய முழுப் பொறுப்பும் உங்களிடம்தான் இருக்கிறது. தொடர்ந்து உங்கள் முயற்சியை கைவிடாமல் மனம் தளராமல் எந்த குறைபாடுகளும் இல்லாமல் உங்களது மனைவியிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று அன்பாக கூறி முடித்தார்.

எம்.ஜி.ஆர். இதையெல்லாம் கேட்டுவிட்டு தனியாக சிந்தித்தார். சிந்தித்த பின்னர் எம்.ஜி.ஆர். இனிமேல் இந்தக் குடும்பத்தை நடத்திச் செல்ல வேண்டும் என்று அடுத்த நாளில் இருந்தே எந்த விதமான குடும்ப சிந்தனையும் இல்லாமல் ஒரு புது மனிதன் போல வெளியே தனது தொழிலுக்காக சென்றார். எம்.ஜி.ஆர். எப்போதும் போல காலையில் ஐந்து மணிக்கு எழுந்து தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியில் செல்லும்போது தன் மனைவியின் கன்னத்தைக் கிள்ளி விட்டு ஒரு புன்சிரிப்போடு விடைபெற்று அம்மாவின் ஆசிர்வாதத்தோடு வெளியே செல்லும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டார். எம்.ஜி.ஆர். பார்கவியை திருமணம் செய்த பின்னர் சத்திய பாமா பார்கவியை தங்கமணி என்று அழைத்ததும் எல்லோரும் பார்கவியை தங்கமணி என்றே அழைத்தார்கள்.



இளம்வயதிலேயே மறைந்து விட்ட எம்.ஜி.ஆரின் மூத்த அக்காவின் பெயர் தங்கம் அண்ணனின் முதல் குழந்தையின் பெயர் அம்மாவின் பெயரான சத்தியபாமா. ஆனால் அந்தப் பெயரை சொல்லி வீட்டில் யாரும் அழைக்க முடியாது. எனவே அந்தக் குழந்தைக்கு மணி என்று செல்லப் பெயரிட்டு அழைத்தார்கள். மூத்த அக்காவின் பெயரான தங்கம் என்பதனையும் குழந்தையின் செல்லப் பெயரான மணி என்பதனையும் சேர்த்து எம்.ஜி.ஆரின் மனைவி பார்கவியை தங்கமணி என அழைத்தார்கள்.

தங்கமணி எம்.ஜி.ஆருக்கு பொருத்தமான மனைவியாகவும் சத்திய பாமாவுக்கு நல்ல மருமகளாகவும் அண்ணியுடன் நகமும் சதையுமாக ஒன்றிப் போனார். தங்கமணி திருமணம் செய்யும்போது வயது 14. எம்.ஜி.ஆரின் வீட்டில் பழகுவதற்கு சில நாட்கள் பிடித்தன. காலையில் ஐந்து மணிக்குள் குளித்து விடுவது, பூஜை செய்வது வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வது முதலியவை தனது கடமைகளில் ஒன்று என்று கருதுவது போல் தங்கமணி செயற்பட்டாள்.

சத்தியபாமா புராணக்கதைகள் படிப்பதில் அளவிட முடியாத ஆர்வம் உடையவர். படிப்பது என்றால் சத்தியபாமா படிப்பதல்ல. தங்கமணியை படிக்கச் சொல்லிக் கேட்பது. தங்கமணி சில வார்த்தைகள் தவறிப் படித்து விட்டால் போதும் உடனே சத்தியபாமா அந்த வார்த்தைகளை சொல்லித் திருத்துவாராம். அந்தளவுக்கு புராண புத்தகத்தில் உள்ள வார்த்தைகள் முழுவதும் எம்.ஜி.ஆரின் தாயாருக்கு தண்ணீர் பட்ட பாடு.

தங்கமணியின் தலைமுடியை சிக்கெடுத்து பின்னி விடுவதற்குள் சத்தியபாமாவுக்கு பல முறை செல்லக் கோபம் வந்து போகுமாம்.சத்தியபாமா குள்ளமானவர். ஆனால் தங்கமணியோ உயரமானவள். தங்கமணியின் சிகை முழங்காலுக்கு கீழே தொங்கும். சத்திய பாமா குனிந்து நிமிர்ந்து சீவி சிக்கெடுப்பதற்குள் சத்தியபாமாவுக்கு இடுப்புவலி வந்து விடுமாம்.

சத்தியபாமாவுக்கு கஷ்டமாக இருப்பினும் தங்கமணியின் சிகையைக் கோதி சடை பின்னி பூ வைத்து சொடுக்கெடுத்து அதாவது திருஷ்டி கழித்து முதுகில் ஒரு சிறு குத்து குத்தி தள்ளி விட்டால்தான் சத்தியபாமாவுக்கு மன நிம்மதியாம்.

தங்கமணி அசைவத்தை தொடக்கூட மாட்டாள். அத்தோடு அதன் வாதியையே அவளால் சகித்துக் கொள்ள முடியாமல் தவித்தாள். அசைவ சமையல் இருந்து விட்டால் அன்று அநேகமாக தங்கமணி பட்டினி என்று கூட சொல்லலாம். சில சமயம் வீட்டின் பின்புறம் சென்று குமட்டலின் விளைவாக வாந்தி எடுப்பதையும் காணலாம். அண்ணி தங்கமணியை சமாதானம் பண்ணுவார். தம்பிக்கு அசைவ சமையல் செய்யா விட்டால் சாபிப்பிடவே மாட்டார். அவரையும் கவனிக்கணும், உன்னையும் பார்த்துக்கணும். என்ன செய்வது? என்று சொல்லி அவரை வேதனைப்பட விடாமல் அமைதி பெற செய்து விடுவார்கள்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# பாமரனுக்கும் புரியும் எளிய மொழியில் பாடல் எழுதிய மாபெரும் கவிஞர்



*காற்று, மழை, ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு...
அது தலைமுறைக்கு
எழுதி வைத்த சீட்டு...!*

கண்ணதாசன், கம்பனுக்கு எழுதிய கவிதை இது. கம்பனுக்கு மட்டுமின்றி, கண்ணதாசனுக்கும் இது பொருந்தும்.



ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள், நான்காயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள், 20க்கும் மேற்பட்ட நாவல்கள் என காலத்தால் அழிக்க முடியாத படைப்புகளைத் தந்த மாபெரும் படைப்பாளி... சங்க இலக்கியங்களின் செழுமையையும், தத்துவங்களையும், அனுபவங்களையும், சமூக, அரசியல் விழிப்புணர்வையும் பாமர மனிதனுக்கும் புரியும் எளிய மொழியில் எழுதிய இந்த மாபெரும் கவிஞர்.

பாடலில் கொடிகட்டிப் பறந்த காலங்களில் கண்ணதாசன் செல்வத்தில் திளைத்தார். ஆனால், சேமித்து வைக்கும் வழக்கமில்லை. சொந்தப்படங்கள் எடுத்தார். அவை கடனில் தள்ளின.

"பிர்லாவைப் போல சம்பாதித்தேன். ஊதாரியைப் போல செலவழித்தேன். பல நேரங்களில் பிச்சைக்காரனைப் போல ஏங்கி நின்ற வாழ்க்கை தான் எனக்கு வாய்த்திருக்கிறது.." என்று ஒரு கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார் கண்ணதாசன்.

தொடக்கத்தில் திராவிட இயக்கத்தில் தீவிரமாக இயங்கிய கண்ணதாசன் பிற்காலத்தில் இந்து மதத்தில் பற்றுடையவரானார். இந்து மதம் சார்ந்து எழுப்பப்படும் பல்வேறு கேள்விகளுக்கு எளிய மொழில் பதில்களையும், அனுபவங்களையும் உள்ளடக்கி அவர் எழுதிய "அர்த்தமுள்ள இந்துமதம்" தொகுப்பு இன்றளவும் அதிகம் விற்பனையாகும் நூல்களின் பட்டியலில் இடம் பிடிக்கிறது.

கண்ணதாசனுடைய வாழ்க்கை திறந்த புத்தகம். தனக்கு சரியெனப் பட்டத்தை அவர் செய்யத் தயங்கியதே இல்லை. அது தவறென்று உணரும்பட்சத்தில் அதை ஒப்புக்கொள்ளத் தயங்கியதும் இல்லை. தன்னுடைய வாழ்க்கையை கண்ணதாசன் அளவுக்கு வெளிப்படையாக பகிர்ந்து கொண்ட ஆளுமைகள் யாருமில்லை. வனவாசம், மனவாசம், எனது வசந்தகாலங்கள், எனது சுய சரிதம் ஆகிய 4 நூல்களும் கண்ணதாசனின் சுய சரிதைகள். கண்ணதாசன் எழுதிய பெரும்பாலான பாடல்கள் அவரின் அனுபவத்தில் விளைந்தவை. அந்தந்த சூழலுக்கேற்ப பாடல் புனைவதில் அவருக்கு இணை யாருமில்லை.

ஒருமுறை, நெஞ்சில் ஓர் ஆலயம் படத்துக்காக இசையமைப்பாளர் விஸ்வநாதன் ஒரு பாடல் எழுத கண்ணதாசனை அழைத்திருந்தார். கண்ணதாசன் வரத் தாமதமாகி விட்டது. நெடுநேரம் காத்திருந்த விஸ்வநாதன், "இனிமேல் கண்ணதாசனிடம் பாடல் கேட்கப் போவதில்லை" என்று நண்பர்களிடம் வருத்தமாக சொன்னார். இதைக் கேள்விப்பட்டு உடனடியாக விஸ்வநாதனைச் சந்தித்த கண்ணதாசன், பாடலை கொடுத்தார்.

"சொன்னது நீதானா? சொல்... சொல்.., என்னுயிரே" என்ற அந்தப் பாடலைப் படித்ததும் கண்கலங்கி கண்ணதாசனை கட்டி அணைத்துக் கொண்டாராம் விஸ்வநாதன். இப்படி பெரும்பாலான கதைகள் கண்ணதாசன் வாழ்க்கையில் உண்டு.

இன்றைக்கும் பலருக்குத் தாலாட்டாக, பலரின் துயரங்களுக்கு ஆறுதலாக, மனம் தொய்ந்து கிடக்கும் பலருக்கு உத்வேகமாக இருப்பவை கண்ணதாசனின் பாடல்கள். வாழ்வின் அனுபவத்தில் இருந்து எழும், உண்மையான ஒரு படைப்பு காலத்தை வென்று தலைமுறைகளைக் கடந்தும் நீடித்து வாழும் என்பதற்கு கண்ணதாசனின் பாடல்களும், படைப்புகளும் மிகச் சிறந்த உதாரணம்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# ஹமீட் அல் ஹுசைனியா தேசிய கல்லூரியின் கிரிக்கெட் கானிவல்







கொழும்பு ஹமீட் அல் ஹுசைனியா தேசிய கல்லூரியின் 8 வீரர்களைக் கொண்ட கிரிக்கெட் கானிவல் விளையாட்டுப்போட்டி நேற்று (24) ஆரம்பமாகியது. இப்போட்டி இன்று 25 ஆம் திகதியும் பொரளையில் உள்ள பிரிசன் மைதானத்தில் நடைபெறுகின்றது. இது சம்பந்தமான ஊடக மாநாடும் ரீ சேட் அறிமுக நிகழ்வும் கல்லூரியின் பௌசி மண்டபத்தில் கொழும்பு ஹமீத் ஹூசைனியா கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் குழுவின் தலைவர் இன்சாப் பரூன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் எம்.ஆர்.எம். றிஸ்கி, செயலாளர் எம். அஹ்லம், மற்றும் ஹிரோஸ் காதர், ஆதிப் ஹசன் உட்பட அனுசரணையாளர்கள் பழைய மாணவத் தலைவர்கள் செயலாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். 16 குழுக்களுக்குமான பெயர்கள் அடங்கிய ரீ சேட்டுக்களும் மேடையில் காட்சிப்படுத்தப்பட்டு உரிய குழுத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டன.

(படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.